Koviloor Digital Library

ஐங்குறுநூறு

"எம். நாராயண
வேலுப்பிள்ளை"

VTIV0106

1986

Koviloor Digital Library

Koviloor Digital Library

43317

முன்னுரை

KARAIKUDI

ஐங்குறுநூறு எட்டுத் தொகை நூல்களுள் மூன்றாவதாகும். இந் நூற்பாக்கள் மூன்றடிச் சிற்றெல்லையும் ஆறடிப் பேரெல்லையும் உடையன. மற்றத் தொகை நூல்களின் பாக்களைக் காட்டிலும் அடிவரையிற் குறைந்த நூறு நூறு பாக்களால் இது ஐந்திணை ஒழுக்கங்களைச் செப்பமுறத் தனித்தனியே சிறப்பிக்கின்றமையின் ஐங்குறுநூறு என்ற பெயர் பெற்றது. அகவற் பாக்களால் ஆனது.

குறுகிய அடி உடைய பாட்டுக்களில் சொற்சுவை பொருட் சுவை சிறந்து இயற்கையின் இனிமையும் தமிழ் அருமையும் புலப்பட விளங்குவதைக் காணலாம். ஒவ்வொரு திணையையும் ஒரு பெரும் புலவர் பாடியுள்ளார். ஐங்குறுநூற்றில் வாழ்வியலுக்கும் உலகியலுக்கும் இயைந்த பல நல்ல கருத்துக்களைச் செவ்விதின் காணலாம். அந்தந்த நிலத்திற்குரிய கருப்பொருள்களை அழகுற வருணிப்பதில் இந்நூல் இணையற்றது.

இந்நூலைக் கற்பதற்கு முன் அடியிற்கண்ட மூன்று பகுதிகளையும் வாசகர்கள் [illegible] நல்லது. அப்பொழுது தான் நூலின்கண் [illegible] கிடக்கும் நுண்பொருள்களைக் கண்[illegible] மகிழ முடியும்.

வளர் தமிழ் நூலகம் காரைக்குடி

1. சங்க காலம்.
2. அகப் பொருள் வி[illegible].
3. இந்நூலின் சிறப்பியல்புகள்.

Alagappa University
Central Library
43317

Koviloor Digital Library

..ாடல்களைச் சந்தி பிரித்தும், எளிய நடையில் ..நறை உவமம் இறைச்சிப் பொருள் ஆகியவற்றைத் ..ரிவுபடுத்தியும் எழுதியுள்ளேன். சொல்வதைத் தெளி ..ாகவும் சுவையாகவும் சொல்ல வேண்டும் என்று முயன்றிருக்கிறேன். அந்த முயற்சியில் நான் எவ்வளவு வெற்றி பெற்றிருக்கிறேன் என்பதை வாசகர்கள் தான் சொல்ல வேண்டும். தமிழுலகம் படித்துப் பயன் பெறுவதாக.

இந்நூலை அழகுற அச்சிட்டுப் பிரசுரம் செய்த நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தாருக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது என்னுடைய எழுபத்தைந்து ஆண்டு நிறைவின் மனம் நிறைந்த பணியாகும்.

இங்ஙனம்

காஞ்சிபுரம்
17.7.86

M. நாராயணவேலுப்பிள்ளை

Koviloor Digital Library

உள்ளுறை

		பக்கம்
1	சங்க காலம்	1
2	அகப் பொருள் விளக்கம்	7
3	நூலின் சிறப்பியல்புகள்	19
4	ஐங்குறு நூறு மூலமும் தெளிவுரையும்	
	மருதம்	24
	நெய்தல்	82
	குறிஞ்சி	134
	பாலை	193
	முல்லை	252
5	செய்யுள் முதற் குறிப்பகராதி	309

Koviloor Digital Library

Koviloor Digital Library

சங்க காலம்

இற்றைக்குச் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தைச் சங்க காலம் எனக் கொள்ளலாம். தமிழகத்தின் வட எல்லை வேங்கடமாகவும், தெற்கெல்லை குமரிமுனையாகவும் கிழக்கு மேற்கு எல்லைகள் கடல்களாகவும் விளங்கின. இவ் எல்லைக்குள் சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு, தொண்டைநாடு, கொங்குநாடு எனப்பல நாடுகள் இருந்தன. சேர சோழ பாண்டிய நாடுகளை முடிமன்னர்களும், பிற நாடுகளைக் குறுநில மன்னர்களும் ஆண்டனர்.

மேலும் பறம்புமலையைப் பாரியும், பொதிய மலையை ஆய் அண்டிரனும், மலையமா நாட்டைத் திருமுடிக் காரியும், ஓய்மா நாட்டை நல்லியக் கோடனும் ஆகப் பல சிற்றரசர்கள் ஆங்காங்குத் தமிழகத்தில் ஆண்டு வந்தனர். மக்கள் மன்னர்களை உயிராகவே கருதினர்.

இவர்கள் தமிழ் மன்னர்கள். தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். தமிழகத்திலேயே பிறந்து வளர்ந்து, தாமும் தமிழராக இருந்த காரணத்தால் தான், தமது மொழியும் நாட்டு மொழியுமாகிய தமிழைத் தம் உயிர் போலக் கருதிக் காத்தனர். அம் மொழியில் வல்ல புலவரையும் பாணரையும் கூத்தரையும் பேணிப் பாதுகாத்தனர். அவர்கள் வாயிலாக முத்தமிழையும் வளப்படுத்தினர். தமிழகவேந்தர் தம் குடிகளின் நல்வாழ்வு ஒன்றிலேயே கருத்துக் கொண்டவராக, செங்கோல் வழுவாது செம்மையாக ஆட்சி புரிந்ததால் தமிழர் வாழ்வு எல்லாத்துறைகளிலும் வளமுற்று விளங்கியதெனலாம்.

சங்க காலத் தமிழ் மக்கள் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்ற ஐவகை இயற்கைப் பிரிவுகளோடு

Koviloor Digital Library

ஒன்றி வாழ்க்கை நடத்தியுள்ளனர். பண்டைத் தமிழ் மக்கள் அன்பைப் பண்பாகவும், அறத்தைப் பயனாகவும் கொண்டு இல்லற வாழ்க்கை நடத்தினர்.

கருத்தொருமித்த தலைவன் தலைவி கரந்து வாழும் களவு வாழ்க்கையை மேற்கொண்ட பின்னரே கற்பொழுக்கம் என்ற இல்லற வாழ்க்கை நடைபெற்றது. இல்லற வாழ்வில் விருந்தோம்பல் சிறந்த இடம் பெற்றது. கல்வி காவல் போன்றவற்றிற்காகப் பிரியும் தலைவன் பரத்தை ஒழுக்கம் காரணமாகவும் தலைவியைப் பிரிதல் உண்டு.

இல்லற மகளிர் பரத்தையைக் கண்டு பெரிதும் பயந்திருந்தனர். சங்க காலத்திற் பரத்தமையொழுக்கம் பெரிதாகக் காணப்பட்டாலும் சான்றோரால் பிழைபட்ட ஒன்றாகவே கருதப்பட்டுக் கண்டிக்கப்பட்டுள்ளது. கலை வாழ்வுக்கென சமூகத்தில் ஒரு சாராரை ஒதுக்கி வைத்து விட்டனர். அத்தகையவர்களாகிய பாணர், கூத்தர், விறலியர் ஆகியோர் ஆடல் பாடல்களில் சிறந்து இசை, நடன, நாடகக் கலைகளை வளர்க்க முற்பட்டனர். மன்னர்கள் இக்கலைஞர்களுக்குச் சிறந்த பரிசளித்துப் பாராட்டினர். சங்ககாலத் தமிழகத்தில் மக்கள் பிரிவினை, தொழில் அடிப்படையில் அமைந்து விளங்கிற்று. சமுதாயத்தில் பெண் கல்வியைப் பெரிதாகப் பேணினர்.

சங்க கால மக்கள் பல்வேறு சமயங்களைத் தழுவியிருந்தனர். மக்களிடையே சமயப்பொறை மிகச் சிறந்து விளங்கியது. தமிழகத்தில் கட்டடக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை, இசைக்கலை, நாடகக்கலை, நடனக்கலை முதலியன சிறப்புற வளர்ந்திருந்தன.

இத்தகைய ஏற்றம் பெற்ற சமுதாயத்தில் வளமை ஒரு புறமாகவும் வறுமை மறுபுறமாகவும் வளர்ந்து வந்துள்ளன. புலவர் கூட்டம் வறுமையில் வாடியது. புரவலர் கூட்டம் வளமையில் கொழித்தது. நாட்டுப்புற

Koviloor Digital Library

மக்கள் இயற்கையோடியைந்த எளிய வாழ்வை மேற்கொண்டிருந்தனர். செல்வச் செருக்குடைய மக்கள் செழுமை மிக்க கலைவாழ்வு வாழ்ந்திருந்தனர். இவ்விரு வகை வாழ்க்கை முறைகளைச் சங்க இலக்கியங்களில் காணலாம்.

சங்க காலத்தில் பத்துப்பாட்டும் எட்டுத் தொகையும் எழுந்தன. இலக்கண நூல் தொல்காப்பியம். கல்வி சிறந்த சங்க காலத்தில் ஆடவரும் பெண்டிரும் அரசரும் ஏனையோரும், அந்தணரும் வேளாளரும் வணிகரும் சோதிடரும் இன்னும் பற்பல தொழில்களில் மக்களும், கன்னல் சுவை வாய்ந்த கவிதைகளைப் படைத்துள்ளனர். சங்கப் பாடல்களை இயற்றிய பாவலர்கள் ஒரு காலத்தவருமல்லர்; ஓரிடத்தாருமல்லர். சங்க காலப் புலவர்கள் ஒருவர் மேல் ஒருவர் அன்பு கொண்டு விளங்கினர். பொறாமையில்லாத புலவர்களாகத் திகழ்ந்தனர். சங்க காலத்தில் புலவர்கள் சமர் செய்த அரசர்களுக்கிடையே சமாதானம் செய்து வைத்தனர்.

அறநெறி பிறழாத உள்ளமும், அஞ்சாத நெஞ்சுரமும் கொண்டவர்கள் சங்க காலப் புலவர்கள். அவர்கள் அரசர்களுக்கு அறிவுரை கூறி, அறத்தை நிலை நாட்டிய காலம் சங்க காலமாகும். அருள் உள்ளம் மிக்க எண்ணற்ற புலவர்கள் வாழ்ந்து மறைந்த காலம் சங்க காலமாகும்.

வறுமைப்பட்ட கொடிய நிலையிலும் வள்ளண்மைப் பண்பு திகழுமாறு வாழ்ந்து சிறந்தனர் நம் பண்டைத் தமிழ்ப் புலவர்கள். கனிந்த நெஞ்சங் கொண்ட இக் கவிஞர்கள் நாடாளும் மன்னர்களோடு திண்ணிய நட்புக் கொண்டு திகழ்ந்தனர். இன்னோரன்ன சிறந்த பண்புகளைப் பெற்ற புலவர் பெருமக்களின் பாராட்டைப் பெறுதலே பெருஞ் சிறப்பெனப் பண்டைய மன்னர்கள் எண்ணித் தம்மை வந்தடைந்த வறுமையுற்ற புலவர்களை

Koviloor Digital Library

ஆதரித்து, உணவளித்து, உடுக்க உடை கொடுத்துப் பன்னாளுக்குப் போதிய பரிசில் பொருள்களையும் வழங்கி வழியனுப்பினர்.

இத்தகைய பண்புமிக்க அரசர்கள் அரவணைப்பில் பல்வேறு திறப்பட்ட புலவர் பெருமக்கள் இயற்றியருளிய சங்க இலக்கியங்கள், இயற்கை எழில் மிக்க இன்பக் கருவூலங்களாக விளங்குகின்றன. இவ்விலக்கியங்களுக் கென்று அமைந்த சில பண்புகளும் இவ் வளமார்ந்த நூல்கள் தோன்றி மலர்வதற்கேற்ற நலமான சூழ்நிலையும் சங்க காலத்தைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் தலை சிறந்த 'பொற்காலம்' என அறிஞர்கள் போற்றிப் புகழுமாறு ஆக்கியுள்ளன.

தமிழகத்தை ஆண்ட சிற்றரசர்களும் பேரரசர்களும் கவி பாடிய புலவர்களை ஆதரித்துக் காப்பாற்றியதோடு தாங்களே அருஞ்செய்யுட்களையும் இயற்றித் தந்துள்ள னர். சங்க காலத்தில் பெண்பாலார்க்குக் கல்வி கற்பித் துள்ளனர். உயர்ந்த அரச குலத்தைச் சேர்ந்த பெண்களும், தாழ்ந்த பிறகுலத்தில் பிறந்த பெண்டிரும் கல்வி கற்றுத் தமிழாராய்ந்து தங்கள் புகழைப் பரப்பியுள்ளனர். அவ்வாறு சங்க காலத்தில் செய்யுள் இயற்றிய பெண் பாலார் ஐம்பதின்மருக்கு மேற்பட்டவராவர்.

இயற்கையன்னை ஈன்ற அருந்தவப் புதல்வர்கள் சங்க காலப் புலவர்கள். அவர்கள் தாங்கள் இயற்றிய நூல்களில் இயற்கைக் காட்சிகளின் எழிலை உவமை களாக, உருவகங்களாக வனப்புமிக்க வருணனைகளாக வடித்துத் தந்துள்ளனர். இயற்கை வருணனை இல்லாத பாக்களைச் சங்க இலக்கியங்களில் பார்ப்பது அரிது. இயற்கையை வருணிக்கும் திறத்தில் சங்கக் கவிஞர்கள் அகப் பொருள் இலக்கியங்களுக்குரிய 'உவமத்தையும்' (உள்ளுறைவுவமம்) அவ்வுவமைக்கு அப்பாலும் ஓர் அரிய உட்கருத்தை உணர்த்தும் 'இறைச்சி' என்ற இருவகைப் பொருள்களையும் உள்ளடக்கி உரைப்பர்.

Koviloor Digital Library

இத்தகைய இலக்கியச் சிறப்பை நாம் சங்க காலத்தில் மட்டுமே காணலாம். எக்கருத்தையும் நேருக்கு நேராகக் கூறிக் கேட்போர் நெஞ்சத்தைப் புண்படுத்தாது பண்பட்ட முறையில் நயமாகக் கூறுவதே சங்க கால நாகரிகமாகும். அகப்பொருள் பாக்களில் வரும் தோழியின் கூற்றுக்கள் அனைத்தும் இந்நயமான போக்கில் திகழ்தலைக் காணலாம்.

நிலத்தையும் அந்நிலத்தில் காணும் பற்பல வகைக் காட்சிகளையும் வருணிக்கும் சங்கக் கவிஞர்கள் அந் நிலத்தில் வாழும் மக்களின் உள்ளத்தில் அலை மோதும் உணர்ச்சிகளுக்குக் கலை மெருகு கூட்டுவதிலேயே கருத்தாக இருப்பர். மனித உணர்ச்சியின் ஆழ அகலத்தைத் தெளி வாகப் புலப்படுத்தும் பின்னணியாகவே இயற்கையைக் கையாண்டுள்ளனர். சங்கக் கவிஞர்களுக்கு இயற்கை முக்கியம் அல்ல; மனித உள்ளம்தான் மிக முக்கியம்.

சங்க கால மக்கள் வாழ்ந்து வந்த வாழ்வைத் தெளிவாகப் புலப்படுத்தும் 'காலக் கண்ணாடிகள்' சங்க இலக்கியங்கள். உள்ளதை 'உள்ளவாறே உரைத்தல்' சங்க இலக்கியங்களின் தலையாய சிறப்பு என அறிஞர்கள் பாராட்டி மொழிகின்றனர். இனம் குலம் என்ற வேற்றுமையில்லாமல் கவிதை தெய்வத்தின் முன்னர் சங்கக் கவிஞர்கள் யாவரும் சமமாக விளங்குகின்றனர்.

புலனுக்கு எட்டாத மயக்கப் பொருள்களில் மனத்தைச் செலுத்திச் சங்கப் புலவர்கள் குருட்டாட்டம் ஆடுவதில்லை. நம்பத்தகாத செய்திகளை நவில்வதில்லை. மிகைபடக் கூறுதலையும் பெரும் பாலும் மேற்கொள்வ தில்லை. உலக இயற்கையையும் மக்கள் வாழ்க்கையையும் ஒட்டிய இலக்கியங்களை இயற்றியுள்ளனர்.

சங்க கவிஞர்கள் தாங்கள் கண்ணாற்கண்ட போர்களையும் ஊர்களையும் உவமையாகக் கூறும் இயல்பினர். சங்க இலக்கியங் களில் அணிகளுக்கெல்லாம்

Koviloor Digital Library

தாயான உவமையணி தவிர பிற அணிகள் பெரும்பாலும் வருதல் இல்லை. சங்க இலக்கியங்களில் வரும் அகப் பொருள் பாக்கள் எல்லாம் தலைவனும் தலைவியும் தோழியும் பேசுகின்ற நாடகப் போக்கிலேயே அமைந் துள்ளன. அவற்றை நாடகத் தனிநிலைச் செய்யுட்கள் என வழங்குவர். இச் செய்யுட்களின் உயிர் நாடியாக விளங்கும் தோழியின் கூரிய அறிவும், சீரிய பண்பும் செறிந்த குணச்சித்திரத்தை இலக்கியங் கற்றோர் எவரும் மறக்க முடியாது.

சங்கப் பாக்கள் இயல்பான பேச்சிலுள்ள இயற்கை ஓசையோடு இழைந்து செல்லும் இயல்பின. ஆனால் இசையோடு பாடப்பெறும் இயல்பு வாய்ந்தவை யல்ல. பிற்காலத்தில் எழுந்த இலக்கியங்களில் ஓசை நயத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

சங்கப் பாடல்களில் வரும் சொற்கள் அனைத்தும் தமிழ்ச் சொற்கள். வடமொழிச் சொற்கள் அருகி வழங்கு கின்றன. சொல்லும் பொருளும் ஒன்றையொன்று தழுவிச் சென்று, பொருள் முடியும் இடத்தோடு சொல்லும் முடிவது சங்க இலக்கியங்களின் தலையான சிறப்பாகும்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்!" என்னும் உலகப் பொதுமையும், உலகம் ஒன்று; அதில் வாழும் மக்கள் அனைவரும் உறவினர் என்ற பேருண்மையையும் உணர்த்தும் பெருமை வாய்ந்தது சங்க இலக்கியம். காலம், நாடு போன்றவற்றைக் கடந்து, இலக்கிய இன்பம் அளிக்கும் ஆற்றல் பெற்றவை சங்க இலக்கியங்கள். சங்க இலக்கியங்களில் இத்தகைய பல்வேறு சிறப்பியல்புகள் உள்ளமையால்தான் அக்காலத்தைப் 'பொற்காலம்' என்று போற்றுகிறோம்.

Koviloor Digital Library

அகப் பொருள் விளக்கம்

பொருள் இலக்கணம் அகம், புறம் என இரு பிரிவுகளையுடையது.

அகப்பொருளாவது ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் தம்முள் துய்க்கும் இன்பத்தைப் பற்றிக் கூறுவதாகும். அது புறத்தார்க்குக் கூற இயலாததாய், அகத்தாலேயே உணர்ந்து அனுபவிக்கக் கூடியது. ஆதலின் 'அகம்' எனப்பட்டது.

புறப் பொருளாவது புறத்தார்க்குக் கூறக் கூடியதாய் அறம், பொருள் ஆகியவை பற்றிக் கூறுவது. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்கள் நான்கையும் இந்த இரண்டனுள் அடக்கிக் கூறுவது தமிழர் வழக்கம்.

அகப்பொருளில் இன்பம் பற்றியும், புறப்பொருளில் ஏனைய மூன்றைப் பற்றியும் கூறுவர்.

அகப்பொருள் ஐந்து வகையாய்ப் பகுக்கப்படும். அவற்றிற்குத் திணைகள் என்று பெயர். திணை என்றால் ஒழுக்கம். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பனவாம். அவற்றுடன் கைக்கிளை, பெருந் திணை என்பவற்றைச் சேர்த்து ஏழாகவும் கூறுவர்.

ஒவ்வொரு திணைக்கும் உரிய நிலமும் பொழுதும் முதற் பொருள்களாம். அவ்வந் நிலங்களுக்குரிய தெய்வம், உயர்ந்தோர், தாழ்ந்தோர், உணவு, புள், விலங்கு, ஊர், நீர், பூ, மரம், பறை, யாழ், பண், தொழில் ஆகிய பதினான்கும் கருப் பொருள்களாம். ஒவ்வொரு நிலத்துக்கும் உரிய அக ஒழுக்கம் உரிப்பொருள் எனப்படும்.

Koviloor Digital Library

நிலம் ஐந்து வகைப்படும் அவையாவன :

1. குறிஞ்சி - மலையும் மலை சார்ந்த இடமும்
2. முல்லை - காடும் காடு சார்ந்த இடமும்
3. மருதம் - வயலும் வயல் சார்ந்த இடமும்
4. நெய்தல் - கடலும் கடல் சார்ந்த இடமும்
5. பாலை - மணல் செறிந்த பெருவெளியும் அதைச் சார்ந்த இடமும்.

பொழுது : பெரும்பொழுது, சிறுபொழுது என இரு வகைப்படும்.

பெரும் பொழுது ஆறுவகைப்படும். அவையாவன :

1. இளவேனில் - சித்திரை, வைகாசி மாதங்கள்
2. முதுவேனில் - ஆனி, ஆடி மாதங்கள்
3. கார் - ஆவணி, புரட்டாசி மாதங்கள்
4. குளிர் - ஐப்பசி, கார்த்திகை மாதங்கள்
5. முன்பனி - மார்கழி, தை மாதங்கள்
6. பின்பனி - மாசி, பங்குனி மாதங்கள்.

சிறு பொழுது ஆறுவகைப்படும். அவையாவன :

1. காலை - காலை 6 மணி முதல் 10 மணி வரையுள்ள நேரம்
2. நண்பகல் - காலை 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை.

Koviloor Digital Library

LIBRARY. ...ion No ... purchase: ...ber: 83517

ஏற்பாடு	-	பிற்பகல் 2 மணி முதல் மாலை 6 மணி வரை சூரியன் மறையும் வரை.
மாலை	-	மாலை 6 மணி முதல் முன் இரவு 10 மணி வரை - முன் இரவு
5. யாமம்	-	இரவு 10 மணி முதல் பின் இரவு 2 மணி வரை - நள்ளிரவு
6. வைகறை	-	விடியற்காலம் 2 மணி முதல் 6 மணி வரை - பின் இரவு

குறிஞ்சி

முதற்பொருள்

1. நிலம்	:	மலையும் மலை சார்ந்த இடமும்
2. பொழுது	:	பெரும் பொழுது - குளிர்காலம், முன்பனிக்காலம்
		சிறு பொழுது - யாமம்

கருப்பொருள்

1. தெய்வம்	-	முருகன்
2. உயர்ந்தோர்	-	பொருப்பன், வெற்பன், சிலம்பன், கொடிச்சி.
3. தாழ்ந்தோர்	-	குறவர், கானவர், குறத்தியர்
4. உணவு	-	மலைநெல், தினை, மூங்கில் அரிசி
5. புள்	-	கிளி, மயில்
6. விலங்கு	-	யானை, புலி, கரடி, சிங்கம்
7. ஊர்	-	சிறுகுடி
8. நீர்	-	அருவி நீர், சுனை நீர்

ALAGAPPA UNIVERSITY LIBRARY KARAIKUDI

Koviloor Digital Library

9. பூ - குறிஞ்சிப்பூ, காந்தள்பூ, வேங்கைப்

10. மரம் - சந்தனம், தேக்கு, அகில், அசே நாகம், மூங்கில்

11. பறை - தொண்டகப் பறை

12. யாழ் - குறிஞ்சியாழ்

13. பண் - குறிஞ்சிப் பண்

14. தொழில் - வெறியாடல், மலை நெல் விதை தினை காத்தல், தேன் எ கிழங்கு அகழ்தல், அருவி சுனை நீராடல்

உரிப்பொருள்

புணர்தலும் புணர்தல் நிமித்தமும்.

II. முல்லை

முதற்பொருள்

1. நிலம் : காடும் காடு சார்ந்த இடமும்

2. பொழுது : பெரும்பொழுது : கார்காலம்; சிறுபொழுது : மாலை.

கருப்பொருள்

1. தெய்வம் - திருமால்

2. உயர்ந்தோர் - நாடன், தோன்றல், மனைவி, கிழத்தி

3. தாழ்ந்தோர் - இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர்

4. உணவு - வரகு, சாமை, முதிரை

5. புள் - காட்டுக்கோழி

Koviloor Digital Library

6. விலங்கு - மான், முயல்

7. ஊர் - பாடி, சேரி

8. நீர் - குறுஞ்சுனை நீர், கான்யாற்று நீர்

9. பூ - முல்லைப்பூ, குல்லைப்பூ, தோன்றிப் பூ, பிடவம்பூ

மரம் - கொன்றை, காயா, குருந்தம்

றை - ஏறங்கோட்பறை

குடி

- முல்லை யாழ்

13. பண் - சாதாரி

14. தொழில் - சாமை விதைத்தல், வரகு விதைத்தல், அவற்றின் களை கட்டல், அரிதல், கடாவிடுதல், கொன்றைக் குழலூதல், கால்நடைகளை மேய்த்தல், கொல்லேறு தழுவுதல், குரவைக் கூத்தாடல், கான்யாறு ஆடல்.

உரிப்பொருள்

ஆற்றியிருத்தலும் இருத்தல் நிமித்தமும்.

III. மருதம்

முதற்பொருள்

1. நிலம் : வயலும் வயல் சார்ந்த இடமும்

2. பொழுது : பெரும் பொழுது : ஆறு பெரும் பொழுதுகளும்
சிறு பொழுது : வைகறை, காலை.

Koviloor Digital Library

கருப்பொருள்

1. தெய்வம் - இந்திரன்
2. உயர்ந்தோர் - ஊரன், மகிழ்நன், கிழத்தி, மனைவி
3. தாழ்ந்தோர் - உழவர், உழத்தியர், கடையர், கடைசியர்
4. உணவு - செந்நெல் அரிசி, வெண்ணெல் அரிசி
5. புள் - வண்டானம், மகன்றில், நாரை, அன்னம், பெருநாரை, கம்புள், குருகு, தாரா.
6. விலங்கு - எருமை, நீர்நாய்
7. ஊர் - பேரூர், மூதூர்
8. நீர் - ஆற்றுநீர், கிணற்றுநீர், குளத்துநீர்
9. பூ - தாமரைப்பூ, குவளைப்பூ, கழுநீர்ப்பூ
10. மரம் - காஞ்சி, வஞ்சி, மருதம்
11. பறை - நெல்லரி இணை, மணமுழவு
12. யாழ் - மருதயாழ்
13. பண் - மருதப்பண்
14. தொழில் - விழாச் செய்தல், வயற்களை கட்டல், நெல்லரிதல், கடா விடுதல், குளங்குடைதல், புதுநீராடல்.

உரிப்பொருள்

ஊடலும் ஊடல் நிமித்தமும்.

வளர்தமிழ் நூலகம்
அழகப்பா பல்கலைக்கழகம்
Accession No. 14104

Koviloor Digital Library

IV. நெய்தல்

முதற்பொருள்

1. நிலம் : கடலும் கடல் சார்ந்த இடமும்
2. பொழுது : பெரும் பொழுது : ஆறு பெரும் பொழுதுகளும்
சிறு பொழுது : எற்பாடு.

கருப்பொருள்

1. தெய்வம் - வருணன்
2. உயர்ந்தோர் - சேர்ப்பன், துறைவன், புலம்பன், பரத்தி, நுளைச்சி
3. தாழ்ந்தோர் - நுளையர், நுளைச்சியர், பரதர், பரத்தியர், அளவர், அளத்தியர்
4. உணவு - மீன், மீனையும் உப்பையும் மாற்றுதலால் வரும் பொருள்
5. புள் - கடற்காகம்
6. விலங்கு - சுறாமீன், முதலை
7. ஊர் - பாக்கம், பட்டினம்
8. நீர் - உவர்நீர்க்கேணி, கவர் நீர்
9. பூ - நெய்தல் பூ, புன்னைப் பூ, தாழம்பூ, முண்டகப்பூ, அடம்பம்பூ
10. மரம் - கண்டல், புன்னை, ஞாழல்
11. பறை - மீன்கோட்பறை, நாவாய்ப் பம்பை.
12. யாழ் - விளரி யாழ்

Koviloor Digital Library

13. பண் - செவ்வழிப் பண்

14. தொழில் - மீன்பிடித்தல், உப்பு உண்டாக்கல், அவை விற்றல், மீன் உணக்கல், அவற்றை உண்ண வரும் பறவைகளை ஓட்டுதல், கடலாடல்.

உரிப்பொருள்

இரங்கலும் இரங்கல் நிமித்தமும்.

V. பாலை

முதற்பொருள்

1. நிலம் : மணலும் மணல் செறிந்த வெளியும்
2. பொழுது : பெரும் பொழுது : இளவேனில், முதுவேனில், பின்பனி
   சிறு பொழுது : நண்பகல்

கருப்பொருள்

1. தெய்வம் - துர்க்கை
2. உயர்ந்தோர் - விடலை, இகுளை, மீளி, எயிற்றி
3. தாழ்ந்தோர் - மறவர், எயினர், எயிற்றியர், மறத்தியர்
4. உணவு - வழி பறித்தவை, கொள்ளையடித்தவை
5. புள் - புறா, பருந்து, எருவை, கழுகு
6. விலங்கு - செந்நாய்
7. ஊர் - குறும்பு
8. நீர் - நீரில்லாக் குழி, நீரில்லாக் கிணறு

Koviloor Digital Library

9. பூ - மரா அப்பூ, குரா அப் பூ

10. மரம் - உழிஞை, பாலை, ஓமை, இருப்பை

11. பறை - துடி

12. யாழ் - பாலையாழ்

13. பண் - பஞ்சரம்

14. தொழில் - போர் செய்தல், பகற் சூறையாடுதல்

உரிப் பொருள்

பிரிதலும் பிரிதல் நிமித்தமும்.

அகப்பொருள் துறைகளும் சொற்றொடர் விளக்கங்களும்

அறத்தொடு நிற்றல் - தவறான கருத்தொடு காரியங்களை நடத்த விடாமல் உண்மையை எடுத்துக் கூறுவது.

அன்றில் - ஒருவகைப் பறவை. இது எக்காலத்திலும் தன் இணையோடு பிரியாது வாழும் இயல்புடையது.

இடையீடு - தொடர்ச்சியற்ற நிலை.

இயற்பட மொழிதல் - அன்பாகிய இயல்பு பொருந்தும்படி கூறல்.

இயற்பழித்தல் - தலைவனின் அன்பாகிய இயல்பினைக் குறைத்துக் கூறல்.

இற் செறிப்புக்காணல் - மனையிடத்துப் புகுதல்.

இறைச்சிப் பொருள் - கூறுகின்ற பொருட்கு இயைந்த முறையில் கருப் பொருள்களையமைத்துக் கூறுதல்.

Koviloor Digital Library

இரவுக்குறி - தலைவனும் தலைவியும் இரவில் சந்தித்துக் கூடுமிடும். இது தலைவியின் வீட்டினை அடுத்திருப்பது.

உடன் போதல் - தலைவனுடன் தலைவி பாலைநில வழியாகப் புறப்பட்டுப் போதல்.

உழலை மரம் - தொண்டுகட்டை - தொழுமரம்.

உலகியற்கை - ஆண் மக்கள் பொருள் தேடுதல்.

உள்ளுறை உவமம் - கூறக் கருதியதனை வெளிப்படையாய்க் கூறாது, கருப்பொருள்களில் ஏற்றிக் கூறுவது.

ஊடல் - வாழ்க்கையில் தலைவன் தலைவியிடையே எழும் சிறு வருத்தம்.

கொன்றைக் குழல் - கொன்றைப் பழத்தைத் துருவித் துளைத்துச் செய்த குழல்.

கையுறை - தலைவன் தலைவியின் கையில் சேர்க்கும் பரிசுப் பொருள்.

குறை நயப்பு - தலைவன் தன்குறைகளைத் தோழியிடம் நயமாகத் தெரிவித்தல்.

கூடல் இழைப்பு - மணலிற் வட்டமிட்டுக்குறி பார்த்தல் போன்றது.

செய் பெருஞ் சிறப்பு - பிறந்த புதல்வன் மகன் காண்டல், ஐம்படை பூட்டல், பெயரிடுதல் முதலியன.

செலவு - பொருள் வயின் பிரிந்து செல்லுதல்

செவிலி - தலைவிக்கு வளர்ப்புத் தாய்.

Koviloor Digital Library

செலவுடம்படாமை - தலைவி, தலைமகன் தன்னைப் பிரிந்து செல்லச் சம்மதியாமை.

செலவு அழுங்குவித்தல் - செல்லுதலில் இருந்து தவிர்வித்து வருந்தச் செய்தல்.

சேட்படை - தலைமகளைத் தலைமகன் அணுகவிடாமல் தோழி விலக்கல்.

நெய்யணி நயந்தது - மகப் பெற்றெடுத்த புனிறு தீர மூழ்கி வீடு புகுந்த நிலையில் தலைவியை விரும்பியது.

பகற்குறி - தோழியின் உதவியால் பகற்பொழுதில் தலைமகனைத் தலைமகள் கண்டு கூடுமிடம் . இது தினைப்புனத்தின் அருகிலுள்ள சோலையில் உள்ளதாகும்.

பாணன் - யாழ் கொண்டு பாடித் தலைவனை மகிழ்விப்பவன்; தலைவனின் ஏவலனும் ஆவான்.

பிரிவுணர்த்தல் - தலைவன் பிரிவினைத் தலைவிக்குத் தோழி தெரிவித்தல்.

படைத்து மொழிகிளவி - தானாக ஒன்றைக் கற்பித்துக் கூறுவது.

பசப்பு - தலைவனைப் பிரிந்த தலைவியர் கொள்ளும் மேனி மாற்றம்.

மன்றத்துறுகல் - பலர் கூடும் வெளியில் பலரும் அமர்தற்கு உரியதாகப் பொருந்திய கற்கள்.

மடல் ஏறுதல் - தன்குறை தீரப்பெறாத தலைமகன் பனங் கருக்கால் குதிரையும் பனையிலுள்ள மற்றவற்றான் வண்டி முதலியனவும் செய்து, தன் உடம்பு முழுவதும் நீறு

Koviloor Digital Library

		பூசிக் கொண்டு பூளைப்பூ, எலும்பு, எருக்கம் பூ ஆகிய இவற்றை மாலையாகக் கட்டித் தரித்துக் கொண்டு தலைவியின் படத்தைக் கையில் பிடித்துக் கொண்டு, அக்குதிரையிலேறி, அதனைச் சிலர் ஈர்த்துச் செல்ல வீதியிற் செல்லுதல். இது பெருந்திணையின் பாற்படும்.
வரைவு கடாதல்	-	மணம் புரிந்து கொள்ளும்படி தூண்டுதல்.
வரைவிடைப் பிரிவு	-	தலைமகளை மணத்தல் வேண்டி பொருள் தேடத் தலைமகன் மேற்கொண்ட பிரிவு.
வாயில் மறுத்தல்	-	தூதாக வந்தவர்களது சொற்களைத் தலைவி மறுத்துக் கூறுதல்.
வெறியாட்டெடுத்தல்	-	வேலற்குப் பூசையிடல்
வெறி விலக்கல்	-	முருகனுக்குப் பூசையிடுதல் தேவையில்லாத ஒன்றெனத் தோழி முதலியோர் உண்மை கூறித் தடுத்தல்.

Alagappa university
Central Library
43317

Koviloor Digital Library

நூலின் சிறப்புக்கள்

இலக்கியம்

இலக்கியம் வாழ்க்கையிலிருந்து மலர்கிறது. மக்கள் வாழ்க்கையில் கண்ட உண்மைகளையும் நுகர்ந்த நுகர்ச்சி களையும் எண்ணிய எண்ணங்களையும் விரும்பிய விருப்பங்களையும் மொழிவழியாக எழுத்துருவத்தில் வடித்துக் காட்டுவதே இலக்கியமாகும். வாழும் இலக்கியம் வாழ்க்கையை விளக்குவதாகவே இருக்கும். அதனால் அது மக்கள் உள்ளத்தைக் கவர்கிறது.

ஒரு நாட்டின் இலக்கியம் அந்த நாட்டு மக்களின் மன நிலையையும் குண வளர்ச்சியையும் இன உணர்வையும் காட்டும் கண்ணாடியாகும். அது அவ்வக்கால மக்களின் மனப்போக்கையும் பண்பாட்டையும் புலப்படுத்தும் வரலாறாக ஓரளவு விளங்குகிறது எனலாம்.

நாட்டு வரலாற்றுக்கும் நல்லிலக்கியம் காட்டும் வரலாற்றுக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. நாட்டு வரலாறு மக்களது நாகரிகத்தின் புறத்தோற்றத்தை எடுத்துக்காட்டி அம்மக்கள் கண்ட வெற்றி தோல்விகளை அறிவிக்கும். இலக்கியம் புலப்படுத்தும் வரலாறோ மக்களுடைய நாகரிகத்தின் அகத்தோற்றத்தையும் பேரறிவையும் உள்ளத் தின் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்துவதோடு ஒழுக்க நெறிகளையும் சமய வாழ்வையும் அறிவு நிலையையும் தெரிவிக்கும்.

இவ்விலக்கிய உண்மைகளை உள்ளத்தமைத்து நோக்கும் போது சங்கம் மருவிய நூல்கள் முப்பத்தாறினும் ஒரே குடும்ப நிலை போன்று ஒருவகைக் கால மனநிலை தோன்றுவது விளங்கும். அந் நூல்கள் அனைத்தும் அகப்பொருளையோ புறப்பொருளையோ சித்திரித்துக்

Koviloor Digital Library

காட்டுவதைக் காண்கிறோம். இதனைச் சங்க கால மனநிலை எனலாம்.

ஐங்குறுநூறு

சங்ககால மன நிலையில் பொங்கி எழுந்த தொன்று ஐங்குறுநூறு. இஃது எட்டுத் தொகையுள் ஒன்று. அகன் ஐந்திணையைக் கூறுவது. உரையாசிரியர்களால் நன்கு மதிக்கப்பட்டு மேற்கோளாக எடுத்தாளப்பட்டது. ஐங்குறுநூறு என்பது ஐந்திணையிலும் தனித்தனி அமைந்த குறுமையாகிய நூறு நூறு செய்யுட்களைக் கொண்டது என்று பொருளாலும் அளவாலும் இந் நூலுக்கு வந்த பெயராகும். பொருள், அகப்பொருள்; ஐந்திணையாகிய குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை இவற்றைப் பற்றியது. அளவு - குறுமை என்பது. பாக்கள் மூன்றடி சிற்றெல்லையையும் ஆறு அடி பேரெல் லையையும் உடையவை.

பதிற்றுப்பத்தில் பப்பத்தாகப் பாடிய முறை தோன்றியிருத்தல் வேண்டும். ஐங்குறுநூறு அதனைப் பின் பற்றியது போலும். திருவள்ளுவர் தமது திருக்குறளில் இந் நூல்களைப் பின்பற்றினார். பின் வந்த நாயன்மார்களும் பிறரும் இந்நூல்களைப் பின்பற்றிப் பதிகம் பாடத் தொடங்கினார்கள்.

ஐங்குறு நூற்றில் ஐந்திணை முறை வைப்பு வேறுபட்டுள்ளது. புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் ஐங்குறு நூற்றில் திணைகளைக் கீழ்க்கண்டவாறு 1. மருதம், 2. நெய்தல், 3. குறிஞ்சி, 4. பாலை, 5. முல்லை எனத் தமக்கு வேண்டிய முறையால் தொகுத்தார்.

ஐங்குறு நூற்றின் வரலாறு

இந்த ஐங்குறுநூறு தோன்றிய வரலாறாக நமக்குக் கிடைக்கும் தகவல்கள் வருமாறு: கடைச் சங்க காலத்தில் திகழ்ந்தோங்கிய மூவேந்தர் பழம் பெருங்குடியுள் சேர மன்னர் குடியில் கோச்சேரமான் யானைக்கட் சேஎய்

Koviloor Digital Library

மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்னும் புகழ்மிக்க முடிவேந்தர் ஒருவர் இருந்தார். இம்மன்னர் தமிழ்ப் புலவர்க்குத் தாய் போன்றவர்; தமிழ்ப் புலவரையும் தமிழ் இலக்கியங்களையும் நன்கு போற்றிப் புரந்து வந்தனர். இவர்க்குத் தமிழ் இலக்கியங்களில் இன்ப நுதலிய அகப் பொருட் பனுவல்களில் பெரிதும் ஈடுபாடு உண்டு. அவற்றின் சுவை தேர்ந்த இவர் அவ்வகப் பொருண் மருங்கில் அதன்கண் அமைந்த ஐந்து திணைகட்கும் தனித்தனியாக நூறு நூறு செய்யுள்களாக நல்லிசைப் புலவர்களைக் கொண்டு பாடுவித்து அவற்றை ஒரு நூலாக்கித் தமிழ் கூறு நல்லுலகத்திற்கு வழங்குதல் வேண்டும் என்று பெரிதும் விரும்பியிருந்தார்.

அக்கோச் சேரமான் தமது கருத்தினை நிறை வேற்றுதற்கு இவரே தகுதியுடையார் என்று தெளிந்து புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் என்னும் நல்லிசைப் புலவர் பால் அக்கருத்தைக் கூறினார். அப்புலவர் பெருமான் கடைச் சங்கப் புலவர்களுள் ஒருவர். அச் சேரமானுக்கு ஆருயிர் நண்பராவார். மேலும் அவர் புலவர் போற்றும் புலவர் என்பதனை அவர் பெயர்க்கு முன்னின்ற 'புலத் துறை முற்றிய' என்னும் அடைமொழியே சான்றாகும்.

கூடலூர் கிழார் தாமே புலத்துறை முற்றியவராக இருந்தும் அந்நற்பணியைத் தாமே செய்து முடிக்கத் துணிந்தாரிலர். ஐந்து திணைகளைப் பாடுதல் வேண்டும். ஒவ்வொரு நல்லிசைப் புலவர் ஒவ்வொரு திணையைப் பாடுவதில் சிறப்பாற்றல் உடையவராக இருத்தல் இயல்பு. இந்நூலைச் சிறந்த நூலாகச் செய்வித்தல் வேண்டும் என்று எண்ணினார்.

அவ்வாறே ஐந்து நல்லிசைப் புலவர்களை ஆராய்ந்து கொண்டார். அவர்பாற் சென்று தங்கருத்தினைக் கூறி அவர்களாலேயே தனித்தனி நூறு நூறு பாடலாகப் பாடுவித்து அவற்றை ஒருங்கே தொகுத்து ஐங்குறுநூறு எனப் பெயரிட்டு மன்னருக்கு வழங்கி மகிழ்வித்தார்.

Koviloor Digital Library

பண்டைக் காலத்துப் பேராசிரியர்களாகிய இளம்பூரணர், நச்சினார்க்கினியர் முதலிய சிறந்த உரையாசிரியர்கள் இந் நூலின் செய்யுள்களையே மிகுதியாகத் தொல்காப்பியம் முதலிய இயல் நூல்கட்கு எடுத்துக் காட்டியிருத்தல் இந் நூலின் இலக்கண அமைதிக்கு ஒரு நற்சான்றாகும்.

கடவுள் வாழ்த்து

ஐந்து திணைகளைப் பற்றிய ஐந்நூறு பாடல்களுடன் இந்நூலில் கடவுள் வாழ்த்து ஒன்றும் உள்ளது. இதனைப் பாடியவரும் பாரதம் பாடிய பெருந்தேவனாரே. நூலின் பிற பாடல்களின் அளவினைக் குறிப்பாகச் சுட்டும் வகையில் மூன்றடிகளால் அமைந்த இப்பாடலில் சிவ பெருமான் வணக்கம் கூறப்பட்டுள்ளது. நீல நிறமான திருமேனியினையும் தூய அணிகலன்களையும் உடைய உமையைத் தன் கூறாகவுமுடைய ஒப்பற்ற சிவபெருமானுடைய இரண்டாகிய திருவடி நீழற் கீழ் மூவகை உலகும் முறையே தோன்றி நிலவுகின்றன. எனவே நாமும் அம் முதல்வனை வணங்கி உய்வோமாக! என்று இப்பாடலில் பாரதம் பாடிய பெருந்தேவனார் சிவனைப் பணிகிறார்.

"நீல மேனி வாலிழை பாகத்து
ஒருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை உலகும் முகிழ்த்தன முறையே."

என்பது அவர் பாடல். இப்பாடலோடு சேர்த்து ஐங்குறுநூற்றில் 501 பாடல்கள் இருக்க வேண்டும். ஆனால் இன்று 499 பாடல்களே காணப்படுகின்றன. 129, 130 ஆகிய எண்களைக் கொண்ட பாடல்கள் கிடைக்கவில்லை.

இந்நூலின் முதல் பாடலே இந்நூலின் கருத்தை நன்கு விளக்குகிறது எனலாம். பசி, பிணி, பகை ஆகியவை இல்லாமல் வளம் கொழிக்கும் நாட்டிலேயே இல்லறம் சிறக்கும் என்பதையும், இத்தன்மைகள் நிலைக்க மன்னவன் காவல் இன்றியமையாதது என்பதையும் அப்பாடல் தெளிவாக உணர்த்துகிறது.

Koviloor Digital Library

கடவுள் வாழ்த்து

நீல மேனி வாலிழை பாகத்து
ஒருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை உலகும் முகிழ்த்தன முறையே

- பாரதம் பாடிய பெருந்தேவனார்.

தெளிவுரை

நீல நிறமுடைய திருமேனியையும் தூய அணிகலன்களையும் உடைய உமையம்மையாரைத் தன் ஒரு பாகத்தில் உடையவனாகிய முழுமுதல்வனுடைய இரண்டாகிய திருவடி நிழலின்கண் மூன்று வகையாற் சுட்டப்படுகின்ற உலகங்கள் அனைத்தும் தாம் தோன்றுவதற்குரிய முறைமையானே தோன்றி நிலவுவனவாயின. ஆதலால் யாம் அவனுடைய அத்தகைய திருவடிகளை வணங்கி உய்வோமாக.

Koviloor Digital Library

I. மருதம்

ஆசிரியர் : ஓரம் போகியார்

இவர் ஆதன், அவினி என்னும் சேரமன்னர்களைத் தம் செய்யுளில் குறிப்பிடுகின்றார். இவர் மத்தி, விராஅன் என்னும் இரண்டு வள்ளற் பெருமக்களையும் குறிப்பிடுகின்றார். தேனூரையும் இருப்பையூரையும், ஆமூரையும், கழாஅர் என்னும் மூதூரையும் குறிப்பிடுகின்றார்.

மருதத்திணை அடியிற்கண்ட பத்துப் பிரிவுகளையுடையது. ஒவ்வொன்றிலும் பத்துப் பாடல்கள் உள்ளன.

1. வேட்கைப் பத்து
2. வேழப் பத்து
3. கள்வன் பத்து
4. தோழிக்குரைத்தபத்து
5. புலவிப் பத்து
6. தோழி கூற்றுப் பத்து
7. கிழத்தி கூற்றுப் பத்து
8. புனலாட்டுப் பத்து
9. புலவி விராயப் பத்து
10. எருமைப் பத்து

Koviloor Digital Library

குறிப்பு :- ஊடலும் ஊடல் நிமித்தமும் இத் திணையின் உரிப்பொருளாகும். பரத்தையர் பிரிவு காரணமாக ஊடல் நிகழ்தலும் உண்டு. சங்க இலக்கியங் களில் பரத்தையர் நட்பு கண்டிக்கப்படவில்லை. வசதி படைத்த ஆண்கள் பரத்தையர்களுடன் கூடி வாழ்ந்தனர். தமிழர்கள் பல மனைவிகளை மணந்தனர். மணந்த மனைவிகளைத் தவிர பரத்தையர்களுடன் கூடி வாழ்ந்த னர். இது குற்றமாகக் கருதப்படவில்லை.

பழந்தமிழ் நூல்களுள் திருக்குறள் ஒன்றில்தான் முதன் முதலாகப் பரத்தையர் நட்பு கண்டிக்கப்படுகிறது. 'வரைவின் மகளிர்' என்று தனி அதிகாரமே இதற்கு வகுத்துள்ளார் வள்ளுவர்.

பரத்தையர் நட்பால் ஏற்படும் தீங்குகளை மணிமேகலை ஆதிரையின் கதையில் கூறுகிறது. காமவெறி கொண்ட ஆடவர்களுக்கு அறிவுரை கூறித் திருத்துவதும் மணிமேகலையின் கொள்கைகளில் ஒன்றாகும்.

Koviloor Digital Library

வேட்கைப் பத்து

அஃதாவது செய்யுள் தோறும் வேட்கை என்னும் பொருளுடைய சொல் விரவி வந்த பத்துச் செய்யுளின் தொகுதி என்றவாறு.

1. வாழி ஆதன் வாழி அவினி
நெற்பல பொலிக பொன்பெரிது சிறக்க
எனவேட் டோளே யாயே யாமே
நனைய காஞ்சிச் சினைய சிறுமீன்
யாணர் ஊரன் வாழ்க
பாணனும் வாழ்க எனவேட் டேமே.

காவற் பொருட்டு அரசன் வாழ்க, விருந்தோம்புதற் பொருட்டு நெற்பல பொலிக. இரவலர்க்கு ஈதற்பொருட்டு பொன்மிக உண்டாகுக என எம் பெருமாட்டி இல்லத்திற்கு வேண்டுவன விரும்பி ஒழுகியதல்லது பிறிது நினைந்திலள். அவள் இத்தன்மையளாக நீ ஒழுகிய ஒழுக்கத்தால் நினக்கும் நின் ஒழுக்கத்திற்கும் தீங்கு வருமென்றஞ்சி யாணர் ஊரன் வாழ்க என்றும் மேலும் எம் பெருமானுக்கு உறுதுணையாகிய பாண்மகனும் நீடு வாழ்வானாக என்றும் யாங்கள் விரும்பினேம் என்றவாறு. இது பரத்தையர் பிரிவிலிருந்து திரும்பி வந்த தலைமகனுக்குத் தோழி கூறியது. ஆதன் அவினி என்பான் சேரமான்களிற் பாட்டுடைத் தலைவன்.

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - கிழவோள் மாண்பு கிழவற்கு உணர்த்துதல். 1

[பாடல்கள் 1 முதல் 10 வரை இதே மெய்ப்பாடும் பயனும்]

Koviloor Digital Library

ALAGAPPA U... LIBRARY KARAIKUDI

2. வாழி ஆதன் வாழி அவினி
விளைக வயலே வருக இரவலர்
எனவேட் டோளே யாயே யாமே
பல்லிதழ் நீலமொடு நெய்தல் நிகர்க்கும்
தண்துறை யூரன் கேண்மை
வழிவழிச் சிறக்க எனவேட் டேமே.

எம் பெருமாட்டி, செல்வக் கடுங்கோ வாழியாதன் புகழ் நீடு வாழ்க என்றும் செங்கோல் வேந்தன் அவினி நீடு வாழ்க என்றும் நாட்டின்கண் கழனிகளில் கூலங்கள் குறைவின்றி விளைவனவாக என்றும் இரவலர் வருக என்றும் விரும்பி தன் அரும் பண்பினால் நின் தீமையைப் புறத்தார் அறியாமல் காப்பாள் ஆயினாள் . எம்பெருமானே! தோழியராகிய யாங்கள் அவட்குப் பரிந்து குளிர்ந்த நீர்த்துறையை யுடைய பெருமான் எம் பெருமாட்டிபாற் கொண்ட கேண்மை நாள் தோறும் பெருகிச், சிறப்புறுவதாக என்று பெரிதும் விரும்பி யிருந்தோம் .

மெய்ப்பாடு - பெருமிதம் ; பயன் - கிழவோள் மாண்பு கிழவற்கு உணர்த்துதல். 2

3. வாழி ஆதன் வாழி அவினி
பால்பல ஊறுக பகடுபல சிறக்க
எனவேட் டோளே யாயே யாமே
வித்திய உழவர் நெல்லொடு பெயரும்
பூக்கஞு லூரன் தன்மனை
வாழ்க்கை பொலிக எனவேட் டேமே.

எம் பெருமாட்டி பசு முதலியவற்றின் பால் மிகுதியாகச் சுரப் பனவாக என்றும் எருமைக் கடாக்கள் பலவாக மல்கிச் சிறப்பனவாக என்றும் விரும்பியிருந்தாள் . யாங்களோ கழனியில் வித்தினை விதைத்த உழு தொழிலாளர் கூலி நெல்லோடு செல்லுதற்கிடனான மலர் செறிந்த சிறந்த ஊர்த் தலைவனாகிய எம்பெருமான் தன்னுடைய இல்லக் கிழத்தியோடு இருந்து இல்வாழ்க்கையின்கண் மேம்பட்டுப் பொலிவுறுக

Koviloor Digital Library

என்று பெரிதும் விரும்பியிருந்தோம். தலைவன் பெரும் பயனாகிய இல்லறத்தைக் கருதாமல் அற்றைப் பொழுதின் சிற்றின்பத்தையே கைக்கொண்டு பரத்தையர்க்காவன கொண்டு போகின்றான் என்று உள்ளுறுத்துக் கழறியபடியாம்.

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - கிழவோள் மாண்பு கிழவற்கு உணர்த்துதல். 3

4. வாழி ஆதன் வாழி அவினி
பகைவர்புல் ஆர்க பார்ப்பார் ஓதுக
எனவேட் டோளே யாயே யாமே
பூத்த கரும்பிற் காய்த்த நெல்லிற்
கழனி யூரன் மார்பு
பழன மாகற்க எனவேட் டேமே.

இவள் இல்லறமே விரும்பி ஒழுகினாள். அவன் மார்பு ஊரவர்க்கெல்லாம் பொதுவாகிய பழனம் போலாது இவட்கே யுரித்தாக என விரும்பினேம் யாங்கள் என்றவாறு. பூத்துப் பயன்படாக் கரும்பினையும் காய்த்துப் பயன்படும் நெல்லினையுமுடைய ஊரன் என்பது ஈன்று பயன்படாப் பொது மகளிரையும் மகப் பயந்து பயன்படும் குலமகளிரையும் ஒப்ப நினைப்பான் என்றவாறு. நம் நாட்டுப் பகைவேந்தர் காடுகளில் கரந்திருந்து புல்லரிசி உணவை யுண்பாராக என்றும், அந்தணர்கள் மறைகளை முறையாக ஓதுவாராக என்றும் தலைவி விரும்பினாள்.

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - கிழவோள் மாண்பு கிழவற்கு உணர்த்துதல். 4

5. வாழி ஆதன் வாழி அவினி
பசியில் ஆகுக பிணிசேண் நீங்குக
எனவேட் டோளே யாயே யாமே
முதலை போத்து முழுமீன் ஆரும்
தண்துறை யூரன் தேரெம்
முன்கடை நிற்க எனவேட் டேமே.

Koviloor Digital Library

இவள் இல்லறமே விரும்பி ஒழுகினாள். யாங்கள் அவன் தேர் பிற மகளிர் முன் கடை நிற்றல் ஒழிந்து எம் முன்கடை நிற்க என விரும்பினேம் என்றவாறு.

இதன் கண் முதலை போத்து முழுமீன் ஆரும் தண்டுறையூரன் என்பது உள்ளுறை உவமம். முதலை தான் வாழும் நீர் நிலையிலேயே தன்னோடு ஒருங்குவாழும் இயல்புடைய மீனைக் கண்ணோட்டமின்றிக் கொன்று தின்னுவது போல நீயும் எம் பெருமாட்டியின்பால் அளி சிறிதுமின்றிப் பெரிதும் அவளைத் துன்புறுத்துகின்றனை என அவன் கொடுமையை எடுத்துக்காட்டுதல் அவள் கருத்தென்க.

உலகின்கண் பசிப்பிணி என்றென்றும் இல்லையாகுக என்றும், உயிரினங்களை நலியும் உள்ளப்பிணியும் உடற்பிணியும் சென்று கெடுவனவாகுக என்றும் தலைவி விரும்பினாள்.

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - கிழவோள் மாண்பு கிழவற்கு உணர்த்துதல். 5

6. வாழி ஆதன் வாழி அவினி
வேந்துபகை தணிக யாண்டுபல நந்துக
எனவேட் டோளே யாயே யாமே
மலர்ந்த பொய்கை முகைந்த தாமரைத்
தண்துறை யூரன் வரைக
எந்தையும் கொடுக்க எனவேட் டோமே.

யான் வரைவு நீட்டித்த காலத்தே நீயிர் எவ்வாறு இருந்தீர் என்று தலைவன் வினவினானாக அவனுக்குத் தோழி கூறியது (பாடல் 6-10)

எம்பெருமாட்டி, அவினி மன்னன் பகைமை தணிந்து அறநோக்குடையனாக என்றும், அவன் நீடு வாழ்க என்றும் வாழ்த்தி நின் பிரிவால் எய்திய துயரத்தை மறைத்து உறைவாளாயினள். யாங்கள் நீர்நிலைக்கண் துறையமைந்த ஊர்த் தலைவனாகிய பெருமான் விரைந்து வந்து எம் பெருமாட்டியைத் திருமணம் புரிந்து கொள்க

Koviloor Digital Library

என்றும் எம் தந்தையும் மறாது உவந்து மகட்கொடை நேர்வானாக என்றும் விரும்பி தெய்வம் பராவியிருந்தோம்.

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - கிழவோள் மாண்பு கிழவற்கு உணர்த்துதல். 6

7. வாழி ஆதன் வாழி அவினி
அறநனி சிறக்க அல்லது கெடுக
எனவேட் டோளே யாயே யாமே
உளை மருதத்துக் கிளைக்குரு கிருக்கும்
தண்துறை யூரன் தன்னூர்க்
கொண்டனன் செல்க எனவேட் டேமே.

எம்பெருமாட்டி அன்பு முதலிய நல்லறங்கள் அனைத்தும் தழைப்பனவாக என்றும் தீவினை துவரக்கெட்டொழிக என்றும் விரும்பி நின்னைப் பிரிந்த துயரத்தைத் தன்னுட் கரந்து அலரெழாமல் பாதுகாத்தனள். யாங்கள் மருத மரத்தின்கண் குருகுகள் தம் இனத்தோடு இனிது இருத்தற்கிடனான குளிர்ந்த நீர்த்துறையுடைய எம்பெருமான் எம் பெருமாட்டியைத் தன் ஊர்க்கு அழைத்துச் செல்வானாக என்று பெரிதும் விரும்பியிருந்தோம். உளை - பூவின் உறுப்பு.

மருதத்தின் கண் குருகு தன் கிளையோடிருந்து இன்புறுமாறு போல எம்பெருமானும் நினது பொலிவுடைய இல்லத்தின்கண் எம் பெருமாட்டியோடு இனிது இருந்து இல்லறம் நடத்துதல் வேண்டும் என்பது உட் குறிப்பு.

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - கிழவோள் மாண்பு கிழவற்கு உணர்த்துதல். 7

8. வாழி ஆதன் வாழி அவினி
அரசுமுறை செய்க களவில் லாகுக
எனவேட் டோளே யாயே யாமே
அலங்குசினை மாஅத்து அணிமயில் இருக்கும்
பூக்கஞல் ஊரன் சூளிவண்
வாய்ப்ப தாக எனவேட் டோமே.

Koviloor Digital Library

எம்பெருமாட்டி, அவினி வேந்தன் செங்கோன் முறையை நடத்துவானாக என்றும் நாட்டின்கண் வஞ்ச நெறிகள் இல்லாதனவாக என்றும் விரும்பி, தனது ஆற்றாமை அருந்துயரை மறைத்திருந்தனள். யாங்கள் மாமரத்தின்கண் அழகிய மயில் விற்றிருந்து, ஊர்த்தலைவனாகிய எம்பெருமானுடைய சூள்மொழி இப்பொழுதே வாய்ப்பதாக என்று பெரிதும் விரும்பியிருந்தோம் (சூள் + இவண்)

இனி, இதன்கண் மாமரத்தின்கண் அணிமயில் இருக்கும் ஊரன் என்றதற்கு, அதுபோல எம்பெருமானுடைய சுற்றம் செழுமிய அறத் திருமனைக்கு விளக்காக எம் பெருமாட்டி விற்றிருந்து அணி செய்வாளாக என்று விரும்பினோம் என்பது உள்ளுறையாகக் கொள்க.

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - கிழவோள் மாண்பு கிழவற்கு உணர்த்துதல். 8

9. வாழி ஆதன் வாழி அவினி
நன்றுபெரிது சிறக்க தீதில் ஆகுக
எனவேட் டோளே யாயே, யாமே
கயலார் நாரை போர்வின் சேக்கும்
தண்துறை யூரன் கேண்மை
அம்பல் ஆகற்க எனவேட் டேமே.

இன்பம் நுகர்ந்தவன் செல்வ மனைக் கண்ணே வைகும் வண்ணம் வரையும் துணையும் அம்பல் ஆகாதொழிக என விரும்பினேம் யாங்கள் என்றவாறு. போர்வு - நெற்போர்.

எம் பெருமாட்டி நாட்டிற்கு நன்மையாவன அனைத்தும் பெரிதும் சிறப்படைவனவாக என்றும் தீங்குவருவன வெல்லாம் இல்லையாகுக என்றும் விரும்புவாளாகப் பெருமானே! யாங்கள் கயல்மீனை இரையாகத் தேர்ந்துண்ட நாரைகள் நெற்போர்வின்கண் இனிதாக உறைதற்கிடனான குளிர்ந்த நீர்த்துறைவன் எம்பெருமாட்டியின் பாற்கொண்ட காதலுறவு அம்பல் அளவும் ஆகாதொழிக என்று பெரிதும் வேண்டியிருந்தேம். சிலர் அறிதல் - அம்பல்; பலர் அறிதல் - அலர்.

Koviloor Digital Library

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - கிழவோள் மாண்பு கிழவற்கு உணர்த்துதல். 9

10. வாழி ஆதன் வாழி அவினி
மாரி வாய்க்க வளநனி சிறக்க
எனவேட் டோளே யாயே யாமே
பூத்த மாஅத்துப் புலாலஞ் சிறுமீன்
தண்துறை யூரன் தன்னொடு
கொண்டனன் செல்க எனவேட் டேமே.

அவினி வேந்தன் நீடு வாழ்க என்றும் மழை, காலம் தப்பாமல் நன்கு பொழிவதாக என்றும், எல்லா வளமும் சிறப்பனவாக என்றும் விரும்பி பிரிவாற்றாமையாகிய பெருந்துயரத்தைப் பிறர் அறியாமல் காத்துவந்தாள். யாங்கள் மலர்ந்து மணங்கமழும் மாமரப் பொழிலையும், புலால் நாறும் மீன்களையுடைய நீர்த்துறையமைந்த ஊர்த்தலைவனாகிய எம்பெருமான் பெருமாட்டியை அழைத்துக் கொண்டு தன் ஊர்க்குச் செல்வானாக என்று பெரிதும் விரும்பினோம்.

குறிப்பு:- மலர்ந்து மணங்கமழும் மாமரத்தையும் புலால் நாறும் சிறுமீனையும் தண்துறை உடைத்தானாற்போன்று இவ்வூரின்கண் நின்னை அகமலர்ந்து வரவேற்கும் யாங்களும் உளேம். அலர் தூற்றும் சிறுபுன் மாக்களும் உளர். ஆதலால் விரைந்து தலைவியை உடன்கொண்டு செல்க என்பதாம்.

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - கிழவோள் மாண்பு கிழவற்கு உணர்த்துதல். 10

வேட்கைப் பத்து முற்றிற்று

Koviloor Digital Library

2. வேழப்பத்து

வேழம் என்னும் சொல் பாடல் தோறும் பயின்று வந்த பத்துச் செய்யுளின் தொகுதி என்றவாறு. வேழம் - ஒரு மருத நிலக் கருப் பொருள். இதனைக் கொறுக்கைச்சி என்றும் வழங்குப. வேழம் - நாணல்.

11. மனைநடு வயலை வேழஞ் சுற்றும்
துறைகேழ் ஊரன் கொடுமை நாணி
நல்லன் என்றும் யாமே
அல்லன் என்னும்என் தடமென் தோளே.

இச் செய்யுள், தலைவி வாயில் வேண்டிய பாங்கற்குக் கூறியது எனினும், தோழிக்குக் கூறியது எனினும் அமையும்.

மனையின்கண் நட்டுவளர்த்த வயலைக்கொடி புறத்தே தானே தோன்றி வளரும் கொறுக்கைச்சியைப் பற்றுக்கோடாகக் கொண்டு சுற்றுதற்கிடமான நீர்த்துறையினையுடைய ஊரையுடையவன் செய்கின்ற கொடுந் தொழிலைப் பிறர் அறியின் அஃதவனுக்குப் பழியாம் என்பதற்கு நாணி, நாமே அவனை நல்லன் என்றே பிறர் அறியப் புகழா நின்றேம். என் தோள்களோ அங்ஙனம் நாணாவாய் அவன் மிகக் கொடியவனே என்னும் உண்மையைப் புறத்தார் அறியத் தூற்றா நின்றன. இதற்கு நான் என் செய்கோ தலைவன் பரத்தையர் திறமே சூழ்வான் என்பது உள்ளுறை வாயிலாகக் கூறப்பட்டுள்ளது.

மெய்ப்பாடு - மருட்கை; இளிவரலுமாம். பயன் - வாயில் நேர்தல்.

12. கரைசேர் வேழம் கரும்பிற் பூக்கும்
துறைகேழ் ஊரன் கொடுமை நன்றும்
ஆற்றுக தில்ல யாமே
தோற்க தில்லஎன் தடமென் தோளே.

Koviloor Digital Library

வாயில் நேரக் கருதிய தலைமகள், பரத்தையர்க்குப் பின்பும் அவன் சிறப்புச் செய்தான் என்பது கேட்டுப் பொறாளாய் கருத்தழிந்து தன்னுள்ளே சொல்லியது.

நெஞ்சமே! கரைமிசை நின்ற நாணல் இனிய கரும்பு போலப் பூத்திருக்கின்ற நீர்த்துறையமைந்த ஊரனுடைய கொடுமையை யாம் பொறுத்திருப்போம். நம் வழிப்படாத எனது மெல்லிய தோள்கள் மட்டும் மெலிகின்றன. இவை தோற்றே ஒழிக. யாம் மட்டும் ஆற்றியே இருப்போம். 'கரைசேர் வேழம் கரும்பிற் பூக்கும் ஊரன்' - உள்ளுறை உவமம்.

மெய்ப்பாடு - அழுகை, பயன் - நெஞ்சினை வலியுறுத்துதல். 12

13. பரியுடை நன்மான் பொங்குளை யன்ன
வடைகரை வேழம் வெண்பூப் பகரும்
தண்துறை யூரன் பெண்டிர்
துஞ்சூர் யாமத்துந் துயிலறி யலரே.

தலைவி வாயில் மறுத்தது

நீர் அடைகரை மேல்நின்ற நாணல் குதிரையின் தலையில் சூட்டப்படும் வெண் கவரியைப் போன்ற வெள்ளிய மலரை விரும்புவோர்க்கு வழங்குதற்கு இடமான குளிர் நீர்துறை யினையுடைய ஊரனுடைய பரத்தையர் ஊரிலுள்ளார் உறங்குதற்குரிய நள்ளிரவிலும் உறங்காமல் விழித்திருப்பர். ஆயின் அவரைத் தப்பி எங்ஙனம் வருவன்? வேழம் பூப்பகரும் ஊரன் என்றது உள்ளுறை உவமம்.

மெய்ப்பாடு - மருட்கை, பயன் - வாயில் மறுத்தல். 13

14. கொடிப்பூ வேழம் தீண்டி அயல
வடுக்கொண் மாஅத்து வண்தளிர் நுடங்கும்
மணித்துறை வீரன் மார்பே
பனித்துயில் செய்யும் இன்சா யற்றே.

Koviloor Digital Library

நீண்ட பூவினையுடைய நாணல் உராய்தலால் பக்கத்திலுள்ள பிஞ்சு ஈன்ற மாமரத்தினது வளவிய தளிர் நுடங்குதற்குக் காரணமான நீலமணி போன்ற நிரமைந்த நீர்த்துறையை யுடைய ஊரனுடைய மார்பு குளிர்ந்த துயிலைத் தருதற்குக் காரணமான இனிய சாயலை யுடைத்து. அதனை என்னால் மறந்திருக்க முடியவில்லை. யான் என் செய்கோ? என்று தலைவி தோழியை நோக்கிக் கூறினாள்.

'வேழந்தீண்டி மாத்து வண்தளிர் நுடங்கும் ஊரன்' என்றது உள்ளுறை உவமம்.

மெய்ப்பாடு - அழுகை; இளிவரலுமாம். பயன் - வேட்கை யுரைத்தல். 14

15. மணலாடு மலிர்நிறை விரும்பிய ஒண்தழைப்
புனலாடு மகளிர்க்குப் புணர்துணை உதவும்
வேழ மூதூர் ஊரன்
ஊரன் ஆயினும் ஊரன்அல் லன்னே.

எக்கர் இடாநின்ற மிக்க வெள்ளத்தின்கண் நீராடும் தழை யுடுத்த மகளிர்க்கு அவர் வேண்டுகின்ற துணையாகிய தெப்பத்தைத் தரும் நாணலையுடைய ஊரினையுடைய நந்தலைவன் ஊரகத்தில் உறைபவனாயினும் அவன் ஒழுக்கத்தால் ஊரில் உறைபவன் ஆகான். ஆதலான் யான் அமைதியுறுதல் எங்ஙனம்?

புனலாடும் மகளிர்க்கு வேழம் புணர்துணை உதவும் ஊரன் என்றது உள்ளுறை. இதன் கருத்து, அவனும் அந்த வேழம் போன்று காமக்களியாட்டம் ஆடுகின்ற பரத்தையர்க்குப் புணர்துணை ஆகின்றான் என்பதாம். வேழக் கோலால் தெப்பம் அமைத்தலும் உண்டு.

மெய்ப்பாடு - அழுகை; பயன் : ஆற்றாமைக்குக் காரணம் காட்டல். 15

Koviloor Digital Library

தோழி கூற்று

16. ஓங்குபூ வேழத்துத் தூம்புடைத் திரள்கால்
சிறுதொழு மகளிர் அஞ்சனம் பெய்யும்
பூக்கஞல் ஊரனை யுள்ளிப்
பூப்போல் உண்கண் பொன்போர்த் தனவே.

தலைவன் விடுத்த பாணன் முதலிய வாயில்கட்குத் தோழி காரணம் கூறி வாயில் மறுத்தது.

நாணலினது உள் துளையுடைய திரண்ட தண்டின்கண் குற்றேவல் மகளிர் அஞ்சனம் செய்யும் ஊரன் வருவான் என்று எதிர்பார்த்திருந்த தலைவியின் விழிகள் ஒளியிழந்து பசலையின் மூழ்கிப் பொலிவிழந்தன. அவன் இனி வந்தால் என்ன? வராவிடின் என்ன? சிறந்த அஞ்சனத்தைப் பொற் செப்பிற் பெய்யாது, இழிந்த வேழத் தண்டிற் பெய்யும் சிறுதொழு மகளிர் போன்று இவனும் உயர்ந்த குலமகளாகிய தலைவியின் பால் வைத்தற்குரிய தண்ணளியை அவள் பால் வையாது இழிந்த பரத்தையர் பால் வைக்கின்றனன் என்பது உள்ளுறை உவமம்.

மெய்ப்பாடு - மருட்கை; பயன் - வாயில் மறுத்தல். 16

17. புதன்மிசை நுடங்கும் வேழ வெண்பூ
விசும்பாடு குருகின் தோன்றும் ஊரன்
புதுவோர் மேவலன் ஆகலின்
வறிதா கின்றுஎன் மடங்கெழு நெஞ்சே.

முட்புதரில் நின்று அதன் மேல் அசையும் மணமற்ற இழிந்த நாணல் வெண்பூ தூயதான வானத்தில் பறக்கும் சிறந்த அன்னம் போலக் காணப்படுதல் போன்று இவனுக்கும் இழிகுலத்தில் தோன்றி நடிக்கும் பரத்தையர், தூயவரும் சிறந்தவருமாகிய குலமகளிர் போலக் காணப்படுகின்றனர் என்பதாம்.

அக் கொடுமையை நினைந்து அவன் அவ்வொழுக்கத்தினின்றும் மீள்கிலான் என்னும் கருத்தால் என் மடநெஞ்சம் நாளுக்கு நாள் கருங்கா

Koviloor Digital Library

நின்றது. யான் ஆற்றியிருத்தல் எங்ஙனம் என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

மெய்ப்பாடு - அவலம்; பயன் - ஆற்றாமைக்குக் காரணம் கூறுதல். 17

18. இருஞ்சா யன்ன செருந்தியொடு வேழம்
கரும்பின் அலமரும் கழனி ஊரன்
பொருந்துமல ரன்னஎன் கண்ணழப்
பிரிந்தனன் அல்லனோ பிரியலென் என்றே.

கரிய தன்‌டான் கோரையோடும் அதனை ஒத்த பஞ்சாய்க் கோரையோடும் புல்லிய நாணல் இனிய கரும்பு போலச் சுழலுதற்குக் காரணமான ஊரையுடைய தலைவன் நின்னை ஒரு போதும் பிரிந்துறையேன் என்று உறுதி மொழி கூறியிருந்தும் தாமரை மலர் போன்ற என் கண்கள் அழும்படி இப்போது பிரிந்துறைகின்றான் அல்லனோ? ஆகவே யான் எவ்வாறு தெளிதல் கூடும்.

இது தலைமகன் விடுத்த வாயில்கட்குத் தலைவி அவனுடைய கொடுமை கூறி வாயில் மறுத்தது. செருந்தியோடு வேழம் கரும்பின் அலமரும் ஊரன் என்றது உள்ளுறை உவமம்.

மெய்ப்பாடு - இளிவரல்; பயன் - வாயில் மறுத்தல். 18

19. எக்கர் மாஅத்துப் புதுப்பூம் பெருஞ்சினை
புணர்ந்தோர் மெய்ம்மணங் கமழும் தண்பொழில்
வேழ வெண்பூ வெள்ளுளை சீக்கும்
ஊரன் ஆகலின் கலங்கி
மாரி மலரின் கண்பனி யுகுமே.

நீரிட்ட மணல் திடரில் நிற்கின்ற மாமரத்தினது புதுமலரையுடைய பெரிய கிளை புதுமண மகளிர் மெய்போன்று நறுமணம் கமழ்கின்ற குளிர்ந்த பொழிலின்கண் நாணலினது மலர் நுனி அம்மாமரத்தின் அரும்பை துடைத்தழிக்கின்ற ஊரினை உடையன்

Koyiloor Digital Library

ஆதலின் என்னுடைய கண்கள் மழைக்காலத்து மலர்கள் நீர்த் துளிகளைத் துளிக்குமாறு போலத் துன்பக் கண்ணீர் துளிக்கின்றன

இதுவும் தலைவி—வாயில்—மறுத்தது.

சேணிடைப் பிரிந்துவந்து தன்னுடனாய் நிகழ்கின்ற பருவத்து இன்பங்கள் நுகராமல் இடையே விலக்குகின்ற பரத்தையர்களை யுடையான் என்று உள்ளுறையால் கூறுகின்றாள்

மெய்ப்பாடு - இளிவரல்; பயன் - வாயில் மறுத்தல். 19

20. அறுசில் கால அஞ்சிறைத் தும்பி
நூற்றிதழ்த் தாமரைப் பூச்சினை சீக்கும்
காம்புகண் டன்ன தூம்புடை வேழத்துத்
துறைநணி யூரனை உள்ளியென்
இறையோர் எல்வளை நெகிழ்புஒ டும்மே.

ஆறுகால்களையும் அழகிய சிறகுகளையும் உடைய வண்டு நூறு இதழ்களையுடைய தாமரை மலரினுள் இட்டு வைத்த முட்டைகளை அழிக்கின்ற மூங்கிலைப் போன்ற உள் துளையையுடைய நாணலையுடைய நீர்த்துறை ஊரனை இடையறாது நினைந்து நினைந்து மெலிவதனால் என் முன் கையில் செறிக்கப்பட்ட வளைகள் நெகிழ்ந்து கழலா நிற்கும். இன்னும் அவனை நினைப்பதால் வரும் பயன் யாது? வேழம் சினைசிக்கும் என்பது உள்ளுறை. இதன் கருத்து அகத்தே அன்பில்லாத பரத்தையர் என் நெஞ்சத்தே முகிழ்விக்கும் இன்பத்தை அழித்தொழிக்கின்றனர் என்பதாம்.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - வாயில் மறுத்தல். 20

வேழப்பத்து முற்றிற்று

Koviloor Digital Library

3. கள்வன் பத்து

அஃதாவது கள்வன் என்னும் சொல் பாடல்தோறும் பயின்று வரும் பத்துச் செய்யுளின் தொகுதி என்றவாறு.

கள்வன் - நண்டு; நண்டு மருதக் கருப்பொருள்.

தோழி - கூற்று :-

21. முள்ளி நீடிய முதுநீர் அடைகரைப்
புள்ளிக் கள்வன் ஆம்பல் அறுக்கும்
தண்டுறை யூரன் தெளிப்பவும்
உண்கண் பசப்பது எவன்கொல் அன்னாய்.

அன்னையே! முள்ளிச்செடி நீண்டு வளர்ந்துள்ள பழைதாகிய நீர்நிலையின் கரைக்கண் வாழும் புள்ளிகளையுடைய நண்டு நீரிலுள்ள ஆம்பல் தண்டினை அறுத்தற்கிடனான குளிர்ந்த நீர்த்துறை ஊரனாகிய தலைவன் தெளிவாக உறுதி கூறியிருப்பவும் உன்னுடைய மையுண்ட கண் பசலை பூப்பது ஏன்? என்று தோழி தலைவியை நோக்கிக் கூறினாள்.

கள்வன் ஆம்பல் அறுக்கும் என்பது உள்ளுறை. அதேபோன்று தலைவனும் இனி பரத்தையர் தொடர்பை விடுத்து இல்லின்கண் எஞ்ஞான்றும் நின்னைப் பிரியாதுறைவன் என்பதாம்.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - ஆற்றுவித்தல், 21

தலைவி - கூற்று :-

22. அள்ளல் ஆடிய புள்ளிக் கள்வன்
முள்ளி வேர்அளைச் செல்லும் ஊரன்
நல்ல சொல்லி மணந்துஇனி
நீயேன் என்றது எவன்கொல் அன்னாய்.

அன்னாய்! தோழி! சேற்றில் அளைந்த புள்ளிகளையுடைய நண்டு முள்ளிச் செடியின் வேரின்கண் அமைந்த வளையில் சென்று

Koviloor Digital Library

உறைதற்கிடமான ஊரையுடையவன் பண்டு நாம் நம்பும்படி நன்மொழிகள் பலவும் கூறி மணந்துகொண்டு இனி எஞ்ஞான்றும் உன்னைப் பிரிய மாட்டேன் என்று கூறிய உறுதிமொழி இப்போது என்னாயிற்று? நீயேன்-பிரியேன், சேறாடிய கள்வன் முள்ளி வேர் அளைச் செல்லும் என்றது உள்ளுறை. பிறர்கூறும் அலர் அஞ்சாது பரத்தையர் மனைக்கண் செல்வான் என்பதாம்.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - தோழிக்கு உற்றது உரைத்தல். 22

23. முள்ளி வேரளைக் கள்வன் ஆட்டிப்
பூக்குற்று எய்திய புனல்அணி யூரன்
தேற்றஞ் செய்துநப் புணர்ந்தினித்
தாக்கணங்கு ஆவ தெவன்கொல் அன்னாய்.

அன்னாய்! தோழி! விளையாட்டு மகளிர் முள்ளிச் செடியின் வேரின்கண் உள்ள வளையில் அடங்கி வாழும் நண்டினை வலிந்து பிடித்து நீராட்டி மலர்களைக் கொய்து வருதற்கு இடனான நீர்நிலை ஊரனாகிய தலைவன் பண்டு பேதையராகிய நம்மை நல்லனகூறித் தெளிவித்துக் கூடி, இப்பொழுது, தீண்டி வருத்தும் தெய்வமாக மாறியது என்னையோ? அறிகிலேன். நம்புணர்ந்து நப்புணர்ந்து என வந்தது.

இவ்வாறெல்லாம் தேற்றஞ்செய்து நப்புணர்ந்தவன் இன்று இவற்றையெல்லாம் மறந்தொழிந்து நம்மைப் பிரிந்து துன்பஞ் செய்வது என்னையோ?

மெய்ப்பாடு - அழுகை, பயன் - உற்றது உரைத்தல். 23

தோழி - கூற்று :-

24. தாய்சாப் பிறக்கும் புள்ளிக் கள்வனொடு
பிள்ளை தின்னும் முதலைத்து அவனூர்
எய்தினன் ஆகின்று கொல்லோ மகிழ்நன்
பொலந்தொடி தெளிர்ப்ப முயங்கியவர்
நலங்கொண்டு துறப்பது எவன்கொல் அன்னாய்.

Koviloor Digital Library

அன்னையே! தம்மைக் கருக்கொண்டுள்ள தாய் சாவும்படி பிறவா நின்ற புள்ளியையுடைய கொடிய நண்டுகளோடு தாம் ஈன்ற பிள்ளையையே தின்னும் கொடுமையுடைய முதலைகளையும் உடையது அவனுடைய ஊர். ஆதலால் தலைவனும் அவன் ஊர் கொண்டுள்ள கொடுமைகளையெல்லாம் தானும் உடையன் ஆயினான் போலும். அங்ஙனம் இல்லையெனின் தன்னால் தழுவப்பட்ட மகளிருடைய நலத்தையெல்லாம் நுகர்ந்து பின்னர் அவரை நினையாமல் துறந்து போதற்குக் காரணந்தான் யாது? இது தோழி கூற்று.

மெய்ப்பாடு - மருட்கை; பயன் - வாயில் மறுத்தல். 24

தோழி கூற்று :- வாயிலுக்கு

25. அயல்புறந் தந்த புனிற்றுவளர் பைங்காய்
வயலைச் செங்கொடி கள்வன் அறுக்கும்
கழனி யூரன் மார்புபலர்க்கு
இழைநெகிழ் செல்லல் ஆகும் அன்னாய்.

அன்னையே! மனையின் பக்கத்தே நட்டு வளர்த்த பசியகாயையுடைய சிவந்த வயலைக் கொடியை நண்டு அறுத்தற்கு இடனான வயலூரனாகிய தலைவனது மார்பு பரத்தையர் பலர்க்கும் அணிகலன் நெகிழ்தற்குக் காரணமான காமப்பிணியைச் செய்வதொன்றாய் இருக்கின்றது. இஃதென்னையோ?

செல்லல் துன்பம்.

வயலைக் கொடியைக் கள்வன் அறுக்கும் என்றது உள்ளுறை. இதன் கருத்து. அவனால் திருமணம் செய்து கொள்ளப்பட்டு மகவின்று மனைக்கண் இருந்து வாழும் என் இன்ப வாழ்க்கையை பரத்தையர் கெடுக்கின்றனர் என்பதாம்.

மெய்ப்பாடு - இளிவரல். பயன் - வாயில் மறுத்தல். 25

26. கரந்தைஅம் செறுவில் துணைதுறந்து கள்வன்
வள்ளை மென்கால் அறுக்கும் ஊரன்
எம்மும் பிறரும் அறியான்
இன்னன் ஆவது எவன்கொல் அன்னாய்.

Koviloor Digital Library

அன்னையே! கரந்தைக் கொடி படர்ந்த அழகிய கழனியில் வாழும் நண்டு தன் காதலியாகிய நண்டினைப் பிரிந்து போய் வள்ளைக் கொடியினது மெல்லிய தண்டினை அறுத்தற்கு இடனான ஊரையுடைய நம் தலைவன் எம்முடைய துன்பத்தையும் பிறமகளிர் துன்பத்தையும் அறியமாட்டான். இங்ஙனம் பண்பு அறியாதவனாக அவன் ஆயது என்னையோ? அறிகிலேன்.

மெய்ப்பாடு - மருட்கை; பயன் - வாயில் மறுத்தல். 26

27. செந்நெல்அம் செறுவில் கதிர்கொண்டு கள்வன்
தண்அக மண்அளைச் செல்லும் ஊரற்கு
எல்வளை நெகிழ சாஅய்
அல்லல் உழப்பது எவன்கொல் அன்னாய்.

அன்னையே! நண்டு செந்நெல் விளைந்துள்ள அழகிய வயலின் கண் சென்று முற்றிய கதிரைக் கொய்துகொண்டு, குளிர்ந்த வளையின் கண்ணே புகுதற்கு இடமான ஊரினையுடைய நம் தலைவன் திறத்தில் வளை கழலும்படி மெலிந்து வருந்துவது எற்றிற்கோ? வருந்தற்க! ஊரன் + கு = ஊரற்கு.

தலைவன் நாள்தோறும் இல்லத்திற்கு வேண்டிய பொருளை ஈட்டி வருந்தொழில் காரணமாகக் காலந்தாழ்த்து வருகின்றனன், அல்லால் பிழையேதுமிலன். எனவே நீ அதுபற்றி வருந்தாது இருப்பாயாக என்று ஆற்றுவித்தவாறாயிற்று.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - ஆற்றுவித்தல். 27

28. உண்துறை அணங்கிவள் உறைநோய் ஆயின்
தண்சேறு கள்வன் வரிக்கும் ஊரற்கு
ஒண்டொடி நெகிழச் சாஅய்
மென்தோள் பசப்பது எவன்கொல் அன்னாய்.

தாயே! தலைவி எய்தியுள்ள நோய் நீருண்ணும் துறைக்கண் உறையும் தெய்வத்தான் உண்டாயது என்று நீ கருதுவாயாயின் நண்டு

Koviloor Digital Library

குளிர்ந்த சேற்று நிலத்தில் உகிரால் கோலம் செய்தற்கு இடனான ஊரையுடைய தலைவன் பொருட்டு இவள் தன் வளைகள் நெகிழும்படி மெலிந்து தன்னுடைய மெல்லிய தோள்கள் பசப்பது எற்றிற்கோ?

இவள் ஊரன் ஒருவனுக்குக் கற்புக்கடம் பூண்டு அவனை எய்தப்பெறாமல் இவ்வாறு மெலிகின்றனள் . நீயிர் அஃதுணராமல் வெறியாட்டெடுப்ப முயலுதல் அறியாமையாம் என்பது குறிப்பு

மெய்ப்பாடு - அச்சம். ; பயன் - அறத்தொடு நிற்றல். 28

29. மாரி கடிகொளக் காவலர் கடுக
வித்திய வெண்முளை கள்வன் அறுக்கும்
கழனி ஊரன் மார்புற மரீஇத்
திதலை அல்குல் நின்மகள்
பசலை கொள்வது எவன்கொல் அன்னாய்

அன்னையே! மழை மிகுதியாகப் பெய்ய, காவலர் விரைந்து செல்லவும் நண்டு உழவர் விதைத்த நென்முளையை அறுத்தற்கு இடனான ஊரையுடைய் தலைவனது மார்பை மிகவும் பொருந்தித் தழுவியும் தேமல்படர்ந்த அல்குலையுடைய நின்மகள் பசலை பூப்பது என்னையோ யான் அறிகிலேன்.

ஊரன் தமர் அறியாமலும் காவல் கடந்து வந்தும் நின் மகளைக் கூடினான் என்று உள்ளுறையால் உணர்த்தினள் .

மெய்ப்பாடு - அச்சம்; பயன் - அறத்தொடு நிற்றல். 29

30. வேப்புநனை யன்ன நெடுங்கண் கள்வன்
தண்அக மண்அளை நிறைய நெல்லின்
இரும்பூ உறைக்கும் ஊரற்குஇவள்
பெருங்கவின் இழப்பது எவன்கொல் அன்னாய்

அன்னையே! வேம்பினது அரும்பையொத்த நீண்ட கண்ணை யுடைய நண்டினது குளிர்ந்த வளை நிரம்பும்படி நெல்லினது பெரிய

Koviloor Digital Library

மலர் உதிர்தற்கு இடனான ஊரையுடைய தலைவன் பொருட்டு நம் தலைவி தனது பேரழகு கெடும்படி மெலிவது எற்றிற்கோ? யானறிகிலேன்.

அலவன் மண்ணளை நிறைய நெல்லின் பூவிறைக்கும் ஊரன் என்றது, தலைவன் மனையிடத்து உளவாகிய வருவாய்ச் சிறப்புக் கூறியதாகும். வேப்பு - வேம்பு.

மெய்ப்பாடு - அச்சம்; பயன் - அறத்தொடு நிற்றல். 30

கள்வன் பத்து முற்றிற்று

Koviloor Digital Library

4. தோழிக்கு உரைத்த பத்து

அஃதாவது தலைவி பரத்தை என்னும் இவர் தத்தம் தோழிக்குக் கூறியனவாக வரும் பத்துச் செய்யுளின் தொகுதி என்றவாறு.

31. அம்ம வாழி தோழி மகிழ்நன்
கடனன்று என்னும் கொல்லோ
நம்மூர் முடமுதிர் மருதத்துப் பெருந்துறை
உடனாடு ஆயமோடு உற்ற சூளே.

தோழியே! கேட்பாயாக! நம் தலைவன் நம்முடைய ஊரின் கண்ணுள்ள வளைந்த முதிர்ந்த மருதமரம் நிற்கும் பெரிய நீராடு துறைக் கண் நம்மோடு நீராடிய ஆய மகளிர் கேட்ப இனி யான் நின்னைப் பிரிந்து பரத்தையர் சேரி சேரேன் என்று கூறிய உறுதிமொழி தன்னாற் கடைப்பிடிக்கற் பாலதன்று என்று கருதுவானோ? சூள் உரைத்தும் அதனைக் கடைப் பிடியாத கயமையாளன் என்று இகழ்ந்துரைத் தவாறு.

மெய்ப்பாடு - வெகுளி . பயன் - வாயிலாக வந்தோர் வாளா போதல். அம்ம - முன்னிலை அசை. 31

32. அம்ம வாழி தோழி மகிழ்நன்
ஒருநாள் நம்மில் வந்ததற்கு எழுநாள்
அழுப என்பஅவன் பெண்டிர்
தீயுறு மெழுகின் ஞெகிழ்வனர் விரைந்தே.

தோழியே கேட்பாயாக! நம் தலைவன் ஒரோ ஒருநாள் நம் இல்லத்திற்கு வந்து சென்றமைக்காக அவனுடைய பரத்தை மகளிர் அஃது அறிந்த அப்பொழுதே தீயில் இட்ட மெழுகுபோல் உருகியவராய் அன்றுமுதல் ஏழுநாள்வரை அழுவாராயினர் என்று கூறுவர்.

Koviloor Digital Library

அகத்தே அன்பிலராயிருந்தும் இவ்வாறு போலியன்பு காட்டி அவனை மயக்கி மடக்கிக் கொள்வர் என்பது குறிப்பு.

மெய்ப்பாடு - வெகுளி; பயன் - வாயில் மறுத்தல். 32

33. அம்ம வாழி தோழி மகிழ்நன்
மருதுயர்ந்து ஓங்கிய விரிபூம் பெருந்துறைப்
பெண்டிரோடு ஆடும் என்பதன்
தண்தார் அகலம் தலைத்தலைக் கொளவே

தோழி கேட்பாயாக. நம் தலைவன் மருதமரம் உயர்ந்து வளர்ந்த, மலர்ந்த பூக்கள் செறிந்த பெரிய நீர்த்துறையில் தன் பரத்தையரோடு தனது குளிர்ந்த மாலையணிந்த மார்பகத்தை அவர்தாம் வேண்டும் இடம்தோறும் எய்திக் கொள்ளும்படியாக ஆடுவானாயினான் என்று அறிந்தோர் கூறுகின்றனர்.

மெய்ப்பாடு - வெகுளி; பயன் - வாயில் மறுத்தல். 33

34. அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பொய்கைப் பூத்த புழற்கால் ஆம்பல்
தாதுஏர் வண்ணம் கொண்டன
ஏதி லாளற்குப் பசந்தஎன் கண்ணே.

தோழி கேட்பாயாக! நம் தொடர்பை விட்டுவிட்டு அயலானாகிய தலைவன் செய்த கொடுமைக்கு ஆற்றாதனவாய்ப் பசலைபூத்த என் கண்கள் நமது ஊரின்கண் உள்ள குளத்தில் மலர்ந்துள்ள உள் துளை கொண்ட தண்டினையுடைய ஆம்பல் மலரின் அகத்துள்ள பூந்துகள் போன்ற பொன்னிறத்தை உடையவாயின.

தலைவன் நம்பால் சிறிதும் அன்பிலன் ஆயினான் என்று தோழிக்குக் கூறியது.

மெய்ப்பாடு - வெகுளி; பயன் - வாயில் மறுத்தல் 34

Koviloor Digital Library

35. அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பொய்கை ஆம்பல் நார்உரி மென்கால்
நிறத்தினும் நிழற்றுதல் மன்னே
இனிப்பசந் தன்றுஎன் மாமைக் கவினே.

தோழி கேட்பாயாக! என்னுடைய மேனி அழகு நம் ஊர் பொய்கையில் உள்ள ஆம்பல் மலரின் நார் உரிக்கப்பட்ட தண்டினது நிறம் போல தன்னியல்பு அழிந்து இப்பொழுது பசலை பாய்ந்தது.

அவன் செய்த கொடுமையை ஒருவாறு மறந்தமைவேன், இப்போது இவர் நினைவூட்டவே அந்தக் கொடுமைக்கு ஆற்றாதன வாய்க் கண்கள் பசந்தன.

மெய்ப்பாடு - வெகுளி; பயன் - வாயில் மறுத்தல். 35

36. அம்ம வாழி தோழி யூரன்
நம்மறந்து அமைகுவன் ஆயின் நாம்மறந்து
உள்ளாது அமைதலும் அமைகுவம் மன்னே
கயலெனக் கருதிய உண்கண்
பசலைக்கு ஒல்கா ஆகுதல் பெறினே.

தோழியே கேட்பாயாக! நம் தலைவன் நம்மை நினையாது மறந்திருந்தபோது கண்டோர் இவை கயல் மீன்களோ என்று கருதுதற்குக் காரணமான இந்த மையுண்ட கண்கள் அவனுடைய பிரிவை ஆற்றியிருந்து பசலை நோய்க்குப் பற்றுக் கோடாகிச் சுருங்குதல் செய்யாவெனின் நாமும் ஒரு தலையாக அவனை மறந்து பின்னர் ஒரு பொழுதும் நினைப்பதும் செய்யாமல் இருக்கலாம்.

மெய்ப்பாடு - இளிவரல்; பயன் - ஆற்றாமைகூறி வாயில் நேர்வித்தல். 36

Koviloor Digital Library

37. அம்ம வாழி தோழி மகிழ்நன்
நயந்தோர் உண்கண் பசந்துபனி மல்க
வல்லன் வல்லன் பொய்த்தல்
தேற்றான் உற்ற சூள்வாய்த் தல்லே

தோழி கேட்பாயாக! தலைவன் தன்னை விரும்பிய பேதை மகளிருடைய மையுண்ட கண்கள் பசலை பாய்ந்து துன்பக் கண்ணீர் மிகும்படி செய்தலில் மிகவல்லவன் காண். அன்றியும் தன்னை நயந்த மகளிர்க்குத்தான் கூறிய உறுதிமொழி மெய்ம் மொழியாகும்படி அதனைப் பேணி ஒழுகுதலை ஒரு சிறிதும் தெளியாதவனுமாவான்.

காதற்பரத்தை - சேரிப் பரத்தையர் போன்று பொதுமகள் ஆகாமல் ஒருவனுக்கே உரிமை பூண்டொழுகும் காமக் கிழத்தி. இது அவள் கூற்று.

மெய்ப்பாடு - நகை; பயன் - தலைவனையும் அவன் சூளை நம்பும் தலைவியையும் ஒரு சேர இகழ்தல். 37

38. அம்ம வாழி தோழி மகிழ்நன்
தன்சொல் உணர்ந்தோர் அறியலன் என்றும்
தண்தளிர் வெளவும் மேனி
ஒள்தொடி முன்கை யாம்அழப் பிரிந்தே

தோழி கேட்பாயாக; நம் தலைவன், குளிர்ந்த மாந்தளிர் அழகைத் திறையாகக் கவரும் மேனியையும் வளையணிந்த முன்கையையும் உடைய யாம் வருந்தி அழும்படி பிரிந்து போதல் இயல்பே காண்; அஃது எதனால் எனின் அவன் எந்தக் காலத்தும் தன்னுடைய மொழியை உண்மையென்று நம்பி அதுகொண்டு வாழும் இயல்புடைய மகளிரின் பண்பை உணர்ந்து ஒழுகுவான் அல்லன் ஆதலால் காண். மேனியும் பசந்தது; தொடியும் கழன்றன.

மெய்ப்பாடு - இளிவரல்; பயன் - ஆறுதல் தேடுவது. 38

Koviloor Digital Library

39\. அம்ம வாழி தோழி யூரன்
வெம்முலை யடைய முயங்கி நம்வயின்
திருந்திழைப் பணைத்தோள் ஞெகிழப்
பிரிந்தனன் ஆயினும் பிரியலன் மன்னே.

தோழி கேட்பாயாக! தலைவன் நம்முடைய விரும்புதற்குக் காரணமான முலைகள் நன்கு பொருந்தத் தழுவிப் பின்னர் நம்முடைய திருத்தமுடைய அணிகலன்கள் மூங்கிலை யொத்த தோளினின்றும் கழலும்படி பிரிந்து தன் மனைக்கண் சென்றானேனும் அவன் உலகியல் கருதிப் பிரிந்ததல்லால் வாய்மையாகவே பிரிந்தவன் அல்லன் காண்.

எனவே அவன் விரைவிலேயே மீண்டும் நம்பால் வருதல் ஒருதலை என்பது குறிப்புப் பொருளாயிற்று.

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - செருக்கழித்தல். 39

.40. அம்ம வாழி தோழி மகிழ்நன்
ஒள்தொடி முன்கை யாம்அழப் பிரிந்துதன்
பெண்டிர் ஊர்இறை கொண்டனன் என்ப
கெண்டை பாய்தர அவிழ்ந்த
வண்டுபிணி ஆம்பல் நாடுகிழ வோனே.

தோழி கேட்பாயாக! நம் தலைவன் கெண்டைமீன் பாய்தலால் மலர்ந்து வண்டுகளைப் பிணித்துக்கொள்ளும் ஆம்பல் மலர்களையுடைய ஊரன் என்பதை அறியாத மடவோர் வளையணிந்த முன்கையையுடைய யாம் துன்புற்று அழும்படி தன் கிழத்தியர் மனைக்கண் சென்று தங்கினன் என்று நம்பால் பண்பின்மை சுட்டி நகையாடுவர் காண். இது காதற் பரத்தை கூற்று.

தலைவன் உலகியல் பற்றித் தன் மனைக்கண் சென்றானாயினும் மீண்டும் எம்மனைக்கு வருமாறு செய்யும் பெண்மை நலமும் பேரழகும் உடையேம் யாம் என்பது உள்ளுறை.

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன். - சேரிப்பரத்தையரைப் பேதைமையூட்டல். 40

- தோழிக்கு உரைத்த பத்து முற்றிற்று -

Koviloor Digital Library

5. புலவிப் பத்து

அஃதாவது புலவியே பொருளாக எழுந்த பத்துப் பாடல்களின் தொகுதி என்றவாறு. புலவி - ஊடல்.

41. தன்பார்ப்புத் தின்னும் அன்புஇல் முதலையொடு
    வெண்பூம் பொய்கைத்து அவனூர்என்ப அதனால்
தன்சொல் உணர்ந்தோர் மேனி
    பொன்போல் செய்யும் ஊர்கிழ வோனே.

தலைவனுடைய ஊர் தானீன்ற தனது பிள்ளைகளைத் தானே கொன்று தின்றற்குக் காரணமான அன்பு சிறிதுமில்லாத முதலைகளோடு வெளிய மலர்களையும் ஒருங்கேயுடைய நீர் நிலைகளையுடையது என்று கூறுவர். அத்தகைய ஊரையுடைமையாற் போலும் அவ்வூரையுடைய அவனும் தன்னுடைய பொய்ச் சொல்லை மெய்ம் மொழியென்று தெளிந்தொழுகும் பேதை மகளிரின் மேனியைப் பசலை மூழ்கச் செய்யும் கொடுமை உடையவனாகவும் இருக்கின்றான்.

மெய்ப்பாடு - இளிவரல்; பயன் - வாயில் மறுத்தல். 41

42. மகிழ்மிகச் சிறப்ப மயங்கினள் கொல்லோ
    யாணர் ஊரநின் மாணிழை யரிவை
காவிரி மலிர்நிறை யன்னநின்
    மார்புநனி விலக்கல் தொடங்கி யோளே.

நாள்தோறும் புதுவருவாயினை யுடைய ஊரனே! நின்னால் விரும்பப்பட்ட பரத்தை காவிரியால் பெருகிவரும் புதுநீர் வெள்ளமே போன்ற நின் மார்பினைப் பொருந்த மறுத்து மிகவும் வன்மையாக விலக்கத் தொடங்கியவள் ஓரோவழி கள்ளுண்ட வெறி மிகவும் சிறத்தலால் அறிவு மயங்கி அங்ஙனம் விலக்கியிருப்பாளோ?

Koviloor Digital Library

அவள் அங்ஙனம் புலந்து நின்னை விலக்கியதனாலேதான் இப்போது ஈண்டு வந்துள்ளனை. இன்னும் அவள் பாலே செல்லுக என்று வாயில் மறுத்தபடியாம்.

மெய்ப்பாடு - வெகுளி; பயன் - வாயில் மறுத்தல். 42

43. அம்பணத் தன்ன யாமை யேறிச்
செம்பின் அன்ன பார்ப்புப் பலதுஞ்சும்
யாணர் ஊர நின்னினும்
பாணன் பொய்யன் பலசூ ளினனே.

மரக்காலை யொத்த யாமையினது முதுகில் ஏறிக் கிடந்து செப்புத் தகடுகளை யொத்த அதன் பார்ப்புக்கள் பலவும் துயில்தற்கு இடமான புதுவருவாயினையுடைய ஊரனே! நின்னைக் காட்டிலும் நின்னுடைய பாணன் பொய் கூறுவதில் வல்லவன்; பொய்ச்சூள் உறுதலையும் உடையன்காண்; ஆதலால் நின்னுரை கேட்டு இனியான் மயங்கேன். வந்தவழியே மீள்க. அம்பணம் - மரக்கால்.

மகப்பெற்று வாழ்வார்க்குப் பொய் கூறலாகா தென்பதாம்.

மெய்ப்பாடு - அச்சம்; பயன் - மறுத்தல். 43

44. தீம்பெரும் பொய்கை யாமை இளம்பார்ப்புத்
தாய்முகம் நோக்கி வளர்ந்திசின் ஆஅங்கு
அதுவே ஐயநின் மார்பே
அறிந்தனை ஒழுகுமதி அறனுமார் அதுவே

ஐயனே! இனிய பெரிய பொய்கையில் வாழும் ஆமையினுடைய இளைய பார்ப்பு தன்னை ஈன்றதாயின் முகத்தை நோக்கியே வளர்வது போல, தலைவிக்கு நின் மார்பும் அத்தன்மைத்தேயாகும். தலைவியின் இப்பண்பினை உணர்ந்து அதற்கேற்ப ஒழுகுவாயாக! நினக்குரிய அறமும் அங்ஙனம் ஒழுகுவதேயாம்.

பரத்தையர் மனைக்கண் பன்னாள் தங்கித் தன் மனைக்கண் வந்த தலைமகற்குத் தோழி கூறியது.

Koviloor Digital Library

மெய்ப்பாடு - இளிவரல்; பயன் - பரத்தமை அகற்றுதல். 44

45. கூதிர் ஆயின் தண்கலிழ் தந்து
வேனில் ஆயின் மணிநிறங் கொள்ளும்
யாறுஅணிந் தன்றுநின் ஊரே
பசப்பணிந் தனவால் மகிழ்நஎன் கண்ணே.

தலைவனே! நின்னுடைய ஊரேனும் குளிர் பருவத்தில் குளிர்ந்த கலங்கல் நீரை வழங்கி, வேனிற் பருவத்தில் தெளிந்த நீரைப்பெற்று நீல மணி போன்ற நிறங்கொள்ளும் ஆற்றில் அழகு செய்யப்படுகின்றது. என் கண்களோ அங்ஙனமின்றி எல்லாப் பருவத்தும் பசலையே பூத்திருப்பன ஆயின.

ஆறேனும் ஒரு பருவத்தில் கலங்கிக் கிடந்தாலும் மற்றொரு பருவத்தில் தெளிந்திருக்கிறது. தலைவியின்கண்ணோ எல்லாப் பருவத்தும் பசலைபூத்தே இருக்கின்றன.

மெய்ப்பாடு - அழுகை; பயன் - புலத்தல். 45

46. நினக்கே அன்றுஅஃது எமக்குமார் இனிதே
நின்மார்பு நயந்த நன்னுதல் அரிவை
வேண்டிய குறிப்பினை யாகி
ஈண்டுநீ அருளாது ஆண்டுறை தல்லே.

எம் பெருமானே! நின்னுடைய மார்பின் முயக்கத்தை விரும்பிய பரத்தை தன் மனதின்கண் விரும்பிய குறிப்புணர்ந்து ஒழுகும் நீ இங்கே வந்து தலைவிக்கு அருள் செய்யாமல் அவள் மனையிலேயே தங்கியிருப்பது நினக்கு மட்டும் இனிமை பயப்பதன்று; அச்செயல் எமக்கும் பெரிதும் இன்பம் பயப்பதேயாம்.

நீ ஈண்டு வருதலினும் வாராமையே எமக்குநன்று என்று புலந்து கூறினாளாயிற்று ஈண்டு உலகியல் கருதியே வருகின்றாய் அல்லவா என்று கூறுகின்றாள்.

மெய்ப்பாடு - வெகுளி; பயன் - ஊடல். 46

Koviloor Digital Library

47. முள்ளெயிற்றுப் பாண்மகள் இன்கெடிறு சொரிந்த
அகன்பெரு வட்டி நிறைய மனையோள்
அரிகால் பெரும்பயறு நிறைக்கும் ஊர
மாணிழை ஆயம் அறியும்நின்
பாணன் போலப் பலபொய்த் தல்லே.

முள்போன்று கூரிய பற்களையுடைய பாணச்சாதிமகள் இனிய கெடிற்றுமீனைக் கொணர்ந்து கொட்டிய விரிந்தகன்ற கூடை நிரம்பும் படி உழவன் மனைக்கிழத்தி அதற்க விலையாக நெல்லரிந்த வயலில் விளைத்த பெரும் பயற்றை நிரப்புதற்கிடனான ஊரையுடையோய்! நீயும் நின்னுடைய பாணனைப் போலவே பேசும் மொழிகள் பலவற்றாலும் பொய்ப்பதனைத் தோழியர் கூட்டம் நன்கு அறியும் காண். ஆதலால் நின் மாயமொழிக்கு யான் மயங்குவேன் அல்லேன். ஒரோவழி மயங்கினும் ஆயமகளிர் பொறார்.

தலைவன் பரத்தையர்க்கு அளிக்கும் அன்பை உள்ளுறை விளக்குகிறது.

மெய்ப்பாடு - வெகுளி; பயன் - புலத்தல். 47

48. வலைவல் பாண்மகன் வாலெயிற்று மடமகள்
வராஅல் சொரிந்த வட்டியுள் மனையோள்
யாண்டுகழி வெண்ணெல் நிறைக்கும் ஊர
வேண்டேம் பெருமநின் பரத்தை
யாண்டுச் செய்குறியோடு ஈண்டுநீ வரலே

மீன் பிடிக்கும் பாணனுடைய மகள் வரால்மீன் கொணர்ந்து கொட்டிய கூடையில் உழவன் மனைக்கிழத்தி அதற்கு விலையாக ஓராண்டு கழிந்த பழைய வெண்ணெல்லைக் கொட்டி நிரப்புதற்கு இடனான ஊரையுடையோய். பெருமானே! நீ நின்னுடைய பரத்தை மனையில் அவள் நின்கண் செய்த அடையாளத்தோடு என் மனைக்கண் வரும் நின் வரவினை யாம் விரும்புகின்றிலேம். பெரிதும் வெறுக்கின்றோம் காண். வந்தவழியே செல்க என்பதாம். பழைய நெல் சிறப்புடையது. நீ புல்லிய காம இன்பத்தின் பொருட்டு உயரிய பண்பாட்டை இழக்கின்றனை என்பதை உள்ளுறை விளக்குகிறது.

Koviloor Digital Library

மெய்ப்பாடு - வெகுளி; பயன் - புலத்தல். 48

49. அஞ்சில் ஓதி அசைநடைப் பாண்மகள்
சில்மீன் சொரிந்து பல்நெல் பெறூஉம்
யாணர் ஊரநின் பாண்மகன்
யார்நலம் சிதையப் பொய்க்குமோ இனியே

பாணச் சாதிப் பெண் சிலவாகிய மீன்களைக் கொடுத்து, அவற்றிற்கு விலையாகப் பல்வேறு நெற்களையும் பெறுதற்கிடமான புது வருவாயையுடைய ஊரனே! இனிமேல் உன்னுடைய பாணன் யாருடைய அழகு கெடும்படி பொய் கூறுவனோ யான் அறிகிலேன் காண்.

ஒருசில பொய்களைக் கூறியே பலவேறு மகளிரின் நலத்தையும் நீ நுகர்வை என்பதை உள்ளுறை உவமம் விளக்குகிறது.

மெய்ப்பாடு - வெகுளி. பயன் - புலத்தல். 49

50. துஞ்ணையோர் செல்வமும் யாமும் வருந்துதும்
வஞ்சி ஓங்கிய யாணர் ஊர
தஞ்சம் அருளாய் நீயேநின்
நெஞ்சம் பெற்ற இவளுமார் அழுமே

வஞ்சி மரங்கள் ஓங்கி வளர்ந்துள்ள புதுவருவாயுடைய ஊரனே! நீயே நின்னைத் தஞ்சமாக வாழ்வார்க்கு அருள் செய்து பாது காக்கின்றிலை. அதனால் உன் சுற்றத்தார் நற் செல்வமும் குன்றும். யாங்களும் வருந்துகின்றோம். தலைவியும் நின் கொடுமை நினைந்து ஆற்றாது அழுத வண்ணமே இருக்கின்றாள். இது நினக்குத் தகாது.

வஞ்சி யோங்கிய யாணரூர என்றது வழிவழி புகழோடு ஓங்கிய பெருங்குடியில் தோன்றிய நீ என்னும் குறிப்புப் பொருள் பயந்து நின்றது. மெய்ப்பாடு - மருட்கை; பயன் - புலத்தல். 50

- புலவிப் பத்து முற்றிற்று -

Koviloor Digital Library

6. தோழி கூற்றுப் பத்து

அஃதாவது . தோழி கூற்றாகவே வரும் பத்துச் செய்யுளின் தொகுதி என்றவாறு.

51. நீருறை கோழி நீலச் சேவல்
கூருகிர்ப் பேடை வயாஅம் ஊர
புளிங்காய் வேட்கைத்து அன்றுநின்
மலர்ந்த மார்பிவள் வயாஅ நோய்க்கே.

நீரின்கண் வாழும் சம்பங்கோழியாகிய நீலச் சேவலை அதற்குரிய பெட்டைக் கோழி வயாநோய் தீர்தற்கு நினைந்திருக்கும் ஊரனே!

நின்னுடைய விரிந்த மார்பு, இவளுடைய வேட்கையாலுண்டாகும் நோய்க்குப் புளிங்காயை நினைய வாய் நீர் ஊறுமாறு போல் பயன் தருவதாக இருந்தது. இப்போது அதுவும் இலதாயிற்று.

இவள் தன் வேட்கையை நின் மார்பை நினைந்து ஆற்றுவாளாயினாள் என்பது உள்ளுறை உவமத்தின்பொருள் நின் ஒழுக்கம் மிகவும் கொடுமையுடைத்தென தோழி வாயில் மறுத்தாள்.

மெய்ப்பாடு - இளிவரல்; பயன் - வாயின் மறுத்தல். 51

52. வயலைச் செங்கொடிப் பிணையல் தைஇச்
செவ்விரல் சிவந்த சேயரி மழைக்கண்
செவ்வாய்க் குறுமகள் இனைய
எவ்வாய் முன்னின்று மகிழ்நநின் தேரே.

எம்பெருமானே! நின் தேர் வயலையினது சிவந்த கொடியால் மலர்மாலை கட்டுதலால் சிவந்த விரல்களையும், கண்களையும் வாயையும் உடைய இந்த இளமகள் பெரிதும் வருந்தும்படி எவ்விடத்தை அடையக் கருதிற்று? தலைவிக்குப் பரத்தையர் ஈடாவரோ எண்ணிப்பார் என்று குறிப்பாற் கூறியவாறு.

Koviloor Digital Library

மெய்ப்பாடு - நகை; பயன் - தலைவனைத் தலைவியோடு நிலைபெறச் செய்தல். 52

53. துறைஎவன் அணங்கும் யாம்உற்ற நோயே
சிறையழி புதுப்புனல் பாய்ந்தெனக் கலங்கிக்
கழனித் தாமரை மலரும்
பழன ஊர நீயுற்ற சூளே.

அணையை உடைத்துப் பாயும் புதியநீர் பாய்ந்த அளவிலேயே கழனியிலுள்ள தாமரைகள் முதலிற் கலங்கிப் பின்னர் மலர்தற்கு இடனானதும் பொது நிலங்களை உடையதுமான ஊரனே? எம்மை நீர்த் துறை எற்றிற்குத் துன்புறுத்தும்? அது துன்புறுத்தமாட்டாது. அதற்குக் காரணம் யாதெனில் நீ செய்த சூளைத் தப்பி நீ ஒழுகினமையே.

பழன ஊர என்றது நின்மார்பும் பழனம் போன்று பரத்தையர் பலர்க்கும் பொதுவாயிருக்கிறது என்பதாம்.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - பரத்தமை விலக்குதல். 53

54. திண்தேர்த் தென்னவன் நல்நாட்டு உள்ளதை
வேனில் ஆயினும் தண்புனல் ஒழுகும்
தேனூர் அன்னஇவள் தெரிவளை நெகிழ
ஊரின் ஊரனை நீதர வந்த
பஞ்சாய்க் கோதை மகளிர்க்கு
அஞ்சுவல் அம்ம அம்முறை வரினே.

திண்ணிய தேரையுடைய பாண்டியனது நல்லநாட்டில் உள்ள கோடைக்காலத்திலும் குளிர்ந்த நீர் ஒழுகுதற்கு இடனான தேனூர் போன்று நலம் கெழுமிய தலைவியினது வளையல் கழலும்படி, உள்ளூரின்கண் இருந்தும் வேற்றூர் போல்வதாகிய பரத்தையர் சேரியின்கண் வதிகின்ற பெருமானே! யான் உலகியலாகிய செவ்வணி அணிந்துவரும் அந்த முறையை மேற்கொண்டு வருதற்கும் நின்னால் தேடிக்கொள்ளப்பட்டு நின் பெண்டிராய் வந்த பஞ்சாய்க் கோரையால் புனைந்த மலர்மாலையணிந்த பரத்தையர்க்குப் பெரிதும் அஞ்சு

Koviloor Digital Library

கின்றேன். ஆதலால் நீ ஈண்டு வருதலினும் அங்கே தங்கி விடுதல் உமக்கும் எமக்கும் நலமாம். பஞ்சாய்க் கோரை - ஒருவகைக் கோரை.

மெய்ப்பாடு - வெகுளி. பயன் - வாயில் மறுத்தல். 54

55. கரும்பின் எந்திரம் களிற்றெதிர் பிளிற்றும்
தேர்வண் கோமான் தேனூர் அன்னஇவள்
நல்லணி நயந்துநீ துறத்தலின்
பல்லோர் அறியப் பசந்தன்று நுதலே.

பெருமானே! கரும்பாட்டும் எந்திரம் ஆண்யானையின் பிளிற்றொலிக்கு மாறாக ஒலிக்கும் தேர்வழங்கும் பாண்டியனது தேனூரை நிகர்த்த தலைவியது நலமிக்க அழகினை விரும்பிப் பின்னர் அவளைப் பிரிந்து போனமையால் இவளுடைய நெற்றி ஆற்றாமையால் ஏதிலார் பலரும் அறிந்து அலர் தூற்றும்படி பெரிதும் பசலை பாய்ந்தது காண்.

ஊரவர் பலரும் நின் தீய ஒழுக்கத்தினை அறிந்து பழி தூற்றுகின்றனர் என்றுணர்த்தினாள்.

மெய்ப்பாடு - வெகுளி. பயன் - வாயில் மறுத்தல். 55

56. பகல்கொள் விளக்கோடு இராநாள் அறியா
வெல்போர்ச் சோழர் ஆமூர் அன்னஇவள்
நலம்பெறு சுடர்நுதல் தேம்ப
எவன்பயம் செய்யும்நீ தேற்றிய மொழியே.

பகல்போன்ற ஒளியைக் கொண்ட விளக்குகள் உண்மையால் இராக் காலத்தை அறிய மாட்டாத பகைவரை வெல்லும் போர்த் தொழில்வல்ல சோழருடைய ஆமூரை ஒத்த இவளுடைய நுதல் இற்றைநாள் அழகிழந்து ஒளி மழுங்குதலால் இப்பொழுது நீ தெளிவுறுத்திக் கூறிய இம்மொழிகள் எப்பயனைச் செய்ய வல்லன; பயனில்லாத மொழிகளேயாம்.

மெய்ப்பாடு - வெகுளி; பயன் - வாயில் மறுத்தல். 56

Koviloor Digital Library

57. பகலின் தோன்றும் பல்கதிர்த் தீயின்
ஆம்பல்அம் செறுவின் தேனூர் அன்ன
இவள் நலம் புலம்பப் பிரிய
அனைநலம் உடையளோ மகிழ்நநின் பெண்டே

பெருமானே! ஞாயிற்று மண்டலம் போன்ற வேள்வித் தீயினையும் ஆம்பல் மலரால் அழகுற்ற கழனிகளையும் உடைய தேனூரை யொத்த தலைவியின் பெண்மை நலம் தனித்தொழியும்படி நீ இவளைப் பிரிந்து செல்லும் அளவிற்கு நின்னுடைய பரத்தை அத்தகைய பெண்மைப் பெரு நலம் உடையவளோ? கூறுக.

மெய்ப்பாடு - தலைவி திறத்தில் பெருமிதமும் தலைவன் திறத்தில் இளிவரலுமாம். பயன் - தலைவனைத் தலைவிக்கு ஆக்கிக் கொடுத்தல். 57

58. விண்டு அன்ன வெண்ணெல் போர்வின்
கைவண் விராஅன் இருப்பை அன்ன
இவள் அணங்கு உற்றனை போறி
பிறர்க்கு மனையையால் வாழி நீயே.

மலைபோன்ற பெரிய வெள்ளிய போர்வினையுடைய விரான் என்னும் வள்ளற் பெருமானுடைய இருப்பை என்னும் மூதூரை யொத்த நலமுடைய எம்பெருமாட்டியால் துன்புறுத்துப்பட்டாய் போன்று காணப்படுகின்றனை; நீ நின் பரத்தையர் ஊடலை உணர்த்தும் பொழுதும் அங்ஙனம் அவரால் அணங்குற்றனை போலக் காணப் படுவாய் போலும்; இங்ஙனம் உபாயம் வல்ல நீ நெடிது வாழ்வாயாக! விண்டு-மலை; போர்வு - நெல்லரியின்குவை. போறல் - போலுதல்; போறி-காணப்படுகின்றனை.

மெய்ப்பாடு - நகை; பயன் - தலைவியோடு கூட்டு வித்தல். 58

Koviloor Digital Library

59. கேட்டிசின் வாழியோ மகிழ்ந ஆற்றுற
மையல் நெஞ்சிற்கு எவ்வம் தீர
நினக்குமருந் தாகிய யான்இனி
இவட்குமருந்து அன்மை நோம்என் நெஞ்சே.

பெருமானே! கேட்டருள்க . பண்டு நினது மயக்கமுடைய நெஞ்சினுக்கு ஆறுதல் பொருந்தும்படி அதன்கண் துன்பமெல்லாம் துவரத் தீரும்படி நினக்கு மருந்தாய் அமைந்த யான் இப்பொழுது இவளுற்ற நோய்க்கு மருந்தாகி அதனைத் தீர்க்க இயலாத தன்மையுடையேன் ஆகி விட்டேன் . இதனை எண்ணி என் நெஞ்சம் பெரிதும் வருந்துகின்றது காண் . யான் என் செய்கோ? நினது கொடுமை நாளுக்கு நாள் மிகுதலின் இனி இவளை நான் எவ்வாற்றானும் ஆற்றவல்லேன் அல்லேன் என்றாளாயிற்று .

மெய்ப்பாடு-அழுகை; பயன்-தலைவனைத் தலைவிக்கு ஆக்கிக் கொடுத்தல் .. 59

60. பழனக் கம்புள் பயிர்ப்பெடை அகவும்
கழனி யூரநின் மொழிவல் என்றும்
துஞ்சுமனை நெடுநகர் வருதி
அஞ்சா யோஇவள் தந்தைகை வேலே.

பொதுநிலமாகிய பழனத்தின்கண் இருக்கும் சம்பங்கோழி தன்னைக் காதலாலே அழையாநின்ற தனது பெடையை அழைத்தற் கிடனான கழனி ஊரனே! எனது அறியாமையால் நின்னை ஒன்று வினவுவேன் கேட்டு விடைதந்தருள்க. நீ நாள்தோறும் என் சுற்றத்தார் இனிதே உறங்கா நின்ற நெடிய ஊரிலுள்ள இவ்வில்லத்திற்கு இரவின்கண் வாரா நின்றனை. இவளுடைய தந்தையினது கையின்கண் அமைந்த வேற்படையை நீ அஞ்ச மாட்டாயோ?

மெய்ப்பாடு - அச்சம்; பயன் - வரைவு வற்புறுத்தல் . 60

தோழி கூற்றுப் பத்து முற்றிற்று

Koviloor Digital Library

7. கிழத்தி கூற்றுப்பத்து

அஃதாவது தலைவியின் கூற்றாகவே வருகின்ற பத்துச் செய்யுளின் தொகுதி என்றவாறு.

61. நறுவடி மாஅத்து விளைந்துகு தீம்பழம்
நெடுநீர்ப் பொய்கைத் துடுமென விழூஉம்
கைவண் மத்தி கழாஅர் அன்ன
நல்லோர் நல்லோர் நாடி
வதுவை அயர விரும்புதி நீயே.

நறிய பிஞ்சினையுடைய மாமரத்திலிருந்து முதிர்ந்து விழுகின்ற இனிய பழம் நெடிய நீர் நிலையாகிய பொய்கையில் துடும் என்னும் ஒலியுண்டாக விழுதற்கு இடனான வள்ளன்மையுடைய மத்தி என்னும் வேந்தனுடைய கழாஅர் என்னும் மூதூரை ஒத்த நலங்கெழுமிய புதிய புதிய பரத்தையரைத் தேடித் தேடி நீ வதுவை செய்து கொண்டு நுகர் தலையே விரும்புகின்றனை. ஆதலால் நீ பரத்தையர் சேரிக்கே செல்க!

வடி - மாவடு; பிஞ்சு.

நீ இல்லற உரிமையுடைய எனக்குப் பயன்படாமல் பரத்தையர் சேரியிற் சென்று ஆண்டுறையும் பரத்தையர் பலர்க்கும் பயன் படுகின்றனை என்பது உள்ளுறையாகக் கொள்க.

மெய்ப்பாடு - வெகுளி; பயன் - ஊடல்.

62. இந்திர விழவின் பூவின் அன்ன
புன்தலைப் பேடை வரிநிழல் அகவும்
இவ்வூர் மங்கையர்த் தொகுத்துஇனி
எவ்வூர் நின்றன்று மகிழ்நநின் தேரே.

தலைவ! உன்னுடைய தேர் இதுகாறும் பூப்போலும் சூட்டினையுடைய புல்லிய தலையையுடைய மயில்பெடை நிரம்பாத

Koviloor Digital Library

நிழலில் நின்று தன் சேவலைக் கூப்பிட்டு அழைத்தற்கிடமான இந்த ஊரில் வாழும் பரத்தையர் பலரையும் இந்திர விழாவின் பொருட்டு ஒருங்கு கூட்டினாற் போன்று ஒருங்கு கூட்டி இப்பொழுது அத் தொழிலை விட்டு எந்த ஊருக்குச் சென்று நிற்றற்குப் புறப்படுகின்றது.

நின் பிரிவால் பொலிவிழந்து ஆதரவற்ற இவ்வில்லின்கண் யானிருந்து தேம்பா நின்றேன் என்பது உள்ளுறைப் பொருள்.

மெய்ப்பாடு - வெகுளி; பயன் - ஊடுதல். 62

63. பொய்கைப் பள்ளிப் புலவுநாறு நீர்நாய்
வாளை நாளிரை பெறூஉம் ஊர
எம்நலம் தொலைவ தாயினும்
துன்னலம் பெருமபிறர்த் தோய்ந்த மார்பே

நீர்நிலையைத் தான் துயிலும் இடமாகக் கொண்ட புலால் நாறும் இயல்புடைய நீர்நாய் நாட்காலை தோறும் தான் தின்னும் இரையாக வாளை மீனைப் பெறுதற்கிடனான ஊரனே! எம்முடைய பெண்மை நலம் கெட்டொழிவதாயினும் பெருமானே! யாம் பிறரை முயங்கிய தோளை முயங்குவேம் அல்லேம்.

நீ நின் குடிப்பிறப்பிற்கேற்றபடி தூய காதல் நெறியில் நிற்காமல் இழிந்த காம இன்பமே காமுற்று நாடோறும் பரத்தையரை நாடி நுகர் நின்றனை என்றிகழ்ந்தாள் என உள்ளுறை காண்க.

மெய்ப்பாடு - பெருமிதம் பயன் - புலத்தல். 63

64. அலமரல் ஆயமோடு அமர்துணை தழீஇ
நலமிகு புதுப்புனல் ஆடக் கண்டோர்
ஒருவரும் இருவரும் அல்லர்
பலரே தெய்யஎம் மறையா தீமே

பெருமானே! நீ சுழன்று திரியும் தோழியர் சூழ நின்னால் விரும்பப்பட்ட பரத்தையை முயங்கி, இன்பம் மிகுதற்குக் காரணமான புதுப்புனலில் ஆடாநிற்ப அந்நிகழ்ச்சியைக் கண்கூடாகக் கண்டு வந்தோர் ஒருவரும் இருவருமாகிய ஒரு சிலர் மட்டுமே அல்லர் காண்.

Koviloor Digital Library

மிகப் பலராவர். ஆதலால் நின்மாயப் பொய் பல கூட்டி அவ்வுண்மையை எமக்கு மறைத்திட வேண்டா; யாம் நன்கறிவோம். தெய்ய-அசைச்சொல்; ஈஏமுன்னிலை அசை.

மெய்ப்பாடு - வெகுளி; பயன் - ஊடல். மறையாதி - மறைக்க வேண்டா. 64

65. கரும்புநடு பாத்தியில் கலித்த ஆம்பல்
சுரும்புபசி களையும் பெரும்புன லூர
புதல்வனை ஈன்றஎம் மேனி
முயங்கன்மோ தெய்யநின் மார்புசிதைப் பதுவே

கரும்பு நட்ட பாத்தியில் தானே தோன்றித் தழைத்த ஆம்பல் வண்டினது பசியை அகற்றுதற்கிடனான பெரிய நீர்நிலைகளையுடைய ஊரனே, அணித்தாக மகப்பெற்ற எம்முடைய புனிறு நாறும் மேனியை தழுவாதே கொள். அங்ஙனம் தழுவுவாயாயின் தீம்பால்பட்டு நின்மார்பின் அழகைக் கெடுக்கும். தெய்ய - அசை நிலை.

மெய்ப்பாடு - இளிவரல். பயன் - ஊடல். 65

66. உடலினேன் அல்லேன் பொய்யாது உரைமோ
யாரவள் மகிழ்ந தானே தேரொடு
தளர்நடைப் புதல்வனை யுள்ளிநின்
வளமனை வருதலும் வௌவி யோளே.

எம்பெருமானே! நான் நின்னோடு மாறுபட்டு வினவுகின்றேன் அல்லேன். பொய் கூறாமல் மெய்யே கூறுவாயாக. நீ நினது தேரோடு நின்னுடைய தளர்ந்த நடையையுடைய மகனை நினைந்து நின்னுடைய வளம் பொருந்திய இந்த இல்லத்திற்கு வருகின்ற செயலையும் தடுத்துக் கொண்டவள் யார்?

உடலுதல்-மாறுபடுதல்; பகைத்தல், தான், ஏ அசைகள். சிறந்த மகவு இன்பத்தையும் மறந்து வைகும்படி நின்னைப் பற்றிக் கொண்டவள் எத்தகையளோ என்றாள்.

Koviloor Digital Library

மெய்ப்பாடு - வெகுளி; பயன் - புலத்தல். 66

67. மடவள் அம்மநீ இனிக்கொண் டோளே
தன்னொடு நிகரா என்னொடு நிகரிப்
பெருநலம் தருக்கும் என்ப விரிமலர்த்
தாதுண் வண்டினும் பலரே
ஓதி ஒண்ணுதல் பசப்பித் தோரே.

பெருமானே! கேட்டருள்க! இப்போது நீ வதுவை அயர்ந்து கொண்ட காமக் கிழத்தி பெரிதும் அறியாமை யுடையவள் என்பது தேற்றம்; எற்றாலெனின் அவள் பெண்மை நலத்தானே அவட்கு ஒப்பாகாத என்னைத் தன்னோடு ஒப்பித்துக்கொண்டு தனது பெண்மை நலம் பெரிதென்று சொல்லித் தருக்குகின்றாள் என்று கேட்டோர் கூறுகின்றனர். இஃதன்றியும் அவளுடைய நுதலைப் பசலை பாயும்படி செய்கின்ற மகளிர் தாதுண்ணும் வண்டுகளைக் காட்டினும் பலர் ஆதலையும் அவள் அறியாள்.

அவன் + கு = அவற்கு; அவள் + கு = அவட்கு.

மெய்ப்பாடு - வெகுளி; பயன் - காமக்கிழத்தியின் தருக்கழித்தலும் தலைவனோடு புலத்தலும். 67

68. கன்னி விடியல் கணைக்கால் ஆம்பல்
தாமரை போல மலரும் ஊர
பேணா ளோநின் பெண்டே
யான்தன் அடங்கவும் தான்அடங் கலளே.

இருள் நன்கு புலராத விடியற் காலத்தில் திரண்டதண்டை யுடைய ஆம்பல் தாமரை மலர்போல மலர்தற்கிடனான ஊரனே! நின் பரத்தை தான் பேணவேண்டுவனவற்றுள் யாதொன்றையும் பேணாத பேதையோ அதனால்தான் யான் அடங்கியிருக்கவும் எனக்கு அஞ்சி அடங்கவேண்டியவள் அங்ஙனம் அடங்காது என்னைப் புறங்கூறு வாளாயினாள். பேணுதல் - பிறர் பண்பறிந்து ஒழுகுதல்.

Koviloor Digital Library

மெய்ப்பாடு - வெகுளி; பயன் - ஊடுதல். 68

69. கண்டனெம் அல்லமோ மகிழ்நநின் பெண்டே
பலராடு பெருந்துறை மலரொடு வந்த
தண்புனல் வண்டல் உய்த்தென
உண்கண் சிவப்ப அழுதுநின் றோளே.

பெருமானே! மாந்தர் பலரும் வந்து நீராடுதற்குரிய பெரிய நீர்த்துறையின் கண்ணே மலரோடு பெருகிவந்த குளிர்ந்த நீர் தனது விளையாட்டுப் பாவையை அழித்தாக வருந்தித் தன் மையுண்ட கண்கள் சிவக்கும்படி அழுது நின்றவளாகிய நின் பரத்தையை யாமே கண்கூடாகக் கண்டேம். ஆதலால் பொய் கூறற்க. வண்டல் - வண்டல் மண்ணாற் செய்த பாவை.

மெய்ப்பாடு - வெகுளி; பயன் - புலத்தல். 69

70. பழனப் பன்மீன் அருந்த நாரை
கழனி மருதின் சென்னிச் சேக்கும்
மாநீர்ப் பொய்கை யாணர் ஊர
தூயர் நறியர்நின் பெண்டிர்
பேஎய் அனையம்யாம் சேய்பயந் தனமே

ஊர்ப் பொது நிலத்தின்கண் வாழும் பல்வேறு வகை மீன்களையும் பற்றித் தின்ற நாரை நன்செய் நிலத்து வளர்ந்துள்ள மருத மரத்தின் உச்சியில் தங்குதற்கிடனான மிக்க நீர்ப்பொய்கை ஊரனே! யாம் மகப்பெற்றுள்ளேம் ஆதலின் நின் காட்சிக்குப் பேய் போன்று காணப்படுகின்றோம். மற்று நின்னுடைய பரத்தை மகளிரோ தூய்மையும் நறுமணம் கமழுவோருமாவர். ஆதலின் ஈண்டு வருதல் வேண்டா. அவர் பாலே தங்குக. உள்ளுறைப் பொருள் மேலே விளக்கப்பட்டுள்ளது. மெய்ப்பாடு - வெகுளி; பயன் - ஊடல். 70

- கிழத்தி கூற்றுப் பத்து முற்றிற்று -

Koviloor Digital Library

8. புனலாட்டுப் பத்து

அஃதாவது: நீர் விளையாடல் பற்றிவரும் பத்துச் செய்யுளின் தொகுதி என்றவாறு.

71. சூதார் குறுந்தொடிச் சூரமை நுடக்கத்து
நின்வெங் காதலி தழீஇ நெருநை
ஆடினை என்ப புனலே அலரே
மறைத்தல் ஒல்லுமோ மகிழ்ந
புதைத்தல் ஒல்லுமோ ஞாயிற்றது ஒளியே

நல்லோர் அஞ்சுதற்குக் காரணமான நடையினையும், குறிய வளையலையும் உடைய வஞ்சகம் பொருந்திய நின்னுடைய காதற் பரத்தையைத் தழுவிக் கொண்டு நேற்று நீ நீராடினாய் என்று கண்டோர் பலரும் கூறுகின்றனர். பெருமானே! சூரிய மண்டலத்தின் ஒளியைப் புதைத்தல் கூடுமோ? அதுபோல நின் ஒழுக்கத்தால் தோன்றிய பழிமொழியை நின்னால் மறைத்தல் கூடுமோ. நெருநை - நெருநல் - நேற்று.

மெய்ப்பாடு - வெகுளி; பயன் - ஊடல் தீர்தல். 71

72. வயல்மலர் ஆம்பல் கயில்அமை நுடங்குதழைத்
திதலை அல்குல் துயல்வரும் கூந்தல்
குவளை உண்கண் ஏஎர் மெல்லியல்
மலரார் மலிர்நிறை வந்தெனப்
புனலாடு புணர்துணை ஆயினள் எமக்கே

தோழி! பண்டு யான் இவளுடன் களவு ஒழுக்கம் மேற்கொண்டிருந்த காலத்து ஒருநாள் ஆற்றில் மலர் நிரம்பிய பெருவெள்ளம் வந்ததாக அப்பொழுது ஆம்பல் மலரால் தொடுக்கப்பட்ட தழையையும் தேமல் படர்ந்த அல்குலையும் அசைகின்ற கூந்தலையும் மையுண்ட

Koviloor Digital Library

கண்களையும் உடைய இவள் அப்புனலின்கண் ஆடி இன்புற எண்ணிய எமக்குத் துணைவியாகத் துணிந்து வருவாளாயினாள். இந்நிகழ்ச்சியை நான் நினக்கு இதுகாறும் கூறியதிலேன். கமில் - மூட்டுவாய்.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - ஊடல் தீர்த்து நீராட்டிற்கு உடம்படுவித்தல். 72

73. வண்ண ஒண்தழை நுடங்க வாலிழை
ஒண்ணுதல் அரிவை பண்ணை பாய்ந்தெனக்
கள்நறுங் குவளை நாறித்
தண்ணென் றிசினே பெருந்துறைப் புனலே

தூய அணிகலனையும் ஒளிபொருந்திய நுதலையும் உடைய இவள் தனது தழையுடைய அசையும்படி என்னோடு நீர்விளையாட்டிற் புகுந்து ஆடினளாக; அந்த அகன்ற நீர்த்துறையின்கண் நீர் முழுதும் குவளை மலரின் நறுமணமே கமழ்ந்துமிகக் குளிர்ச்சியுடையதாயிற்று. அதனால் யாம் அடைந்த இன்பம் சாலப் பெரிது.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - ஊடல் தீர்த்து உடம்படுவித்தல். 73

74. விசும்பிழி தோகைச் சீர்போன் றிசினே
பசும்பொன் அவிரிழை பைய நிழற்றக்
கரைசேர் மருதம் ஏறிப்
பண்ணை பாய்வோள் தண்ணறுங் கதுப்பே

தோழி! பசிய தனது அணிகலன் மெல்லென ஒளிவீச அத்துறையருகே கரைக்கண் நின்ற மருத மரத்தின் மேலேறி நீரில் விளையாட்டாகப் பாய்ந்த இவளுடைய கூந்தல் வானத்தினின்றும் கீழே இறங்குகின்ற மயிலின் தோகைபோல அழகாகக் காணப் பட்டது.

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - ஊடல் தீர்த்து உடம் படுவித்தல். தலைவன் தலைவியைப் பாராட்டுதல். 74

Koviloor Digital Library

75. பலர்இவண் ஒவ்வாய் மகிழ்ந அதனால்
அலர்தொடங் கின்றால் ஊரே மலர
தொன்னிலை மருதத்துப் பெருந்துறை
நின்னோடு ஆடினள் தண்புனல் அதுவே

எம்பெருமானே! நீ செய்த குற்றத்தை இவ்விடத்தே நீ ஒப்புக் கொள்ள மாட்டாய் ஆயினும் மருத மரத்தையுடைய பெருந்துறையில் ஒருத்தி நின்னோடு குளிர்ந்த நீரில் விளையாட்டயர்ந்தாள். அதைக் கண்டோர் பலராவர். அதனால் ஊர் முழுவதும் அலர் எழத் தொடங்கியது. எனவே நீ மறைத்தலால் யாது பயன். பரத்தையர் சேரிக்கே செல்க.

மெய்ப்பாடு - வெகுளி; பயன் - கழறுதல். 75

76. பஞ்சாய்க் கூந்தல் பசுமலர்ச் சுணங்கின்
தண்புனல் ஆடித்தல் நலம்மேம் பட்டனள்
ஒள்தொடி மடவரல் நின்னோடு
அந்தர மகளிர்க்குத் தெய்வமும் போன்றே

பெருமானே! பஞ்சாய்க் கோரை போலும் கூந்தலையும் வேங்கைப்பூப் போன்ற பொன்னிறத் தேமலையும் உடைய இளையாள் ஒருத்தி நெருநல் உன்னோடு குளிர்ந்த நீரில் விளையாட்டயர்ந்த மகிழ்ச்சியால் வானவர் மகளிர்க்கும் இறைவி என்னும்படி புத்தழகும் புத்தொளியும் படைத்துத் தனது பெண்மை நலஞ் சிறந்து மேம்பாடு எய்தினள் என்று கண்டோர் கூறுவர். அப்படியிருக்க நீ எம்மை மறைப்பானேன்.

மெய்ப்பாடு - வெகுளி; பயன் - வாயில் மறுத்தல். 76

77. அம்ம வாழியோ மகிழ்நநின் மொழிவல்
பேரூர் அலர்எழ நீரலைக் கலங்கி
நின்னொடு தண்புனல் ஆடுதும்
எம்மொடு சென்மோ செல்லல்நின் மனையே.

Koviloor Digital Library

பெருமானே! நீராட்டு அயர்தற்கு யான் வருவதாயின் நினக்கு யான் ஒன்று சொல்வேன் அதனைக் கேட்டருள்க! அஃது யாதெனின் நீ இனி நினது இல்லத்தற்குப் போதலை ஒழிக. இன்று முதல் நீராடுவதாயின் எங்களோடு மட்டுமே செல்வாயாக. தலைவியோடு செல்லற்க. அங்ஙனம் செய்ய உறுதி கூறுவாயாயின் இந்தப் பெரிய ஊரின்கண் யாண்டும் அலர் எழும்படி நின்னோடு யாங்கள் நீரில் விளையாடுவோம். இல்லையெனின் அழையாதே. மோ - முன்னிலை யசை.

அம்ம - ஒன்று சொல்வேன்கேள். வாழி, ஓ - அசைகள்.

மெய்ப்பாடு - வெகுளி; பயன் - தலைவனை மடக்கிக் கோடல். 77

78. கதிரிலை நெடுவேல் கடுமான் கிள்ளி
மதில்கொல் யானையின் கதழ்புநெறி வந்த
சிறையழி புதுப்புனல் ஆடுகம்
எம்மொடு கொண்மோஎம் தோள்புரை புணையே.

பெருமானே! எமது தோளை ஒத்த தெப்பத்தை எம்மோடு சேர்ந்து பற்றுவாயாக. அவ்வாறு பற்றுவாய் ஆயின் யாம் நெடிய வேற் படையினையும் விரைந்து செல்லும் குதிரையையும் உடைய கிள்ளி வேந்தனுடைய பகைவர் மதிலை அழிக்கின்ற யானைப் படையைப் போலத் தன்னெறியில் மிக விரைந்து வந்த அணையை அழிக்கின்ற புதிய நீரில் நின்னோடு விளையாடுவோம், அவ்வாறின்றித் தலைவியோடு இனி நீராடுவாய் எனின் எம்மை அழையாதே. கதழ்பு-விரைந்து. புலத்தல் - மனம் வேறுபடுதல்; வெறுத்தல்.

மெய்ப்பாடு - வெகுளி; பயன் - புலத்தல். 78

79. புதுப்புனல் ஆடி அமர்த்த கண்ணள்
யார்மகள் இவளெனப் பற்றிய மகிழ்ந
யார்மகள் ஆயினும் அறியாய்
நீயார் மகளைஎம் பற்றி யோயே

Koviloor Digital Library

புதிய நீரில் நெடிது ஆடியமையால் மாறுபட்ட கண்ணையுடைய இவள் யார் மகள் என்று கூறிக் கையைப் பற்றிய ஆடவனே! அவள் யார் மகளாயினும் நீ அறிந்து கொள்ள மாட்டாய். அறியா திருந்தும் ஏதிலே மாகிய எம்முடைய கையைப் பற்றும் துணிவுடைய நீதான் யார் மகன் என்பதை முற்பட எமக்குக் கூறுவாயாக. இது தோழி கூற்று.

எம் கையைப் பற்றுதற்கு உனக்கு என்ன உரிமையுளதென்பாள் எம் பற்றியோய் நீ யார் மகன் என்று வினவினாள். அறியாத ஒரு மகளின் கையைப் பற்றுதல் இழிவு என்பதும் ஆயிற்று.

மெய்ப்பாடு - வெகுளி. பயன் - புலவி கூர்தல். 79

80. புலக்குவேம் அல்லேம் பொய்யாது உரைமோ
நலத்தகு மகளிர்க்குத் தோள்துணை யாகித்
தலைப்பெயல் செம்புனல் ஆடித்
தவநனி சிவந்தன மகிழ்நநின் கண்ணே.

பெருமானே! யாம் புலப்பேம் அல்லேம் பொய் கூறாமல் பட்டாங்கே கூறுவாயாக. பரத்தையர்க்கு நீராடும்போது தோளால் தழுவுதற்குரிய துணையாகி முதன்முதலாக மழை பெய்தமையால் பெருகிவந்த சிவந்த நீரில் ஆடியதால் அன்றோ உன்னுடைய கண்கள் மிக்வும் சிவந்துள்ளன.

உரைமோ - முன்னிலை அசை.

இந்தச் சிறப்பு நீராட்டத்திற்கு நீ என்னோடு செல்லாமல் பரத்தையரோடு நீராடச் சென்றனை என்று தலைவி பெரிதும் புலந்தாளாயிற்று.

மெய்ப்பாடு - வெகுளி. பயன் - புலத்தல் தவநனி - ஒருபொருட் பன்மொழி. 80

புனலாட்டுப் பத்து முற்றிற்று

Koviloor Digital Library

9. புலவி விராய பத்து

அஃதாவது புலவி வகைகள் விரவி வந்த பத்துச் செய்யுட்களின் தொகுதி என்றவாறு முன்னர்வந்த (5) புலவிப் பத்து தலைவியும் தோழியும் புலந்து கூறியது. இது பரத்தையர் புலவியும் விரவி வருவது.

81. குருகுஉடைத் துண்ட வெள்அகட்டு யாமை
அரிப்பறை வினைஞர் அல்குமிசை கூட்டும்
மலர்அணி வாயில் பொய்கை ஊரநீ
என்னை நயந்தனென் என்றநின்
மனையோள் கேட்கின் வருந்துவள் பெரிதே.

நாரையால் உடைத்து உண்ணப்பட்டு எஞ்சிய வெள்ளிய வயிற்றையுடைய யாமையினது தசையைப் பறைவினைஞர் தமது இரவு உணவாகச் சேர்த்து வைத்தற்கு இடனான மலர்த்துறை ஊரனே! நீ என்னைப் பெரிதும் விரும்பினேன் என்று பொய்யே கூறுகின்றனை. இது பொய்யே யாயினும் நின் மனையாட்டி இதைக் கேட்டு மிகவும் வருந்துவாள். ஆதலால் இவ்வாறு பொய் கூறாதே.

எம்மால் நுகர்ந்து எச்சிலாகிய நின்மார்பை தலைவி நுகர்தற்குக் காவல் செய்து போற்றுகின்றாள் என்பது உள்ளுறை. இதனால் தலைவியைக் குறிப்பாக இகழ்ந்தமை காண்க.

மெய்ப்பாடு - வெகுளி. பயன் - வாயில் மறுத்தலும், தலைவியை இகழ்தலும் தன்னைப் புகழ்தலும் என்க. 81

82. வெகுண்டனள் என்ப பாணநின் தலைமகள்
மகிழ்நன் மார்பின் அவிழிணர் நறுந்தார்த்
தாதுண் பறவை வந்துஎம்
போதார் கூந்தல் இருந்தன எனவே

Koviloor Digital Library

பாணனே கேட்பாயாக. நின் தலைவி (காதற் பரத்தை) தலைவனுடைய மார்பில் அணியப்பட்ட மாலையில் பூந்துகள் உண்ணும் வண்டுகள் எம்முடைய கூந்தலில் வந்து மொய்த்தன என்று அவளுக்குப் பாங்காயினார் கூற சினந்தனள் என்று கண்டோர் கூறுவர். ஆதலின் நீ தலைவனுக்கு வாயிலாய் ஈண்டு வருதலை அவள் அறியின் என்னாம் போய்விடு. தாதுண் பறவை - வண்டு.

மெய்ப்பாடு - வெகுளி. பயன் - ஊடுதல். 82

83. மணந்தனை அருளாய் ஆயினும் பையயத்
தணந்தனை யாகி உய்ம்மோ நும்மூர்
ஒண்தொடி முன்கை ஆயமும்
தண்துறை யூரன் பண்டெனப் படற்கே

தலைவ, உண்மையில் நீ அருள் செய்யவில்லை என்றாலும் உலகம் இவள் இவன் பெண்டு என்று கூறுதல் அளவிற்கே என்னை மணந்துகொண்டனை போலும். இதுவே நின்விருப்பமாயின் மெல்ல மெல்ல என்னைப் பிரிந்தனை யாக ஒழுகக் கடவை. அது எதற்கென்றால் நும் ஊரின்கண் வாழும் பரத்தையர் எல்லாம் ஊரனுடைய பெண்டுகளே என்று உலகம் நின்னை உயர்த்திக் கூறும் பொருட்டேயாம்

மெய்ப்பாடு - அழுகை; பயன் - புலத்தல். 83

84. செவியிற் கேட்பினும் சொல்லிறந்து வெகுள்வோள்
கண்ணிற் காணின் என்ஆ குவள்கொல்
நறுவீ ஐம்பால் மகளிர் ஆடும்
தைஇத் தண்கயம் போலப்
பலர்படிந்து உண்ணுநின் பரத்தை மார்பே

எம் பெருமானே! நீ பரத்தமை ஒழுக்கமுடையை என்று யாரேனும் சொல்லத் தன் செவியால் கேட்க நேரினும் அது பொறாது கோபங்கொள்ளும் நம் பெருமாட்டி, கன்னி மகளிர் தைத் திங்களில் நீராடுதற்குரிய குளிர்ந்த குளம் போன்று நின்னுடைய மார்பினை நேரில்

Koviloor Digital Library

கண்டால் என்ன ஆவாள். சிறிது கண்ணிப்பார். ஐம்பால்-கூந்தல். பரத்தையர் மனையினின்றும் இல்லத்திற்கு வந்த தலைவனைக் கண்ட தோழி அவனை இடித்துக்கூறிப் புலந்தது.

மெய்ப்பாடு - வெகுளி; பயன் - தலைவனைக்கழறுதல். 84

85. வெண்நுதல் கம்புள் அரிக்குரல் பேடை
தண்நறும் பழனத்துக் கிளையோடு ஆலும்
மறுவில் யாணர் மலிகேழ் ஊரநீ
சிறுவரின் இனைய செய்தி
நகாரோ பெருமநின் கண்டிசி னோரே.

பெட்டைச் சம்பங்கோழி குளிர்ந்த பழனத்தின் கண் தன் சேவல் இன்றியும் தனது இனத் தோடிருந்து ஆரவாரிப்பதும் புதுவருவாயினை உடையதுமான ஊரனே உயர் குடித்தோன்றலாகிய நீ இளஞ் சிறுவர் போன்று இத்தகைய இழிந்த செயல்களைச் செய்கின்றனை, எம் பெருமானே! நின் செயலைக் கண்ட சான்றோர் நின்னை எள்ளி நகைக்க மாட்டாரோ.

மெய்ப்பாடு - இரக்கம்; பயன் - தலைவனைத்திருத்தித் தழீஇக் கோடல். 85

86. வெண்தலைக் குருகின் மென்பறை விளிக்குரல்
நீள்வயல் நண்ணி இமிழும் ஊர
எம்இவண் நல்குதல் அரிது
நும்மனை மடந்தையொடு தலைப்பெய் தீமே.

நாரையின் பார்ப்புக்கள் கூப்பிட்டழைக்கும் குரல் நெடிய கழனிகளை எய்தி ஒலித்தற்கிடனான ஊரனே! இனி நீ இவ்விடத்தில் நெஞ்சமர்ந்து இருந்து எமக்கு அளிசெய்தல் இயலாது. ஆதலால் நும் இல்லக் கிழத்தியின் பால் சென்று கூடியிருந்தருள்க.

Koviloor Digital Library

நின்னுடைய மகவின் இனிய அழைப்பாகிய மழலைமொழி இப் பரத்தையர் சேரிவரையில் எட்டுவதாயிற்று என்னும் உள்ளுறை யுடையது.

மெய்ப்பாடு - வெகுளி; அழுக்காறுமாம். பயன் - புலத்தல். 86

87. பகன்றைக் கண்ணிப் பல்ஆன் கோவலர்
கரும்பு குணிலா மாங்கனி யுதிர்க்கும்
யாணர் ஊரநின் மனையோள்
யாரையும் புலக்கும் எம்மைமற் றெவனோ.

பகன்றை மலரால் புனைந்த கண்ணியையும் பலவாகிய பசுக்களையும் உடைய இடையர் கரும்பை முறித்துக் குறுந்தடியாகக்கொண்டு மாங்கனியை உதிர்த்தற் கிடனான புதுவருவாயையுடைய ஊரனே நின்னுடைய மனைவி எல்லாரிடத்தும் சினந்து புலந்து கொள்வாள் என்று கூறுவர். அத்தகையவள் நின்பால் அன்புடைய எம்மிடத்துப் புலந்து புறங் கூறுதற்குத் தடை என்ன? கண்ணி - தலைமாலை. குணில் - குறுந்தடி.

மெய்ப்பாடு - வெகுளி; பயன் - தலைவியின் செருக்கழித்தல். பகன்றை - சீந்தில்; கிலுகிலுப்பைச் செடி. 87

88. வண்டுறை நயவரும் வளமலர்ப் பொய்கைத்
தண்துறை யூரனை எவ்வை எம்வயின்
வருதல் வேண்டுதும் என்ப
தொல்லேம் போல்யாம் அதுவேண் டுதுமே.

எம் தமக்கையார் வண்டு மொய்க்கும் நறுமலர்களையுடைய பொய்கையையும் நீராடு துறையையும் உடைய ஊரனை யாம் எப்போதும் எம் இல்லத்திற்கே வருமாறு செய்தலை விரும்புகின்றோம் என்று எம்மைப் புறங்கூறுவதனை இதுவரை பொருட்படுத்தாது இருந்ததைப் போலவே இதுமுதல் அதனையே விரும்புகின்றோம்.

Koviloor Digital Library

இவ்வாறு என்னைக் கூறுகை தவிராளாயின் அதனை முடியச் செய்து விடுகின்றேன் என்று பரத்தை கூறியது.

மெய்ப்பாடு - வெகுளி; பயன்-தலைவியின் செருக்கழித்தல். 88

89. அம்ம வாழி பாண எவ்வைக்கு
எவன்பெரி தளிக்கும் என்ப பழனத்து
வண்டு தாதூதும் ஊரன்
பெண்டென விரும்பின்று அவள்தன் பண்பே

பாணனே! ஈதொன்று கேட்பாயாக. ஊர்ப் பொது நிலமாகிய பழனத்தே மலர்ந்த மலரின்கண் வண்டுகள் தாது ஊதுதற்கு கிடனான ஊரன், எம் தமக்கைக்கு மிகவும் அளி செய்கின்றனன் என்று ஒரு சிலர் கூறுவர். அதற்குக் காரணம் என்ன? அவன் அவளைத் தன் பெண்டாட்டி என்று விரும்பியதற்குக் காரணம் அவள்பால் அமைந்த நற்குணமே யாகும். அவளுடைய பெண்மை நலமன்று.

தலைவன் பெண்மை நலம் நுகர்தற் பொருட்டு எம் சேரியையே நாடுகின்றான். தலைவி அவனுக்கு அத்தகைய இன்பம் தரும் இயல்புடையவள் அல்லள் என்னும் உள்ளுறை யுடையது.

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - தலைவியின் பால் குறைகாட்டல். 89

90. மகிழ்நன் மாண்குணம் வண்டுகொண் டனகொல்
வண்டின் மாண்குணம் மகிழ்நன்கொண் டான்கொல்
அன்ன தாகலும் அறியாள்
எம்மொடு புலக்கும்அவன் புதல்வன் தாயே.

தலைவனுடைய மாட்சிமைப்பட்ட குணத்தை வண்டுகள் மேற் கொண்டனவோ? அன்றி, அவ்வண்டுகட்கு இயற்கையாகிய மாட்சி மைப்பட்ட குணத்தைத்தான் தலைவன் மேற்கொண்டனனோ யாலும்

Koviloor Digital Library

அறிகிலேன். தலைவி அவ்ன் குணமே அத்தகையது ஆதலையும் அறியாதவளாய் வாளா எம்மோடு வருத்தப்படுகிறாள்.

மாண்குணம்-இகழ்ச்சிக்குறிப்பு. அவன் புதல்வன்தாய்-இங்ஙனம் சுட்டிக் கூறுதல் மகளிர் இயல்பு. இது கூறுவோர்க்குக் கூறப்படுவோர் பாலுள்ள வெறுப்பை யுணர்த்தும்.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன்-தலைவனோடு புலத்தல். 'வண்டோர் அனையர் ஆடவர் பூவோரனையர் மகளிர்' என்றார் பிறரும். 90

- புலவிவிராய பத்து முற்றிற்று -

Koviloor Digital Library

10. எருமைப் பத்து

அஃதாவது, மருதநிலக் கருப்பொருளாகிய எருமை என்பது பாடல்தோறும் பயின்று வந்த செய்யுளின் தொகுதி.

91. நெறிமருப்பு எருமை நீலஇரும் போத்து
வெறிமலர்ப் பொய்கை ஆம்பல் மயக்கும்
கழனி யூரன் மகளிவள்
பழன வெதிரின் கொடிப்பிணை யலளே.

வரிவரியாக அமைந்த கொம்புகளையுடைய எருமைச்சாதியில் நீல நிறமுடைய பெரிய கடா நீர்நிலைக்கண் புகுந்து ஆம்பல் மலரைச் சிதைத்தற் இடனானதும் வயல்களை யுடையதுமான ஊரினையுடைய சான்றோன் மகளாகிய இவள் கரும்புப் பூவால் தொடுக்கப்பட்ட நீண்ட மாலையை உடையதொரு இளமையோள். பழனவெதிர் - கரும்பு.

தலைவி மணமும் அழகும் அற்ற கரும்பின் பூவாலாகிய மாலையை அணிவாள் என்றது, அவளும் விளைவு அறியாத இளமையள் என்றுணர்த்தி சேட்படுத்தியவாறு என்க. மெய்ப்பாடு பெருமிதம். பயன் - தலைவியை அரியளாக்குதல். 91

92. கருங்கோட்டு எருமைச் செங்கண் புனிற்றுஆக்
காதற் குழவிக்கு ஊறுமுலை மடுக்கும்
நுந்தை நும்மூர் வருதும்
ஒண்தொடி மடந்தை நின்னையாம் பெறினே.

வளையணிந்த நங்காய்! நின்னை நின்தமர் உவந்து கொடுப்ப யான் வரைந்து கொள்ளப் பெறுதல் உறுதியாயின் கரிய கொம்பையுடைய எருமைச் சாதியில் சிவந்த கண்ணையுடைய ஈன்றணிமைத்தாகிய எருமையான் தனது அன்புள்ள கன்றிற்குத் தானே பால் சுரக்க நின்ற முலையை ஊட்டுதற்கிடனான உன் தந்தையின்

Koviloor Digital Library

ஊருக்கு எம் தமர் வருதல் வேண்டுமோ? யாமே நேரில் வருவோம் வருந்தற்க.

எருமைப் புனிற்றா தன் அன்புடைய குழவிக்கு ஊறுமுலை மடுக்கும் என்றது, என் அன்பிற்குரிய நின்னை நான் விரைந்து மணந்து நன்கு தலையளி செய்வேன் என்னும் உள்ளுறை யுடைத்து.

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - வரைவுடன்பட்டுத் தலைவியை மகிழ்வித்தல். 92.

93. எருமைநல் ஏற்றினம் மேயல் அருந்தெனப்
பசுமோ ரோடமோடு ஆம்பல் ஒல்லா
செய்த இனைய மன்ற பல்பொழில்
தாதுண வெறுக்கைய ஆகி இவள்
போதுஅவிழ் முச்சி யூதும் வண்டே

அன்னாய்! எருமைச் சாதியின் நல்ல கடாத்திரள் தமக்குரிய உணவாக மேய்ந்து பசிய செங்கருங்காலி மலர்களும் ஆம்பல் மலர்களும் பொழிலில் பொருந்தாதனவாய்ச் செய்துவிட்டன. ஆதலால் வண்டுகள் தேற்றமாக இத்தகைய பூம்பொழிலில் தாது உண்ணுதற்கு வெறுப்புடையனவாகி இவளுடைய மலர்விரிந்த கூந்தலில் மொய்க்கின்றன. மோரோடம் - செங்கருங்காலி, செவிலிக்குத் தோழி கூறியது.

மெய்ப்பாடு - அச்சம்; பயன் - ஐயம் அகற்றலும் வரைவு கடாவுதலுமாம். 93

94. மள்ளர் அன்ன தடங்கோட்டு எருமை
மகளிர் அன்ன துணையொடு வதியும்
நிழல்முதிர் இலஞ்சிப் பழனத் ததுவே
கழனித் தாமரை மலரும்
கவின்பெறு சுடர்நுதல் தந்தை ஊரே.

வயல்களில் தாமரை மலர்ந்திருப்பதும் என்காதலியின் தந்தையின் உடையதுமாகிய சிறந்த ஊர், போர் மறவரையொத்த

Koviloor Digital Library

எருமைக்கடாக்கள் நங்கையர் போன்று தத்தம் காதல் துணையாகிய பெண் எருமைகளோடு உறைதற்கிடனான நிழல்மிக்க நீரோடையை யுடைய பழனங்களின் நாப்பண் இருப்பது. ஆண்டு என் உயிரன்னவளைக் கண்டு மணந்து மகிழ்வேம் என்பது தலைமகன் தன் நெஞ்சிற்குக் கூறி மகிழ்ந்தது . இலஞ்சி - நீர் நிலை . பழனம் -ஊர்ப்பொதுநிலம்.

இதன்கண் எருமை துணையொடு வதியும் என்றது தான் இனித்தலைவியோடு வதியலாம் என்னும் நினைவானும், தாமரைமலரும் என்றது தன் வரவினால் தலைவி முகமலர்ந்து மகிழ்வாள் என்னும் நினைவானும் எழுந்த இறைச்சி .

மெய்ப்பாடு - உவகை; பயன் மகிழ்தல் . இறைச்சி - புறத்துச் சொல்லும் குறிப்புப் பொருள் . 94

95. கருங்கோட்டு எருமை கயிறுபரிந்து அசைஇ
நெடுங்கதிர் நெல்லின் நாள்மேயல் ஆரும்
புனல்முற் றூரன் பகலும்
படர்மலி அருநோய் செய்தனன் எமக்கே.

கரிய கொம்பையுடைய எருமை தன்னைக் கட்டிய கயிற்றை அறுத்துக் கொண்டு சென்று நீண்ட கதிரையுடைய நெல்லாகிய புதிய உணவைத் தின்பதற்கு இடமானதும் நீர்நிலைகள் சூழ்ந்ததுமாகிய ஊரினையுடையோன் எமக்கு பகற்பொழுதிலும் நினைவு மிகுதற்குக் காரணமான தீர்வரிய துன்பத்தைச் செய்தனன் . அவன் பொருட்டு நீவிர் வாயில் வேண்டற்க .

பரிந்து - அறுத்துக்கொண்டு; அசைஇ - சென்று . 'தலைவன் இல்லறத்தார்க்கோதிய அறத்தினைப்பெரிதும் புறக்கணித்துத் தீநெறியில் சென்று வறிய காம இன்பம் துய்க்கின்றான் என்பது உள்ளுறை .

மெய்ப்பாடு - வெகுளி; பயன் - வாயில் மறுத்தல் . 95

Koviloor Digital Library

96. அணிநடை எருமை ஆடிய அள்ளல்
மணிநிற நெய்தல் ஆம்பலொடு கலிக்கும்
கழனி ஊரன் மகளிவள்
பழன ஊரன் பாயல்இன் துணையே.

எருமைகள் பாய்ந்து கலக்கியதனால் உண்டான சேற்றில் நீலமணி போன்ற நிறமுள்ள நெய்தல் மலர் தழைத்து எழுகின்ற கழனிகளையுடைய ஊர்த்தலைவன் மகளாகிய நம்பெருமாட்டி பழனங்களையுடைய ஊரனாகிய நம்பெருமானுக்கு இனிய பாயலின் கண் சிறந்த துணைவியாயினள். என்னே அவளுடைய குணநலம் இருந்தவாறு.

மெய்ப்பாடு - வியப்பு; பயன் - கிழத்தி மாண்பு கிழவோற்கு உணர்த்துதல். பாயல் - புணர்தல். 96

97. பகன்றை வான்மலர் மிடைந்த கோட்டைக்
கருந்தாள் எருமைக் கன்று வெரூஉம்
பொய்கை ஊரன் மகளிவள்
பொய்கைப் பூவினும் நறுந்தண் ணியளே.

கரிய கால்களையுடைய எருமைக்கன்று தூய பகன்றை மலர் சிக்கியுள்ள தன் தாயினது கொம்பினைக் கண்டு தனது தாயன்று என்று மருண்டு அஞ்சுதற்கு இடனானதும் நீர்நிலைகளையுடையதுமான சிறந்த ஊர்த் தலைவனுடைய மகளாகிய இவள் அப்பொய்கையில் மலரும் செந்தாமரை மலரைக் காட்டிலும் நலமுடையவள்.

இவளும் யான் அணிந்த மாலையைக் கண்டு இவன் பரத்தையர் பொருட்டு இதனை அணிந்தனன் போலும் என்றுகருதி ஊடுவாள் என்று அவள் பேதைமை கருதித் தலைவன் தன் நெஞ்சினுள்ளே நகைத்ததாம்.

மெய்ப்பாடு - நகையும் உவகையும்; பயன் - மகிழ்தல் 97

Koviloor Digital Library

98. தண்புனல் ஆடும் தடங்கோட்டு எருமை
திண்பிணி அம்பியின் தோன்றும் ஊர
ஒண்டொடி மடமகள் இவளினும்
நுந்தையும் யாயும் துடியரோ நின்னே.

குளிர்ந்த நீரில் ஆடுகின்ற எருமை தோணிபோலத் தோன்றுதற்கு இடனான ஊரனே! நின்னை மிகுதிக் கண் இடித்து நன்னெறிப்படுத்தும் செயலில் நின்னை ஈன்ற தந்தையும் தாயும் நின் வாழ்க்கைத் துணைவியைக் காட்டிலும் நின்பால் கடியராய் இருத்தற்குரியரோ கூறுதி.

எருமை நீராடுங்கால் காண்போர் காட்சிப் பிழையால் தோணிபோலத் தோன்றுதல் போன்று, தலைவியும் தனக்குரிய உரிமையால் நின்னை ஒறுக்குங்கால் நினது கருத்துப்பிழையால் மிகை செய்வாளாகத் தோன்றுகின்றது என உள்ளுறைகொள்க. இது தோழி கூற்று.

மெய்ப்பாடு - வெகுளி; பயன் - கழறுதல். 98

99. பழனப் பாகல் முயிறுமூசு குடம்பை
கழனி யெருமை கதிரொடு மயக்கும்
பூக்கஞல் ஊரன் மகளிவள்
நோய்க்குமருந் தாகிய பணைத்தோ ளோளே.

பழனத்தின்கண் படர்ந்த பாகற் கொடியில் முயிற்று எறும்புகள் மொய்த்து இயற்றிய கூட்டினை எருமை, வயலில் கிடக்கும் நெற்கதிரோடு ஒரு சேரக் கெடுத்தற் கிடனான சிறந்த ஊர்த் தலைவன் மகளாகிய இவள் தன்னால் உற்ற நோய்க்கு மருந்தாக அமைந்த மூங்கில் போன்ற தோள்களையும் உடையள்,

முயிறுமூசு குடம்பையை நெற்கதிரோடு எருமை மயக்கு மென்றது; யான் செய்த கொடுமையையும் அவர்கள் தன்மேற் காதலித்துக் கூறியவற்றையும் சிதைத்துத் தன் பக்கலே நின்றாள் என்பதாம். 99

Koviloor Digital Library

100. புனலாடு மகளிர் இட்ட ஒள்ளிழை
மணலாடு சிமையத்து எருமை கிளைக்கும்
யாணர் ஊரன் மகளிவள்
பாணர் நரம்பினும் இன்கிள வியளே.

நீராடும் மகளிர் மணல் திட்டின்மேல் இடப்பட்ட குவடுகளில் போட்டு விட்டு மறந்த அணிகலன்களை எருமைகள் குளம்பால் கிளைத்துப் புலப்படச் செய்தற் கிடனான புதுவருவாயையுடைய ஊர்த் தலைவன் மகளாகிய எம்பெருமாட்டி பாணர் இயக்கும் யாழினது நரம்பின் இசையைக் காட்டிலும் இனிமை மிக்க மொழிகளை யுடையவள்.

புனலாடு மகளிர் மணலாடு சிமையத்து இட்டு மறந்த இழையைக் கிளத்துப் புலப்படுத்தினாற்போன்று, தலைவி நீ பண்டு, களவுக் காலத்தே செய்து மறந்த நலங்களையெல்லாம் எடுத்துக் காட்டி நின்னைப் பாராட்டுகின்றனள் என்பது உள்ளுறை,

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - மகிழ்ச்சி. 100.

- எருமைப் பத்து முற்றிற்று -

மருதம் முற்றிற்று

Koviloor Digital Library

II நெய்தல் .

ஆசிரியர் : அம்மூவனார்

இவர் மேலைக் கடற்கரையைச் சேர்ந்த சேரநாட்டில் தோன்றியவர் என்றும், இக்காலத்தும் அந்நாட்டில் அம்மு என்னும் பெயர் வழங்கி வருகின்றது என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர் . இவர் நெய்தல் திணையைப் பாடுதலில் சிறப்புடையவர் .

சேரநாட்டுக் கடற்கரைப்பட்டினமாகிய தொண்டி நகரமும் அந்நாட்டு அகநகராகிய மாந்தையும், பாண்டி நாட்டுத் துறைமுகப் பட்டினமாகிய கொற்கையும், நடுநாட்டுத்திருக்கோவலூரும், பெண்ணையாறும் இவரால் பாடப்பட்டிருக்கின்றன . இதனால் இவர் சேர, பாண்டியராகிய இரு முடிவேந்தராலும், மலையமான் திருமுடிக்காரி என்னும் வள்ளல் பெருமானாலும் ஆதரிக்கப் பெற்றவர் என்பது புலனாம் .

நெய்தல் திணை அடியிற்கண்ட பத்துப் பிரிவுகளையுடையது . ஒவ்வொன்றிலும் பத்துப் பாடல்கள் உள்ளன .

11. தாய்க்கு உரைத்தபத்து
12. தோழிக்கு உரைத்தபத்து
13. கிழவற்கு உரைத்தபத்து
14. பாணர்க்கு உரைத்தபத்து
15. ஞாழற்பத்து
16. வெள்ளாங்குருகுப் பத்து

Koviloor Digital Library

17. சிறுவெண் காக்கைப் பத்து.
18. தொண்டிப் பத்து.
19. நெய்தற் பத்து.
20. வளைப் பத்து.

இடம் : கடலும் கடல் சார்ந்த இடமும்.

உரிப்பொருள் : இரங்கலும் இரங்கல் நிமித்தமும்.

ஒரு செய்யுளில் முதலும் கருவும் உரியுமாகிய மூன்றும் வருமிடத்து முதற்பொருளால் திணை கோடல் வேண்டும். முதல் வாராவிடத்துக் கருப் பொருளாற் கொள்க. அதுவும் வாரா தொழியின் உரியாற்கொள்க. உரியின்றி அகச்செய்யுள் வாரா என்க.

Koviloor Digital Library

11 தாய்க்கு உரைத்த பத்து.

அஃதாவது தோழி தன் தாயாகிய செவிலித்தாய்க்கு அறத்தொடு நிலை வகையால் கூறிய பத்துச் செய்யுளின் தொகுதி என்றவாறு.

101. அன்னை வாழிவேண் டன்னை உதுக்காண்
ஏர்கொடிப் பாசடும்பு பரியஊர்பு இழிபு
நெய்தல் மயக்கி வந்தன்று நின்மகள்
பூப்போல் உண்கண் மரீஇய
நோய்க்குமருந் தாகிய கொண்கன் தேரே.

தாயே! நான் கூறுவதனை விரும்பிக் கேட்பாயாக! நின் மகளின் மலர் போன்ற மையுண்ட கண்களிற் பொருந்திய பசலை நோய்க்குத் தப்பாத நன்மருந்தாய் அமைந்த எம் பெருமான் ஊர்ந்த தேர் அடம்பங் கொடிகள் அற்றுப் போம்படி செலுத்தப்பட்டு, பின்னர்க் கழியின் மருங்கே இறங்கி நெய்தற் கொடியைச் சிதைத்து வந்தது. இதைக் காண்பாயாக. மரீஇய பொருந்திய.

இஃது அறத்தொடு நின்றவள் பின்னரும் கூறுதல் என்னும் உபாயத்தால் பின்னரும் அறத்தொடு நின்று ஐயங் களைந்து தலைவியை அவனுக்கே கொடுக்க வேண்டுமென்பதுபடக் கூறியவாறாயிற்று. இச்செய்யுள் நெய்தற் கண் குறிஞ்சி என்றுணர்க.

மெய்ப்பாடு - உவகை; பயன் - வரைவெதிர் கொள்வித்தல். 101

102. அன்னை வாழிவேண் டன்னை நம்மூர்
நீல்நிறப் பெருங்கடல் புள்ளின் ஆனாது
துன்புறு துயரம் நீங்க
இன்புற இசைக்கும் அவர் தேர்மணிக் குரலே.

Koviloor Digital Library
Accession No 43317
Date of purchase:
Call Number: 894.811 Emb

தாயே வாழ்வாயாக! நான் கூறுவதைக் கேள். நின் மகளின் காதலன் வருகின்ற தேரில் கட்டிய மணியின் ஒலி நீயும் நின்மகளும் ஐயுற்றுத் துன்புறும் துயரம் நீங்கும் படியாகவும், நாம் என்றும் இன்பம் எய்தும் படியும் கடலின்கண் வாழும் கடற் பறவைகளின் ஒலிபோன்று இடையறாது ஒலிக்கும். அதனைக் கேட்பாயாக. இது தோழி தாய்க்கு அறத்தொடு நின்றது. அவற்கே அவளைக் கொடுக்க முயலுதி என்பது குறிப்பெச்சம்.

மெய்ப்பாடும் பயனும் அவை. 102

103. அன்னை வாழிவேண் டன்னை புன்னையொடு
ஞாழல் பூக்கும் தண்ணந் துறைவன்
இவட்குஅமைந் தனெனால் தானே
தனக்கு அமைந்த தன்றுஇவள் மாமைக் கவினே.

தாயே வாழ்வாயாக! யான் கூறுவதைக்கேள். புன்னையுடன் ஞாழலும் பூக்கும் குளிர்ந்த நீர்த்துறை ஊரன் நின் மகளாகிய தலைவியின் நினைவிற்கு மிகவும் பொருந்துவனாயினான். அதனால் இவனைப் பிரிந்தபோது அழிந்த திருமேனி எழில் இப்போது நன்கு சிறந்துவிட்டது. அதாவது இவள் கருதியவாறு வந்து திருமணம் புரிந்து அருள் செய்தான். ஞாழல் - குங்குமமரம், புலிநகக் கொன்றை,

மெய்ப்பாடும் பயனும் அவை. 103

104. அன்னை வாழிவேண் டன்னை நம்மூர்ப்
பலர்மடி பொழுதின் நலம்மிகச் சாஅய்
நள்ளென வந்த இயல்தேர்ச்
செல்வக் கொண்கன் செல்வன் ஃ தூரே.

அஃதாவது, தலைவி மகப்பெற்றாள் என்னும் செய்தியறிந்து அம்மகிழ்ச்சிக் குரிய நிகழ்ச்சியைக் கண்டு களிக்கத் தலைவியின் இல்லத்திற்கு வந்த செவிலிக்கு ஆண்டு தலைவியோடிருந்த தோழி உவந்துகூறியது.

Koviloor Digital Library

தாயே! நான் கூறுவதைக் கேள். முன்பு நமது ஊரில் இரவின் நடுயாமத்தே ஊரார்பலரும் உறங்கும் நேரத்தில் தனது அழகு மிகவும் மழுங்கி, தலைவியைக் காண்டற்குத் தமியே வந்த சிறந்த தேர்மறவனாகிய தலைவனுடைய மகனுடைய ஊர் அத்தகைய நலமெல்லாம் உடையது காண். செல்வன் என்றது தலைவியின்ற மகவினை.

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - மகிழ்வித்தல். 104

105. அன்னை வாழிவேண் டன்னை முழங்குகடல்
திரைதரு முத்தம் வெண்மணல் இமைக்கும்
தண்அம் துறைவன் வந்தெனப்
பொன்னினும் சிவந்தன்று கண்டிசின் நுதலே.

தாயே! நான் கூறுவதைக் கேள். கடலின் அலை கொண்டுவந்து வீசிய முத்து வெண்மணல் மேல் கிடக்கும் நீர்த்துறைவன் மகட்பேசி வந்தனன் என்று அறிந்தவுடன் தலைவியின் நெற்றி பசலை தீர்ந்து பொன்னைக் காட்டிலும் சிவந்து ஒளிவீசுவதைக் காண்பாயாக. இசின் - முன்னிலை அசை.

மகளுடைத்தாயர் தலைவன் உயர்ந்த பண்புடையான் என்று உணர்ந்தவழி ஆற்றவும் மனமகிழ்வர் ஆகலின், தலைவனுடைய அளியுடைமையை உள்ளுறையால் குறித்தனள்.

மெய்ப்பாடு - உவகை; பயன் செவிலியை மகிழ்வித்தல். 105

106. அன்னை வாழிவேண் டன்னை அவர்நாட்டுத்
துதிக்கால் அன்னம் துணைசெத்து மிதிக்கும்
தண்கடல் வளையினும் இலங்கும்இவள்
அம்கலிழ் ஆகம் கண்டிசின் நினைந்தே.

தாயே! நான் கூறுவதைக் கேள். தலைவன் நாட்டில்வாழும் தோலுறை அடியையுடைய அன்னச் சேவல் தன் பெடையன்னம் என்று மருண்டு புணர முயல்வதற்குக் காரணமான குளிர்ந்த கடலிடத்துப் பிறந்த சங்கைக் காட்டிலும் இவளுடைய அழகிய திருமேனி பசந்து

Koviloor Digital Library

வெளுத்துத் தோன்றும். இதற்குக் காரணம் காமநோயே என்று ஆராய்ந்து அறிந்து கொள்க.

துதி - தோலுறை செத்து - கருதி. மிதிக்கும் - அணைய முயலும். வளை-சங்கு. கவிழ்தல்-ஒழுகுதல். இதன்கண் அன்னம் சங்கைத் துணையெனக் கருதி அணைய முயலும் என்றது, அன்னாய் நீ தலைவனால் உண்டான பசலை நோயைப் பிறிது நோயெனக் கருதி மருள்கின்றனை என்னும் குறிப்புடையது.

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - ஐயம் தீர்த்தல். 106

107. அன்னை வாழிவேண் டன்னைஎன் தோழி
சுடர்நுதல் பசப்பச் சாஅய்ப் படர்மெலிந்து
தண்கடல் படுதிரை கேட்டொறும்
துஞ்சாள் ஆகுதல் நோகோ யானே.

தாயே! நான் கூறுவதைக்கேள். என் உயிரனைய தலைவி எய்திய நோய்க்குக் காரணம் அறியேனாயினும் இவள் இரவு முழுவதும் தனது நுதல் பசலை பூக்கப்பெரிதும் உடல் மெலிந்து குளிர்ந்த கடல் அலையின் முழக்கத்தைக் கேட்கும் போதெல்லாம் உறங்காதவளாய் வருந்துதற்கு யான்பெரிதும் வருந்துகின்றேன்.

இம் மெலிவு அகற்றுவதற்கு உபாயம் இவளை அவனுக்குக் கொடுத்தலேயன்றிப் பிறிதில்லை என்பது படக் குறிப்பால் உணர்த்தியது.

மெய்ப்பாடு - அச்சம்; பயன் - அறத்தொடு நிற்றல். 107

108. அன்னை வாழிவேண் டன்னை கழிய
முண்டக மலரும் தண்கடற் சேர்ப்பன்
எந்தோள் துறந்தனன் ஆயின்
எவன்கொல் மற்றவன் நயந்த தோளே.

தாயே! நான் கூறுவதைக் கேள். உப்பங்கழியிலுள்ள முள்ளி மலர்தற்கு இடனான குளிர்ந்த கடல் துறைத்தலைவன் எம்முடைய

Koviloor Digital Library

தோளைப் பிரிந்து விடுவானாயின் அவனால் விரும்பப்பட்ட தலைவியின் தோள் யாது பயனுடையது?

தலைவன் நின்மகளைத் தன்னுயிரினும் சிறந்தாளாகக் கருதி இருப்பதனை யான் அறிவேன். அத்தகையவன் தலைவியை மறத்தலும் பிறமகளிரை மணத்தலும் யாண்டையது? ஐயுறற்க என்று தோழி தேற்றினாள் என்க.

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - ஐயம் அகற்றுதல். 108

109. அன்னை வாழிவேண் டன்னை நெய்தல்
நீர்படர் தூம்பின் பூக்கெழு துறைவன்
எந்தோள் துறந்த காலை எவன்கொல்
பன்னாள் வரும்அவன் அளித்த போழ்தே.

தாயே! நான் கூறுவதைக் கேள். நீரோடுகின்ற மதகு வழியின் கண் நெய்தல் மலர்கள் பொருந்தி அதனைத் தடுக்கின்ற நீர்த்துறைவன் எமது தோளைத் துறந்து உறைகின்ற காலத்து அவன் எம்மைத் தேற்றுரை கூறி அளி செய்த அந்த ஒரு பொழுதே பல நாளும் என் நினைவில் வரும். அங்ஙனம் வருதற்குக் காரணம் என்னையோ அறிகிலேன். நீர்படர் தூம்பு - மதகு.

நீரோடும் வழியை அதன்கண் தோன்றிய மலரே மறைக்குமாறு போல அவனது விரைந்த வருகையை வரை பொருளே தடை செய்கின்றது. பொருளீட்டியவுடன் விரைந்துவந்து அளிசெய்தல் ஒருதலை என்னும் உள்ளுறையும் காண்க.

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - செவிலியை ஆற்றுதல். 109

110. அன்னை வாழிவேண் டன்னை புன்னை
பொன்னிறம் விரியும் பூக்கெழு துறைவனை
என்னை என்றும் யாமே இவ்வூர்
பிறதொன் றாகக் கூறும்
ஆங்கும் ஆக்குமோ வாழிய பாலே.

Koviloor Digital Library

நொதுமலர் வரைவின்கண் தோழி அறத்தொடு நின்றது. தாயே நான் கூறுவதைக் கேள். புன்னை மரங்களின் பொன்னிறம் திகழுமாறு மலரும் பூக்களைப் பொருந்தியுள்ள கடல் துறைவனை யாங்கள் தலைவன் என்று உறுதியாகக் கருதுகின்றோம். இவ்வூரில் வாழும் மக்களோ வேறொரு வகையாகக் கூறுவர். தலைவிக்குத் தகுந்த அத்துறைவனைத்தானே கொணர்ந்து கூட்டிய தெய்வம் அதனைச் சிதைத்து ஊரார் கூறும் வண்ணம் செய்துவிடுமோ. பால் - ஊழ்.

மெய்ப்பாடு - அச்சம்; பயன் - உண்மை செப்பி அறத்தொடு நிற்றல். 110

- தாய்க்கு உரைத்த பத்து முற்றிற்று -

ALAGAPPA UNIVERSITY LIBRARY KARAIKUDI.

Koviloor Digital Library

12. தோழிக்கு உரைத்த பத்து

அஃதாவது தோழிக்குக் கூறுவனவாகவே அமைந்த பத்துச் செய்யுட்களின் தொகுதி.

111. அம்ம வாழி தோழி பாணன்
சூழ்கழி மருங்கின் நாண்இரை கொளீஇச்
சினைக்கயல் மாய்க்கும் துறைவன் கேண்மை
பிரிந்தும் வாழ்துமோ நாமே
அருந்தவம் முயறல் ஆற்றா தேமே.

தோழி நான் கூறுவதைக் கேள். பாணன் ஊரைச் சூழ்ந்துள்ள உப்பங்கழியின் பக்கத்தில் இருந்து தூண்டில் கயிற்றில் இரையை வஞ்சகமாக மாட்டி வைத்து, கருக் கொண்டுள்ள கயல்மீனைப் பிடித்துக் கொல்லுதற்கு இடனான கடல் துறைவனின் நட்பினைப் பிரியாமல் கூடியிருந்து வாழ்தற்குக் காரணமான செயற்கரும் தவத்தை முற்பிறப்பில் இயற்றாத யாங்கள் பிரிந்தும் உயிர்வாழும் சிறுமையும் உடையேம் கொல். நம் உறவினரும் நம்மை இற்செறிப்பர். அங்ஙனம் செய்யின் ஏழையரேம் என் செய்தும் என்னும் உள்ளுறையும் காண்க.

மெய்ப்பாடு - அழுகை; பயன் - வரைவு கடாதல் இற்செறியார் எனக் கேட்ட தலைமகள் வரையாது வந்தொழுகும் தலைவன் சிறைப் புறத்தானாகச் சொல்லியது. 111

112. அம்ம வாழி தோழி பாசிலைச்
செருந்தி தாய இருங்கழிச் சேர்ப்பன்
தான்வரக் காண்குவம் நாமே
மறந்தோம் மன்ற நாணுடை நெஞ்சே.

தோழி! யான் கூறுவதைக் கேள். பசிய தழை செழுமிய செருந்தி மரங்கள் பரவிய கழிக்கரையையுடைய தலைவன், தானே விரைந்து

Koviloor Digital Library

வரைவோடு வருதலை உறுதியாகக் கண்டு மகிழ்வோம் காண். அது எதனால் எனின் அவன் பண்டு கூறிய தேற்றுரையை நாம் நாணம் நிறைந்த நெஞ்சுடைமையால் தேற்றமாக மறந்து போயினோம். அஃது இப்போது நினைவிற்கு வருகிறது.

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - தோழியை ஆற்றுவித்தல். 112

113. அம்ம வாழி தோழி நென்னல்
ஓங்குதிரை வெண்மணல் உடைக்கும் துறைவற்கு
ஊரார் பெண்டென மொழிய என்னை
அதுகேட் டன்னாய் என்றனள் அன்னை
பைபய வெம்மை என்றனென் யானே.

தோழி! யான் கூறுவதைக் கேள். நேற்று இவ்வூரார் கடலலைகள் வெண் மணலைச் சிதைக்கின்ற துறைவனுக்குப் பெண்டாயினாள் இவள் என்று என்னை அலர் தூற்ற நம் அன்னை அம்மொழிகேட்டு என்னை நோக்கி நீ அத்தன்மையளோ என்று வினவினாள். அது கேட்டுத் திகைப்புற்ற யான் பிறிதொன்றும் சொல்ல இயலாமல் மெல்ல மெல்ல இது 'கொடுமை' என்று என் உள்ளேயே சொல்லிக் கொண்டேன்.

ஊரார் கூறும் அலர்மொழி என் வெள்ளை மனத்தைச் சிதையா நிற்கும் என்றாள் என உள்ளுறை காண்க.

மெய்ப்பாடு - அச்சம்; பயன் - வரைவுகடாதல். 113

114. அம்ம வாழி தோழி கொண்கன்
நேரேம் ஆயினும் செல்குவம் கொல்லோ
கடலின் நாரை இரற்றும்
மடலம் பெண்ணை அவனுடை நாட்டே

இது சிறைப் புறத்திருந்த தலைமகன் கேட்குமாறு தலைவி தோழிக்குச் சொல்லியது.

தோழி! நான் சொல்வதைக் கேள், யாமோ நம் தலைவனை எதிர்ப்படுகின்றிலேம். அவன் வாரானாயினும் கடலின் கண்ணதாகிய

Koviloor Digital Library

நாரை சென்று ஆரவாரிக்கின்ற பனைமரங்களையுடைய நம் பெருமானுடைய நாட்டிற்கு யாமே சென்று அவனைத் தலைப்படுவோமா? கூறுதி. பெண்ணை - பனைமரம்.

நாமும் அந்த நாரை போன்று அவனிருக்குமிடம் சென்று நம் குறையைக் கூறுவோம் என்னும் உள்ளுறை உடைத்தென்க.

மெய்ப்பாடு - அவலம்; பயன் - ஆற்றாமை உரைத்தது. 114

115. அம்ம வாழி தோழி பன்மாண்
நுண்மணல் அடைகரை நம்மோடு ஆடிய
தண்ணந் துறைவன் மறைஇ
அன்னை அருங்கடி வந்துநின் றோனே.

தோழி! நான் சொல்வதைக்கேள். நுண்ணிய மணல் செறிந்த நீர் அடைகரையின் கண் நம்மோடு விளையாட்டயர்ந்த கடல் துறைவன் நம் அன்னையின் கடத்தற்கரிய காவலினும் படாமல் மறைந்து இதோ வந்து நிற்பான் ஆயினன் காண். இதனால், தலைவி காப்பு மிகுதி கூறி விரைவின் வரைந்து கோடலே நேரிது; இவ்வாறு வருதல் எம்மை வருத்துவதன்றிப் பிறிதில்லை என உணர்த்தி வரைவு கடாவினமை உணர்க.

மெய்ப்பாடு - அச்சம்; பயன் - வரைவு கடாதல். 115

116. அம்ம வாழி தோழி நாம் அழ
நீல இருங்கழி நீலம் கூம்பு
மாலைவந் தன்று மன்ற
காலை யன்ன காலைமுந் துறுத்தே.

சூரியன் மறையும் நேரத்தில் தலைமகன் சிறைப்புறத்து நின்று கேட்பத் தலைமகள் சொல்லியது

தோழி! நான் சொல்வதைக் கேள். நீல நிறமுடைய பெரிய கழிகளிடத்தேயுள்ள கருங்குவளை மலர்தாமும் அஞ்சிக் கண் மூடுங் கொடுமையுடைய மாலைப்பொழுது காலைப் பொழுதாகிய அந்தப் பொல்லாத காலைப் பொழுதினைத் தன் வரவிற்கு அறிகுறியாக முற்பட

Koviloor Digital Library

விடுத்து இதோ தேற்றமாக நாம் அழும்படியாக வந்துவிட்டது. யாம் என் செய்கோம்.

மெய்ப்பாடு - அச்சம்; பயன் - வரைவு கடாதல். 116

காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரும் இந்நோய் - திருக்குறள் 1227.

117. அம்ம வாழி தோழி நலனே
இன்ன தாகுதல் கொடிதே புன்னை
யணிமலர் துறைதொறும் வரிக்கும்
மணிநீர்ச் சேர்ப்பனை மறவா தோர்க்கே.

வரையாது வந்தொழுகும் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

தோழி! கேட்பாயாக. புன்னை மரங்களின் மலர்கள் கடல் துறைதோறும் கோலஞ் செய்தற்கு இடனான கடற்கரைத் தலைவனது தண்ணளியைப் பெற்றுப் பின்னர் மறவாதிருக்கும் நல்லோருடைய அழகு இங்ஙனம் சிதைதல் மிகவும் கொடுமையுடையது.

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - மகிழ்தல். புன்னையணி மலர் துறைதோறும் உதிர்ந்து கோலஞ் செய்தாற்போன்று சேர்ப்பனும் குறியிடம் தோறும் நம்மைத் தலைக்கூடித் தண்ணளி புரிந்தனன். அந்நன்றி மறக்கற் பாலதன்று என்று உள்ளுறை காண்க. 117

118. அம்ம வாழி தோழி யான் இன்று
அறன்இ லாளன் கண்ட பொழுதில்
சினவுவென் தகைக்குறவன் சென்றனென்
பின்நினைந்து இரங்கிப் பெயர்தந் தேனே.

தோழி! நான் சொல்வதைக் கேள். யான் இன்று அந்த அறநெறி நில்லாத கள்வனைக் கண்டபொழுது பெரிதும் வெகுண்டு ஊடிக் கொள்வேன் என்றும், வாயில் நேராது உறுதியாக மறுப்பேன் என்றும் கருதியே அவனெதிர் செல்வேன் ஆயினேன். ஆயினும் ஏன்? அங்ஙனம் சென்ற பின்னர் என் கடமையை நினைந்து அவனுக்கு ஆற்றவும் இரங்கி, வாய் பேசாது மீள்வேன் ஆயினேன். பின் என் செய்வேன் என்பதாம்.

Koviloor Digital Library

மெய்ப்பாடு - இளிவரல்; பயன் - தோழிக்குக் காரணம் உரைத்தல். 118

119. அம்ம வாழி தோழி நன்றும்
எய்யா மையின் ஏதில பற்றி
அன்பிலன் மன்ற பெரிதே
மென்புலக் கொண்கன் வாரா தோனே.

தோழி நான் சொல்வதைக் கேள். மென்மையுடைய நெய்தல் நிலத்தலைவன் நம் இன்னா நிலைமையை நன்குணர மாட்டாமையினால் விரைந்து வரைந்து கோடற்குக் காரணமாகாத பிறநெறிகளை மேற்கொண்டு வரைவொடு வருதல் இல்லாதவன் ஆயினன். தேற்றமாக அன்பு பெரிதும் இல்லாத வன்கண்ணனே காண், ஐயம் இல்லை. எய்யாமை - அறியாமை. ஏதில - வீண்செயல்.

உறுதியான அன்பும் மொழியும் உடையான் அல்லன் என்பாள் மென்புலக் கொண்கன் என்றாள். மென்புலம் - நெய்தல்.

மெய்ப்பாடு - அழுகை; பயன் - தலைவனுக்குச் சூழ்ச்சி தோற்றுவித்தல். 119

120. அம்ம வாழி தோழி நலமிக
நல்ல ஆயின அளியமெல் தோளே
மல்லல் இருங்கழி நீரறல்விரியும்
மெல்லம் புலம்பன் வந்த மாறே.

தோழி! நான் சொல்வதைக் கேள். வளமிக்க கரிய கழியனது நீர் கருமணலைப் பரப்புதற்கிடனான நெய்தல் தலைவன் நம்மை நினைந்து அளிசெய்தற்கு வந்தமையால் அவன் பிரிவாற்றாமையால் மெலிந்த இத்தோள்கள் தாம் இழந்த அவ்வழகு பண்டையினும் சிறப்ப பெரிதும் நல்லனவாய் பொலிகின்றனகாண்.

மெய்ப்பாடு - உவகை; பயன் - வரைதல். 120

· தோழிக்கு உரைத்த பத்து முற்றிற்று ·

Koviloor Digital Library

13. கிழவற்கு உரைத்த பத்து

கிழவன் + கு = கிழவற்கு

அஃதாவது, தலைவனுக்குக் கூறுவதாக அமைந்த பத்துச் செய்யுட்களின் தொகுதி என்றவாறு.

121. கண்டிகும் அல்லமோ கொண்கநின் கேளே
முண்டகக் கோதை நனையத்
தெண்டிரைப் பௌவம் பாய்ந்துநின் றோளே.

எம்பெருமானே! நின் காதற் கேண்மையுடையாள் தன் தலையில் சூட்டிய முள்ளி மலர்மாலை நனையும்படி தெளிந்த அலைகளையுடைய கடலின்கண் பாய்ந்து விளையாட்டயர்ந்து நின்றாள் ஒருத்தியை யாம் எம் கண் கூடாகக் கண்டேம் அல்லமோ, அங்ஙனமாகவும் நீ எம்மை மருட்டல் எற்றுக்கு? முண்டகம் - கடல் முள்ளிச்செடி. கோதை - மலர்மாலை.

மெய்ப்பாடு - இளிவரல்; பயன் - ஊடல் தீர்த்தல். 121

122. கண்டகும் அல்லமோ கொண்கநின் கேளே
ஒள்ளிழை உயர்மணல் வீழ்ந்தென
வெள்ளாங் குருகை வினவு வோளே.

தலைவனே! உயர்ந்த மணற் பரப்பில் தன்னுடைய அணிகலன் வீழ்ந்ததாக, ஆங்கிருந்த வெள்ளாங்குருகை நோக்கி அவ்வணிகலனை நீ பார்த்தாயோ என்று வினவும் நின் காதலி ஒருத்தியை யாங்கள் கண்கூடாகக் கண்டோமல்லமோ?

மெய்ப்பாடு - வெகுளி; பயன் - வாயில் மறுத்தல். (செய்யுட்கள் 122 - 130) 122

Koviloor Digital Library

123. கண்டிகும் அல்லமோ கொண்கநின் கேளே
ஒண்ணுதல் ஆயம் ஆர்ப்பத்
தண்ணென் பெருங்கடல் திரைபாய் வோளே.

தலைவ! ஒளியுடைய நெற்றியுடைய தோழியர்கூட்டம் ஆரவாரிக்கும்படி குளிர்ந்த பெரிய கடலினது அலையின்கண் பாய்ந்தாளாகிய நின் காதலி ஒருத்தியை யாங்கள் கண்கூடாகக் கண்டோம் அல்லமோ. ஆதலால் எங்களை மருட்டற்க. அவள் மனைக்கே செல்க. 123

124. கண்டிகும் அல்லமோ கொண்கநின் கேளே
வண்டற் பாவை வௌவலின்
நுண்பொடி அளைஇக் கடல்தூர்ப் போளே.

தலைவ! கடல் தனது விளையாட்டுப் பாவையைத் தன் அலைக் கையாலே கவர்ந்து கொண்டமையால் சினந்து நுண்ணிய மணலை வாரி வீசி அக்கடலைத் தூர்ப்பதற்கு முயல்வளாகிய நின் காதலியை யாம் கண்கூடாகக் கண்டோம் அல்லமோ. 124

125. கண்டிகும் அல்லமோ கொண்கநின்
தெண்டிரை பாவை வௌவ
உண்கண் சிவப்ப அழுதுநின் றோளே.

தலைவ! தனது விளையாட்டுப் பாவையைக் கடலினது தெளிந்த அலை கவர்ந்து கோடலால் தமது மையுண்ட கண்கள் சிவக்கும்படி அக்கடல் மருங்கில் அழுதுகொண்டு நின்றவளாகிய நின் பெண் டொருத்தியை யாம் கண்கூடாகக் கண்டோம் அல்லமோ? 125

126. கண்டிகும் அல்லமோ கொண்கநின் கேளே
யுண்கண் வண்டினம் மொய்ப்பத்
தெண்கடற் பெருந்திரை மூழ்கு வோளே.

தலைவ! தன் மையுண்ட கண்களைக் கருங்குவளை மலரெனக் கருதி வண்டினம் மொய்த்தலால் அவற்றைக் கடிதற் பொருட்டுத் தெளிந்த

Koviloor Digital Library

கடலின்கண் வரும் பெரிய அலைகளினூடே மூழ்கியவளாகிய நின் பெண்டொருத்தியை யாம் கண்கூடாகக் கண்டோம் அல்லமோ? அவள் பேதைப்பருவத்தாள் 126

127. கண்டிகும் அல்லமோ கொண்கநின் கேளே
துய்ம்பை மாலை இளமுலை
நுண்பூண் ஆகம் விலங்கு வோளே.

தலைவ! பொய் கூறாதே கொள் தும்பை மாலை துயல் வரும் தனது இளைய முலையின்கண் நினது நுண்ணிய தொழிற் பாடமைந்த அணிகலனையுடைய மார்பு தோயாதவாறு நின்னோடு ஊடி விலகிச் சென்றவளாகிய நின் காதலி ஒருத்தியை யாம் கண்கூடாகக் கண்டிருப்போம் அல்லமோ? ஆதலால் அவள் மனைக்கே செல்க. 127

128. கண்டிகும் அல்லமோ கொண்கநின் கேளே
உறாஅ வறுமுலை மடாஅ
உண்ணாப் பாவையை ஊட்டு வோளே.

தலைவ! பால் சுரத்தலைப் பொருந்தாத வறிய தன் முலையைப் பாவையின் வாயில் வைத்து உண்ணும் இயல்பில்லாத பாவையை பாலூட்டுபவளாகிய நின் காதலியை யான் கண்கூடாகக் கண்டிருப்பேம் அல்லமோ? 128

129 } கிடைக்காத பாடல்கள்.
130 }

- கிழவற்கு உரைத்த பத்து முற்றிற்று -

Koviloor Digital Library

14. பாணற்கு உரைத்த பத்து

பாணன் + கு = பாணற்கு

அஃதாவது பாணனுக்குக் கூறுவனவாகவே அமைந்த பத்துச் செய்யுளின் தொகுதி யென்றவாறு.

131. நன்றே பாண கொண்கனது நட்பே
தில்லை வேலி இவ்வூர்க்
கல்லென் கௌவை எழாஅக் காலே.

பாண்மகனே! தில்லை மரத்தாலாய வேலியையுடைய இந்த நெய்தல் நிலத்து பாக்கத்தில் யாண்டும் கல்லென்னும் ஒலியையுடைய பழிமொழி பிறவாதாயின் தலைவனுடைய அன்பு நீ கூறியாங்கு மிகவும் நன்மையுடையது என்று கருதக் கூடும். கௌவை - அலர்.

வாயில் வேண்டி வந்த பாணன் தலைமகன் அன்பைக் கூறினானாகத் தலைமகள் வாயில் மறுப்பாள் அவற்குக் கூறியது.

மெய்ப்பாடு - இளிவரல்; பயன் - வாயில் மறுத்தல். (செய்யுள் *131, 132*) 131

132. அம்ம வாழி பாண புன்னை
அரும்புமலி கானல் இவ்வூர்
அலரா கின்றுஅவர் அருளு மாறே.

பாண் மகனே! உண்மையே காண்! நீ கூறியாங்கு அவர் என்னை அளிசெய்தலான் அன்றே புன்னை மரங்களில் ஒரு சேர அரும்பு மிகுதற்கு இடனான இந்தப் பாக்கத்தின்கண் யாண்டும் பழிமொழி பரவா நின்றது. அம்ம - ஒன்று சொல்வேன் கேள். வாழி இடைச்சொல் அறிவிலியே எற்றுக்குவினே பொய்யுரை கூறுகின்றனை வாளா போயொழிக! என்பது குறிப்பெச்சம். 132

Koviloor Digital Library

133. யானெவன் செய்கோ பாண ஆனாது
மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்
புல்லென் றனஎன் புரிவளைத் தோளே.

பாணனே! நெய்தல் நிலத்தலைவன் சிறிது பொழுதேயாயினும் என்னைப் பிரிந்த அளவில் அளியேனாகிய என் வளையணிந்த இத்தோள்கள் அப்பிரிவிற்கும் உடம்படாமல் பெரிதும் மெலிந்து பொலிவிழந்தன. இங்ஙனமாகலின் யான் என் செய்வேன்? ஆனாது அமையாமல்; உடம்படாமல். மெல்லம்புலம்பு - நெய்தல்.

மெய்ப்பாடு - அழுகை; பயன் - ஆற்றாமை கூறுதல். 133

134. காண்மதி பாண இருங்கழிப் பாய்பரி
நெடுந்தேர்க் கொண்க னோடு
தான்வந் தன்றுஎன் மாமைக் கவினே.

என் மேற் குறைகூறித் திரிகின்ற பாண்மகனே! நெய்தல் நிலத்தில் பாய்ந்தோடும் குதிரை பூட்டிய பெரிய தேரையுடைய தலைவனோடு என்னைப் பிரிந்துபோன என்னுடைய மாமையாகிய அழகு அவன் வரத் தானும் மீண்டும் வந்தெய்தியதனை நீயே உணர்க. என் மேற் பழி சுமத்துவதனால் யாது பயன்? மதி முன்னிலை அசை.

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - தன்னியல்பு உணர்த்துதல். 134

135. பைதலம் அல்லேம் பாண பணைத்தோள்
ஐதுஅமைந்து அகன்ற அல்குல்
நெய்தலம் கண்ணியை நேர்தல்நாம் பெறினே.

பாணனே! யாம் மூங்கிலை ஒத்த தோளையும் மென்மையான அல்குலையும் நெய்தல் மலர்போன்ற அழகிய கண்களையும் உடைய அந்தப் பரத்தை மகட்கு ஒப்பாதலைப் பெறுவேமாயின் துன்பமடைய மாட்டோம். அவட்கு ஒப்பாகாத யாம் துன்புறாது என் செய்கோம். மகள் + கு = மகட்கு; அவள் + கு = அவட்கு. பைதல் - துன்பம். ஐது - மெல்லிது. நேர்தல் - ஒப்பாதல்.

Koviloor Digital Library

மெய்ப்பாடு - சினம்; பயன் - தலைவன் பரத்தமையைத் தான் அறிந்தமை உணர்த்தி ஊடுதல். 135

136. நாணிலை மன்ற பாண நீயே
கோண்ஏர் இலங்குவளை நெகிழ்த்த
கானலம் துறைவற்குச் சொல்உகுப் போயே

பாணனே! எம் வளைந்த அழகிய ஒளிவளையல்கள் நெகிழும்படி எம்மைப் பிரிந்து சென்ற சோலையையுடைய அழகிய கடல் துறைவன் பொருட்டு நன்மொழிகளை வீணே பிதற்றுகின்றவனாகிய நீ தேற்றமாக நாணம் இல்லாதவனே என்பதில் ஐயமில்லை. உன் பேச்சை நிறுத்தி எழுந்து போ என்றாளாயிற்று.

மெய்ப்பாடு - வெகுளி; பயன் - வாயில் மறுத்தல். 136

137. நின்னொன்று வினவுவல் பாண நும்மூர்த்
திண்தேர்க் கொண்கனை நயந்தோர்
பண்டைத் தந்நலம் பெறுபவோ மற்றே.

பாண! உன்னை யானொன்று கேட்கின்றேன். நீயே அதற்கு விடை தருதி உங்களூர்த் தலைவனாகிய திண்தேர் கொண்கனை விரும்பிய மகளிரும் தம்முடைய பழைய அழகினை மீண்டும் பெறுவார்களோ.

மெய்ப்பாடு - அழுகை; பயன் - தலைவன் ஒழுக்கம் திருந்தவில்லை என்பதனைப் பாணனுக்கு உணர்த்துதல். 137

138. பண்பிலை மன்ற பாண இவ்வூர்
அன்பில கடிய கழறி
மென்புலக் கொண்கனைத் தாரா தோயே.

பாணனே! நெய்தல் நிலத் தலைவனை அன்பொடு பொருந்தாதனவும் சுடுவனவுமாகிய மொழிகளைக் கூறி இடித்துரைத்து பரத்தையர் சேரியினின்றும் அழைத்து வந்து இவ்வில்லத்தே சேர்த்தல் செய்யாத நீ அவனுடைய குற்றம் மறைத்துக் குணங்கூறிப் பொய்ம்மொழி கூறி எம்மை

Koviloor Digital Library

மருட்டலாலே ஒரு சிறிதும் நற்குணம் உடையை யல்லை என்பது தேற்றம்.

மெய்ப்பாடு - நகை; பயன் இகழ்தல். 138

139. அம்ம வாழி கொண்க! எம்வயின்
மாண்நலம் மருட்டும் நின்னினும்
பாணன் நல்லோர் நலம்சிதைக் கும்மே

பெருமானே! கேட்டருள்க எமது அழகினைச் சிதைவித்துப் பின்னர் எம்பால் அமைந்துள்ள அழகினைப் பாராட்டும் வாயிலாய் எம்மை மயக்குகின்ற பொய்ம்மாயக் கள்வனாகிய நின்னைக் காட்டிலும் நின் பாணன் மிகுதியாக மகளிரின் அழகைச் சிதைக்க வல்லான் காண் என்பதாம். ஆற்றாமை வாயிலாகப் புகுந்திருந்த தலைமகற்குப் பாணன் வந்துழி தலைமகள் சொல்லியது.

மெய்ப்பாடு - இளிவரல்; பயன் - கொடுமை கூறுதல். 139

140. காண்மதி பாணநீ யுரைத்தற் குரியை
துறைகெழு கொண்கன் பிரிந்தென
விறைகேழ் எல்வளை நீங்கிய நிலையே.

பாணன் தூதாகிச் செல்ல வேண்டும் குறிப்பினளாகிய தலைமகள் அவற்குத் தன் மெலிவு காட்டிச் சொல்லியது.

பாண்மகனே! நீ என் நிலையைத் தலைவன்பால் சென்று உணர்த்தும் கடப்பாடும் உடையை ஆகலான் கடல் துறைத்தலைவன் என்னைத் தனித்திருப்ப விட்டுப் பிரிந்தபோதே என்முன் கைக்குப் பொருந்திக் கிடந்த ஒளி வளையல்கள் கழன்று விழுந்துவிட்ட என் துயர் நிலையை நீயே காண்பாயாக; விரைந்து போய் என் இன்னா நிலையைக் கொண்கனுக்குக் கூறுதி. இறை - முன்கை. எல் - ஒளி.

மெய்ப்பாடு - அழுகை; பயன் - தூதுவிடுதல். 140

- பாணற்கு உரைத்த பத்து முற்றிற்று -

Koviloor Digital Library

15. ஞாழற் பத்து

நெய்தல் கருப் பொருளுள் ஒன்றாகிய ஞாழல் மரம் ஒவ்வொரு செய்யுளிலும் பயின்று வந்த பத்துச் செய்யுளின் தொகுதி. ஞாழல் - குங்கும மரம்; புலிநகக் கொன்றை.

141. எக்கர் ஞாழல் செருந்தியொடு கமழத்
துவலைத் தண்துளி வீசிப்
பயலை செய்தன பனிபடு துறையே.

தோழி! குளிர்ச்சியைத் தருகின்ற நம் தண்கடல் துறைகள் தம் பக்கத்திலுள்ள மணற்பரப்புக்கள் ஞாழல் மலர்களின் மணமும் செருந்தி மலரின் நறுமணமும் கமழா நிற்க, துவலையாகிய நீர்த்துளிகளை என்மேல் வீசி எனக்கு இந்த பசலை நோயை உண்டாக்கின காண் இவை இங்ஙனம் செய்யாவெனின் யான் ஆற்றியிருப்பேன்.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - ஆற்றாமைக்குக் காரணங் காட்டல். பசலை - அழகுதேமல்; காமநிற வேறுபாடு. 141

142. எக்கர் ஞாழல் இறங்குஇணர்ப் படுசினைப்
புள்இறை கூரும் துறைவனை
உள்ளேன் தோழி படீஇயர்என் கண்ணே.

தோழியே கேள் மணற் பரப்பின் மேல் நின்ற ஞாழல் மரத்தினது தாழ்ந்த பூங்கொத்துக்கள் மலர்ந்த கிளையின் மேல் பறவைகள் நெடும் பொழுது தங்கியிருத்தற்குக் காரணமான கடல் துறைவனை இனி யான் நின் அறிவுரைப்படி நினையாதிருக்க முயல்வேன். என்னுடைய கண்கள் உறங்குக.

மெய்ப்பாடு - அழுகை; பயன் வரைவு கடாதல். 142

Koviloor Digital Library

143. எக்கர் ஞாழல் புள்ளிமிழ் அகன்துறை
இனிய செய்த நின்றுபின்
முனிவு செய்தஇவள் தடமென் தோளே.

பெருமானே! தலைவியின் பெரிய மெல்லிய தோள்கள் பண்டு களவுக் காலத்து யாம் அரியேமாயிருந்த பொழுது மணற்பரப்பில் ஞாழல் மரத்தின் மிசையிருந்து கடற் பறவைகள் ஆரவாரிக்கும் அகன்ற துறையின்கண் நினக்குப் பேரின்பமாயவற்றைச் செய்தன . யாங்கள் எளியமாகிவிட்ட பிற்காலமாகிய இக்கற்புக் காலத்தில் நினக்குப் பெரிதும் வெறுப்புத் தருவனவாக ஆகிவிட்டன . இஃதொரு வியப்பன்றோ இது தோழி கூற்று.

மெய்ப்பாடு - அழுகை; பயன் - தலைவனைக் கழறுதல். 143

144. எக்கர் ஞாழல் இணர்படு பொதும்பர்த்
தனிக்குருகு உறங்கும் துறைவற்கு
இனிப்பசந் தன்றுஎன் மாமைக் கவினே.

தோழி! மணற் பரப்பில் நிற்கும் ஞாழல் மரத்தின் பூங்கொத்துக்கள் தோன்றிய பொழிலின்கண் பெடையைப் பிரிந்து தனிமையுற்ற நாரை வருத்தமின்றி உறங்குதற்கிடமான கடல்துறைவன் பொருட்டு என் மாமையாகிய அழகு பசலை பாய்ந்து சிதைகின்றது . நீ வாய் வாளா இருந்திடுக காலம் வந்த விடத்தும் வரைந்து கொண்டு ஒன்றுபட்டொழுக நினையாது தனித்துறைதலே விரும்புவான் என்றவாறு.

மெய்ப்பாடு - வெகுளி; பயன் - தலைவன் கொடுமை யுணர்த்துதல். 144

145. எக்கர் ஞாழல் சிறியிலைப் பெருஞ்சினை
ஓதம் வாங்கும் துறைவன்
மாயோள் பசலை நீக்கினன் இனியே.

Koviloor Digital Library

மணற் பரப்பின் மேல் நிற்கின்ற ஞாழல் மரத்தினது பெரிய கிளையை கடலின் அலைகள் வளைத்தற்கிடனான கடல்துறைத் தலைவன் இப்போது மாமை நிறமுடைய எம் பெருமாட்டியின் பசலை நோயை ஒருதலையாகத் தீர்த்தருளினன் ஞாழற் சினையை ஓதம் வளைக்கும் துறைவன் என்றது தன்வழி வாராத சுற்றத்தாரைத் தன்வழி ஆக்குகின்றான் என்பதாம் (மகட் கொடை நேர்தற்கு உடன்பட்டனர்)

மெய்ப்பாடு - உவகை. பயன் - ஆற்றுவித்தல். 145

146. எக்கர் ஞாழல் அரும்புமுதிர் அவிழிணர்
நறிய கமழும் துறைவற்கு
இனிய மன்றஎன் மாமைக் கவினே.

தோழி! மணற் பரப்பில் நிற்கும் ஞாழல் மரங்களில் அரும்பு முறையாக முதிர்ந்து மலர்ந்த பூங்கொத்துக்கள் மணம் கமழ்கின்ற கடல் துறைவன் திறத்தில் என் மாமையாகிய அழகுகள் தேற்றமாகத் திகழ்கின்றன. அரும்பு முதிர் - துறைவன் என்றது அவன் அன்பு, முறையால் நிரம்பி வெளிப்பட்ட திறம் கூறியவாறு.

மெய்ப்பாடு - உவகை. பயன் - மகிழ்ச்சியைத் தோழியோடு கூட்டுண்டல். 146

147. எக்கர் ஞாழல் மலரின் மகளிர்
ஒள்தழை அயரும் துறைவன்
தண்தழை விலையென நல்கினன் நாடே

தோழி! மணற் பரப்பில் நிற்கும் ஞாழல் மரங்களில் மலர்கள் இல்லாமையால் அவை கிடைக்கப்பெறாத மகளிர் அவற்றின் ஒள்ளிய தழையைப் பறித்து ஆடையாகப் புனைந்து கொண்டு விளையாட்டயர்தற்கு இடனான கடல் துறைவன் நினக்கு முலை விலைப் பொருளாக நாட்டினை வழங்கினன் ஆதலால் இனி நமர்

Koviloor Digital Library

மகட்கொடை நேர்தல் ஒருதலை. தலைவியைத் தோழி என்று விளிப்பது நெருக்கம் பற்றி தழை விலையை இக்காலத்தவர் பரிசம் என்பர்.

மெய்ப்பாடு - உவகை; பயன் - தலைவியைத் துயர்தீர்த்து மகிழ்வித்தல். 147

148. எக்கர் ஞாழல் இகந்துபடு பெருஞ்சினை
வீஇனிது கமழும் துறைவனை
நீயினிது முயங்குதி காத லோயே

காதலோயே (பெருமாட்டியே) மணற்பரப்பில் நிற்கும் ஞாழல் மரத்தில் ஓங்கி உயர்ந்த கிளையின்கண் பூத்த மலர் ஏனை மலர்களைக் காட்டிலும் மணங்கமழ்தலையுடைய நம் துறைவனை நீ இனி நின் மனம் போல இனிதே தழுவிக் கொள்க. தலைமகளைப் பள்ளியிடத்து உய்க்கும் தோழி சொல்லியது.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - மகிழ்ச்சி. 148

149. எக்கர் ஞாழல் பூவின் அன்ன
சுணங்குவளர் இளமுலை மடந்தைக்கு
அணங்குவளர்த்து அகறல் வல்லா தீமோ.

வரைந்தெய்திய தலைமகன் தலைவியோடு பள்ளியிடத்து இருந்துழித் தோழி வாழ்த்தியது. பெருமானே! மணற்பரப்பில் நிற்கும் ஞாழல் மரத்தினது பொன்னிறப் பூப் போலும் நிறமுடைய தேமல்படரும் இளமையுடைய முலையையும் மடப்பத்தையும் உடைய தலைவியோடு கவவுக்கை நெகிழாது கூடிக் களித்திருந்து அவளது பெண்மை அழகினைப் பெருகச் செய்து அவளை என்ஞான்றும் பிரியாது நீடு வாழ்க.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் வாழ்த்துதல். 149

150. எக்கர் ஞாழல் நறுமலர்ப் பெருஞ்சினைப்
புணரி திளைக்கும் துறைவன்
புணர்வின் இன்னான் அரும்புணர் வினனே.

Koviloor Digital Library

மணற் பரப்பின் மேல்நின்ற ஞாழல் மரத்தின் பெரிய கிளையைக் கடல் தன் அலைகளால் தழுவிக்கொள்ளும் கடல் துறைவன் நம்மோடு கூடியிருக்கும் காலத்தும் நமக்கு இன்னாமையைச் செய்கின்றான். மேலும் எப்போதாவது அரிதாக வந்து நம்மைக் கூடுவானாகவும் இருக்கின்றான்.. ஆதலால் இவனோடு கூடிக் களித்தலினும் கூடாமையே சால்புடையது.

மெய்ப்பாடு - வெகுளி; பயன் - ஊடல். 150

- ஞாழல் பத்து முற்றிற்று -

Koviloor Digital Library

16. வெள்ளாங் குருகுப் பத்து

'வெள்ளாங்குருகு' எனவே தொடங்கும் பத்துச் செய்யுளின் தொகுதி என்றவாறு. வெள்ளாங் குருகு - நெய்தல் நிலப்பறவை.

151. வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
மிதிப்ப நக்க கண்போல் நெய்தல்
கள்கமழ்ந்து ஆனாத் துறைவற்கு
நெக்க நெஞ்சம் நேர்கல் லேனே.

தோழி! வெள்ளைக் கொக்கினுடைய பார்ப்பு இறந்துபட்டதாக அதன் பொருட்டு அக் கொக்கைக் காண்டற்குச் சென்ற மெல்லிய நடையுடைய நாரை மிதித்தலாலே சிதைவுற்று மலர்ந்த மகளிர் கண்ணை நிகர்த்த நெய்தற் பூக்கள் தம் அகத்துள்ள தேன் மணத்தைக் கமழ்வித்தலை ஒழியாத கடல் துறையினையுடைய தலைவன் பொருட்டு நெகிழ்ந்த நெஞ்சத்தால் வாயில் நேர்தற்கு யான் உடன்படேன் காண். இது தலைவி கூற்று.

மெய்ப்பாடு - வெகுளி; பயன் - வாயில் மறுத்தல். அவன் வாராத பொழுது நெகிழுமாயினும் அவன் செய்யும் கொடுமையை நினைந்து அந்நெஞ்சம் அவனை ஏற்க மறுக்கிறது என்றவாறு. 151

152. வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
கையறுபு இரற்றும் கானலம் புலம்பம்
துறைவன் வரையும் என்ப
அறவன் போலும் அருளுமார் அதுவே

தோழி! வெள்ளாங்குருகைக் காணச் சென்ற நாரை தன் மருட்கையால் செயலற்று ஆரவாரிக்கும் நெய்தல் நிலத் தலைவன்

Koviloor Digital Library

பரத்தை மகள் ஒருத்தியை மணந்து கொள்வன் என்று உரைக்கின்றனர். நீ அவனை அறவோன் என்றும் அருளுடையோன் என்றும் சொல்கின்றனை. இதுதான் அவன் நம் பக்கல் செய்யும் அருளோ?

புலம்பு + அம் + துறை - உப்பளம். இங்ஙனம் கூறவே அவன் பொருட்டு நீ சிறிதும் முயல வேண்டா என்றாளாயிற்று.

மெய்ப்பாடும் பயனும் அவை. 152

153. வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
உளர ஒழிந்த தூவி குலவுமணல்
போர்வின் பெறூஉம் துறைவன் கேண்மை
நன்னெடுங் கூந்தல் நாடுமோ மற்றே.

பாண்மகனே! வெள்ளாங்குருகைக் காணச் சென்ற நாரை தனது சிறகிலிருந்து உதிர்ந்து இறகினை மணற் குன்றின்மேல் கண்டெடுத்துக் கோடற்கு இடமான துறைவனுடைய கேண்மையை நல்ல கூந்தலையுடைய தலைவி நாடுதற்கு விரும்புவளோ? விரும்பாள். நீ நின் வழியே செல்க.

மெய்ப்பாடு - வெகுளி. பயன் - வாயில் மறுத்தல். 153

154. வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
கானற் சேக்கும் துறைவனோடு
யானெவன் செய்கோ பொய்க்கும் இவ்வூரே.

தோழி வாயில் வேண்டி நெருங்கியவழி வாயில் மறுக்கும் தலைமகள் சொல்லியது.

தோழி! வெள்ளாங் குருகைக் காணச் சென்ற நாரை அக்கடற்கானலிலேயே தங்காநின்ற துறைவனோடு கூடி நான் என்ன அறத்தைச் செய்வேன். அவன் கொடுமையை நன்குணர்ந்தும் இந்த

Koviloor Digital Library

ஊரில் உள்ளவர்கள் அவன் திறத்தில் பொய்யே பேசத் தலைப்பட்டு விட்டனர். இதன்கண் காணிய சென்ற நாரை கானற் சேக்கும் என்றது, பரத்தையர் சேரிக்குச் செல்லும் தலைவன் ஆண்டே தங்கிவிடுகின்றான் என்பதே உள்ளுறை.

மெய்ப்பாடு - வெகுளி. பயன் - மறுத்தல். 154

155. வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
பதைப்பத் ததைந்த நெய்தல் கழிய
ஓதமொடு பெயரும் துறைவற்குப்
பைஞ்சாய்ப் பாவை ஈன்றனென் யானே.

தோழி! வெள்ளாங்குருகைக் காணச் சென்ற நாரை மனம் பதைத்துத் துடித்தலாலே சிதறுண்ட நெய்தல் மலர் கழியின் அலைகளோடு மிதந்து போதற்கு இடனான கடல்துறைவனுக்கு யான் முன்னரே பைஞ்சாய்ப் பாவையாகிய நன்மகவைப் பெற்றிருக்கின்றேன். அம்மகப்பேறே அமையும். நீ செல்க. ஓதம் - கடற்பெருக்கு. பைஞ்சாய்ப் பாவை - தண்டான் கோரையால் செய்த ஒரு விளையாட்டுப் பொம்மை - இந்தப் பாவையை பேதைப் பருவத்து மகளிர் மகவாகக் கொண்டு வைத்து விளையாடுவர்.

மெய்ப்பாடு - இளிவரல். பயன் - வாயில் நேர்தல். 155

156. வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
பதைப்ப ஒழிந்த செம்மறுத் தூவி
தெள்கழிப் பரக்கும் துறைவன்
எனக்கோ காதலன் அனைக்கோ வேறே.

பாண் மகனே! வெள்ளைக் கொக்கைக் காணச் சென்ற நாரை அதன் துயர் நிலைக்கண்டு அதன் இறகுகள் கழியிடத்தே யாண்டும் வீழ்ந்து பரவிக் கிடக்கும் துறைவன் மிக்க காதலுடையவன் என்று பாராட்டுகின்றாய். அவ்வாறு அவன் காதல் கொண்டிருப்பது எங்களிடமோ பரத்தை மகளிரிடமோ அறிகிலேன். யாரிடத்து? நீயே கூறுதி.

Koviloor Digital Library

மெய்ப்பாடு - நகை; பயன் - வாயில் மறுத்தல். 156

157. வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
காலை யிருந்து மாலைச் சேக்கும்
தெண்கடல் சேர்ப்பனொடு வாரான்
தான்வந் தனன்எம் காத லோனே.

வெள்ளைக் கொக்கைக் காணவந்த நாரை காலையிலிருந்து அக்கொக்கோடு இருந்தும் அமையாது இரவிலும் அங்கேயே உறைதற்கிடனான நெய்தல் நிலத் தலைவனாகிய தன் தந்தையோடு வாராமல் தானே தமியனாய் வந்தனன். அது எதனால் என்றால் அவன் என்பால் மெய்யன்புடையவன். தலைவன் தெருவில் விளையாடும் புதல்வனைத் தழுவி எடுத்துக் கொண்டு மலர்ந்த முகத்தோடு இல்லம் புகுந்தால் ஊடியிருக்கும் தலைவி மீண்டும் ஊடலோடிருத்தல் இயலாமை நினைக;

மெய்ப்பாடு - இளிவரல்; பயன் - தலைவன் கொடுமையை வாயில்கட்கு உணர்த்துதல்.

காதலன் - புதல்வன். 157

158. வெள்ளாங் குருகின் புதல்வன் செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
கானலம் பெருந்துறைத் துணையொடு கொட்கும்
தண்ணந் துறைவன் கண்டிகும்
அம்மா மேனிஎம் தோழியது துயரே.

வெள்ளைக் கொக்கின் பார்ப்பு இறந்துபட்டதாக அதைக் காணச் சென்ற நாரை மீண்டு வந்து கடல் துறையில் தனது பெடையோடு சுற்றித் திரிதற்கிடனான கடல் துறைவனே! நின் காமக் கிழத்தியின் ஊடல் மிகப் பெரிதாகலின் அதனையே சென்று கண்டருள்க.

எம் துயர் ஒரு பொருட்டில்லை காண்.

மெய்ப்பாடு - சினம்; பயன் - மறுத்தல். 158

Koviloor Digital Library

159. வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
பசிதின அல்கும் பனிநீர்ச் சேர்ப்ப
நின்ஒன்று இரக்குவன் அல்லேன்
தந்தனை சென்மோ கொண்டஇவள் நலனே!

வெள்ளைக் கொக்கைக் காண வந்த நாரை தனது பசி தன்னை நலியவும் அதைப் பொருட்படுத்தாமல் அங்கேயே தங்குதற்குக் காரணமான குளிர்ந்த நீர்த்துறைவனே! நான் இப்போது நின்னை இரக்கின்றேன் ஆயினும் உன் பொருளை இரக்கமாட்டேன். யான் இரப்பது யாதெனின் நீ இவளிடமிருந்து கவர்ந்த இவளது பெண்மை நலத்தினையேயாம். நீ அதனை வழங்கிவிட்டுப் போவாயாக! இன்றேல் இவள் இறந்துபடுதல் உறுதி. மறாமற் பொருட்டு உண்டிக் காலத்து வாயில் வேண்டிவந்த தலைமகற்குத் தோழி கூறியது.

மெய்ப்பாடும் பயனும் அவை. 159

160. வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
நொந்ததன் தலையும் நோய்மிகும் துறைவ
பண்டையின் மிகப்பெரிது இனைஇ
முயங்குமதி பெரும மயங்கினள் பெரிதே.

வெள்ளைக் கொக்கின் பார்ப்பு இறந்துபட்டதாக, அக்கொக்கினைக் கண்டு துக்கம் விசாரிக்கச் சென்ற மென்னடை நாரை அந்த இறப்புக்கு வருந்தியதன் மேலும் அக்கொக்கின் துயர்கண்டு பெரிதும் மிகுதற்கு இடனான கடல் துறைவனே! நின் காமக்கிழத்தி பெரிதும் மயங்குகின்றாள். அவளைக் கைவிட்டு நீ ஈண்டுவருதல் நேரிதன்று. பெரும! ஆதலால் நீ அவள் மனைக்கே சென்று அவளைத் தழுவித் தேற்றுவாயாக. மதி - முன்னிலை அசை.

மெய்ப்பாடு - வெகுளி; பயன் - மறுத்தல். 160

- வெள்ளாங்குருகுப் பத்து முற்றிற்று -

Koviloor Digital Library

17. சிறுவெண் காக்கைப் பத்து

அஃதாவது, சிறுவெண் காக்கை என்னும் நெய்தற் கருப் பொருளே ஒவ்வொரு செய்யுளிலும் விரவி வந்த பத்துச் செய்யுளின் தொகை என்றவாறு. சிறுவெண் காக்கை - நீர்க்காக்கை.

161. பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
கருங்கோட்டுப் புன்னைத் தங்கும் துறைவற்குப்
பயந்துநுதல் அழியச் சாஅய்
நயந்த நெஞ்சம் நோய்ப்பா லஃதே.

தோழி! பெரிய கடற்கரையின் கண் வாழும் சிறிதே வெளிதாகிய கடற்காக்கை கரிய கிளையினையுடைய புன்னை மரத்தின் மிசை மடிந்து உறைதற்கிடனான கடல் துறைவன் பொருட்டு பசலை பாய்ந்து நெற்றியின் ஒளி மழுங்க மெலிந்து அவனை விரும்பிய நெஞ்சமோ இடையறாத துன்பத்தின்கண் வீழ்வதாயிற்றுக் காண். இக்காக்கைக்குக் கழுத்தின்கீழ் சிறிது வெளுத்திருக்கும். சாஅய் மெலிந்து.

கடற்காக்கை தனக்குரிய இரைதேர்தல் ஒழிந்து புன்னைக் கோட்டில் சோம்பி இருத்தல் போன்று நம் தலைவனும் வரைதற்கு ஆவன முயலாது வாளா தன் மனைக்கண் தங்கினான் என்பது உள்ளுறை.

மெய்ப்பாடு - அழுகை; பயன் - ஆற்றாமைக்குக் காரணம் உணர்த்துதல்.

162. பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
நீத்துநீர் இருங்கழி இரைதேர்ந்து உண்டு
பூக்கமழ் பொதும்பர்ச் சேக்கும்
துறைவன் சொல்லோ பிறவா யினவே

Koviloor Digital Library

தோழி! சிறுவெண் காக்கை கரிய நீர்க்கழியின் கண்ணே தனக்குரிய இரையை ஆராய்ந்து தின்ற பின்னர் மலர் மணம் கமழ்கின்ற சோலையின்கண் கவலையின்றித் தங்குதற்கிடமான கடல் துறைவனுடைய மொழிகளோ பொய்யாயின அவற்றைக் கருதின் யான் ஆற்றியிருத்தலுங் கூடுமோ? தலைவன் வரைவிற்கு வேண்டுவன முயலாது தன் கருமம் செய்து மனைக் கண்ணே தங்குவான் என்றவாறு.

மெய்ப்பாடும் பயனும் அவை. 162

163. பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
இருங்கழித் துவலை ஒலியில் துஞ்சும்
துறைவன் துறந்தெனத் துறந்துஎன்
இறையோர் முன்கை நீங்கிய வளையே.

தோழி! பெரிய கடற்கரையில் வாழும் கடற்காக்கை பெரிய கழியில் எழும் நீர்த் துவலையோடு கூடிய பேரொலியைப் பொருளாக மதியாமல் இனிதாக உறங்குவதற்கு இடனான துறைவன் வன்கண்ணனாகி நம்மைப் பிரிந்த போதே யான் செறித்திருந்த என் வளையல்கள் என் முன் கையினின்றும் தாமே கழன்று விழுந்துவிட்டன காண். இங்ஙனமாயின் யான் ஆற்றியிருத்தல் எங்ஙனம்? காக்கை இனிதே உறங்குமாறுபோல நம் தலைவனும் இவ்வூரவர் கூறும் அம்பலும் அலரும் பொருளென மதியாமல் தன் மனைக்கண்ணே கவலையின்றி உறங்குகின்றான் என்னும் உள்ளுறை உடையது.

மெய்ப்பாடும் ப்யனும் அவை. 163

164. இருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
இருங்கழி மருங்கின் அயிரை ஆரும்
தண்ணந் துறைவன் தகுதி
நம்மோடு அமையாது அலர்பயந் தன்றே.

தோழி! கடற்காக்கை கரிய கழியில் எளிய அயிரை மீனை இரையாகத் தேர்ந்து உண்டற்கு இடனான குளிர்ந்த கடல் துறையையுடைய தலைவனது ஒழுக்கமுறைமை நம்மைப் பெரிதும் வருத்துவதோடு அமையாமல் அவனுக்கும் பழியை யுண்டாக்கிவிட்டது.

மெய்ப்பாடு - இளிவரல்; பயன் - காய்தல். 164

Koviloor Digital Library

165. பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
அறுகழிச் சிறுமீன் ஆர மாந்தும்
துறைவன் சொல்லிய சொல்என்
இறையேர் எல்வளை கொண்டுநின் றதுவே.

தோழி! கடற்கரையில் வாழும் கடற்காக்கை நீரற்ற கழியில் உள்ள சிறிய மீன்களையே தன் வயிறாரத் தின்றற்கிடனான கடல் துறையையுடைய நம் தலைவன் பண்டு களவுக்காலத்தில் சொல்லிய சொல்லை நினைந்து மெலிகின்றேன். ஆகவே என் முன்கையிற் கிடந்த வளையல்களைக் கொண்டது பிறிது யாதுமில்லை. அவன் கூறிய சூள் மொழியே காண். சூள் தப்பியோரைத் தெய்வம் ஒறுக்கும் என்பதனால் தலைமகன் சூள் தப்பினமையால் அவன் ஏதம் உறுவானோ என்று அஞ்சுகின்றேன். அவ்வச்சத்தால் உடல் மெலிகின்றது. வளை கழல்கின்றது. இதற்கேயன்றி அவன் பரத்தமைக்கன்று என்பதாம்.

மெய்ப்பாடு - அச்சம்; பயன் தோழிக்குத்தன் ஆற்றாமைக்குக் காரணம் அறிவித்தல். 165

166. பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
வரிவெண் தாலி வலைசெத்து வெரூஉம்
மெல்லம் புலம்பன் தேறி
நல்ல வாயின நல்லோள் கண்ணே.

வரி வெண் தாலி - பலகறை. நல்லவாயின - கண் பசந்தன. கடற்காக்கை அலையால் ஒதுக்கப்பட்ட பல கறைகளைக் கண்டு வலையென்று நினைத்து இரைதேர்தற்கு அஞ்சுதற்கு இடனான நெய் தல் நிலத் தலைவனைத் தெளிந்தமையாலே எம் பெருமாட்டியின் கண்கள் பெரிதும் அழகு இழந்து புற்கென்றன. காக்கை வாளா போனாற் போன்று தலைவனும் நாம் வரைவு வற்புறுத்தும் மொழிகளும் தம்முன் வஞ்சம் பொதிந்தனவோ என்று ஐயுற்று வரைவு நீட்டிப்பான் போலும் என்னும் உள்ளுறையுடையது.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - வரைவுகடாதல். பலகறைகளை வலையின் ஓரங்களில் கட்டுவதுண்டு. 166

Koviloor Digital Library

167. பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
இருங்கழி இனக்கெடிறு ஆரும் துறைவன்
நல்குவன் போலக் கூறி
நல்கான் ஆயினும் தொல்கே ளன்னே.

தோழி! கடற்காக்கை கரிய கழியில் முள்ளுடைய தீய கெடிற்று மீன்களைப் பற்றித் தின்னுதற்கிடனான கடல் துறையையுடைய நம் தலைவன் முன்பு களவுக் காலத்தில் நம்மை என்றும் பிரியாமல் இருந்து, இப்போது கற்புக் காலத்தில் நம்மை அளியானாயினும் அவன் நம்மோடு பலபிறவியிலும் சேர்ந்துவரும் கேண்மையுடையவன் அல்லனோ! ஆதலின் அவனைப் பழித்துரையாதே என்பதாம். கெடிறு - கெளுத்தி மீன். காக்கை கெடிற்று மீனை உண்டாற் போன்று நம்பெருமானும் இம்மையிற் பழியும் மறுமைக்கண் நிரயமும் தருதற் கேதுவான பரத்தையரைத் தேடித் திரிகின்றான் என்பதாம்.

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - அமைதியுறுதல். 167

168. பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
துறைபடி யம்பி அகமனை ஈனும்
தண்ணந் துறைவன் நல்கி
ஒள்நுதல் அரிவை பாலா ரும்மே

அன்னாய்! பெரிய கடலின் கரையில் வாழும் கடற்காக்கை தன் பார்ப்பிற்கு ஏதம் வாராமைப் பொருட்டுக் கடல்துறையில் இயங்காது தங்கிக் கிடக்கும் தோணியின் உட்புறமாகிய வீட்டிடத்தில் தன்முட்டையை இடுதற்கு இடமான, குளிர்ந்த கடல் துறைவன் இவட்குத் தண்ணளி செய்வான் ஆனால் இவள்பால் பருகுவாள். இன்றேல் இறந்துபடுவாள் என்பதாம்.

மெய்ப்பாடு அச்சம்; பயன் - அறத்தொடு நிற்றல்.

நொதுமலர் வரைவு வேண்டி விடுத்தமையறிந்த தலைமகள் ஆற்றாளாய்ப் பசியட நிற்புழி இதற்குக் காரணமென்? என்று செவிலி வினவத் தோழி அறத்தொடு நின்றது. இக் கருத்திற்கு அடுத்த செய்யுள் துணையாதலும் உணர்க. 168

Koviloor Digital Library

169. பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
பொன்னிணர் ஞாழல் முனையிற் பொதியவிழ்
புன்னையம் பூஞ்சினைச் சேக்கும் துறைவன்
நெஞ்சத்து உண்மை யறிந்தும்
என்செயப் பசக்கும் தோழியென் கண்ணே.

தோழி! என்னுடைய இந்தக் கண்கள் பெரிய கடற்கரையில் வாழும் கடற் காக்கை கொன்றை மரத்தின் மிசை உறைதலை வெறுக்குமிடத்தில் அப்பொழுது இதழ் விரிக்கின்ற புன்னை மரத்ினது மலர்க்கிளையில் சென்று உறைதற்கு இடனான கடல் துறையையுடைய நம்பெருமான் எனது நெஞ்சில் நொடிப்பொழுதும் அகலாமல் இருத்தலை நன்கு அறிந்தும் யாது செய்தற்குப் பசலை கொண்டனவோ யான் அறியேன். ஆயினும் அவை பசப்பது எனக்கும் இனிதே காண்.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - வாயின் மறுத்தல். 169

170. பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
இருங்கழி நெய்தல் சிதைக்குந் துறைவன்
நல்லன் என்றி யாயின்
பல்லிதழ் உண்கண் பசத்தல்மற் றெவனோ.

தோழி! பெரிய கடற்கரையில் வாழும் கடற்காக்கை கரிய கழியிடத்தேயுள்ள நெய்தல் பூக்களைச் சிதைத்தற்கிடமான கடல் துறையையுடைய தலைவன் பெரிதும் நன்றுடையான் என்று நீ பாராட்டுகின்றனை. அப்பாராட்டு உண்மையாயின் மலரன்ன என் கண்கள் பசத்தற்குக் காரணந்தான் என்னையோ? சொல்வாயாக. நீ பொய் சொல்கின்றாய் என்று கடிந்தபடியாம்.

மெய்ப்பாடு - வெகுளி. பயன் - வாயில் மறுத்தல். 170

- சிறுவெண் காக்கைப் பத்து முற்றிற்று -

Koviloor Digital Library

18. தொண்டிப் பத்து.

அஃதாவது தொண்டி என்னும் பட்டினத்தைச் செய்யுள் தோறும் சிறப்பித்து வந்த பத்துச் செய்யுளின் தொகுதி.

தொண்டி, சேர நாட்டிலுள்ள ஒரு சிறந்த பட்டினம். பட்டினமாகலின் நெய்தல் திணைக்குச் சிறப்புடையதாயிற்று. (இப்பத்தில் செய்யுட்கள் அந்தாதித் தொடை பெற்று வந்துள்ளன.)

171. திரைஇமிழ் இன்னிசை அளைகி அயலது
முழவுஇமிழ் இன்னிசை மறுகுதொறு இசைக்கும்
தொண்டி அன்ன பணைத்தோள்
ஒள்தொடி அரிவைஎன் நெஞ்சுகொண் டோளே.

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கும் தலைமகன் ஆயத்தோடு செல்லும் தலைமகளைக் கண்டு சொல்லியது.

என் நெஞ்சம் முழுவதும் கவர்ந்து கொண்ட இவள், கடல் அலைகள் ஒலிக்கின்ற இனிய இசையோடு கலந்து மத்தளம் முழங்குகின்ற இனிய இசை தெருக்கள் எங்கும் முழங்குகின்ற தொண்டியென்னும் பட்டினத்தைப் போன்று கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறிகின்ற ஐவகை இன்பங்களையும் தன்பாலுடைய நங்கையாவாள் என்பதாம். தொண்டி என்றதனால் இவள் இயற்கை அழகும் செயற்கை அழகும் செறிந்தவள் என்றானாம்.

மெய்ப்பாடு - மருட்கை; பயன் - மகிழ்ச்சி. 171

172. ஒள்தொடி அரிவை கொண்டனள் நெஞ்சே
வண்டிமிர் பனித்துறைத் தொண்டி ஆங்கண்
உரவுக் கடல்ஒலித் திரையென
இரவி னாலும் துயிலறி யேனே.

Koviloor Digital Library

நண்பனே! ஒள்ளிய வளையணிந்த நங்கையொருத்தி என் நெஞ்சைக் கவர்ந்து கொண்டனள் காண். ஆதலால் வண்டுகள் முரலுவதற்குக் காரணமான குளிர்ந்த கடல் துறையையுடைய தொண்டி என்னும் பட்டினத்தின் மருங்கே கிடக்கும் கடல் அலைகள் போன்று ஊர் துஞ்சும் நடு யாமத்தும் நான் துயிறலை அறிகின்றிலேன்.

மெய்ப்பாடு - அழுகை; பயன் உற்றதுரைத்துத் துணை வேண்டல். இது தலைமகன் பாங்கற்குச் சொல்லியது. பாங்கன் + கு = பாங்கற்கு. 172

173. இரவி னானும் இன்துயில் அறியாது
அரவுறு துயரம் எய்துப தொண்டித்
தண்நறு நெய்தல் நாறும்
பின்இருங் கூந்தல் அணங்குற் றோரே,

தொண்டியில் மலர்ந்த நெய்தல் மலர் போன்று நறுமணம் கமழும் கரிய கூந்தலையுடைய இந் நங்கையின் விழியால் தீண்டி வருத்தப்பட்டவர் நள்ளிரவிலும் இனிய துயிலை மறந்து மணி இழந்த் பாம்பு போன்று அல்லல் உறுவர். இது இயல்பே.

மெய்ப்பாடு மருட்கை. பயன் - தலைவியை வியத்தல். இது தலைமகன் குறிவழிச் சென்று தலைமகளைக் கண்ட பாங்கன் தன்னுள்ளே சொல்லியது. 173

174. அணங்குடைப் பனித்துறைத் தொண்டி யன்ன
மணங்கமழ் பொழிற்குறி நல்கினள் நுணங்குஇழை
பொங்கரி பரந்த உண்கண்
அம்கலிழ் மேனி அசைஇய எமக்கே.

இது, தலைமகளைக் கண்டு வந்த பாங்கன் கூறியவழி ஆண்டுச் செல்லக் கருதிய தலைமகன் தன்னுள்ளே சொல்லியது.

தீண்டி வருத்தும் தெய்வத்தையும் அவ்வருத்தம் தீர்க்கும் குளிர்ந்த நீர்த்துறையினையும் ஒருங்கேயுடைய தொண்டிப் பட்டினத்தை

Koviloor Digital Library

ஒத்தவளாகிய தலைவி மையுண்ட கண்ணாலும் அழகுடைய திருமேனியாலும் நோயுற்று மெலிந்த அளியமாகிய எமக்கு யாம் இயற்கைப் புணர்ச்சி எய்திய நறுமணங்கமழும் அப்பொழிலையே குறியிடமாகத் தருவாளாயினள். ஆதலின் இனி யாம் உய்ந்தேம். 'தீது நீங்கக் கடலாடியும் மாசு போகப் புனல் படிந்தும்' என்பது பட்டினப்பாலை (98 - 99)

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - மகிழ்ச்சி. 174

175. எமக்குநயந் தருளினை யாயின் பணைத்தோள்
நல்நுதல் அரிவையொடு மென்மெல இயலி
வந்திசின் வாழியோ மடந்தை
தொண்டி யன்னநின் பண்புபல கொண்டே

பாங்கற் கூட்டம் கூடி நீங்கும் தலைமகன் இனி வருமிடத்து நின் தோழியோடும் வரவேண்டுமெனத் தலைமகட்குச் சொல்லியது மடப்பமுடைய நங்காய் நீ வாழிய! நீ எம்பால் அருள்சுரந்து விரும்பி அருள் செய்தனை. இனியும் இவ்வாறே அருள் செய்ய விரும்பினால் நின் தோழியோடும், தொண்டிப் பட்டினத்தைப் போன்ற நின்னுடைய பெண்மை நலத்தோடும் மெல்ல மெல்ல நடந்து வந்தருள்வாயாக.

மெய்ப்பாடு - மருட்கை; பயன் - குறை நயத்தல். 175

176. பண்பும் பாயலும் கொண்டனள் தொண்டித்
தண்கமழ் புதுமலர் நாறும் ஒண்டொடி
ஐதுஅமைந்து அகன்ற அல்குல்
கொய்தளிர் மேனி கூறுமதி தவறே

தலைமகளும் தோழியும் ஒருங்கு நின்றுழிச் சென்ற தலைமகன் தோழியை வினாவியது.

தோழி! மெல்லிதாக அமைந்து பரந்த அல்குலையும் தொண்டி அகத்துள்ள நாண்மலர் போன்று மணக்கின்ற மாந்தளிர் நிறத்தையும் உடைய நின் தோழி (தலைவி) என்னுடைய பெருமையும் உரனும் ஆகிய

Koviloor Digital Library

குணங்களையும் இன்துயிலையும் கவர்ந்து கொண்டனள். நான் செய்த குற்றம் யாது? நீயே கூறுக. யான் இவளைப் பொழிலிடத்து கண்டு கூடியது என் தவறன்று ஊழினது ஆணை என்பான் கூறுமதி தவறே! என்றான்.

மெய்ப்பாடு அழுகை; பயன் - குறை நயத்தல். 176

177. தவறிலர் ஆயினும் பனிப்ப மன்ற
இவறுதிரை திளைக்கும் இடுமணல் நெடுங்கோட்டு
முண்டக நறுமலர் கமழும்
தொண்டி அன்னோள் தோள்உற் றோரே.

தவறு என்? என்று வினாய தலைமகற்குத் தோழி நகையாடிச் சொல்லியது.

ஐய! கடல் அலைகள் தழுவுகின்ற மணல் மேட்டையுடைய கடற்கரையில் முள்ளி மலர்கள் கமழும் தொண்டிப் பட்டினத்தை நிகர்த்த நலம் கெழுமிய தலைவியினது தோள்களைத் தழுவுவோர் வேறு தவறு செய்திலராயினும் தேற்றமாக வருந்துவர் காண்.

மெய்ப்பாடு - நகை; பயன் - ஈண்டுக் கூறப்பட்டன எல்லாம் என்க மன்ற பனிப்ப என்றது - தலைவி அரியள் என்றல் அச்சுறுத்தல், தலைவனைப் பேதைமை யூட்டுதல், உலகத்தாரைப் போல வரைந்து கொள் என்றல் முதலியனவாம். 177

178. தோளும் கூந்தலும் பலபா ராட்டி
வாழ்தல் ஒல்லுமோ மற்றே செங்கோல்
குட்டுவன் தொண்டி யன்ன
என்கண்டும் நயந்துநீ நல்காக் காலே.

செங்கோன்மை பிறழாத குட்டுவன் என்னும் சேரமன்னனுடைய தொண்டிப் பட்டினத்தைப் போன்ற என்னுடைய நிலையை நீ நேரில் கண்டும் நீயே விரும்பி எனக்கு நின் பெருமாட்டியை வழங்காய் ஆயின் அவளுடைய தோள்களையும் கூந்தலையும் வறிய சொல்லால் பலபடப்

Koviloor Digital Library

பாராட்டிக் கொண்டே இருப்பதால் மட்டும் உயிர் வாழ்ந்திருத்தல்' கூடுமோ . இது தலைமகன் தோழியை இரந்து குறையுறுவான் சொல்லியது.

மெய்ப்பாடு - அழுகை; பயன் - ஆற்றாமை கூறல். 178

179. நல்குமதி வாழியோ நளிநீர்ச் சேர்ப்ப
அலவன் தாக்கத் துறையிறாப் பிறழும்
இன்னொலித் தொண்டி அற்றே
நின்னலது இல்லா இவள்சிறு நுதலே

குறியிடத்து வந்து புணர்ந்து நீங்கும் தலைமகனைத் தோழி எதிர்ப்பட்டு வரைவு கடாஅயது.

குளிர்ந்த கடல் துறைத் தலைவனே! தனித்திருந்து உயிர் வாழ்தல் இல்லாத எம் பெருமாட்டியின் சிறிய நுதல் நண்டு தாக்கிய அளவில் துறையின்கண் இறாமீன் நிலை கலங்கிப் புரள்தற்கு இடனான இசைக் கருவிகளின் இனிய ஒலி நீங்காத தொண்டிப் பட்டினத்தைப் போன்றது. இவளை விரைவில் வரைந்து கொள்வாயாக.

மெய்ப்பாடு - அச்சம்; பயன் - வரைவு கடாஅதல்.

இன்னொலித் தொண்டி என்றது நீ வரைந்து கொள்வாய் என்ற நினைவால் இவள் நுதல் ஒளி உடையதாயிருக்கிறது. அலவன் தாக்கத் துறை இறாப் பிறழும் என்றது இவ்வொழுக்கம் புறத்தார்க்குப் புலனாயின் இவள் உயிர் வாழாள் என்பதாம். 179

180. சிறுநனை வரைந்தனை கொண்மோ பெருநீர்
வலைவர் தந்த கொழுமீன் வல்சிப்
பறைதபு முதுகுருகு இருக்கும்
துறைகெழு தொண்டி அன்னஇவள் நலனே.

பெருமானே! கடலில் இருந்து வலைஞர் வலைவீசிப் பிடித்துக் கொண்டு வந்த கொழுவிய மீன் உணவின் மருங்கே அதனைத் தின்னக்

Koviloor Digital Library

கருதி பறக்கும் ஆற்றல் இல்லாத கிழக்கொக்கு சமயம் பார்த்திருக்கும் கடல் துறை பொருந்திய தொண்டிப்பட்டினத்தைப் போன்ற நலமலிந்த எம் பெருமாட்டியின் பெண்மை நலத்தை விரைவிலேயே பலர் அறிய மணந்து கொள்க. வல்சி உணவு.

கோவை நூல் போல இப்பத்தில் உள்ள செய்யுட்கள் பொருளால் தொடர்பு கொண்டுள்ளன.

'மெய்ப்பாடு - அச்சம். பயன் வரைவு கடாஅதல். 180

- தொண்டிப் பத்து முற்றிற்று -

Koviloor Digital Library

ALAG... LIBRARY KARAIKUDI.

19. நெய்தற் பத்து

அஃதாவது : நெய்தற் கருப்பொருளிற் சிறந்த நெய்தற் பூப் பாடல்தோறும் வந்த பத்துப் பாட்டின் தொகுதி என்றவாறு.

181. நெய்தல் உண்கண் ஏர்இறைப் பணைத்தோள்
பொய்தல் ஆடிய பொய்யா மகளிர்
குப்பை வெண்மணல் குரவை நிறூஉந்
துறைகெழு கொண்கன் நல்கி
உறைவுஇனிது அம்மஇவ் அழுங்கல் ஊரே.

தோழி கேட்பாயாக! நெய்தல் மலர் போன்ற கண்களையும் அழகிய முன் கைகளையும், மூங்கில் போன்ற தோள்களையும் உடையராய்க் காமக் குறிப்பில்லாத விளையாட்டை ஆடிய பேதைப் பருவத்துப் பெண்கள் மணல் பரப்பில் குரவைக் கூத்து ஆடுதலைப் பொருந்திய கடல் துறைவன் அளி செய்வானாயின் இந்த ஊரின் கண் வாழ்தல் இனிது. இல்லையேல் உயிர் வாழ்தல் அரிது.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - ஆற்றியிருத்தல். 181

182. நெய்தல் நறுமலர் செருந்தியொடு விரைஇக்
கைபுனை நறுந்தார் கமழும் மார்பன்
அருந்திறல் கடவுள் அல்லன்
பெருந்துறைக் கண்டுஇவள் அணங்கி யோனே.

தலைமகள் மெலிவுகண்டு தெய்வத்தால் ஆயிற்றெனத் தமர் நினைந்துழித் தோழி அறத்தொடு நின்றது.

அன்னாய்! நீராடும் நீர்த்துறைக்கண் கண்டமையால் இவளை வருத்தியவன் ஆற்றலுடைய தெய்வம் அல்லன்காண். பின்னை அவன் தான் யாரெனின் நெய்தல் மலரைச் செருந்தி மலரோடு விரவித் தொடுக்கப்பட்ட மலர் மாலையின் மணங்கமழும் மார்பினனாகிய

Koviloor Digital Library

ஒருமானிட மகனே காண் . இவள் நோய் தீர்க்க முயலின் அந்த மார்பனுக்கு இவளைக் கொடுத்தல் வேண்டும் என்று அறிவுறுத்தாளாயிற்று.

மெய்ப்பாடு - அச்சம்; பயன் - அறத்தொடு நிற்றல். 182

183. கணங்கொள் அருவிக் கான்கெழு நாடன்
குறும்பொறை நாடன் நல்வய லூரன்
தண்கடற் சேர்ப்பன் பிரிந்தெனப் பண்டையிற்
கடும்பகல் வருதி கையறு மாலை
கொடுங்கழி நெய்தலும் கூம்பக்
காலை வரினும் களைஞரோ இலரே.

வரைவு இடைவைத்துப் பிரிந்துழி ஆற்றாளாகிய தலைமகள் மாலைக்குச் சொல்லியது.

என்னைப் போன்று காதலரைப் பிரிந்துறையும் மகளிர் கையற்றுக் கலங்கக் காரணமான கொடிய மாலைக் காலமே! முல்லை நிலத்தையுடையவனும், குறிஞ்சிநிலக் கோமகனும், மருத நிலத்தை யுடையவனும் நெய்தல் நிலத்தையுடையோனுமாகிய எம்பெருமான் என்னைப் பிரிந்தமையால் நண்பகற் பொழுதிலேயே வந்துவிடுகின்றாய் இனி இங்ஙனமின்றி காலைப் பொழுதிலேயே வருவாய் எனினும் வருவாய் . நின்னைத் தடுப்பவர் யார் உளர் . நின் கொடுமை மிகக் கொடிது.

மெய்ப்பாடு - அழுகை; பயன் - ஆற்றாமை கூறல்.

குறிப்பு:- இச் செய்யுளின் முன் இரண்டு அடிகள் பல பிரதிகளில் காணப்படவில்லை . அவை இல்லாத போதும் பொருள் பொருந்துகிறது. 183

184. நெய்தல் இருங்கழி நெய்தல் நீக்கி
மீனுண் குருகுஇளங் கானல் அல்கும்
கடல்அணிந் தன்றுஅவர் ஊரே
கடலினும் பெரிதுஎமக்கு அவருடை நட்பே

Koviloor Digital Library

பாண் மகனே! மீனைத் தின்னும் கொக்கு நெய்தல் நிலத்தின் கரிய கழியிலுள்ள நெய்தல் மலரிடை தங்குதலை ஒழித்து கரைக்கண் உள்ள நந்தவனத்தில் சென்று தங்குதற் இடனான நம் பெருமானுடைய ஊர் கடலைத் தனக்கு அணிகலமாக உடையது . அவருடைய நட்பு எமக்குக் கடலினும் பெரிது என்பதாம் . கொக்கு நெய்தல் மலரை விடுத்து நந்தவனத்தில் வந்து தங்குதல் போன்று நம்பெருமானும் தனக்குரிய மனைவியோடு உறையாமல் வெறுத்து, பரத்தையர் சேரியில் உறைகின்றான் என்பது உள்ளுறை.

மெய்ப்பாடு - வெகுளி . பயன் - வாயில் மறுத்தல். 184

185. அலங்கிதழ் நெய்தல் கொற்கை முன்துறை
இலங்குமுத்து உறைக்கும் எயிறுகெழு துவர்வாய்
அரம்போழ் அவ்வளைக் குறுமகள்
நரம்புஆர்த் தன்ன தீங்கிள வியளே.

தோழி! நெய்தல் பூக்கள் மலிந்த கொற்கைப் பட்டினத்தின் கடல்துறையில் எடுக்கப்படுகின்ற நன்முத்தை நிகர்க்கும் பற்கள் பொருந்திய பவளம் போன்ற வாயையுடைய சங்கு வளையல் அணிந்த அந்த இளநங்கை யாழின் நரம்பு முரன்றாற் போன்ற இனிய மொழியை யுடையாள் காண். கொற்கை - பாண்டிய நாட்டின் துறை முகப்பட்டினம்.

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் தோழியினால் கூட்டம் பெறுதல். இது தலைவன் கூற்று. 185

186. நாரை நல்லினம் கடுப்ப மகளிர்
நீர்வார் கூந்தல் உளரும் துறைவ
பொங்குகழி நெய்தல் உறைப்ப இத்துறை
பல்கால் வருஉம் தேரெனச்
செல்லா தீமோ என்றனள் யாயே.

பெண்டிர் தமது நனைந்த கூந்தலை, நாரைகள் தம்முடைய சிறகுகளைக் கோதுதல் போன்று கோதுதற்கு இடனான

Koviloor Digital Library

நீர்த்துறைவனே! எம்முடைய தாய், நெய்தல் மலர்கள் தன் உருளையிற்பட்டுத் தேன் துளிக்கும்படி இத்துறையின்கண் ஏதிலான் தேர் ஒன்று பன்முறையும் வந்து போகின்றது என்று அறிவுறுத்தி, ஆதலால் இனி நீயிர் இல்லின்புறத்தே போகன்மின் என்று கூறி எம்மை இற்செறித்துப் பாதுகாக்கின்றனள் காண் என்பதாம். இனி தலைவியும் நீயும் தலைப்படுதல் இயலாதாயிற்று. ஆகவே விரைவில் வரைந்து கொண்டு வாழ்வாயாக என்று தோழி தலைவனை வற்புறுத்தினாள்.

மெய்ப்பாடு - அச்சம்; பயன் வரைவு கடா அதல். 186

187. நொதும லாளர் கொள்ளார் இவையே
எம்மொடு வந்து கடலாடு மகளிரும்
நெய்தலம் பகைத்தழைப் பாவை புனையார்
உடலகம் கொள்வோர் இன்மையின்
தொடலைக் குற்ற சிலபூ வினரே.

தோழி கையுறை மறுத்தது.

ஐய! இவற்றை எதற்குக் கொண்டு வந்தாய். இவற்றை யாங்கள் புனைந்து கொள்ளின் ஏனையோர் மனம் கொள்ளமாட்டார். எம்மை உறுதியாக ஐயுறுவர். எம்மொடு வந்து கடலாடுகின்ற ஆயமகளிர் விளையாட்டுப் பாவைக்கு நெய்தல் தழைக்கு மாறாய பல்வேறுபட்ட இத்தழைகளைப் புனைய மாட்டார். யாங்களும் இவற்றை உடுத்தமாட்டோம். உடலில் அணிந்து கொள்வன் இன்மையாலன்றோ ஒரு சில பூக்கள் மட்டும் உடையராயினார். இவற்றை நீயே கொண்டு செல்க என்பதாம்.

பகைத்தழை - தகாது என்று மறுத்தது.

மெய்ப்பாடு அச்சத்தைச் சார்ந்த பெருமிதம். பயன் - சேட்படுத்தல். 187

188. இருங்கழிச் சேயிறா இனப்புள் ஆரும்
கொற்கைக் கோமான் கொற்கையம் பெருந்துறை
வைகறை மலரும் நெய்தல் போலத்
தகைபெரி துடைய காதலி கண்ணே.

Koviloor Digital Library

விருந்து வாயிலாகப் புகுந்த தலைமகன் தலைவி இல்வாழ்க்கைச் சிறப்புக் கண்டு மகிழ்ந்து சொல்லியது.

என் ஆருயிர்க் காதலியின் கண்கள் பறவைகள் கூட்டமாக கரிய கழியில் சிவந்த இறாமீனை வயிறு நிரம்பத் தின்னற்கு இடமான கொற்கை மன்னனுடைய சிறந்த கொற்கைப் பட்டினத்தில் அமைந்த அழகிய நீராடு பெருந்துறையில் ஞாயிற்றின் வருகை கண்டு மலர்கின்ற நெய்தல் மலரைப் போன்று தம் இயற்கை அழகின் மேலும் பிறிதொரு பேரழகு படைத்துள்ளன. வாழ்க அவள் மனை மாண்பு.

கதிரவன் வருகை கண்டு வைகறைப் பொழுதில் மலரும் நெய்தல் போன்று தலைவி விருந்தினர் வருகை கண்டு முகமலர்ந்து வரவேற்று உபசரித்தமை தோன்ற இங்ஙனம் கூறினான்.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - மகிழ்ச்சி. 188

189. புன்னை நுண்தாது உறைத்தரு நெய்தல்
பொன்படு மணியில் பொற்பத் தோன்றும்
மெல்லம் புலம்பன் வந்தென
நல்லன வாயின தோழியென் கண்ணே.

தோழி! கேள் புன்னை மரத்தினது பொன்னிறப் பூந்துகள்கள் உதிர்ந்த நெய்தல் நிலப்பரப்பு பொன்னழுத்தப்பட்ட வெள்ளிய முத்துப் போன்று பொலிவுறத் தோன்றும் நெய்தல் நிலத்தலைவன் வரைவொடு வந்தனன் ஆகலின் என்னுடைய கண்கள் களிப்புற்றுப்புத்தெழில் படைத்தன என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - உவகை விளம்பல். 189

190. தண்ணறு நெய்தல் தளையவிழ் வான்பூ
வெண்ணெல் அரிநர் மாற்றினர் அறுக்கும்
மெல்லம் புலம்பன் மன்றஎம்
பல்லிதழ் உண்கண் பனிசெய் தோனே.

தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது

Koviloor Digital Library

தாயே! எம்முடைய பலவாகிய இதழ்களையுடைய நெய்தற் பூப் போன்ற மையுண்ட கண்கள் நீர் துளிக்கும்படி செய்தவன் யாரெனின் வெள்ளிய நெற்கதிரை அரிகின்ற மள்ளர் குளிர்ந்த நறுமணமுடைய நெய்தலினது கட்டவிழ்ந்த சிறந்த மலரை விலக்கிவிட்டுத் தாம் அரிகின்ற நெல்லை மட்டுமே அரிதற்கிடனான, தேற்றமாக இந் நெய்தல் நிலத்தையுடையானொரு தோன்றலே காண். அணங்கும் பிறவுமல்ல.

மெய்ப்பாடு - அச்சம் ; பயன் அறத்தொடு நிற்றல். அரிவோர் நெய்தற்பூவை நீக்கி வெண்ணெல் அரியும் என்றது தனக்கு அடுத்தது செய்தலன்றிப் பிறர்க்கு வருத்தம் செய்யானெனத் தலைமகன் குணம் கூறியவாறு. 190

- நெய்தற் பத்து முற்றிற்று -

Koviloor Digital Library

20. வளைப் பத்து

அஃதாவது பாடல் தோறும் வளை (வளையல்) என்னும் சொல் வந்த பத்துப் பாடல்களின் தொகுதி என்றவாறு.

191. கடற்கோடு செறிந்த வளைவார் முன்கைக்
கழிப்பூத் தொடர்ந்த இடும்பல் கூந்தல்
கானல் ஞாழற் கவின்பெறு தழையள்
வரையர மகளிரின் அரியள்என்
நிறையரு நெஞ்சம் கொண்டொளித் தோளே.

நின்னாற் காணப்பட்டவள் எவ்விடத்து எத்தன்மையள் என்று வினாவிய பாங்கற்குத் தலைமகன் கூறியது. (பாங்கன் + கு = பாங்கற்கு)

தோழனே! என் நிறையை அழித்து என் நெஞ்சத்தையும் கவர்ந்து கொண்டு மறைந்துபோன அந்நங்கை கடற்கரைச் சோலையிடத்து காணப்பட்டாள் சங்கினால் இயன்ற வெள்வளை செறிக்கப்பட்ட நெடிய முன்கையினையும் நெய்தற்பூக்கள் சூட்டப்பட்ட கரிய கூந்தலையும் ஞாழல் இளந்தளிராலாய ஆடையினையும் உடையள்காண். மேலும் அவள் வரையர மகளிர் போன்று என்னால் எய்துதற்கும் அரியள் காண்.

கடற்கோடு - சங்கு. மெய்ப்பாடு - மருட்கை; பயன் - பாங்கற்கு உணர்த்துதல். 191

192. கோடுபுலங் கொட்பக் கடலெழுந்து முழங்கப்
பாடிமிழ் பனித்துறை யோடுகலம் உகைக்கும்
துறைவன் பிரிந்தென நெகிழ்ந்தன
வீங்கின மாதோ தோழிஎன் வளையே

தோழியே கேள்! என் வளையல்கள் கடலிலுள்ள சங்குகள் நிலத்தின் கண் ஊர்ந்து சுற்றும்படி, கடல் பொங்கி யெழுந்து

Koviloor Digital Library

ஆரவாரித்தலால் அலைகள் முழக்கஞ் செய்கின்ற குளிர்ந்த கடல் துறையின் கண்ணே அஞ்சாது பரதவர் தமது மரக்கலத்தைச் செலுத்துதற்கி டனான கடல் துறையையுடைய நம்பெருமான் நம்மை விட்டுப் பிரிந்த பொழுதே கையில் இருந்து நெகிழ்ந்து கழல்வன வாயின. அவன் வந்தான் என்று அறிந்தவுடன் கையில் கிடந்து விம்முவனவாயின இத்தகைய வளையல்களையுடைய யாம் அலர் எழாமல் பாதுகாத்தல் எங்ஙனம்?

மெய்ப்பாடு - உவகை; பயன் - தோழிக்குக் கூறுதல். 192

193. வலம்புரி யுழுத வார்மணல் அடைகரை
இலங்குகதிர் முத்தம் இருள்கெட இமைக்கும்
துறைகெழு கொண்கநீ தந்த
அறைபுனல் வால்வளை நல்லவோ தாமே

வலம்புரிச் சங்குகள் ஊர்ந்ததனால் ஏற்பட்ட கீரல்களையுடைய நீரடை கரையின்கண் விளங்குகின்ற முத்துக்கள் இராப்பொழுதில் இருள்கெட ஒளிவிடுகின்ற கடல் துறைவனே! இப்போது தலைவிக்குக் கையுறையாக நீ கொடுத்த இந்த சங்கு வளையல்கள் அவள் அணிந்துள்ள வளையல்களைக் காட்டிலும் மிகவும் நன்மையுடையனவோ கூறுக. தலைவ! அவளுக்கு இப்போதுள்ள குறை வளையல்கள் இல்லாமையன்று. நீ வரைந்து கொள்ளாமையே. அச் செயலை விரைந்து செய்க.

மெய்ப்பாடு - நகை; பயன் - தோழி தலைவனை வரைவு கடாஅதல். 193

194. கடற்கோ டறுத்த அரம்போழ் அவ்வளை
ஒள்தொடி மடவரல் கண்டிகும் கொண்க
நன்னுதல் இன்றுமால் செய்தெனக்
கொன்ஒன்று கடுத்தனள் அன்னையது நிலையே

பெருமானே! சங்கு வளையலையும் குறுந்தொடியையும் மடப்பத்தையும் உடைய எம்பெருமாட்டியின் நிலையை நீ கருதிப்

Koviloor Digital Library

பார்ப்பாயாக. அஃது யாதெனின் எம்முடைய தாய் இன்று இவள் நெற்றியைக் கூர்ந்து பார்த்த போது அவளுக்கு அது மயக்கத்தைச் செய்தது. ஆதலின் யாங்கள் அஞ்சும்படி இதற்கு வேறு காரணம் உளது என்று ஐயுறுகின்றாள். அதுதான் இப்போதுள்ள நிலை.

மெய்ப்பாடு - அச்சம். பயன் - வரைவு கடாஅதல். தோழி செறிப்பறிவுறுத்தினாள். 194

195. வளைபடு முத்தம் பரதவர் பகரும்
கடல்கெழு கொண்கன் காதல் மடமகள்
கெடலரும் துயரம் நல்கிப்
படலின் பாயல் நல்கி யோளே.

வரைவிடை வைத்துப் பொருள் வயின் பிரிந்த தலைமகன் தனித்துறைய ஆற்றானாய்ச் சொல்லியது.

நெஞ்சமே! பரதவர் சங்கீன்ற நல்முத்தை விலைக்கு விற்றற்கிட மான கடல் பொருந்திய நெய்தல் நிலத்துத் தலைவனுடைய மகளாவாள் அவளான் அன்றிப் பிறரால் தீர்த்தற்கரிய துன்பத்தை வழங்கி நாம் இனிதே பாயலின்கண் உறங்குவதைக் கவர்ந்து கொண்டனள்.

பெறுதற்கரிய முத்தைப் பரதவர் விற்கும் கடல் கெழு கொண்கன் என்றது அவர்கள் தாராதாரல்லர்; யாம் அவர்களுக்கு வேண்டுவன கொடுத்துக் கொள்ளமாட்டாது வருந்துகின்றோம் என்பதாம்.

மெய்ப்பாடு - அழுகை; பயன் - ஆற்றியிருத்தல். 195

196. கோடீர் எல்வளைக் கொழும்பல் கூந்தல்
ஆய்தொடி மடவரல் வேண்டுதி யாயின்
தெள்கழி சேயிறாப் படூஉம்
தண்கடற் சேர்ப்ப வரைந்தனை கொண்மோ.

தெளிந்த கழியின்கண் பரதவர் ஆவனசெய்து தாம் விரும்பிய சிறந்த செவ்விய இறாமீனைப் படுக்கும் தண்ணிய கடலையுடைய நெய்தல் நிலத் தலைவனே! ஒளியுடைய சங்கு வளையலையும்,

Koviloor Digital Library

கூந்தலையும், குறுந்தொடியையும் உடைய எம்பெருமகளை நீ மனைவியாகக் கொள்ள விரும்புகின்றாயானால் உலகியலுக்கிணங்கத்திருமணம் செய்து கொள்ளலே முறை. அவ்வழி முயல்க;

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - வரைவு கடா அதல். 196

197. இலங்குவளை தெளிர்ப்ப அலவன் ஆட்டி
முகம்புதை கதுப்பினள் இறைஞ்சிநின் றோளே
புலம்புகொள் மாலை மறைய
நலம்கேழ் ஆகம் நல்குவள் எனக்கே.

என் ஆருயிர் காதலி கடற்கரைச் சோலையில் ஆடல் புரிவாள் போன்று, தனது வளையல் ஒலிப்ப நண்டை அலைத்து ஒட்டி, என் வரவறிந்து தனது முகத்தை மறைத்துக் கொண்டு, நாணத்தால் தலைகுனிந்து நிற்பவள், இந்த மாலைப்பொழுது மறைந்தவுடன் தனது மார்பினை எனக்கு வழங்குவள். இவ்வின்பம் பெறுதற்கு யான் என் நோற்றனன் கொல்.

புலம்பு - தனித்துறை துயரம்.

மெய்ப்பாடு - மருட்கை; பயன் - மகிழ்தல். 197

198. வளையணி முன்கை வாலெயிற்று அமர்நகை
இளையர் ஆடும் தளைஅவிழ் கானல்
குறுந்துறை வினவி நின்ற
நெடுந்தோள் அண்ணல் கண்டிகும் யாமே.

தலைவியே! வருக. முன்பு வளையணிந்த முன்கையையும் வெள்ளிய பல் ஒழுங்கினையும் புன்முறுவலையும் உடைய நம் ஆயமகளிர் விளையாடுகின்ற கடற்சோலையில் நம்பால் வந்து இறங்கு துறை எவ்விடத்துள்ளது என்று நம்மை வினவி நாம் கூறிய பின்னரும் அகலாமல் நின்ற நம்பெருமானை யாமே எதிர் சென்று காண்போமாக வருக. தலைவி ஊடியிருத்தலை உணர்ந்தும் உணராதாள் போன்று தோழி அவளை அழைக்கின்றாள்.

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - குறை நயப்பித்தல். 198

Koviloor Digital Library

199. கானலம் பெருந்துறைக் கலிதிரை திளைக்கும்
வானுயர் நெடுமணல் ஏறி ஆனாது
காண்கம் வம்மோ தோழி
செறிவளை நெகிழ்த்தோன் எறிகடல் நாடே

தோழி! நினது கையின்கண் செறிந்து கிடந்த வளையல்களைக் கழலச் செய்தவனாகிய நம் பெருமானுடைய பெருமணல் உலகத்தை முழுதும் கடற்கரை சோலையின் பக்கத்தேயுள்ள கடல் அலைகள் தழுவிச் செல்லும் மணற்குன்றின் மேல் ஏறிநின்று இடையறவின்றிக் கண்டு களிப்போம். என்னோடு வருவாயாக. தலைவன் நாட்டைக் காணின் தலைவனைக் கண்டாற் போன்று ஆறுதல் உண்டாகுமாதலின் தோழி தலைவியை அழைக்கின்றனள். தலைவியைத் தோழி என்று அழைத்தல் அன்பும் பெருக்கமும் கருதி.

மெய்ப்பாடு - அச்சம். பயன் - ஆற்றுவித்தல். 199

200. இலங்குவீங்கு எல்வளை ஆய்நுதல் கவினப்
பொலந்தேர்க் கொண்கன் வந்தனன் இனியே
விலங்குஅரி நெடுங்கண் ஞெகிழ்மதி
நலங்கவர் பசலையை நகுக நாமே

தலைவியே! இப்பொழுது உன் ஒளிவளைகளும், ஒளி மழுங்கிய நுதலும் மீண்டும் தமக்குரிய அழகு பொருந்தும்படியாக பொன்னாலாகிய தேரையுடைய நம் பெருமான் நின்னை அழைத்துப் போக வந்துள்ளனன். ஆதலால் நின் நெடிய விழிகளைத் திறந்திடுக. நாம் நின்னுடைய அழகைக் கவர்ந்து கொண்ட பசலை நோயை எள்ளி இனி நகைத்திடுவோம்.

மெய்ப்பாடு - உவகை; பயன் - உடன் போக்குதல். 200

- வளைப் பத்து முற்றிற்று -

நெய்தல் முற்றிற்று.

Koviloor Digital Library

III. குறிஞ்சி

ஆசிரியர் : கபிலர் என்னும் நல்லிசைப் புலவர். இவர் பாண்டி நாட்டின் கண் திருவாதவூரில் அந்தண மரபில் தோன்றியவர். இப்புலவர் பெருமான் நல்லிசைப் புலவர் பலராலும் நன்கு மதிக்கப்பட்ட பெரும் புலவராவார். இவருடைய சான்றாண்மை, சீர்த்தி, கல்வி நலன், தூய்மை முதலியவற்றைப் பல புலவர்கள் பாராட்டியுள்ளனர். இவருடைய பாடல்கள் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. இவர் குறிஞ்சித்திணை பற்றிப் பாடுவதில் வல்லவர். குறிஞ்சித் திணையிலுள்ள நூறு பாடல்களும் பொருளாழமுடையன. உள்ளுறை உவமம் அமைப்பதிலும் உவமைதேர்ந்து கூறுவதிலும் இவர்க்கு இவரே ஒப்பாவார்.

இவர் அகுதை, இருங்கோவேள், ஓரி, சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதன், நள்ளி, பாண்டியன், மலையமான் திருமுடிக்காரி, விச்சிக்கோ, வேள் பாரி, வையாவிக் கோப்பெரும் பேகன், மலையன் என்னும் புரவலர்களைப் பாடியுள்ளார்.

இவர் செய்யுளில் அயிரைமலை, கொல்லிமலை, பறம்புமலை, முள்ளூர் மலை முதலிய மலைகளும், பறம்பு நாடு, கிடங்கில், கொடு மணம், பந்தர், மதுரை, முள்ளூர் முதலிய இடங்களும் குறிக்கப்படுகின்றன.

குறிஞ்சித் திணை அடியிற்கண்ட பத்துப் பிரிவுகளையுடையது. ஒவ்வொன்றிலும் பத்துப் பாடல்கள் உள்ளன.

21. அன்னாய் வாழிப் பத்து.

22. அன்னாய்ப் பத்து.

23. அம்மவாழிப் பத்து.

Koviloor Digital Library

24. தெய்யோப் பத்து.
25. வெறிப் பத்து.
26. குன்றக் குறவன் பத்து.
27. கேழற்பத்து.
28. குரக்குப் பத்து.
29. கிள்ளைப் பத்து.
30. மஞ்ஞைப் பத்து.

இடம் : மலையும் மலை சார்ந்த இடமும்.

உரிப்பொருள் : புணர்தலும் புணர்தல் நிமித்தமும்.
பெரும் பொழுது : குளிர்காலமும் முன்பனிக்காலமும்.
சிறுபொழுது : யாமம்.

புணர்தல் என்பது ஒத்த தன்மையுடைய தலைவனும் தலைவியும் கொடுப்பாரும் அடுப்பாரும் இன்றித் தனியே ஒரு பொழிலில் ஊழான், தம்முள் ஒருவரையொருவர் தலைப்பட்டு அன்பாலே கூடும் கூட்டம் என்க.

Koviloor Digital Library

21. அன்னாய் வாழிப் பத்து

அஃதாவது அன்னாய் வாழி என்றே தொடங்கும் பத்துச் செய்யுளின் தொகுதி என்றவாறு.

201. அன்னாய் வாழிவேண் டன்னை என்னை
தானும் மலைந்தான் எமக்கும் தழையாயின
பொன்வீ மணியரும் பினவே
என்ன மரம்கொல்அவர் சாரல் அவ்வே

அன்னையே! நான் கூறுவதைக் கேள். அவர்கள் வாழும் மலைச் சாரலின்கண் உள்ள மரங்கள் பொன் போன்ற நிறமுடைய மலர்களோடு மணி போன்ற அரும்புகளையும் உடையவாதலின் எம் பெருமானும் அழகாக அவற்றை அணிந்துகொண்டனன். யாமும் உடுத்திக் கொள்வதற்கு இனிய தழையாடையும் ஆயின. இந்த மரங்கள் என்ன மரமோ? அறிவாயாயின் கூறுக. ஈண்டு அன்னாய் என்றது தோழியை தலைவி விளித்த படியாம். இது பழைய நெறி (புலனெறி வழக்கு)

மெய்ப்பாடு - அச்சம்; பயன் - அறத்தொடு நிற்றல். 201

202. அன்னாய் வாழிவேண் டன்னை நம்மூர்ப்
பார்ப்பனக் குறுமகப் போலத் தாமும்
குடுமித் தலைய மன்ற
நெடுமலை நாடன் ஊர்ந்த மாவே

அன்னையே! நான் கூறுவதைக் கேள். நம்மூரில் நெடிய மலையையுடைய குறிஞ்சிக் கோமகன் தன் தேரில் பூட்டி ஊர்ந்து வருகின்ற குதிரைகள் எல்லாம் நம்மூரில் வாழும் பார்ப்பனச் சிறுவரைப் போன்று தாமும் முன் குடுமியமைந்த தலையையுடையனவாய் உள்ளன காண். நம்பெருமான் நின்னை வரைதற்கு வேண்டுவன கொண்டு அதோ தேர் ஊர்ந்து வருகின்றான். இனி நீ நின் துயர் விடுத்து மகிழ்ந்திருப்பாயாக என ஆற்றினாளாமிற்று.

Koviloor Digital Library

மெய்ப்பாடு - உவகை; பயன் - ஆற்றுவித்தல். 202

203. அன்னாய் வாழிவேண் டன்னைநம் படப்பைத்
தேன்மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு
உவலை கூவற் கீழ
மானுண்டு எஞ்சிய கலிழி நீரே.

அன்னையே! நான் கூறுவதைக் விரும்பிக் கேள். நம் பெருமானுடைய நாட்டில் தழையுதிர்ந்து மூடப்பட்ட கிணறுகளின் அடிப் பகுதியில் உள்ள விலங்கினங்களால் உண்ணப்பட்டு எஞ்சிய கலங்கல் சின்னீர், நம் தோட்டத்தில் வண்டுகளால் கூட்டப்பட்ட கோல்தேன் கலந்த ஆவின் பாலைக் காட்டிலும் பருகுதற் இனியன காண்.

இச்செய்யுளில் தலைவன் நாடு நீரான் நல்குரவுடைத்து எனல் வழுவாயினும், தலைவியின் கற்புடைமையைச் சிறப்பித்தலின் அமைதியாயிற்று.

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - வாழ்க்கை நலம் கூறுதல். 203

204. அன்னாய் வாழிவேண் டன்னைஅஃது எவன்கொல்
வரையர மகளிரின் நிரையுடன் குழீஇப்
பெயர்வழிப் பெயர்வழித் தவிராது நோக்கி
நல்லள் நல்லள் என்ப
தீயேன் தில்ல மலைகிழ வோர்க்கே.

தோழி! நான் கூறுவதை விரும்பிக் கேள். மலையில் உறையும் சூரர மகளிர் போல ஏதிலராகிய மகளிர் எல்லாம் கூட்டமாகக் கூடிக் கொண்டு நாம் விளையாடுதற்குச் செல்லுமிடம் தோறும் தவறாமல் என்னை நோக்கி இவள் மிகவும் நல்லவள் என்று கூறுகின்றனர். நான் நம் தலைவற்கு மட்டில் தீயவளாய் இருக்கின்றேன். அதற்குக் காரணந்தான் யாதோ? அறிகிலேன். அறிந்தால் கூறுக. வரையர மகளிர் - மலைக்கண் உறையும் ஒருவகைத் தெய்வப் பெண்டிர். இவர் பேரழகு படைத்தவர் என்ப.

Koviloor Digital Library

இங்ஙனம் அலர் எழுதல் கண்டும் அவன் வரையாது ஒழுகுதற்குக் காரணம் என்னை என்று வினவியவாறு. நல்லள் என்றது குறிப்பு மொழி. இது பொல்லாதவள், களவு ஒழுக்கமுடையவள் என்று இகழ்ந்தவாறாம்.

மெய்ப்பாடு - அழுகை; பயன் - வரைவு வற்புறுத்தல். 204

205. அன்னாய் வாழிவேண் டன்னையென் தோழி
நனிநாண் உடையள் நின்னும் அஞ்சும்
ஒலிவெள் ளருவி ஓங்குமலை நாடன்
மலர்ந்த மார்பின் பாயல்
துஞ்சிய வெய்யள் நோகோ யானே.

இவள் இவ்வாறு ஆதற்குக் காரணம் என்னை என்று வினாவிய செவிலிக்குத் தோழி அறத்தொடு நின்றது.

தாயே! நான் கூறுவதைக் கேள். தலைவி பெண்டிர்க்குரிய நற்பண்புகளை உடையவள். நினக்கும் அஞ்சுபவள். இவ்வாறிருந்தும் அருவி பாயும் மலை நாடனுடைய விரிந்த மார்பாகிய இனிய பாயலின் கண் துயில்வதற்கு விருப்பமுடையாள். அதனால் இவ்வாறு மெலிந்து போகின்றாள். யானும் இவள் நிலைபற்றி வருந்துகின்றேன். வேறென் செய்வேன்?

மெய்ப்பாடு - அச்சம்; பயன் - அறத்தொடு நிற்றல். 205

206. அன்னாய் வாழிவேண் டன்னை உவக்காண்
மாரிக் குளத்துக் காப்பாள் அன்னன்
தூவலின் நனைந்த தொடலை ஒள்வாள்
பாசி சூழ்ந்த பெருங்கழல்
தண்பனி வைகிய வரிக்கச் சினனே.

அன்னையே நான் கூறுவதை விரும்பிக் கேள். மழைத்துளியில் நனைந்ததும் தோளில் கோத்துத் தொங்கவிட்டதுமாகிய ஒள்ளிய வாளையும் நீர்ப்பாசி சுற்றியதனால் பசிய நிறமுடைய கழலையும்

Koviloor Digital Library

நீர்த்துளி தங்கிய வரிக்கச்சையையும் உடையனாய் மழைக்காலத்தில் நீர் நிரம்பிய குளத்தைப் பாதுகாக்கும் காவலன் போல்வானை உவ்விடத்தே காண்பாயாக.

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - தலைவனோடு கூட்டுதல்.

இரவுக்குறிக்கண் தலைமகன் வந்து குறியிடத்து நின்றமையறிந்த தோழி தலைமகட்குச் சொல்லியது. 206

207. அன்னாய் வாழிவேண் டன்னை நன்றும்
உணங்கல கொல்லோநின் தினையே உவக்காண்
நிணம்பொதி வழுக்கில் தோன்றும்
மழைத்தலை வைத்துஅவர் மணிநெடுங் குன்றே.

அன்னையே! நான் சொல்வதைக் கேள். உன்னுடைய தினைப் பயிர் பெரிதும் உலர்ந்து விடவில்லை. மேலும் அதோ பார். நம் பெருமானுடைய மணிகட்கு உறைவிடமாகிய நெடிய மலை மேகத்தை உச்சியில் வைத்துக்கொண்டு நிணத்தால் மூடப்பட்டிருக்கும் ஊன் போன்று தோன்றுகின்றது. ஆதலால் இன்னே மழை பொழிதலும் நின் தினை தழைத்தலும் உறுதி வருந்தாதே.

நிணம் - ஒருவகைத் தாது. வழுக்கு - ஊன்; நம் பெருமானைத் தலைப்பட்டு மகிழ்வை; வருந்தற்க என ஆற்றுவித்தாள்.

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - ஆற்றுவித்தல். 207

208. அன்னாய் வாழிவேண் டன்னை கானவர்
கிழங்ககழ் நெடுங்குழி மல்க வேங்கைப்
பொன்மலி புதுவீத் தாஅம் அவர்நாட்டு
மணிநிற மால்வரை மறைதொறு
அணிமலர் நெடுங்கண் ஆர்ந்தன பனியே.

அன்னையே! நான் கூறுவதை விரும்பிக் கேட்டருள்க தலைவியது நீண்ட விழிகள், குறவர் கிழங்கு அகழ்ந்த குழி நிரம்பும்படி

Koviloor Digital Library

வேங்கை மலர்கள் பரவுதற்கு இடனான, தலைவனது நாட்டில் பெரிய மலை தோறும் மாலை நேரத்தில் துன்பக்கண்ணீர்த் துளிகள் நிரம்பின. அத்துன்பம் இப்போது நினதால் இலதாயிற்று.

செவிலிக்கு அறத்தொடு நின்ற தோழி, அவளால் வரைவு மாட்சிமைப்பட்ட பின்பு இவள் இவ்வாறுபட்ட வருத்தமெல்லாம் நின்னால் தீர்ந்தது என்பது குறிப்பில் தோன்ற அவட்குச் சொல்லியது.

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - நன்றி நவிலல். தலைவி பகற்பொழுதில் ஆற்றியிருப்பாள்; மாலையில் அழத் தொடங்குவாள். இரவில் பெருந்துயர்க் கடலை நீந்துவாள். இப்போது நின் அருளால் இன்னல் நீங்கி மகிழ்கின்றாள். 208

209. அன்னாய் வாழிவேண் டன்னை நீமற்று
யான்அவர் மறத்தல் வேண்டுதி யாயின்
கொண்டல் அவரைப் பூவின் அன்ன
வெண்டலை மாமழை சூடித்
தோன்றல் ஆனாதுஅவர் மணிநெடுங் குன்றே.

வரைவிடை வைத்துப் பிரிவின்கண் அவனை நினைவு விடாது ஆற்றாளாகிய வழி 'சிறிது மறத்தல் வேண்டும்' என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

அன்னாய் நான் கூறுவதை விரும்பிக் கேள். நம் பெருமானை மறந்து அவர் வருந்துணையும் ஆற்றியிருத்தல் வேண்டுகின்றனை. அங்ஙனம் முயல்வேனாயின் அம்முயற்சியினூடே நம் பெருமானுடைய நீலமணிபோலும் நிறமுடைய நெடிய மலை, கீழ் காற்றான் மலர்கின்ற அவரைப்பூப் போன்ற நிறமுடைய வெண்ணிறமுடைய உச்சியையும் கரிய உடலையுமுடைய முகிலைச் சூடிக்கொண்டு தோன்றுகின்றது. ஆகவே யான் மறைந்தமைதல் எங்ஙனம்?

மெய்ப்பாடு - அழுகை; பயன் - ஆற்றாமைக்குக் காரணம் கூறுதல். 209

Koviloor Digital Library

210. அன்னாய் வாழிவேண் டன்னைநம் படப்பைப்
புலவுச்சேர் துறுகல் ஏறி அவர்நாட்டுப்
பூக்கெழு குன்றம் நோக்கி நின்று
மணிபுரை வயங்கிழை நிலைபெறத்
தணிதற்கும் உரித்துஅவள் உற்ற நோயே

அன்னாய்! நான் சொல்வதைக் கேள். நின் மகள் அடைந்துள்ள நோய். அது தீர்தற்குரிய செயல் பிறிதொன்றும் உளது. அது யாதெனின் நின் மகள் நமது புழக்கடைத் தோட்டத்தில் உள்ள பலியிடுவதால் புலால் நாற்றம் தங்கிய பாறையின் மேல்ஏறி அத்திருவாளனுடைய நாட்டிலுள்ள மலையை நோக்கி நின்று நிலைபெறுமாற்றானும் தீர்தற்கும் உரியது. இவற்றுள் நினக்கேற்றது செய்தருள்க. வெறியாடற் செயலினும் இச் செயல் சிறந்தது. எளியது. இவள் நோய் தணியும்.

மெய்ப்பாடு அச்சம். பயன் - வெறிவிலக்கி (தோழி செவிலிக்கு) அறத்தொடு நிற்றல். 210

- அன்னாய் வாழிப் பத்து முற்றிற்று -

Koviloor Digital Library

22. அன்னாய்ப் பத்து

அஃதாவது அன்னாய் என்னும் சொல் செய்யுள்தோறும் வந்த பத்துச் செய்யுளின் தொகுதி என்பதாம்.

211. நெய்யொடு மயக்கிய உழுந்துநூற் றன்ன
வயலையஞ் சிலம்பின் தலையது
செயலையம் பகைத்தழை வாடும் அன்னாய்.

தலைமகன் ஆற்றாமை கண்டு கையுறை யேற்ற தோழி தலைமகள் தழையேற்க வேண்டிக் கூறியது.

அன்னையே! நெய் பெய்து பிசைந்து கலந்த உழுத்தமாவினை நூற்றுப் போட்டது போன்று படர்ந்துள்ள வயலைக் கொடிகளை யுடைய அவருடைய மலையின் உச்சியில் உள்ள வெள்ளை வயலையின் இத்தழை நீ ஏற்க மறுத்தால் வாடிப் போகும். ஆதலால் நீ ஏற்றுக் கொள். வயலைக் கொடியில் சில சிவப்பாகவும் சில வெள்ளையாகவும் இருக்கும்.

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் குறை நயப்பித்தல். 211

212. சாந்த மரத்த பூழில் எழுபுகை
கூட்டுவிரை கமழும் நாடன்
அறவற்கு எவனோ நாமகல்வு அன்னாய்.

தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

தாயே! சந்தனப் பொழிலில் உள்ள அகிலினின்றும் எழுகின்ற நறுமணப்புகை சந்தன மலரின் மணத்தோடு விரவிக் கமழுகின்ற நாட்டினையுடையோனும் அறநெறியில் ஒழுகுபவனுமாகிய அப் பெருந்தகையாளனுக்கு நமர் மகட்கொடை நேராமல் விலகுவதற்குக் காரணம் யாது சொல்லுக.

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - அறத்தொடு நிற்றல்.

Koviloor Digital Library

'அகிற்புகை கூட்டுவிரை கமழும்' என்ற உள்ளுறை அவர் இருமனமும் தம்முள் ஒன்றுபட்டன எனத் தலைப்பாடு கூறினாள். 212

213. நறுவடி மாஅத்து மூக்கிறுபு உதிர்ந்த
ஈர்ந்தண் பெருவடுப் பாலையிற் குறவர்
உறைவீழ் ஆலியில் தொகுக்கும் சாரல்
மீமிசை நன்னாட் டவர்வரின்
யானுயிர் வாழ்தல் கூடும் அன்னாய்.

தோழி கேள். பிஞ்சுகளையுடைய மாமரத்தினின்றும் தாமே வெம்பிக் காம்பற்று உதிர்ந்த குளிர்ந்த பெரிய வடுக்களைக் குன்றக் குறவர்கள் மழைத் துளியோடு விழுகின்ற ஆலங்கட்டிகளைப் பொறுக்கிச் சேர்க்கின்ற மலை நாட்டையுடைய நம்பெருமான் வரைவொடுவரின் யான் உயிர்தாங்கி வாழக் கூடும். இன்றேல் இறந்துபடுதல் ஒரு தலை. வடி - வடு - மாம்பிஞ்சு; மூக்கு - காம்பு; பாலை நில வெப்பத்தால் உதிர்வனவாயின.

மெய்ப்பாடு - உவகை; பயன் - ஆற்றியிருத்தல். 213

214. சாரல் பலவின் கொழுந்துணர் நறும்பழம்
இருங்கல் விடரளை வீழ்ந்தென வெற்பில்
பெருந்தேன் இறாஅல் கீறும் நாடன்
பேரமர் மழைக்கண் கலிழத்தன்
சீருடை நன்னாட்டுச் செல்லும் அன்னாய்.

தலைவியே! ஒரு செய்தி கேட்பாயாக! மலைச்சாரலில் நிற்கும் பலா மரத்தினது இனிய பழம் மலை வெடிப்பில் விழுந்தமையால் அங்கு இருந்த பெரிய தேனடை சிதைதற்கு இடனான நாட்டையுடைய நம் பெருமான் உன்னுடைய கண்கள் கலங்கி நீர் வாரும்படி நம்மைப் பிரிந்து தன்னுடைய நல்ல நாட்டிற்கு இனிச் செல்வானாம். இதனை அறிந்துகொள்.

மெய்ப்பாடு - இளிவரல். பயன் - வரைவு கடாஅதல். 214

Koviloor Digital Library

215. கட்டளை யன்ன மணிநிறத் தும்பி
இட்டிய குயின்ற துறைவயின் செலீஇயர்
தட்டைத் தண்ணுமைப் பின்னர் இயவர்
தீங்குழல் ஆம்பலின் இனிய இமிரும்
புதன்மலர் மாலையும் பிரிவோர்
இதனினும் கொடிய செய்குவர் அன்னாய்.

தோழியே! கேள். பொன்னுரைக்கும் உரைகல் போன்று பொற்கோடு பொருந்திய நீலமணி போலும் நிறமுடைய தும்பிகள், இசைவாணர் நீராடும் துறையில் முழக்கும் தோற் கருவிகளின் பின்னால் இனிய ஆம்பல் இசைபோல முரலுகின்ற பூம்புதர்கள் மலர்கின்ற மாலைப் பொழுதிலும் நம் நிலை கருதாமல் பிரிபவர் அதனினும் காட்டிற் கொடிய செயல்களையும் செய்வார். ஐயமின்று. தட்டை ஒருவகைத் தோற் கருவி.

மெய்ப்பாடு - அழுகை; பயன் - தலைவன் கொடுமை கூறுதல். 215

216. குறுங்கை இரும்புலிக் கோள்வல் ஏற்றை
நெடும்புதல் கானத்து மடப்பிடி ஈன்ற
நடுங்குநடைக் குழவி கொளீஇய பலவின்
பழந்தூங்கு கொழுநிழல் ஒளிக்கும் நாடற்குக்
கொய்திடு தளிரின் வாடிநின்
மெய்பிறி தாதல் எவன்கொல் அன்னாய்.

தலைவியே! குறுகிய முன் கால்களையுடைய பெரிய ஆண்புலி, புதர் அடர்ந்த காட்டில் இளைய பெண்யானை ஈன்ற கன்றைப் பற்றித் தின்னுதற் பொருட்டு, பலாமர நிழலில் பதுங்கிக் கிடத்தற்கு இடனான நாட்டுத் தலைவன் பொருட்டு நின் உடம்பு, கொய்து போட்ட இளந்தளிர் வாடுமாறு வாடி, மாறுபடுதல் என்னையோ?

இதன்கண் ஆண் புலி தலைவனுக்கும், நெடும்புதற்கானம் தலைவியின் குடிக்கும், மடப்பிடி தலைவிக்கும், அஃதீன்ற குழவி

Koviloor Digital Library

223. அம்ம வாழி தோழி நம்மலை
வரையாம் இழியக் கோடல் நீடக்
காதலர்ப் பிரிந்தோர் கையற நலியும்
தண்பனி வடந்தை அச்சிரம்
முந்துவந் தனர்நம் காத லோரே.

பெருமாட்டியே! இதுகேள் . நம்பால் பெருங்காதலுடைய நம் தலைவர் மலையருவி நீர் வீழ, காந்தள்கள் வளர்ச்சி யுற, தத்தம் கணவன்மாரைப் பிரிந்த மகளிர் செயலற்று வருந்தும்படி துன்புறுத்தும், குளிர்ந்த பனியையும் வாடைக் காற்றையும் உடைய முன்பனிப் பருவம் வந்து சேர்தற்கு முற்படவே வரைவொடு நம்மூர்க்கு வந்துவிட்டார் இனி வருந்தேல்; மகிழ்ந்திடுக . வடந்தை - வாடை . அச்சிரம் - முன்பனிக்காலம்.

மெய்ப்பாடு பெருமிதம் பயன் - மகிழ்வித்தல். 223

224. அம்ம வாழி தோழி நம்மலை
மணிநிறங் கொண்ட மாமலை வெற்பில்
துணிநீர் அருவி நம்மோடு ஆடல்
எளிய மன்ஆல் அவர்க்கினி
அரிய ஆகுதல் மருண்டனென் யானே.

தோழியே! இது கேள் . நம் தலைவற்கு இதுவரையிலும் நமது குறிச்சியிடத்தும் அதோ நீலமணி போன்று தோன்றும் பெரிய மலையிடத்தும், இவற்றின் பக்க மலையிடத்தும் தெளிந்த சுனை நீரிலும் அருவி நீரிலும் நம்மோடு கூடி ஆடும் ஆடல்கள் எளியவாயிருந்தன . அந்நிலை தீர்ந்தது . இப்போது அவை அரியவாயிருத்தலை நினைந்து யான் பெரிதும் மயங்குகின்றேன் . அஃதாவது: செவிலி முதலியோர் தன்பால் ஐயுற்றுத் தன்னை இல்லத்தினின்றும் புறம்போகாது பாதுகாவல் செய்கின்றனர் என்பதைக் குறிப்பால் உணர்ந்த தலைவி இச்செய்தியைத் தலைவனுக்குக்குணர்த்தி வரைவு கடாவினாள் என்பதாம்.

மெய்ப்பாடு - அழுகை; பயன் - வரைவு கடாஅதல். 224

Koviloor Digital Library

225. அம்ம வாழி தோழி பைஞ்சுனைப்
பாசடை நிவந்த பனிமலர்க் குவளை
உள்ளகங் கமழும் கூந்தல் மெல்லியல்
ஏர்திகழ் ஒண்ணுதல் பசத்தல்
ஓரார் கொல்நம் காத லோரே.

தலைவியே! வருந்தற்க; நான் கூறுவதைக் கேள். நம் தலைவர் உன் நிலையை நன்குணர்வர். சுனையில் இலைகளின் நடுவேயுள்ள குவளை மலரினது நறுமணம் போன்று இயற்கை மணம் கமழ்கின்ற நின் கூந்தலின் கீழ் அமைந்துள்ள நின் ஒள்ளிய நுதல் பசந்து ஒளி மயங்குதலைக் கருதிப் பாரார் என்றோ நீ கலங்குகின்றாய். அவர் உன் நிலையை உணர்ந்து வரைவொடு மீண்டுவருவர். ஆற்றுக.

காலம் நீட்டித்தற்குக் காரணம் கருதிய வினை முடியாமையே யாகும். அவர் வினை முடிந்ததும் விரைந்து வருதல் ஒருதலை. அவர் வருந்துணையும் ஆற்றியிருத்தலே நின் கடமை.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - ஆற்றுவித்தல். 225

226. அம்ம வாழி தோழி நம்மலை
நறுந்தண் சிலம்பின் நாறுகுலைக் காந்தள்
கொங்குஉண் வண்டின் பெயர்ந்துபுற மாறிநின்
வண்புடை விறற்கவின் கொண்ட
வன்பி லாளன் வந்தனன் இனியே.

தலைவியே! ஒரு செய்தி கேள். உன் அழகைக் கவர்ந்து கொண்ட மெய்யன்பில்லாத நம் பெருமான், நமது மலைப் பக்கத்திலுள்ள காந்தள் பூங்கொத்தின்கண் தேன் உண்ணும் வண்டு போன்று மீண்டும் நினையாமல் பிரிந்துபோய் புறத்தே தன் நெஞ்சம் திரிந்து இப்போது வந்தனன் காண் அறிக.

அவன் காலந்தாழ்த்தமைக்குக் காரணம் அவன் நின்னை மறந்து புறமாறியதும் அன்பில்லாமையும் அல்ல, வினை முடியாமையே என்று

Koviloor Digital Library

உணர்த்தினாளாயிற்று : புறமாறுதல் - பற்றியதை விடுத்து மற்றொன்றைப் பற்றுதல்.

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் மகிழ்வித்தல். 226

227. அம்ம வாழி தோழி நாளும்
நன்னுதல் பசப்பவும் நறுந்தோள் நெகிழவும்
ஆற்றலம் யாம்என மதிப்பக் கூறி
நப்பிரிந்து உறைந்தோர் மன்றநீ
விட்டனை யோஅவர் உற்ற சூளே.

தலைவியே! கேள். நின்னுடைய நெற்றி பசப்பவும், தோள்கள் மெலியவும் யாம் பிரியோம் என்று அவர்க்கு மொழிந்து வைத்தும் பன்னாளும் தம் உறுதிமொழி மறந்து, நம்மை மறந்து தம் மனைக்கண் இனிது வைகினர் ஆதலின் நீ பெருமான் முன்பு உற்ற சூள் மொழியையும் விட்டுவிட்டாயோ? அதனை நீ நம்புதியாயின் இவ்வாறு மெலிதல் வேண்டா அன்றோ?

இவன் எஞ்ஞான்றும் எம்மைப் பிரியான் என்று நம்புதற் பொருட்டு, அவள் கையைப் பற்றி யாதானுமொரு தெய்வத்தை முன்னிட்டுச் சூளுறவு செய்வன். இவ்வாறு சூள் மொழிதலைத் தலைவி பின்னொரு கால் கொண்டு கூறினாள்.

மெய்ப்பாடு - அழுகை. பயன் வரைவு கடா அுதல். 227

228. அம்ம வாழி தோழி நம்மூர்
நிரந்திலங்கு அருவிய நெடுமலை நாடன்
இரந்துகுறை யுறாஅன் பெயரின்
என்ஆ வதுகொல்நம் இன்னுயிர் நிலையே.

தலைமகன் வரைவு வேண்டிவிடத் தமர் மறத்துழி அவர் கேட்கு மாற்றால் தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தோழி அறத்தொடு நின்றது.

தலைவியே கேட்பாயாக! அருவிகள் பொருந்திய அம்மலை நாடன் நம் சுற்றத்தார் தனது குறையை முடித்தல் உறானாய் நம்

Koviloor Digital Library

ஊரினின்றும் போய் விடுவானாயின் நம்முடைய இனிய உயிரின் நிலைமை யாதாகுமோ அறிகிலேன்.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - அறத்தொடு நிற்றல். 228

229. அம்ம வாழி தோழி நாம்அழப்
பன்னாள் பிரிந்த அறனி லாளன்
வந்தன னோமற்று இரவில்
பொன்போல் விறல்கவின் கொள்ளுநின் நுதலே.

தலைவியே! நீ நீடு வாழ்க. நான் கூறுவதைக் கேள். ஒளி இழந்திருந்த நின் நுதல் இப்போது பொன் போன்று ஒளி வீசுகின்றதே இதற்குக் காரணம் என்ன? கழிந்த இரவின்கண் நாம் அழும்படியாக நம்மைப் பல நாட்கள் பிரிந்திருந்தவன் கண்ணனாகிய நம் பெருமான் வரைவொடு வந்தான் கொல்லோ? கூறுக.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - மகிழ்ச்சி கூர்தல். 229

230. அம்ம வாழி தோழி நம்மொடு
சிறுதினைக் காவல னாகிப் பெரிதுநின்
மெல்தோள் நெகிழவும் திருநுதல் பசப்பவும்
பொன்போல் விறற்கவின் தொலைத்த
குன்ற நாடற்கு அயர்வர்நன் மணனே!

தலைவியே! நீ நீடு வாழ்க. நான் சொல்வதைக் கேள். யாம் தினைக் காவல் செய்துழி வந்து நம் கேண்மை பெற்றுப் பின்னர் நின்னுடைய மெல்லிய தோள் மெலியவும், நுதல் பசலை பூப்பவும் நம்மைப் பிரிந்து சென்றமையால் நினது பேரழகினை அழித்தொழித்த அந்த மலை நாடனுக்கே நின்னை நம் சுற்றத்தார் பலரறி மணம் புணர்த்துவர். ஐயுறேல்.

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - ஆற்றுவித்தல். 230

- அம்மவாழிப் பத்து முற்றிற்று -

Koviloor Digital Library

24. தெய்யோப் பத்து

அஃதாவது 'தெய்யோ' என்னும் இடைச்சொல்லால் இற்ற பத்துச் செய்யுட்களின் தொகுதி என்றவாறு.

231. யாங்குவல் லுநையோ ஓங்கல் வெற்ப
இரும்பல் கூந்தல் திருந்திழை அரிவை
திதலை மாமை தேயப்
பசலை பாயப் பிரிவு தெய்யோ.

ஒருவழித் தணந்துவந்த தலைமகற்குத் தோழி சொல்லியது. உயர்ந்த மலைகளையுடைய பெரும! கரிய கூந்தலையும் திருந்திய அணிகளையும் உடைய நம் பெருமாட்டியின் தேமல் படர்ந்த தளிர்த் திருமேனி நிறம் மாறவும் அவள் உடம்பில் பசலை அதிகரிக்கவும் நீ அவளைப் பிரிந்து போகும் வன்கண்மையை எப்படிச் செய்கின்றாயோ? யான் அறிகிலேன்.

மெய்ப்பாடு இளிவரல் பயன் - தலைவனின் கொடுமை கூறுதல்.

232. போதார் கூந்தல் இயலணி அழுங்க
ஏதி லாளனை நீபிரிந் ததற்கே
அழலவிர் மணிப்பூண் அனைய்ப்
பெயலா னாஎன் கண்ணே தெய்யோ.

தோழி தலைமகற்குச் சொல்லியது.

நொதுமல் தன்மையுடைய நீ எம் பெருமாட்டியினது இயற்கையழகும் செயற்கை அழகும் கெட்டொழியும்படி பிரிந்ததன் பொருட்டு என்னுடைய விழிகள் என்னுடைய மணி அணிகலன்கள் நனையும்படி துன்பக் கண்ணீர் சொரிதலை ஒழியாவாயின

Koviloor Digital Library

மெய்ப்பாடு அழுகை. பயன் - வரைவு கடா அதல். தலைவி துன்பக்கடலில் விழுந்து கிடந்தாள். யான் செயலறு நிலை எய்தினேன் என்பதாம். 232

233. வருவை யல்லை வாடைநனி கொடிதே
அருவரை மருங்கின் ஆய்மணி வரன்றி
ஒல்லென இழிதரும் அருவிநின்
கல்லுடை நாட்டுச் செல்லல் தெய்யோ.

பெருமானே! வாடைக் காற்றோ தனித்துறைவாரைக் கொல்வது போலும் மிகக் கொடியதாயிருக்கிறது. நீயோ இவளைப் பிரிந்து செல்லின் இவள் இயல்பறிந்து விரைந்து மீண்டு வருவாயும் அல்லை. ஆதலால் அருவிகளையுடைய நின் கல்லுடை நாட்டிற்குச் செல்லாதே. செல்லின் இவளை ஆற்றுவித்தல் அரிது. கட்டுடை நாடு - குறிஞ்சி நிலம்; செல்லல் - செல்லற்க.

மெய்ப்பாடு அச்சம். பயன் - விரைந்து வருமாறு வற்புறுத்தல். 233

234. மின்னவிர் வயங்கிழை ஞெகிழச் சாஅய்
நன்னுதல் பசத்த லாவது துன்னிக்
கனவிற் காணும் இவளே
நனவிற் காணாள்நின் மார்பே தெய்யோ.

பெருமானே! எம் பெருமாட்டி நீ பிரிந்து உறையுங்கால் அரிதில் சிறிது துயின்றால் கனவில் நின் மார்பைக் காண்பாள் விழிப்பு நிலையில் அத் திருமார்பைக் காணாது துன்புறுகிறாள். அணிகலன்கள் நெகிழும்படி மெலிந்து, நுதல் பசலை பூத்தற்குக் காரணம் இதுவே.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - வரைவு முடுக்குதல். ஆதலால் நீ இக்களவொழுக்கத்தைத் தவிர்ந்து நனி விரைந்து இவளை வரைந்து கோடல் வேண்டும் என்பது குறிப்பெச்சம். 234

Koviloor Digital Library

235. கையுற வீழ்ந்த மையில் வானமொடு
அரிது காதலர்ப் பொழுதே அதனால்
தெரியிழை தெளிர்ப்ப முயங்கிப்
பிரியலம் என்கமோ எழுகமோ தெய்யோ

தலைமகட்குத் தோழி கூறியது.

தலைவியே! நம் பெருமான் வந்து நிற்கும் இப்பொழுது, முகில்கள் இல்லாத தூய வானமாயுள்ளது. அதனால் நாமும் நம்பெருமானை இப்பொழுதே எதிர்கொண்டு, அவனைத் தழுவிக்கொண்டு யாம் இனி நின்னைப் பிரிந்துறையோம் என்று சொல்வோமா அவனுடன் போதற்கு உடன்பட்டுப் புறப்படுவோமா. எழுவாயாக. என்று நயமாகக் கூறுகின்றாள்

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - உடன் போக்குதல். 235

236. அன்னையும் அறிந்தனள் அலரும் ஆயின்று
நன்மனை நெடுநகர் புலம்புகொள உறுதரும்
இன்னா வாடையும் மலையும்
நும்மூர்ச் செல்கம் எழுகமோ தெய்யோ.

பெருமானே! எங்கள் தாயும் நமது களவொழுக்கத்தை அறிந்து கொண்டாள். ஊர் முழுவதும் பழிச்சொல்லும் பரவுகின்றது. இது காறும் இன்பந்தந்த எங்கள் வீடும் நாங்கள் தனிமைத் துயரத்தை நுகர்தற்கு ஏற்றதாகிவிட்டது. துன்புறுத்தும் வாடைக் காற்றும் எம்மைப் பெரிதும் வருத்துகின்றது. ஆதலால் நும்முடைய ஊர்க்குச் செல்லுதற்கு புறப்படுவோமா? பெருமான் திருவுள்ளம் யாது? அருளிச் செய்க. (நீ கருதியது யாது? கூறுக என்பது குறிப்பெச்சம்)

மெய்ப்பாடு - அழுகை. பயன் - வரைவு முடுக்குதல். 236

237. காமம் கடவ உள்ளம் இனைப்ப
யாம்வந்து காண்பதோர் பருவம் ஆயின்
ஓங்கித் தோன்றும் உயர்வரைக்கு
யாங்கெனப் படுவது நும்மூர் தெய்யோ.

Koviloor Digital Library

25. வெறிப் பத்து

அஃதாவது . .செய்யுள் தோறும் வெறியாடல் என்னும் பொருள் விரவிவந்த பத்துச் செய்யுளின் தொகுதி என்றவாறு.

241. நம்முறு துயரம் நோக்கி அன்னை
வேலன் தந்தா ளாயின்அவ் வேலன்
வெறிகமழ் நாடன் கேண்மை
அறியுமோ தில்ல செறியெயிற் றோயே

நெருங்கி நிரல்பட்ட பல்லினையுடைய தலைவியே! நம்தாய் நம்முடைய பெருந்துயரத்தைக் கண்டு அதற்குரிய காரணத்தைக் காண்டற் பொருட்டு வேல்மகனை அழைத்து வினவுவாளாயின், ஏதிலனாகிய அந்த வேல் மகன் நறுமணம் கமழ்தற்குக் காரணமான குறிஞ்சி நாட்டுப் பெருமகனோடு யாம் கொண்டுள்ள காதல் தொடர்பினை அறிந்து கூற வல்லுநன் ஆவனோ? ஆகான் அன்றே.

இதனால் தலைவி உற்ற நோய் தெய்வத்தானாயது அன்று என்றும் வெறி கமழ் நாடன் ஒருவனோடு கேண்மை கொண்டதனால் உற்ற தென்றும் இது தீர்தற்கு நாடனுக்கு நம் நங்கையைக் கொடுப்பதன்றி வேலனை வினாதலும் வெறியாடலும் வீணாம் என்பதும் குறிப்பாலே செவிலி உணருமாறு தோழி கூறுதல் உணர்க.

மெய்ப்பாடு - அச்சத்தைச் சார்ந்த பெருமிதம். பயன் அருமறை யுயிர்த்து அறத்தொடு நிற்றல். 241

242. அறியா மையின் வெறியென மயங்கி
அன்னையும் அருந்துயர் உழந்தனள் அதனால்
எய்யாது விடுதலோ கொடிதே நிரையிதழ்
ஆய்மலர் உண்கண் பசப்பச்
சேய்மலை நாடன் செய்த நோயே

Koviloor Digital Library

தலைவியே! நம் தாயும் நின் நோய்க்குரிய காரணத்தை அறிதற்கு ஏது இன்மையால் தீர்த்தற்கரிய பெருந்துயரம் எய்துகின்றாள். அதனால் நின் மையுண்ட கண்கள் பசலையுள் மூழ்கும்படி மலை நாடனாகிய நம் பெருமான் நம்மைப் பிரிந்தமையால் ஏற்பட்ட காரணத்தை நாம் மறைத்தலால் தீமையே ஏற்படும். மலை நாடன் நம்மோடு கேண்மை கொண்டு பின் பிரிந்தமையால் செய்த நோய் என்பாள் நாடன் செய்த நோய் என்றாள்.

மெய்ப்பாடு - அச்சம் சார்ந்த பெருமிதம்; பயன் - தலைவியின் உடன்பாட்டுடன் அறத்தொடு நிற்றல். 242

243. கறிவளர் சிலம்பின் கடவுள் பேணி
அறியா வேலன் வெறியெனக் கூறும்
அதுமனம் கொள்குவை அனையிவள்
புதுமலர் மழைக்கண் புலம்பிய நோய்க்கே.

தாயுழை அறியாமை கூறித் தோழி வெறி விலக்கியது.

அன்னையே கேட்டருள்க. நின் மகளின் கண்கள் தனிமையுற்றமையால் உண்டான பசலை நோய்க்குக் காரணம் அறியாமல் வேலனை வினவக் கருதுகின்றனை. வெறியாடலும் யாது கேட்பினும் தெய்வக் குறையென்று கூறுதலுமன்றி வேறொன்றும் அறியாத வேல்மகன் மிளகு வளர்தற்குரிய மலைகட்குத் தெய்வமாகிய முருகனை வாழ்த்திப் பாடி, இது தெய்வத்தானாயது ஆகலின் இதற்கு மருந்து வெறியாடுதலே யாம் என்று தேற்றமாகக் கூறுவான். நீயும் அவன் கூறியபடியே வெறியாட்டு எடுக்கத் தொடங்குவை. உண்மையான காரணம் அதுவன்று. அனை - அன்னை. இடைக்குறை.

மெய்ப்பாடு - அச்சம். பயன் - அறத்தொடு நிற்றலும் வெறிவிலக்கலுமாம். 243

244. அம்ம வாழி தோழி பன்மலர்
நறுந்தண் சோலை நாடுகெழு நெடுந்தகை
குன்றம் பாடான் ஆயின்
என்பயஞ் செய்யுமோ வேலற்குஅவ் வெறியே

Koviloor Digital Library

வெறியாடல் துணிந்துழி விலக்கலுறும் தோழி செவிலி கேட்குமாற்றால் தலைமகட்குச் சொல்லியது.

பெருமாட்டியே! கேள் வேலன் வெறியாடல் தொடங்குகின்றான். குளிர்ந்த சோலைகளையுடைய நம் தலைவனது மலையினை ஏத்திப் பாடா தொழிவானாயின் அறியாமையுடைய அவ்வேலனுக்கு அந்த வெறியாடல் என்ன பயனைச் செய்யும். யான் அறிகிலேன் தலைவனுடைய குன்றத்தைப் பாடுங்கால் தலைவி மகிழ்வாள்.

மெய்ப்பாடு - அச்சம். பயன் - வெறிவிலக்கி அறத்தொடு நிற்றல் 244

245. பொய்யா மரபின் ஊர்முது வேலன்
கழங்குமெய்ப் படுத்துக் கன்னந் தூக்கி
முருகென மொழியும் ஆயின்
கெழுதகை கொல் இவள் அணங்கி யோற்கே.

தலைமகன் சிறைப்புறத்தானாக வெறியறிவுறீஇத் தோழி வரைவு கடாஅயது.

பொய் கூறாத நம்மூர் முதிய வேலன் கழங்குகளால் ஆராய்ந்து உண்மையைக் கண்டு வெளிப்படுத்தும் கன்னத்தைக் கையில் தூக்கிக் கொண்டு இவள் உற்ற நோய்க்குக் காரணம் முருகன் என்று கூறுவான் ஆயின் எம் பெருமாட்டியை வருத்திய தலைவனுக்கும் அக்கூற்று உரிமையுடையதாகுமோ?

கன்னம் - தாயத்து.

மெய்ப்பாடு - அச்சம். பயன் - வரைவு முடுக்குதல். தோழி தன் நெஞ்சிற்குக் கூறியது. 245

246. வெறிசெறித் தனனே வேலன் கறிய
கன்முகை வயப்புலி கழங்குமெய்ப் படூஉ
புன்புலம் வித்திய புனவர் புணர்த்த
மெய்ம்மை யன்ன பெண்பாற் புணர்ந்து
மன்றில் பையுள் தீரும்
குன்ற நாடன் உறீஇய நோயே.

Koviloor Digital Library

பெருமாட்டியே! புன்செயில் தினை விதைத்த குறவர் இயற்றி வைத்த கழற்சிக் காயைக் கண்ணாகக் கொண்ட பொய்ம்மையாகிய பெண்புலியைக் குகைக்கண் உறையும் வலிமிக்க ஆண்புலி தனது காம வேகத்தால் புணர்ந்து கொல்லை நடுவேயுள்ள மன்றில் தனது காமப் பிணியைத் தீர்த்துக் கொள்ளுதற்கு இடனான நம்பெருமான் செய்த நோய் காரணமாக வேலன் வெறியாடற்குரிய பொருள்களைக் களத்தில் நிரப்பினன். இனி யாம் என் செய்கோ?

மெய்ப்பாடு - அச்சம். பயன் - வரைவு கடாஅதல். 246

247. அன்னை தந்தது ஆகுவது அறிவன்
பொன்னகர் வரைப்பின் கன்னம் தூக்கி
முருகென மொழியும் ஆயின்
அருவரை நாடன் பெயர்கொலோ அதுவே

வெறிவிலக்கலுறுந் தோழி தமர்கேட்பத் தலைமகளை வினவுவாளாய்ச் சொல்லியது.

பெருமாட்டி! இவ்வெறியாடல் நம் தாயால் நிகழ்த்தப்பட்டது. நிகழ்வதனை அறியும் தன்மையுடைய வேலன் அழகிய நம் மனைப் படப்பையின்கண் வெறியாடல் நிகழ்த்தி இறுதியில் கன்னத்தைக் கைக் கொண்டு இது முருகனால் ஆயது என்று கூறுதல் ஒரு தலை. அக் கூற்றை ஆராயின் அம் முருகன் என்பது ஏறுதற்கரிய மலைகளையுடைய குறிஞ்சிக் கோமானாகிய நம்பெருமான் பெயராகவும் இருக்குமோ.

மெய்ப்பாடு - அச்சம். பயன் - வெறி விலக்கலும் அருமறை உயிர்த்தலுமாம். 247

248. பெய்ம் மணல் முற்றம் கவின்பெற இயற்றி
மலைவான் கொண்ட சினைஇய வேலன்
கழங்கினால் அறிகுவது என்றால்
நன்றால் அம்ம நின்றஇவள் நலனே.

தோழி வெறிவிலக்கிச் செவிலிக்கு அறத்தொடு நின்றது. கொண்டு வந்து இடப்பட்ட மணலையுடைய முற்றம் மேலும்

Koviloor Digital Library

அழகுறும்படி மலர் முதலியவற்றானும் அழகுறச் செய்து, போரிடற் பொருட்டு முருகன் கைக்கொண்ட சினந்த வேலை ஏந்திய இவ் வேல் மகன், இப்பெருமகள் பால் நிலைநின்ற கற்புடைமை தனது கழங்குகளால் அறிந்து கூறப்படுமானால் மிகவும் நன்று.

வேலன் வெறியாடுங்கால் சினந்தான் போன்று காட்டுதல் வழக்கம்.

மெய்ப்பாடு - அச்சம். பயன் - வெறி விலக்கலும் அறத்தொடு நிற்றலுமாம். 248

249. பெய்ம்மணல் வரைப்பின் கழங்குபடுத்து அன்னைக்கு
முருகென மொழியும் வேலன் மற்றவன்
வாழிய விலங்கு மருவிச்
சூர்மலை நாடனை அறியா தோனே.

வேலன் கூறிய மாற்றத்தை மெய்யெனக் கொண்ட தாய் கேட்பத் தலைமகட்குத் தோழி கூறியது.

பெருமாட்டியே! நம் தாய் அழைத்து வினவிய வேலன், புதுமணல் பரப்பிய வெறியாடற் களத்தின் மிசை கழங்குகளைப் பரப்பிக் குறி பார்த்து நம் தாய்க்கு நின் மெலிவுக்குக் காரணம் முருகன் குறையேயாகும் என்று கூறுகின்றான். அந்த வேலன் நீடு வாழ்வானாக! ஏனென்றால் அருவியையும் தீண்டி வருத்தும் தெய்வத்தையும் ஒருங்கேயுடைய குறிஞ்சிக் கோமகனாகிய நம்பெருமானை அறிந்து அவட்குக் கூறாமையின். அறிந்து கூறியிருப்பனேல் நம் நிலை என்னாம்?

மெய்ப்பாடு - அச்சம். பயன் - அறத்தொடு நிற்றலும் வெறி விலக்கலும். 249

Koviloor Digital Library

250. பொய்படுபு அறியாக் கழங்கே மெய்யே
மணிவரைக் கட்சி மடமயில் ஆலும்நம்
மலர்ந்த வள்ளியம் கானம் கிழவோன்
ஆண்டகை விறல்வேள் அல்லன்இவள்
பூண்தாங்கு இளமுலை அணங்கி யோனே.

தோழி கழங்கை முன்னிலைப் படுத்திக் கூறியது.

பொய்படுதல் அறியாத கழங்கே! நீயுமா பொய் கூறத் தொடங்கிவிட்டாய். எம் பெருமாட்டியைத் தனது முயக்கத்தாலே வருத்தியவன் மலைகள் அமைந்த காட்டினூடே இளமயில்கள் களித்துக் கூத்தாடுதற்கிடனான வள்ளிக் கொடி படர்ந்த அழகிய காட்டிற்கு உரிமை யுடையோனாகிய பெருந்தகையே! இஃதன்றோ உண்மையாகும். ஆண்மைத் தன்மையுடைய வெற்றி பொருந்திய செவ்வேள் அல்லனே! நீ செவ்வேள் என்று பொய் கூறுகின்றனையே.

மெய்ப்பாடு - அச்சம். பயன் - வெறிவிலக்கி அறத்தொடு நிற்றல். 250

- வெறிப்பத்து முற்றிற்று -

Koviloor Digital Library

அஃதாவது குன்றக் குறவன் என்றே தொடங்குகின்ற பத்துச் செய்யுளின் தொகுதி என்றவாறு.

251. குன்றக் குறவன் ஆர்ப்பின் எழிலி
நுண்பல் அழிதுளி பொழியும் நாட
நெடுவரைப் படப்பை நும்மூர்க்
கடுவரல் அருவி காணினும் அழுமே

குன்றில் வாழும் குறவன் தான் விளைக்கும் தினை முதலியவற்றிற்கு நீர் வேண்டி கடவுளை வாழ்த்தி ஆரவாரிப்பனேனும் அக்குன்றத்தில் தவழும் முகில் அவன் செய்யும் தொழிற்கு நீரைப்பொழிதற்கிடனான நல்ல நாட்டையுடைய பெருமானே! எம் பெருமாட்டி நெடிய மலைகளையும் தோட்டங்களையுமுடைய நும் ஊரினின்றும் விரைந்து வரும் அருவி நீரைக் கண்டாலும் நின் கொடுமை நினைந்து அழுகின்றாள்.

நின் மலையிலுறையும் எழிலிக்குளதாகிய அளியுடைமையும் நின் மாட்டிலையே என்னும் குறிப்புடையது.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - வரைவு முடுக்கல். 251

252. குன்றக் குறவன் புல்வேய் குரம்பை
மன்றாடு இளமழை மறைக்கும் நாடன்
புரையோன் வாழி தோழி விரைபெயல்
அரும்பனி அளைஇய கூதிர்ப்
பெருந்தண் வாடையின் முந்துவந் தனனே.

எம்பெருமாட்டி! இதைக்கேள். குன்றில் வாழும் குறவனுடைய புல்லால் வேயப்பட்ட சிறுகுடிலினது பொல்லாங்கை வானவெளியில்

Koviloor Digital Library

அசைகின்ற முதிராத வெண்முகில் பரிகரித்துப் போற்றுகின்ற மலை நாடன் மிக உயர்ந்த பண்புடையவன். அவன் வாழ்க. அவன் விரைந்து வரும் மழையினையும் பொறுத்தற்கரிய பனியினையும் உடைய குளிர்ப்பருவத்தின் வாடை வருவதற்கு முன்பே மீண்டு வந்து நம்மைப் பாதுகாத்து அருளினன். பொல்லாங்கு-குடிசைக்குள் வெயில் நுழைதலும் மழைநீர் புகுதலுமாம். புரை - உயர்வு.

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - தலைவியின் துயர் போக்கி மகிழ்வித்தல். 252

253. குன்றக் குறவன் சாந்த நறும்புகை
தேங்கமழ் சிலம்பின் வரையகம் கமழும்
கானக நாடன் வரையின்
மன்றலும் உடையள்கொல் தோழி யாயே

அன்புடைய தோழி! குன்றில் வாழும் குறவன் சந்தன மரத்தைச் சுடுதலான் எழுந்த நறும்புகை தேன் மணம் கமழும் மலையிடமெல்லாம் பரவி மணஞ்செய்கின்ற கானக நாடன் என்னைப் பலரறி மணம் செய்து கொள்ளுமிடத்து நம் தாய் அத்திருமணத்தை தனக்குரிமையுடையதாகக் கொண்டு சிறப்பிப்பாளோ? மாட்டாளோ? என் செய்வள் கூறுக.

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - நற்றாய்க்கு இரங்கல். களவொழுக்கத்தில் தன்னை இற்செறித்தும் புறம் போகாதவாறு தடுத்தும் கொடுமை பல செய்தவளாகிய நம் அன்னை இத் திருமணத்தில் தானும் மகிழ்ச்சியோடு கலந்து சிறப்பிப்பாளோ என்று வினவியபடியாம். 253

254. குன்றக் குறவன் ஆரம் அறுத்தென
நறும்புகை சூழ்ந்து காந்தள் நாறும்
வண்டிமிர் சுடர்நுதல் குறுமகள்
கொண்டனர் செல்வர்தம் குன்றுகெழு நாட்டே

உடன்போக்கு உடன்படவேண்டிய தோழி தலைமகட்குச் சொல்லியது. பெருமாட்டியே! ஒரு நற்செய்திகேள். குன்றில் வாழும்

Koviloor Digital Library

குறவன் சந்தன மரத்தை அறுத்துச் சுட்டமையால் எழுந்த நறும்புகை கமழ்தற்கு இடனான தம் மலை நாட்டில் நின்னை நம்பெருமான் தம்முடன் அழைத்துக் கொண்டு போவார் காண். அதற்கு நீ அமைந்திரு. ஆரம்-சந்தனமரம். தலைவனோடு கூடிச் செய்யும் இல்லறப் புகழ் என இவ்வாறு நுண்ணிதின் உவமமும் பொருளும் தேர்க. பொருள் - உபமேயம்.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - தலைவியை உடன் போக்கிற்கு ஒருப்படுத்தல். 254

255. குன்றக் குறவன் காதல் மடமகள்
வரையர மகளிர்ப் புரையுஞ் சாயலள்
ஐயள் அரும்பிய முலையள்
செய்ய வாயினள் மார்பினள் சுணங்கே.

'நின்னால் காணப்பட்டவள் எத்தன்மையள்?' என்ற பாங்கற்குத் தலைமகன் சொல்லியது.

நண்பனே! நான் கூறுவதைக் கேள். குன்றில் வாழும் குறவன் ஒருவனுடைய மகள் மிகவும் இளமையோள். வரையர மகளிரை யொத்த தெய்வத் தன்மையோடு மென்மையும் உடையள். அழகே தானாயவள். முதிராத இளைய முலைகளையுடையாள். சிவந்த வாயினையுடையாள். மேலும் தேமல் படர்ந்த மார்பையும் உடையாள், என்பதாம்.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - பாங்கனைத் துணை வேண்டல். 255

256. குன்றக் குறவன் காதல் மடமகள்
வண்டுபடு கூந்தல் தண்தழைக் கொடிச்சி
வளையள் முளைவாள் எயிற்றள்
இளையள் ஆயினும் ஆரணங் கினளே.

தோழியே கேள்! குன்றக் குறவனுடைய அன்பு செழுமிய இளமகள் நறுமணமிக்க கூந்தலையும் தழை ஆடையையும் உடைய

Koviloor Digital Library

அக்கொடிச்சி வளையல் அணிந்தவள், ஒளியுடைய பற்களையுடையவள். ஆண்டால் இளையள் என்றாலும் எனக்கு உயதற்கரிய பெருந் துயரத்தைத் தருபவளாகவே இருக்கின்றாள். ஆதலால் நீ துணை செய்யாயாயின் யான் இறந்துபடுதல் உறுதி.

மெய்ப்பாடு - இளிவரல். பயன் - குறை நயப்பித்தல். 256

257. குன்றக் குறவன் கடவுட் பேணி
இரந்தனன் பெற்ற வெள்வளைக் குறுமகள்
ஆயரி நெடுங்கண் கலிழச்
சேயதால் தெய்யநீ பிரியும் நாடே

வரைவிடை வைத்துப் பிரிவல் என்ற தலைமகற்குத் தோழி உடன்படாது கூறியது.

பெருமானே! குன்றக் குறவனாகிய எந்தையும் யாயும் முருகவேளை வழிபாடு செய்து வரமிரந்து அவன் அருளால் பெற்ற சிறுமியாகிய எம்பெருமாட்டியினது நெடிய விழிகள் துன்பத்தால் கனிந்து நீர் உகும்படி நீ எம்மைப் பிரிந்து சேறற்குக் குறித் துள்ள நாடு மிகவும் சேய்மைக்கண் இருத்தலின் பிரியற்க என்பதாம்.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - சேய்மைச் செலவினை அழுங்குவித்தல். பிரியக் கருதின் அணித்தாகப் பிரிந்து ஆவன செய்க என்பதாம். 257

258. குன்றக் குறவன் காதல் மடமகள்
அணிமயில் அன்ன அசைநடைக் கொடிச்சியைப்
பெருவரை நாடன் வரையும் ஆயின்
கொடுத்தனெம் ஆயினோம் நன்றே
இன்னும் ஆனாது நன்னுதல் துயரே.

குன்றக் குறவனுடைய பேரன்பிற்குரிய இளமகளாகிய மயில் போன்ற சாயலையும் அசைந்த நடையையும் உடைய நம் நங்கையை மலை

Koviloor Digital Library

நாடனாகிய அந்நம்பி மணந்து கோடற்கு விரும்புவானாயின் யாமும் இயைந்து வழங்குவது நற்செயலாகும் வழங்காது மறுப்பின் இவளுடைய துயரம் இப்போதுள்ளதைக் காட்டிலும் பெருகி ஒழிவு இலதாதல் உறுதி இனி இவனினும் சிறந்தானொரு நம்பியை நாம் காண்டல் அரிது என்பாள் கொடுத்தனம் ஆயின் நன்று என்றாள்.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - தலைவனை ஆற்றுவித்தலும் தமரை வரைவு உடம்படுவித்தலுமாம். 258

259. குன்றக் குறவன் காதல் மடமகள்
மன்ற வேங்கை மலர்சில கொண்டு
மலையுறை கடவுள் குலமுதல் வழுத்தித்
தேம்பலிச் செய்த ஈர்நறுங் கையள்
மலர்ந்த காந்தள் நாறிக்
கவிழ்ந்த கண்ணள்எம் அணங்கி யோளே.

தலைவன் மகிழ்ந்து தன்னுள்ளே கூறியது.

எம்மைப் பெரிதும் வருத்தியவளாகிய குன்றக் குறவனுடைய அன்பு கெழுமிய மகள் மன்றத்தின்கண் நிற்கின்ற வேங்கைமலர் சிலவற்றைக் கொய்து தூவி, மலைதோறும் எழுந்தருளியிருக்கின்ற இறைவனாகிய தம் குலதெய்வத்தை வழிபாடு செய்து தேனாகிய பலியை அள்ளிச் சொரிதலால் நனைந்த நறிய கையையுடையவளாய் காந்தள் பூவின் மணம் கமழ்ந்து கண்ணீர் சொரிகின்ற கண்ணை யுடையளாய் தோன்றுகின்றாள் இவ்வாறு மகளிர் தமக்கு விரைவில் மணம் நிகழவேண்டும் என்று கடவுள் வழிபாடு செய்வது வழக்கம்.

மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - மகிழ்தல். 259

260. குன்றக் குறவன் காதல் மடமகள்
மென்தோள் கொடிச்சியைப் பெறற்கரிது தில்ல
பைம்புறப் படுகிளி ஒப்பலர்
புன்புல மயக்கத்து விளைந்தன தினையே.

Koviloor Digital Library

பகற்குறிக்கண் வந்த தலைமகனைத் தோழி இனிப் புனங்காவற்கு வாரோம் எனக் கூறி வரைவு கடாஅயது.

பெருமானே! இந்தப் புன்செய் நிலத்தில் தினைக் கதிர்கள் நன்கு முற்றிவிட்டன. ஆதலால் இனி இவற்றைக் கடிதின் அரிவதல்லது இங்கு வரும் கிளிகளை ஓட்ட எம்மை அனுப்ப மாட்டார். குன்றக் குறவன் காதல் மட மகளாகிய எம் பெருமாட்டியை நீ காண்டற்குச் செவ்வி இல்லை. யாம் என் செய்கோ?

எனவே நீ இனி விரைவில் வரைந்து கோடல் வேண்டும் என்பது குறிப்பெச்சம்.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - வரைவு கடா அதல். காதல் மடமகளாதலின் இவளைப் புறம் போகவும் விடாது பாதுகாப்பர் என்பதும் தோன்றிற்று. 260

- குன்றக் குறவன் பத்து முற்றிற்று -

Koviloor Digital Library

27. கேழற் பத்து

அஃதாவது கேழல் - பன்றி. செய்யுள் தோறும் பன்றியாகிய இக் குறிஞ்சிக் கருப்பொருள் விரவி வந்த பத்துச் செய்யுளின் தொகுதி என்றவாறு.

261. மென்தினை மேய்ந்த தறுகண் பன்றி
வன்கல் அடுக்கத்துத் துஞ்சும் நாடன்
எந்தை அறிதல் அஞ்சிக் கொல்
அதுவே மன்ற வாரா மையே.

பெருமாட்டியே! பிறர் விளைத்த மெல்லிய தினைப் பயிரை மேய்ந்து பசி தீர்ந்த வன்கண்மையுடைய பன்றி பிறர் தன்னைக் காண்டற் கரிய வலிய மலைச் சூழலில் கவலையின்றி உறங்குகின்ற குறிஞ்சி நாடனாகிய நம் பெருமான் நேற்று இரவுக் குறிக்கண் வாராமைக்குக் காரணம் நம் தந்தை அறிவர் என்றும், அறியின் ஏதமாம் என்றும் அஞ்சிய அச்சம் போலும் ஐயுறுவானேன்?

மெய்ப்பாடு - அழுகை. பயன் - அவன் இடையறவின்றி வருதலைத் தாம் விரும்புவதனை அவற்கு உணர்த்துவது. (வரைவு கடாஅதலன்று). 261

262. சிறுதினை மேய்ந்த தறுகண் பன்றி
துறுகல் அடுக்கத்துத் துணையொடு வதியும்
இலங்குமலை நாடன் வரூஉம்
மருந்தும் அறியும்கொல் தோழிஅவன் விருப்பே.

தோழியே! கூறுக. சிறிய தினைப் பயிரைத் தின்றவன் கண்மையுடைய பன்றி பக்க மலைகளில் தனது பெண் பன்றியோடு கூடி இனிதாக உறைதற்கு இடனான விளங்காநின்ற மலை நாட்டை யுடையோனது காதல் என்னைப் பிரிந்து இன்னா நோய் செய்தலே அன்றி அவன் ஈண்டு வருவதாகிய மருந்தும் அறியுமோ? கூறுக.

Koviloor Digital Library

மெய்ப்பாடு - அச்சம். பயன் - ஐயம் தீர்தல். 262

263. நன்பொன் அன்ன புனிறுதீர் ஏனல்
கட்டளை அன்ன கேழல் மாந்தும்
குன்றுகெழு நாடன் தானும்
வந்தனன் வந்தன்று தோழிஎன் நலனே.

தோழியே கேள்! குற்றமற்ற பொன் போன்ற நிறமுடைய முதிர்ந்த தினைக்கதிரை கரிய நிறமுடைய கேழல் வயிறாரத் தின்றற்கிடனான மலை நாடனாகிய நம்பெருமானும் அளிசிறந்து வரைவொடு மீண்டு வந்தான். ஆதலால் என்னைப் பிரிந்து சென்ற என் பேரழகும் மீண்டும் என்பால் வந்தது காண். இதைநீ அறிந்திலையோ? தலைவனுடைய அளியுடைமையைப் பாராட்டுவாள் அவன் குன்று கெழு நாட்டின் கண் வாழும் கேழலும் பொன்னிறத் தினையைத்தின்று இனிதுவாழும் என்றாள்.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - தோழிக்குத் தலைவன் வரவுணர்த்துதல். 263

264. இளம்பிறை யன்ன கோட்ட கேழல்
களங்கனி யன்ன பெண்பாற் புணரும்
அயந்திகழ் சிலம்ப கண்டிகும்
பயந்தன மாதோநீ நயந்தோள் கண்ணே.

இளம்பிறை போன்ற வடிவமும் வண்ணமும் உடைய மருப்புகளையுடைய ஆண் பன்றி களாப்பழம் போன்ற கருநிறமுள்ள தனது பெண்பன்றியினது செவ்வி தேர்ந்து கூடிக் களித்தற்கிடனான நன்னீர் அருவிகளையுடைய மலைநாடனே! நின்னால் விரும்பப்பட்ட எம் பெருமாட்டியின் விழிகளைக் கூர்ந்து பார். அவை தம் பேரெழில் கெட்டுப் பசலையுள் மூழ்கிவிட்டன.

கேழல் செவ்வி யறிந்து பிணவைப் புணரும் என்றது கீழ்ச்சாதி விலங்கினங்களின்பால் இயல்பாகக் காணப்படுகின்ற அளிமையுடைமை கூட நின்பாற் கண்டிலேம், நின் பெண்பாலோ கண் பசந்தனள்.

Koviloor Digital Library

மெய்ப்பாடு - அழுகை. பயன் - வரைவு கடா அதல். 264

265. புலிகொல் பெண்பால் பூவரிக் குருளை
வளைவெண் மருப்பின் கேழல் புரக்கும்
குன்றுகெழு நாடன் மறந்தனன்
பொன்போல் புதல்வனோடு என்நீத் தோனே.

பரத்தை இடத்தானாக ஒழுகுகின்ற தலைமகன் விடுத்த வாயில் மாக்கட்குத் தலைமகள் சொல்லியது.

மடவீர், புலியால் கொல்லப்பட்டு இறந்த பெண் பன்றியினது குட்டியை அவற்றின் தந்தையாகிய ஆண் பன்றி பாதுகாத்தலைச் செய்தற்கிடனான மலைநாடன் எம்மைத் துவர மறந்து, பொன்போலும் பெறற்கரிய தன் புதல்வனோடு என்னைப் பிரிந்து பரத்தையர் சேரியிலேயே உறைகின்றான். அவன் பொருட்டு நீயிர் வாயில் வேண்டி வருதல் என்னை?

என்னை நீத்தலான் யான் துயரந்தாங்காமல் இறந்துபட்டாலும் தன் புதல்வனைத் தானே வளர்த்துக்கோடல் இயலும் என்னும் துணிவானும் என்னை நீத்தனன் என்பது உள்ளுறை உணர்த்தும் பொருள்.

மெய்ப்பாடு - சினம் பயன் - வாயில் மறுத்தல். 265

266. சிறுகண் பன்றிப் பெருஞ்சின ஒருத்தலொடு
குறுங்கை இரும்புலி பொரூஉம் நாடன்
நனிநாண் உடைமையம் மன்ற
பனிப்பயந் தனநீ நயந்தோள் கண்ணே.

சிறிய கண்ணையும் பெரிய வெகுளியையும் உடைய ஆண் பன்றியோடு குறுகிய முன்கால்களையுடைய பெரியபுலி போரிடுவதற்கிடனான மலை நாடனே! யாங்கள் நாணுடையவர்கள். நீ விரும்பிய பெருமாட்டியின் கண்கள் துன்பக் கண்ணீர் உகுக்கின்றன. நீயே அறிந்து அதற்கு ஆவன செய்தருள்க. தலைவியை மணம் பேசி

Koviloor Digital Library

ஏதிலார் வந்துள்ளனர் ஆதலால் நீ விரைந்து வரைந்து கொள்க என்பது உள்ளுறை உணர்த்தும் பொருள்.

மெய்ப்பாடு - அழுகை; பயன் - வரைவு முடுக்கல். 266

267. சிறுகண் பன்றிப் பெருஞ்சின ஒருத்தல்
துறுகல் அடுக்கத்து வில்லோர் மாற்றி
ஐவனம் கவரும் குன்ற நாடன்
வண்டுபடு கூந்தலைப் பேணிப்
பண்பில சொல்லும் தேறுதல் செத்தே.

சிறிய கண்களையும் மிக்க வெகுளியையும் உடைய ஆண்பன்றி பக்கமலைச் சாரலில் குறவர்களைக் காவலின்கண் சோர்ந்திருக்கும்படி மாறுபடுத்தி ஐவனநெல்லைக் கவர்ந்துண்டற்கு இடனான மலை நாடன் இப்பேதையின் இயலறிந்து தான் கூறுகின்ற பொய்களை நம்பும்படி செய்து வாய்மையில்லாத வஞ்ச மொழிகளையும் நிரம்பக் கூறுவான்.

எம்பெருமானே! நீயும் எம் பெருமாட்டியைக் காவல் செய்வோர் சோர்வொற்றி அவளிடம் வந்து இன்பம் நுகர்ந்து போகின்றனை. இவ்வின்பமே நின்குறிக்கோள். வரைந்து கொள்வதன்று. அதற்கேற்ப இவளும் நனிபேதையாயினள் என்பது உள்ளுறை உணர்த்தும் பொருள்.

மெய்ப்பாடு - இளிவரல். பயன் - தலைவன் கொடுமையை யுணர்த்தி வரைவு கடாவல். 267

268. தாஅய் இழந்த தழுவரிக் குருளையொடு
வளமலைச் சிறுதினை யுணீஇய கானவர்
வரையோங்கு உயர்சிமைக் கேழல் உறங்கும்
நன்மலை நாடன் பிரிதல்
என்பயக்கும் மோநம் விட்டுத் துறந்தே.

பெருமாட்டியே! தம் தாய் பன்றியை இழந்துவிட்டமையால் சிறிய குட்டியோடு சென்று வளமிக்க மலைச்சாரலில் சிறிய தினையைத்

Koviloor Digital Library

தின்று பசிதீரக் கருதிய கேழல் குட்டியைப் பிரிந்துபோய் மலையுச்சியில் துயில்வதற்கு இடனான மலை நாடன் இந்நிலையில் நம்மைப் பிரிந்து சேய நாட்டிற்குப் போதல் வேறு எந்த நன்மையைப் பயக்கும்.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - செலவு அழுங்குவித்தலும் உடன் போக்கிற்கு உடம்படுவித்தலும். 268

269. கேழல் உழுதெனக் கிளர்ந்த எருவை
விளைந்த செறுவில் தோன்றும் நாடன்
வாராது அவண்உறை நீடின் நேர்வளை
இணைஈர் ஓதி நீயழத்
துணைநணி இழக்குவென் மடமை யானே.

எம் பெருமகளே! கேள். பன்றிகள் கிண்டியுழுதனவாகப் பண்பட்ட கரம்பு நிலம் தழைத்து மண்டிய பைஞ்சாய் கோரையினால் ஐவன நெல் விளைந்த நன்னிலம் போன்று தோன்றும் நாடன், நீ இவ்வாறு அழும்படி ஈண்டு வாராமல் தன் மனைக் கண்ணே தங்குதல் இனியும் நிகழுமாயின் உனக்குத் துணையாய் இருப்பதை இழந்துவிடுவேன். அதற்குக் காரணம் அத்தலைவனும் அல்லன். என் மடமையே யாகும்.

அவன் கூறிய பசப்புரையை நான் வாய்மை மொழிகளாகக் கொண்டு மயங்கிவிட்டேன் என்று தோழி கூறுகின்றாள்.

மெய்ப்பாடு - இளிவரல். பயன் - தலைவன் வரவினைப் பெரிதும் விரும்புதலை அவனுக்கு உணர்த்துதல். 269

270. கிழங்ககழ் கேழல் உழுத சிலம்பில்
தலைவிளை கானவர் கொய்தனர் பெயரும்
புல்லென் குன்றத்துப் புலம்புகொள் நெடுவரை
காணினும் கலிழுநோய் செத்துத்
தாம்வந் தனர்நம் காத லோரே.

பெருமாட்டியே! பேரன்புடைய நம் தலைவர் கிழங்குகளை அகழ்ந்து உண்டற் பொருட்டுப் பன்றிகளால் உழப்பட்ட குறிஞ்சிக்

Koviloor Digital Library

கொல்லையின் கண் குறவர் வித்திய தினையினது முதல் விளைச்சலை கொய்துகொண்டு போய் விட்டமையால் பொலிவிழந்து தோன்றுகின்ற மலையினது நெடிய பக்க மலையை நீ கண்டவுடன் நீ படும் பிரிவுத் துயரத்தைத் தாமே கருதிப் பார்த்து விரைவில் வினை முடித்து வரைவொடு வந்தருளினர். வருந்தாதே.

முதல்விளைவாகிய திருமணத்தை இனி நம் பெருமான் நிகழ்த்தி நின்னைத் தன் இல்லத்திற்கு அழைத்துச் செல்வான் என்பது உள்ளுறையின் பொருள்.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் ஆற்றுவித்தல். 270

- கேழல் பத்து முற்றிற்று -

Koviloor Digital Library

ALAGAPPA UNIVERSITY LIBRARY KARAIKUDI.

28. குரக்குப் பத்து

அஃதாவது குரங்கு என்னும் கருப்பொருள் செய்யுள் தோறும் விரவி வந்த பத்துச் செய்யுளின் தொகுதி என்பதாம்

271. அவரை அருந்த மந்தி பகர்வர்
பக்கின் தோன்றும் நாடன் வேண்டின்
பல்பசுப் பெண்டிரும் பெறுகுவன்
தொல்கேள் ஆகலின் நல்குமால் இவட்கே.

செவிலிக்குத் தோழி அறத்தொடு நின்றது.

தாயே! கேட்டருள்க. அவரைக் காயினை நிறையத் தின்றுவிட்ட பெண் குரங்கு பண்டம் விற்போரது சரக்குப் பைபோன்று தோன்றுதற்கிடனான வளமிக்க நாட்டையுடைய அப் பெருமான், தான் மணம் செய்து கொள்ள விரும்புவானாயின் பசுக்களைப் போன்று பின்வரும் குலமகளிர் பலரையும் மணக்க இயலும், அவன் நின் மகட்குப் பல பிறப்புக்களில் கேள்வனாய் அன்புடையன் ஆகலின் இவட்கே தண்ணளியை வழங்குவான் ஆயினான்.

மெய்ப்பாடு - அச்சம். பயன் - அறத்தொடு நிற்றலும் வரைவு உடன்படுவித்தலும். 271

272. கருவிரல் மந்திக் கல்லா வன்பறழ்
அருவரைத் தீந்தேன் எடுப்பி அயலது
உருகெழு நெடுஞ்சினைப் பாயும் நாடன்
இரவின் வருதல் அறியான்
வரும்வரும் என்பள் தோழி யாயே

தோழி! கேள். கரிய விரல்களையுடைய மந்தியினது மடமை யுடைய ஆண்குட்டி ஏறுதற்கரிய மலையின்கண் இழைக்கப்பட்டுள்ள தேன் இறாலின்கண் தேன் பருக எண்ணி அதிலுள்ள ஈக்களை

அலைத்து எழுப்பிவிட்டுப்பின், அந்த ஈக்கட்குப் பயந்து அடுத்துள்ள மரக்கிளையில் பாய்தற் கிடனான மலை நாடனாகிய தலைவன் இரவின்கண் நம்பால் வருவான் அல்லன். ஆனால் நம் தாயோ அதோ ஒருகாளை வருகின்றான் என்று ஆரவாரஞ் செய்கின்றாள்.

மெய்ப்பாடு - இளிவரல். பயன் - இவ்வொழுக்கத்தின் தீமையை அறிவுறுத்தி வரைவு கடாவுதல்.

இதன்கண் தலைவன் தவற்றினை உள்ளுறையாக அமைத்துக் கூறும் தலைவியின் திறம் வியக்கத் தகுந்தது. 272

273. அத்தச் செயலைத் துப்புறழ் ஒள்தளிர்
புன்தலை மந்தி வன்பறழ் ஆரும்
நன்மலை நாட நீசெலின்
நின்நயந்து உறைவி என்னினும் கலிழ்மே

புல்லிய தலையையுடைய குரங்குக் குட்டி வயிலிலுள்ள அசோகினது பவழம் போன்ற செந்நிற இளந்தளிரைத் தின்பதற்கு இடனான வளநாடனே! நின்னைப் பெரிதும் விரும்பி வாழும் எம்பெருமாட்டி நின் முன்னிலையில் உடம்பட்டாளாயினும் நீ பிரிந்த பொழுதே இப்பொழுது அழும் என்னைக் காட்டிலும் பெரிதும் அழுவாள். அவளை யாரே ஆற்றுவிக்க வல்லார்?

மெய்ப்பாடு - அழுகை. பயன் - செலவு அழுங்குவித்தல். 273

274. மந்திக் கணவன் கல்லாக் கடுவன்
ஒண்கேழ் வயப்புலி குழுமலின் விரைந்துடன்
குன்றுயர் அடுக்கம் கொள்ளும் நாடன்
சென்றனன் வாழி தோழியென்
மெல்தோள் கவினும் பாயலும் கொண்டே

தோழி! வாழி, என்னை ஆற்றியிரு என்று வற்புறுத்தும் தோழியே கேள் மந்திக்குக் கணவனாகிய உலகியல் அறியா ஆண்குரங்கு புலி முழங்குவதால் அஞ்சி, தன் துணையை விடுத்து மலையுச்சியில் ஏறிக் கொள்வதற்கு இடனான நாட்டையுடைய

Koviloor Digital Library

தலைவன் என்னுடைய மென்தோள்களின் அழகையும் என்னுடைய இனிய துயிலையும் என்னிடமிருந்து கவர்ந்து போயினனே இங்ஙனமாக நான் ஆற்றியிருத்தல் எங்ஙனம்?

மெய்ப்பாடு - அழுகை. பயன் ஆற்றாமைக்குக் காரணம் கூறுதல். 274

275. குரங்கின் தலைவன் குருமயிர்க் கடுவன்
சூரலஞ் சிறுகோல் கொண்டு வியலறை
மாரி மொக்குள் புடைக்கும் நாட
யாம்நின் நயந்தனம் எனினும்எம்
ஆய்நலம் வாடுமோ அருளுதி எனினே.

தோழி, தலைவனின் கொடுமை கூறி நெருங்கிச் சொல்லியது. குரக்கினத்தின் தலைவனாகிய ஆண்குரங்கு சிறிய கோலைக் கைக்கொண்டு அகன்ற கற்பாறையின் மேல் மழைநீரில் தோன்றும் குமிழிகளைப் புடைத்து உடைக்கின்ற நாட்டையுடைய தலைவனே! யாங்கள் நின்னை விரும்பினோம். எம்மை எளிய பெண்டிர் என இரங்கியேனும் அருள் செய்வாய் ஆயின் எம்முடைய பெண்மை நலம் இவ்வாறு வாடியழியுமோ?

மெய்ப்பாடு - அழுகை. பயன் - வரைவு முடுக்குதல். உள்ளுறையால் பெறும் பொருள்: நின்னை நயந்த எங்கள் நலம் நீ வரையாமலே அழிகின்ற இதனை நீ இவ்இடையிட்ட ஒழுக்கத்தால் அழியாநின்றாய் என்பதாம். 275

276. மந்திக் காதலன் முறிமேய் கடுவன்
தண்கமழ் நறைக்கொடி கொண்டு வியலறைப்
பொங்கல் இளமழை புடைக்கும் நாட
நயவாய் ஆயினும் வரைந்தனை சென்மோ
கன்முகை வேங்கை மலரும்
நன்மலை நாடன் பெண்டெனப் படுத்தே.

வரையாது வந்தொழுகும் தலைமகளைத் தோழி நெருங்கிச் சொல்லியது. மந்தியின் கணவனாகிய இளந் தளிரைத் தின்னுகின்ற

Koviloor Digital Library

ஆண்குரங்கு கற்பாறை மீது படிந்து சூள் கொள்ளாத இளமுகிலை நறைக் கொடியைக் கொண்டு புடைத்துச் சிதைத்தற் கிடனான நாடனே! நீ எம்பெருமாட்டியைக் காதலிக்காவிடினும் அவளைப் பலரறி மணம் புரிந்து, உலகத்தார் இவள் வளமலை நாடனுடைய மனைவி என்று கூறும் படியாகச் செய்து, நின் இல்லத்தற்கு அழைத்துப் போவாயாக. மேல் கருக்கொண்டு முற்றிப் பயன்படுவதாகிய இளமுகிலை மந்தி நறைக்கொடி கொண்டு புடைக்கும் நாட என்றது வரைந்து மகப் பெறுதற்கு உரியளாகிய இவளை இம் மறைந்த ஒழுக்கத்தால் கொலை செய்கின்றாய் என்பது பழைய உரை.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - வரைவு முடுக்குதல். 276

277. குறவர் முன்றில் மாதீண்டு துறுகல்
கல்லா மந்தி கடுவனோடு உகளும்
குன்ற நாடநின் மொழிவல் என்றும்
பயப்ப நீத்தல் என்இவள்
கயத்துவளர் குவளையின் அமர்த்த கண்ணே.

குன்றக் குறவருடைய சிறுகுடில் முற்றத்திலுள்ள விலங்குகள் உராயும் கல்லின் மீது ஏறி பெண்குரங்கு தன் கணவனாகிய ஆண் குரங்கோடு துள்ளித் திரிதற்கு இடனான மலைநாடனே! உன்னை யொன்று கேட்பேன். எம் தலைவியினுடைய குவளை மலர் போன்ற கண்கள் பசந்து துன்புறும்படி நீ நாள்தோறும் இவளைப் பிரிந்து செல்லுதற்குக் காரணம் என்ன? கூறுக. நீரிற் பிரிந்த குவளை மலர் என்னாம், அங்ஙனமே நின்னிற் பிரிந்த இவள் கண்ணுமாம் என்பது கருத்து. இஃது இறைச்சி.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - வரைவு கடா அதல். 277

278. சிலம்பின் வெதிரத்துக் கண்விடு கழைக்கோல்
குரங்கின் வன்பறழ் பாய்ந்தன இலஞ்சி
மீனெறி தூண்டிலின் நிவக்கும் நாடன்
உற்றோர் மறவா நோய்தந்து
கண்டோர் தண்டா நலங்கொண் டனனே.

Koviloor Digital Library

தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

தோழியே! கேள் . மலையிலுள்ள மூங்கிலாகிய கோல் தம் மீதிருந்த குரங்குக் குட்டி வேறு கோலில் பாய்ந்த உடனே நீர்நிலைக்கண் மீன் படுக்கின்ற தூண்டிற் கோல் ஞெரேலென நிமிர்வது போல் நிமிர்தற்கு இடனான நம் நாடன் தன்னைக் கேண்மை கொண்டோர்க்கு மறக்க முடியாத துன்பத்தை வழங்கி, அதற்குப் பதிலாக அவருடைய பெண்மை நலம் முழுவதையும் கவர்ந்து கொண்டனன் . அவன் தருவது நோய்; கொள்வது நலம் . எனவே இவ்வஞ்சகக் காதல் வாணிகத்தே அவன் பெரிதும் சதுரப் பாடுடையன் என்று இகழ்ந்தாளாயிற்று.

மெய்ப்பாடு - இளிவரல்; பயன் - வரைவு கடா அதல். 278

279. கல்இவர் இற்றி புல்லுவன ஏறிக்
குளவி மேய்ந்த மந்தி துணையொடு
வரைமிசை உகளும் நாட நீவரின்
கல்லகத் ததுஎம் ஊரே
அம்பல் சேரி அலராம் கட்டே

மலையில் வளர்கின்ற இற்றி மரத்தினைத் தழுவிக் கொள்வனவாய் அதன் மேலேறி அங்குப் படர்ந்துள்ள காட்டு மல்லிகைப் பூவையும் தளிரையும் வயிறாரத் தின்ற மந்தியும் கடுவனும் பின்னர் மலையின் மேல் துள்ளி யாடுதற்கு இடனான நல்ல நாட்டையுடைய பெருமானே! நீ இரவுக் குறியிடத்து வருவாய் ஆயின் ஆண்டு வருதல் மிகவும் இன்னாதாம். ஏன் எனில் யாங்கள் வாழ்கின்ற ஊர் மலைகளின் நடுவே அமைந்துள்ளது . மேலும் பிறர் பழியைத் தூற்றும் மாக்கள் வாழும் சேரியையும், கயமாக்கள் வாழ்கின்ற இடத்தையும் உடையது . நீ இதுகாறும் ஒழுகிய களவொழுக்கத்தினை விடுத்து, தலைவியை வரைந்துகொண்டு நின்னூர் சென்று அவளோடு பிரிவிலாப் பெரு வாழ்க்கை பெறுதலே தகுதி என உள்ளுறையால் உணர்த்துகின்றாள் .

மெய்ப்பாடு - அச்சம் . பயன் - இரவுக் குறி மறுத்து வரைவு கடா அதல் . 279

Koviloor Digital Library

280. கருவிரல் மந்திக் கல்லா வன்பார்ப்பு
இருவெதிர் ஈர்ங்கழை ஏறிச் சிறுகோல்
மதிபுடைப் பதுபோல தோன்றும் நாட
, வரைந்தனை நீஎனக் கேட்டுயான்
உரைத்தனென் அல்லனோ அஃதென் யாய்க்கே.

கரிய விரலையுடைய குரங்கினது இளைய ஆண்குட்டி பெரிய மூங்கிலின் உச்சியிலேறியிருந்து, அது அசையும் போது காண்போர்க்குச் சிறிய கோலைக் கைக் கொண்டு வானத்திலுள்ள சந்திரனைப் புடைப்பது போன்று தோன்றுதற்கிடனான மலைநாடனே! நீ எம் பெருமாட்டியை முறைப்படி திருமணம் செய்துகொண்டனை என்னும் செய்தியை யான் அப்பொழுதே கேள்வியுற்றேன் . அந்த நற்செய்தியை யான் அப்பொழுதே என் தாய்க்கு உணர்த்திவிட்டேன் . அதனை எல்லோரும் உணர்ந்து கழிபேருவகை எய்தினர் .

மெய்ப்பாடு-பெருமிதம் . பயன் - சுற்றத்தார்க்குத்தான் வரைவு உணர்த்தினேன் என்று தலைவனுக்கு உணர்த்துதல் . 280

- குரக்குப் பத்து முற்றிற்று -

Koviloor Digital Library

29. கிள்ளைப் பத்து

அஃதாவது செய்யுள் தோறும் கிளி என்னும் கருப்பொருள் விரவி வரத் தொடுத்த பத்துச் செய்யுளின் தொகுதி என்பதாம். கிள்ளை - கிளி

281. வெள்ள வரம்பின் ஊழி போகியும்
கிள்ளை வாழிய பலவே ஒள்ளிழை
இரும்பல் கூந்தல் கொடிச்சி
பெருந்தோள் காவல் காட்டி யவ்வே

தலைமகள் புனங்காவற்கு உரியளாய் நின்றது கண்டு தலைமகன் மகிழ்ந்து சொல்லியது.

கிளிகள் பலவும் வெள்ளம் என்னும் பேரெண்ணை எல்லையாகவுடைய ஊழிகள் பற்பல கழிவனவாகியும் இவ்வுலகில் நிலைபெற்று வாழ்வனவாக. எதற்கு என்றால் ஒளிபொருந்திய அணிகலன்களையும் கரிய கூந்தலையும் உடைய என்னருமைக் காதலி தனது பெரிய தோளாற் செய்யும் இத்தினைப் புனம் காத்தல் தொழிலைத்தோற்றுவித்தன ஆகலான். காண்டற்கு அரியளாய் இருந்தாளைத் தினைப் புனத்தில் விரும்பிய போதெல்லாம் காண்டற்கு எளியளாகச் செய்தமையால் அச்செயற்குக் காரணமான கிளிகள் நீடூழி வாழ்க என்று வாழ்த்திய படியாம்.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - மகிழ்தல். 281

282. சாரல் புறத்த பெருங்குரல் சிறுதினைப்
பேரமர் மழைக்கண் கொடிச்சி கடியவும்
சோலைச் சிறுகிளி உன்னு நாட
ஆரிருள் பெருகின வாரல்
கோட்டுமா வழங்கும் காட்டக நெறியே.

Koviloor Digital Library

குளிர்ந்த கண்களையுடைய கொடிச்சி கவண் முதலிய கருவி கொண்டு சினந்து வெருட்டி ஓட்டவும் சோலையில் வாழும் சிறியகிளி மலைச்சாரலில் உள்ள தினைக் கதிரை நினைத்து வந்து வீழ்தற்குக் காரணமான மலை நாடனே! வழி அறிந்து வருதற்கு இருள் முதலிய இடையூறுகள் பெருகியுள்ளன. இனி நீ கொடிய யானைகள் திரிகின்ற அடர்ந்த காட்டு வழியில் வராதே. வாரல் - வாராதே.

மெய்ப்பாடு - அச்சம். பயன் - வரைவு முடுக்குதல். 282

283. வன்கண் கானவன் மென்சொல் மடமகள்
புன்புல மயக்கத்து உழுத ஏனல்
பைம்புறச் சிறுகிளி கடியும் நாட
பெரிய கூறி நீப்பினும்
பொய்வலைப் படூஉம் பெண்டுதவப் பலவே

அஞ்சாமையுடைய குறவனது மடப்பம் பொருந்திய மகள் புன்செய் நிலத்து உழுது வித்திய தினையில் வீழும் சிறிய கிளிகள் பலவற்றையும் ஓட்டுதற்கிடனான மலைநாடனே! உறுதிமொழிகள் பலவற்றையும் எடுத்துக்கூறி விலக்கினாலும் இவ்வுலகத்தில் தம் கணவன்மார் கூறுகின்ற பன்மாயப் பொய்ம்மொழிகளாகிய வலையில் அகப்பட்டுக் கொள்கின்ற பெண்டிர் சாலப் பலர் உளர் என்பதாம்.

மெய்ப்பாடு - இளிவரல். பயன் - தலைவனை இடித்துரைத்தல். பரத்தையரிடமிருந்து பிரிந்துவந்த தலைவனைத் தலைவி முகமலர்ந்து ஏற்றுக் கொண்டதைக் கண்ட தோழி கூறியது. 283

284. அரிய தாமே செவ்வாய்ப் பைங்கிளி
குன்றக் குறவர் கொய்தினைப் பைங்கால்
இருவி நீள்புனங் கண்டும்
பிரிதல் தேற்றாப் பேரன் பினவே

வருந்தியிருக்கின்ற இக்கிளிகள் பரிதாபத்திற்கு உரியனவாகி விட்டன.

Koviloor Digital Library

ஏனெனில் குன்றக் குறவர்களால் அரிந்து விடப்பட்ட தினைத்தாள்கள் மட்டும் உள்ள வறிய தினைப் புனத்தின் இயல்பினைக் கண்டு வைத்தும் இதனை விட்டுப் பிரியாமல் பேரன்புடையனவாயிருக்கின்றன என்று தோழி தலைவன் கேட்குமாறு கூறியது.

மெய்ப்பாடு அழுகை. பயன் - அவன் வரவிரும்புதல். தலைவி நின்வரவினையே எதிர்பார்த்திருப்பள். ஆதலான் இனி இடமில்லை என்று கருதி நீ வாராது இருந்துவிடாதே. அடிக்கடி வந்து ஒல்லுமிடமெல்லாம் அருள் செய்துபோதி என்பது உள்ளுறைப் பொருள். 284

285. பின்னிருங் கூந்தல் நன்னுதல் குறமகள்
மெல்தினை நுவணை யுண்டு தட்டையின்
ஐவனச் சிறுகிளி கடியும் நாட
வீங்குவளை நெகிழப் பிரிதல்
யாங்குவல் லுநையோ ஈங்கிவள் துறந்தே.

ஒருவழித் தணந்து வந்த தலைமகற்குத் தோழி கூறியது.

பின்னிவிடப்பட்ட கரிய கூந்தலையும் நல்ல நுதலையும் உடைய குறமகள் தினைமாவைத்தின்று பசி தீர்ந்த பின் தட்டை என்னும் கருவியைப் புடைத்து, மலை நெல் கதிரைக் கொய்வதற்கு வருகின்ற சிறிய கிளிகளை ஓட்டுதற்கிடனான மலைநாடனே! ஈங்கு எம்பெருமாட்டியைக் கைவிட்டு, வளையல்கள் கழன்று விழும்படி பிரிந்து போதற்கு எவ்வாறு மனம் துணிந்தனையோ? யான் அறிகிலேன்.

மெய்ப்பாடு - வெகுளி. பயன் - வரைவு கடாஅதல். 285

286. சிறுதினை கொய்த இருவி வெண்கால்
காய்த்த அவரைப் படுகிளி கடியும்
யாண ராகிய நன்மலை நாடன்
புகரின்று நயந்தனன் போலும்
கவரும் தோழிஎன் மாமைக் கவினே.

Koviloor Digital Library

'தோழி கேட்பாயாக! தினைக் கதிரைக் கொய்து விடப்பட்ட தாளின் மேல் படர்ந்து காய்த்துள்ள அவரையின் கண்ணும் வந்துபடியும் கிளிகளை ஓட்டுதலால் புதுவருவாய் உண்டாகின்ற வளமுடைய மலை நாடன் இற்றைநாள் தீங்கு ஒன்றனைச் செய்ய விரும்புகின்றான் போலும். என் மாமையாகிய புத்தழகினைத் தானே கவர்கின்றான். இனியான் என் செய்கோ?

மெய்ப்பாடு - அழுகை. பயன் - செலவு அழுங்குவித்தல் அல்லது உடன் அழைத்துப் போக உடம்படுத்தலும் ஆம். 286

287. நெடுவரை மிசையது குறுங்கால் வருடை
தினைபாய் கிள்ளை வெரூஉம் நாட
வல்லை மன்ற பொய்த்தல்
வல்லாய் மன்றநீ அல்லது செயலே.

43317

பெரிய மலையில் உள்ள மலையாட்டைத் தினையிற் பாய்ந்து கதிர் கொய்யும் கிளி வாளா அஞ்சுதற்கு இடனான மலைநாடனே! நீ பொய் கூறுதலில் வல்லமையுடையை. நீ நற்செயல்களைச் செய்தற்கண் வல்லமையில்லை. நீ வரைதற்கு விரும்பாமையே வரையாமைக்குக் காரணம் அன்றி எம் சுற்றத்தாரை அஞ்சுதல் அன்று. நீ அவர் பால் மகட்கொடை இரப்பின் அவர் தேற்றமாக உவந்து வழங்குவர் காண் என்பது குறிப்பெச்சம்.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - வரைவு முடுக்கல். 287

288. நன்றே செய்த உதவி நன்றுதெரிந்து
யாம்எவன் செய்குவம் நெஞ்சே காமர்
மெல்லியல் கொடிச்சி காப்பப்
பல்குரல் ஏனல் பாத்தரும் கிளியே.

தலைமகன் உவந்து தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

நெஞ்சமே! மென்மையாகிய இயல்பையுடைய நம் காதலி காத்தற்கு ஏதுவாகும்படி பலவாகிய கதிர்களையுடைய தினைப்புனத்தின் மேல் பரவி வருகின்ற இக் கிளிகள் நம் திறத்தில் ஒப்பற்ற நன்மையே

Koviloor Digital Library

செய்தன . அதன் நன்மையை நாம் நன்குணர்ந்து வைத்தும் நாம் அக்கிளிகட்குக் கைம்மாறு யாது செய்ய வல்லேம் . அக்கிளிகள் வாழிய!

மெய்ப்பாடு - பெருமிதம் . பயன் - மகிழ்தல் . 288

289. கொடிச்சி இன்குரல் கிளிசெத் தடுக்கத்துப்
பைங்குரல் ஏனல் படர்தரும் கிளியெனக்
காவலும் கடியுநர் போல்வர்
மால்வரை நாட வரைந்தனை கொண்மோ.

எம் பெருமானே! எம் சுற்றத்தார் தலைவியின் இனிய குரலோசையை, கிளியின் ஓசையென்று கருதி பக்கமலையில் வாழும் கிளிகள் எல்லாம் கதிர்களையுடைய தினைப் புனத்தின் பால் வந்து படியும் என்று கருதி, அவள் காக்கும் காவல் தொழிலையும் விலக்குவர் . ஆதலால் எம்பெருமாட்டி நீ கருதுமாறு தினை காத்தற்கும் வாராள் . நீ உலகோர் வழக்கப்படி இவளை வரைந்து கொள்வாயாக . செத்து - கருதி. கடிதல் - கைவிடுதல்.

மெய்ப்பாடு - அழுகை . பயன் - வரைவு கடா அதல் . 289

290. அறம்புரி செங்கோல் மன்னனின் தாம்நனி
சிறந்தன போலும் கிள்ளை பிறங்கிய
பூக்கமழ் கூந்தல் கொடிச்சி
நோக்கவும் படும்அவள் ஒப்பவும் படுமே

கிளிகள் நல்லறமே நாளும் விரும்பிச் செய்தற்குக் காரணமான செங்கோன்மையுடைய எம்பெருமான் போன்றே பெரிதும் சிறப்புடையன ஆயின . எப்படியென்றால் மலர் மணக்கும் கூந்தலையுடைய எம்பெருமாட்டியால் நாளை முதலாக நோக்கப்படும் . மேலும் அவளாலேயே கடியவும் படும் . நாளை முதல் எம்பெருமாட்டி கிளி கடிதற்குத் தினைப் புனத்திற்கு வருவாள் எனத் தலைவன் மகிழுமாறு உணர்த்தியபடியாம் .

மெய்ப்பாடு - பெருமிதம் . பயன் - மகிழ்ச்சி. 290

- கிள்ளைப் பத்து முற்றிற்று -

Koviloor Digital Library

30. மஞ்ஞைப் பத்து.

அஃதாவது செய்யுள் தோறும் மயில் என்னும் கருப்பொருள் விரவி வந்த பத்துச் செய்யுளின் தொகுதி என்றவாறு மஞ்ஞை - மயில்.

291. மயில்கள் ஆலக் குடிஞை இரட்டும்
துறுகல் அடுக்கத்து அதுவே பணைத்தோள்
ஆய் தழை நுடங்கும் அல்குல்
காதலி உறையும் நனிநல் லூரே.

வரைவிடை வைத்துப் பிரிந்து மீள்கின்ற தலைமகன் பாங்கனுக்குச் சொல்லியது. நண்பனே! மூங்கில் போன்ற தோள்களையும் தழையாடை கிடந்து அசைகின்ற அல்குலையும் உடைய என் ஆருயிர்க் காதலி வாழ்தற்கு இடனான மிகப்பெரிய நலமுடைய ஊர் மயில்கள் களித்துக் கூத்தாட, பேராந்தையின் சேவலும் பேடும் மாறி மாறி ஒலித்தற்குக் காரணமான பக்க மலைகளின் கண்ணது.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - மகிழ்தல்.

இனி தான் நிகழ்த்த இருக்கின்ற திருமணத்திற்கு அவளுடைய சுற்றத்தார் உவந்து உறுதுணையாகிச் சிறப்பிப்பர் என்பது உள்ளுறை யாகும்படி மயில்கள் ஆலக் குடிஞையிரட்டும் அடுக்கம் என்றான். 291

292. மயில்கள் ஆலப் பெருந்தேன் இமிரத்
தண்மழை தழீஇய மாமலை நாட
நின்னினும் சிறந்தனள் எமக்கே நீநயந்து
நன்மனை அருங்கடி அயர
எம்நலம் சிறப்பயாம் இனிப்பெற் றோளே.

மயில்கள் மகிழ்ந்து கூத்தாட பெரிய தேனீக்கள் இன்னிசை முரல குளிர்ந்த முகில் தழுவியிருக்கின்ற குறிஞ்சிக் கோமானே! நீ

Koviloor Digital Library

அறத்தையே விரும்பி இவள் தந்தையினது நல்ல இல்லத்தில் பின்முறை வதுவையைச் செய்தலான் எம்முடைய அறம் மென்மேலும் சிறப்புறும்படி யாம் இப்போது எம் அருமைத் தங்கையாகப் பெற்ற இத்திருவாட்டி எங்கட்கு நின்னைக் காட்டிலும் பெரிதும் மாண்புடையோள் ஆயினள்.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - தலைவனை வாழ்த்திப் பின்முறை வதுவைக் கிழத்தியைத் தாய்போல் தழுவிக் கோடல். (தலைவன் மகப்பேறு கருதிச் செய்யும் இரண்டாவது திருமணத்தைத் தலைவி மகிழ்ந்து ஏற்றுக்கொண்டாள் என்பதாம்) 292

293. சிலம்புகமழ் காந்தள் நறுங்குலை யன்ன
நலம்பெறு கையின்என் கண்புதைத் தோயே
பாயல் இன்துணை யாகிய பணைத்தோள்
தோகை மாட்சிய மடந்தை
நீயலது உளரோஎன் நெஞ்சமர்ந் தோரே.

பகற்குறி இடம்புக்க தலைமகன் தலைவி பின்னாக மறைய வந்து கண்புதைத்துழிச் சொல்லியது.

மலையிடத்தெங்கும் மணம் கமழ்கின்ற காந்தளினது நறிய பூங்கொத்து போன்று அழகுபெற்ற கைகளால் என்னுடைய கண்களைப் புதைத்த நங்காய் என்நெஞ்சில் என்றென்றும் இடம்பெற்று வீற்றிருப்பவர் பாயலில் என் மனக்கினிய துணைவியாகிய மயில் போன்றவளே! மனைத்தக்க மாண்புடைய மடந்தை நீயன்றி பிறர்யாருளர். எதற்காக என் கண்ணைப் புதைத்தனை.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - மகிழ்தல். 293

294. எரிமருள் வேங்கை இருந்த தோகை
இழையணி மடந்தையின் தோன்றும் நாட
இனிதுசெய் தனையால் நுந்தை வாழியர்
நன்மனை வதுவை அயரஇவள்
பின்னருங் கூந்தல் மலர்அணிந் தோயே.

Koviloor Digital Library

தீப்பிழம்பு போன்ற மலர்களையுடைய வேங்கை மரத்தின்மேல் வீற்றிருந்த மயில் இளமகள் போன்று தோன்றுதற்கிடனான மலை நாடனே! எம் பெருமாட்டியின் நல்ல மங்கல மனைக்கண்ணே இம் மங்கலச் செயல் நிகழ்தற்கு ஏதுவாக, பண்டு களவின்கண் பிறர் அறியாமல் இவளுடைய பின்னப்பட்ட கரிய கூந்தலில் மலர் அணிந்த நீயே இன்று பலரும் அறிந்து மகிழும்படி இச்சடங்கிலும் இவள் கூந்தலில் மலர்சூட்டி இனியதொரு செயலைச் செய்தனை, நின்னுடைய தந்தையார் என் நோற்றனரோ. அவர் நீடு வாழ்க.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - களவுக் காலத்தே பட்ட வருத்தம் நீங்கிக் கழி பேரின்பம் எய்துதல். திருமணத்தின் போது தலைமகற்குத் தோழி கூறியது. 294

295. வருவது கொல்லோ தானே வாராது
அவணுறை மேவலின் அமைவது கொல்லோ
புனவர் கொள்ளியின் புகல்வரும் மஞ்ஞை
இருவி யிருந்த குருவி வருந்துறப்
பந்தாடு மகளிரின் படர்தரும்
குன்றுகெழு நாடனொடு சென்றவென் நெஞ்சே.

குறவர் காட்டில் மூட்டிய கொள்ளியாகிய தீக்கு அஞ்சித் தனது புகலிடமாகிய இடத்திற்கு விரைந்து வருகின்ற மயில் தாமே தினை அரி தாளின் மிசை இரைதேடும் குருவிகள் அஞ்சி வருந்தும்படி பந்தாடும் மகளிர் போன்று சிறகை விரித்துச் செல்லுதற்கிடனான குறிஞ்சிக் கோமானோடு என்னைக் கைவிட்டுப் போன என் எளிய நெஞ்சம் மீண்டும் என்னிடம் வருமோ என்னை மறந்து அங்கேயே தங்கி விடுமோ தங்கி விடுமாயின் யான் இறந்து படுதல் உறுதி.

இது கலங்கி மொழிதல்.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - நெஞ்சை இகழ்தல். 295

Koviloor Digital Library

296. கொடிச்சி காக்கும் பெருங்குரல் ஏனல்
அடுக்கல் மஞ்ஞை கவரு நாட
நடுநாள் கங்குலும் வருதி
கடுமா தாக்கின் அறியேன் யானே.

குறமகள் காவல் செய்கின்ற தினைக்கதிரைப் பக்கமலையில் வாழ்கின்ற மயில் வஞ்சகமாகக் கவர்ந்து தின்பதற்குக் காரணமான குறிஞ்சிக் கோமானே! அஞ்சத் தகுந்த நடுயாமமாகிய இருள் மிக்க நேரத்திலும் நீ காட்டினூடே வருகின்றனை . ஆண்டுத்திரிகின்ற வல்விலங்கு யாதேனும் நின்னைத் தாக்க நேரின் விளைவின் தீமையைக் கூறவும் நான் அறிகிலேன் .

மெய்ப்பாடு - அச்சம்; யான் - இரவுக்குறி மறுத்து வரைவு கடா அதல் . விரைந்து திருமணம் புரிந்துகொள்க என்பதாம். 296

297. விரிந்த வேங்கைப் பெருஞ்சினைத் தோகை
பூக்கொய் மகளிரின் தோன்றும் நாட
பிரியினும் பிரிவ தன்றே
நின்னொடு மேய மடந்தை நட்பே

மலர்கள் விரிந்துள்ள வேங்கை மரத்தினது பெரிய கிளையின் மேல் இருக்கும் மயில் அம்மரத்தில் ஏறி மலர் கொய்கின்ற மகளிர் போன்று தோன்றுதலையுடைய மலை நாடனே! நீ பிரிந்து போய் மறந்து மாறுதல் இயல்வதாயினும் எம்பெருமாட்டி நின்னோடு கொண்டுள்ள கேண்மை இனி ஒருநாளும் பிரிதற்கு இயலாதது ஒன்று என்பதனை எண்ணிப்பார் .

மெய்ப்பாடு - அழுகை . பயன் செலவு அழுங்குவித்தல் . நீ மனத்தால் எங்கட்கு நல்லது புரியாய் எனினும் நன்மை செய்கின்றாய் போலத் தோன்றுகின்றாய் என்பது உள்ளுறை உணர்த்தும் பொருள். 297

Koviloor Digital Library

298. மழைவரவு அறியா மஞ்ஞை ஆலும்
அடுக்கல் நல்லூர் அசைநடைக் கொடிச்சி
தான்எம் அருளாள் ஆயினும்
யாம்தன் உள்ளுபு மறந்தறி யேமே

மயில் மழைபெய்தற்கு முகில் வருதலை அறிந்து களித்துக் கூத்தாடற்கு இடனான பக்கமலைகளையுடைய நல்ல ஊரினையுடைய அசைந்த நடையையுடைய எம்பெருமாட்டி எமக்கு அருள்புரிய மறுத்துவிட்டாளாயினும் அவள்பால் எளியே மாகிய நாங்கள் அவளை நினைத்தலை மறந்தறியோம்.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - மகிழ்தல். 298

299. குன்ற நாடன் குன்றத்துக் கவாஅன்
பைஞ்சுனைப் பூத்த பகுவாய்க் குவளையும்
அம்சில் ஓதி அசைநடைக் கொடிச்சி
கண்போல் மலர்தலும் அரிதுஇவள்
தன்போல் சாயல் மஞ்ஞைக்கும் அரிதே.

அழகிய கூந்தலையும் அசைந்த நடையையும் உடைய குறமகளாகிய என் காதலியினது கண்ணைப்போல் மலர்தல் குறிஞ்சிக் கடவுளாகிய முருகவேள் எழுந்தருளியிருக்கின்ற மலை மருங்கேயுள்ள பசிய சுனையின்கண் மலர்ந்த அகன்ற வாயையுடைய குவளைமலர் இல்லையாம். இவளைப்போல் மென்மை யுடைத்தாதல் அம்முருகவேள் விரும்பி யூர்கின்ற மயிலுக்கும் இல்லை என்பதாம்.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - மகிழ்தல். தலைமகன் மகிழ்ந்த உள்ளத்தனாய்த் தன்னுள் கூறியது. 299

300. கொடிச்சி கூந்தல் போலத் தோகை
அம்சிறை விரிக்கும் பெருங்கல் வெற்பன்
வந்தனன் எதிர்ந்தனர் கொடையே
அம்தீம் கிளவி பொலிகநின் சிறப்பே

Koviloor Digital Library

அழகும் இனிமையும் அளாவிய மென்மொழி மடந்தையே கேள். குறிஞ்சி நிலத்து நங்கையினுடைய கூந்தற்கு ஒப்பாதலை விரும்பி மயில் தனது அழகிய தோகையை நன்கு விரித்துக் கூத்தாடுதற்கு இடனான பெரிய மலைகளையுடைய நம்பெருமான் தன் சான்றோர் வாயிலாய் மகட்பேசி நம் இல்லத்திற்கு வந்தனன். அவன் வரவு கண்ட நம் சுற்றத்தார் உவந்து வரவேற்று முகமன்கூறி மகட் கொடையும் நேர்வாராயினர். நின்னுடைய கற்புடைமை அறத்தோடு இணைந்து பொலிவுறுவதாக.

மெய்ப்பாடு பெருமிதம். பயன் - மகிழ்வித்தல். இது தலைமகட்குத் தோழி கூறியது. 300

- மஞ்ஞைப் பத்து முற்றிற்று -

குறிஞ்சி முற்றிற்று

Koviloor Digital Library

IV. பாலை

அஃதாவது பாலைத்திணைப் பற்றிப் புனைந்த நூறுபாடல்கள் என்றவாறு.

ஆசிரியர் - ஓதல் ஆந்தையார். ஓதல் என்பது இவர் பிறந்த ஊரின் பெயர். ஆதன் தந்தை என்னும் தொடர் ஆந்தை என மருவிற்று என்பர். ஓதல் என்னும் ஊர் மேலைக் கடற்கரையில் குட்ட நாட்டின்கண் உள்ளதென்றும் அஃது இக்காலத்தே ஓதலூர் என்று வழங்கப்படுகிறது என்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இவர் பாலை பாடுவதில் வல்லவர். இவர் பாடியனவாகக் குறுந்தொகையில் மூன்று பாடல்கள் உள.

இப்பகுதியில் அடியிற்கண்ட பத்துப் பிரிவுகள் உள்ளன.

31. செலவு அழுங்குவித்த பத்து.
32. செலவுப் பத்து.
33. இடைச்சுரப் பத்து.
34. தலைவி இரங்குப் பத்து.
35. இளவேனிற் பத்து.
36. வரவுரைத்த பத்து.
37. முன்னிலைப் பத்து.
38. மகட்போக்கிய வழித் தாயிரங்கு பத்து.
39. உடன் போக்கின்கண் இடைச்சுரத்து உரைத்த பத்து.
40. மறுதரவுப் பத்து.

Koviloor Digital Library

முதற்பொருள்: நிலம் தமிழ் நாட்டில் இயற்கையில் பாலை நிலம் இல்லை . இல்லையாயினும் புலனெறி வழக்கின் கண் வெப்ப மிக்கனவாகிய முல்லைநிலத்தையும் குறிஞ்சி நிலத்தையும் நிலமாகக் கொள்வர்.

காலம் பெரும்பொழுது : இளவேனிலும்முதுவேனிலும்

சிறுபொழுது : நண்பகல்.

உரிப்பொருள் : பிரிதலும்பிரிதல் நிமித்தமும்

கருப்பொருள் : அகப் பொருள் விளக்கத்தில் கூறிய பதினான்கும்.

Koviloor Digital Library

31. செலவு அழுங்குவித்த பத்து

அஃதாவது பாலைத் திணைக்கண் 'செல வழுங்குவித்தல்' என்னும் ஒரு துறையைப்பற்றி எழுந்த பத்துச் செய்யுள்களின் தொகுதி என்றவாறு . செலவு - செல்லுதல்; அழுங்குதல் - தவிர்தல்.

301. மால்வெள் ளோத்திரத்து மையில் வாலிணர்
அருஞ்சுரம் செல்வோர் சென்னிக் கூட்டும்
அவ்வரை யிறக்குவை யாயின்
மைவரை நாட வருந்துவள் பெரிதே.

முகில்கள் தவழ்கின்ற மலைநாடனே! பெரிய வெள்ளில்ஒத்திர மரத்தினது (ஒருவகை இலவமரம்) வெள்ளிய பூங்கொத்துக்களைப் பாலை நிலவழிப்போக்கர்கள் வெப்பந்தணிய தம் தலையில் நிறைய சுமந்து செல்வதற்கு இடனான அக்கொடிய மலை வழியை நீ கடந்து செல்குவையாயின் எம்பெருமாட்டி மிகவும் வருந்துவாள். அவள் நிலையையும் சிறிது கருதுக.

மெய்ப்பாடு - அழுகை; பயன் செலவு அழுங்குவித்தல். 301

302. அரும்பொருள் செய்வினை தப்பற்கும் உரித்தே
பெருந்தோள் அரிவை தகைத்தற்கும் உரியள்
செல்லாய் ஆயினோ நன்றே
மெல்லம் புலம்ப இவள்அழப் பிரிந்தே.

மெல்லென்ற நெய்தல் நிலத்துத் தலைவனே! நீ பொருள் ஈட்டற் பொருட்டு செய்யும் தொழில் நிறைவேறாமலும் போதற்கு உரியது. அது கைகூடுவதாக இருப்பினும், நீ பிரிந்து செல்வை என்று அறிந்த இடத்து எம்பெருமாட்டி நின்னைச் செல்லாமற் தடுத்தற்கும் உரிமையுடையவள் அல்லளோ? இவள் அழப் பிரிந்து செல்லாவிடின் நன்று . பொருள் தேடாதார் எல்லாம் உண்ணாது ஒழிவாரல்லர். ஒன்றினார்

Koviloor Digital Library

வாழ்க்கையே வாழ்க்கை ஆதலின் செல்லாயாதல் நன்று என்பது கருத்து.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - செலவு அழுங்குவித்தல். 302

303. புதுக்கலத் தன்ன கனிய ஆலம்
போகில்தனைத் தடுக்கும் வேனில் அருஞ்சுரம்
தண்ணிய இனிய வாக
எம்மொடுஞ் சென்மோ விடலை நீயே.

பெருமானே! நீ புதிய மட்கலம் போன்ற சிவந்த பழங்களையுடைய ஆலமரம், இரைதேர்ந்து செல்கின்ற பறவையைத் தன்பால் கவர்ந்து கொள்ளுதற்குக் காரணமான இந்த வேனிற் பருவத்தில் கடத்தற்கரிய அந்தப் பாலை நில வழிகள் குளிர்வனவும் இனிமை பயப்பனவும் ஆகும் பொருட்டே எம்மையும் உடனழைத்துச் செல்ல உடம்பட்டருள்க. போகில்-பறவைப் பொதுப் பெயர். ஆலமரம் பறவையின் செலவைத்தடுத்துநிறுத்தினாற்போல, அவள் ஒரு தலையாக நின் செலவினைத் தடுத்துத் தன்பால் இருத்திக் கொள்வள் என்பதுபட நின்றது.

மெய்ப்பாடும் பயனும் அவை. 303

304. கல்லாக் கோவலர் கோலின் தோண்டிய
ஆன்நீர்ப் பத்தல் யானை வௌவும்
கல்லதர்க் கவலை செல்லின் மெல்லியல்
புயல்நெடுங் கூந்தல் புலம்பும்
வயமான் தோன்றல் வல்லா தீமே

குதிரைகளை ஊர்தலில் வல்லவனான பெருமானே! கல்லாத இடையர் தங்கள் பசுக்கள் நீர் பருகுதற் பொருட்டுக் கோல்களால் தோண்டப்பட்ட பள்ளத்தில் ஊறிய நீரைக் காட்டு யானைகள் அவரை வஞ்சித்துப் பருகிவிடுதற்கு இடனான மலையிடை செல்லும் கவர்த்த நெறிகளில் நீ இவளைக் கைவிட்டுப் பொருளீட்டச் சென்றால் மெல்லிய ...யையும் கரிய கூந்தலையும் உடைய எம்பெருமாட்டி

Koviloor Digital Library

பிரிவாற்றாமையால் பெரிதும் வருந்துவாள் . ஆதலால் அத்திய செயலைச் செய்யாதே. ஆன் உண்ணாது யானை உண்ணும் என்றது நீ நுகராமல் பசலை உண்டு அழிக்கும் என்றவாறு.

மெய்ப்பாடும் பயனும் அவை. 304

305. களிறு பிடிதழீஇப் பிறபுலம் படராது
பசிதின வருத்தும் பைதறு குன்றத்துச்
சுடர்த்தொடிக் குறுமகள் இனைய
எனைப்பயஞ் செய்யுமோ விடலைநின் செலவே

எம்பெருமானே! ஒளிபொருந்திய வளையணிந்த எம்பெருமகள் இடையறாது அழுது புலம்பிக் கிடக்கும்படி, ஆண்யானை நீர் பெறாதும் இரை பெறாதும் உயங்குகின்ற தன் பெண்யானையைத் தழுவிக் கொண்டு நின்றே வேற்று நிலங்களுக்குப் போகத் துணியாமல் பசியால் வருந்தியும் நிற்றற்குக் காரணமான மழையின்மையால் பசுமையற்ற பாலை நிலத்தின் மிசை நீ இவளைக் கைவிட்டுச் செல்லும் செலவு எத்தகைய பயனை நினக்குத் தருமோ அறிகின்றிலேன் . நின் செலவிற்குப் பயன் உண்டோ? இல்லையோ? இவள் மட்டும் இனைந்து இனைந்து இறந்து. படுவள் என்பது குறிப்பெச்சம்.)

மெய்ப்பாடும் பயனும் அவை. 305

306. வெல்போர்க் குருசில்நீ வியன்சுரம் இறப்பின்
பல்காழ் அல்குல் அவ்வரி வாடக்
குழலினும் இனைகுவள் பெரிதே
விழவொலி கூந்தல் மாஅ யோளே.

சென்ற போர்கள் தோறும் வெல்லும் பேராற்றல் படைத்த எம்பெருமானே! நீ பொருளைக் கருதி இவளைக் கைவிட்டு அகன்ற பாலை நிலத்தைக் கடந்து செல்வாய் ஆயின் நறுமணக் கூந்தலையும் மாமை நிறத்தையும் உடைய எம் பெருமாட்டி மேகலையுடைய அல்குல் இடத்து [illegible]கள் மறைந்தொழிய முகாரிராகம் இசைக்கும் வேய்ங்குழல் போன்[illegible] அருங்[illegible]ருந்தி யழுவாள். இவள் அவ்வாறு அழ நீ பிரிவது எங்ஙன்[illegible]ப்களும் தத்தம

Koviloor Digital Library

மெய்ப்பாடும் பயனும் அவை . நீ செல்லின் இவள் உண்டியிற் குறைந்து, உடம்பு நனி சுருங்கிக் கண் துயில் மறுத்துக் கலங்குதல் ஒரு தலை என்றவாறு . 306

307. ஞெலிகழை முழங்கழல் வயமா வெரூஉம்
குன்றுடை அருஞ்சுரம் செலவயர்ந் தனையே
நன்றில் கொண்கநின் பொருளே
பாவை யன்னநின் துணைபிரிந்து வருமே

தலைவ! புலி தன் புகலிடமாகிய மூங்கிற் புதரில் மூங்கில் உராய்தலினால் எழுந்த நெருப்பைக் கண்டு அஞ்சி அகல்வதற்குக் காரணமான கடத்தற்கரிய பாலை நிலத்தைக் கடந்து செல்லுதற்குக் கருதுகின்றனை . அப்பொருள் அருளுடையோரால் விரும்பப் படுவதில்லை . ஏனெனில் நின்னுடைய பாவை போன்ற பேரெழில் படைத்த எம் பெருமாட்டியைப் பிரிந்துபோய் ஈட்டுதலான் வருவது ஆகலான் . நின்னையே புகலிடமாகக் கொண்டு நின் அருளிலேயே இனிது வாழும் எம் பெருமாட்டி நின் நெஞ்சத்தே தோன்றிய இக் கருத்தினை உணரின் வருந்துவள் என்பது உள்ளுறை உணர்த்தும் பொருள் .

மெய்ப்பாடும் பயனும் அவை . 307

308. பல்லிருங் கூந்தல் மெல்லிய லோள்வயின்
பிரியாய் ஆயினும் நன்றே விரியிணர்க்
கால்எறுழ் ஒள்வீ தாஅய
முருகமர் மாமலை பிரிந்தெனப் பிரிமே

பெருமானே! கரிய கூந்தலையும் மெல்லிய இயலையும் உடைய எம் பெருமாட்டியிடமிருந்து பிரியாமல் அவளுடன் உடனுறைதல் நன்று. அவ்வாறின்றி நீ பிரிய விரும்பினால் முருகப் பெருமான் தான் விரும்பி உறைகின்ற எறுழ் மரத்தின் மலர் பரந்த இப் பெரிய...லையைப் பிரியும் பொழுது அவளைப் பிரிந்து செல்வாய் ...ழும் கூ... சென்றால் மெ...சல்லின் ஏதமில்லை . தலைவன் பண்டு தலைவி...உடைய எம்பெரு...த்துதற்

Koviloor Digital Library

பொருட்டு முருகன் உறையும் மலையையும் அவன் அடிகளையும் சுட்டி நான் இனி எப்பொழுதும் பிரியேன் என்று சூளுரைத்தான் . ஆதலின் அச்சூளினை நினைவூட்டுவாள் முருகு இம்மாமலை பிரிந்துழி பிரிக என்றாள் .)

மெய்ப்பாடு - அச்சம்; பயன் - செலவழுங்குவித்தல் . 308

309. வேனில் திங்கள் வெஞ்சுரம் இறந்து
செலவுஅயர்ந் தனையால் நீயே நன்று
நின்னயந்து உறைவி கடுஞ்சூல் சிறுவன்
முறுவல் காண்டலின் இனிதோ
இறுவரை நாடநீ இறந்துசெய் பொருளே.

(உயர்ந்த மலைநாட்டுத் தலைவ! சித்திரைத் திங்களில் இவளைக் கைவிட்டு வெப்பமிகுந்த சுரத்தைக் கடந்து பொருளீட்டும் செலவை மேற்கொண்டனை . நீ இவளைப் பிரிந்து சென்று ஈட்டும் பொருள், நின்னைப் பெரிதும் விரும்பி வாழும் எம்பெருமாட்டியினது தலைச்சூலில் உருவாகின்ற நின் மகனுடைய இளநகையைக் காணுங்கால் உண்டாகும் இன்பத்தைக் காட்டிலும் பெரிதும் இனிமை நல்குவதோ? சொல் .)

இளவேனிற் பருவம் பிரிதற்கு அரியது ஆதலோடு சுரத்தே செல்லற்கும் இன்னாமையுடைத்து . கடுஞ்சூல்-தலைச்சூல் . கருவில் இருக்கும் மகவினை ஆண் என்றே வழங்குதல் ஓர் உலக வழக்கு .

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - செலவு தவிர்த்தல் . 309

310. பொலம்பசும் பாண்டில் காசுநிரை அல்குல்
இலங்குவளை மெல்தோள் இழைநிலை நெகிழப்
பிரிதல் வல்லுவை ஆயின்
அரிதே விடலைஇவள் ஆய்நுதற் கவினே.

பெரும! மணிகள் அழுத்திய பொன்னால் இயன்ற பாண்டில் என்னும் அருங்கலம் அணிந்த எம்பெருமாட்டி அணிகலன்களும் வளையல்களும் தத்தம் நிலைகெட்டு நெகிழும்படி பிரிந்து

Koviloor Digital Library

செல்லுவையாயின் இவளுடைய திருநுதலின் பேரெழிலை நீ மீண்டும் காண்டல் அரிதேயாகும். அதை உணர்வாயாயின் நின் விருப்பம்போல் ஒழுகக் கடவை.

இளமையும் காமமும் நின் கையிடத்தனவல்ல. அவை நாள்தோறும் கழியும் தன்மையுடையன. கழிந்தக்கால் அவற்றை மீண்டும் ஆக்கிக் கோடல் யாரானும் இயலாது என்பாள் இவள் கவின் அரிதே என்றாள்.

மெய்ப்பாடும் பயனும் அவை. 310

- செலவு அழுங் குவித்த பத்து முற்றிற்று -

Koviloor Digital Library

32. செலவுப் பத்து

அஃதாவது, பாலையின் உரிப்பொருளாகிய பிரிவையே நுதலி வந்த பத்துச் செய்யுளின் தொகுதி என்பதாம். பிரிவு காரணமாக வருவனவெல்லாம் பாலையே என நுண்ணிதின் உணர்க.

311. வேங்கை கொய்யுநர் பஞ்சுரம் விளிப்பினும்
ஆரிடைச் செல்வோர் ஆறுநனி வெரூஉம்
காடுஇறந் தனரே காதலர்
நீடுவர் கொல்என நினையும்என் நெஞ்சே.

தோழி! வேங்கை மலரைக் கொய்யும் மகளிர் விளையாட்டுக் காரணமாகப் பஞ்சுரம் என்னும் பண்ணைப் பாடக் கேட்டவிடத்தும் வழிப் போக்கர்கள் அவ்வழியில் போதற்குப் பெரிதும் அஞ்சுதற்குக் காரணமான கொடிய பாலை நிலத்தை நம்பெருமான் கடந்து அப்பாற் சென்று விட்டனரோ? ஆயின் அவர் வாழ்க. ஆயினும் நம்மைப் பிரிந்து செல்லத் துணிந்த வன்கண்ணர் ஆகலின் என் நெஞ்சம் அவர் ஆங்குத் தங்கி விடுவாரோ என்று கருதிப் பெரிதும் வருந்தும். பஞ்சுரம் - பாலைப் பண்.

தோழி நீ நம்பெருமான் பாலையைக் கடந்தனர் என நற்செய்தியே கூறவும் அவருடைய கொடுமையே என் நினைவில் வந்து வருத்துகின்றது என்பது உள்ளுறை உணர்த்தும் பொருள்.

மெய்ப்பாடு - பெருமிதம் கலந்த அழுகை. பயன் - வருத்தத்திற்குக் காரணம் காட்டல். 311

312. அறஞ்சா லியரோ அறஞ்சா லியரோ
வறன்உண் டாயினும் அறஞ்சா லியரோ
வாள்வனப் புற்ற அருவிக்
கோள்வல் என்னையை மறைத்த குன்றே.

Koviloor Digital Library

அழகுடைய அருவிகளை யுடையதாய், கொள்கையுடைய நம்பெருமானைப் பாதுகாத்தருளிய அந்த நல்லமலை தனக்குரிய அறத்தால் என்றும் நிறைக. உலகெங்கும் பஞ்சம் நேர்ந்தபோதும் தனக்குரிய அறத்தான் நிறைவுறுக. குன்று மறைத்தது எனினும், குன்றத்தின் மறைந்து தலையன் மார்கண்ணில் படாமல் தப்பினேம் என்பது கருத்து.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - நிகழ்ந்தது கூறல். தலைவி தோழிக்குக் கூறியது. 312

313. தெறுவது அம்ம நும்மகள் விருப்பே
உறுதுயர் அவலமொடு உயிர்செலச் சாஅய்ப்
பாழ்படு நெஞ்சம் படர்அடக் கலங்க
நாடுஇடை விலங்கிய வைப்பின்
காடுஇறந் தனள்நம் காத லோளே.

தலைமகள் புணர்ந்துடன் போகியவழிச் செவிலி யாற்றாமை கண்ட நற்றாய் அவட்குச் சொல்லியது.

செவிலிகேள்! நம்முடைய காதலுக்கு இடனாயவள் மிக்க துயராகிய அவலத்தால் உயிர் போய்விடும் அளவிற்குத் தேய்ந்து வறிதாகி விட்ட நம்முடைய மனத்தைத் துன்பம் வருத்தவும், நெஞ்சம் குழம்பவும் செய்து பாலையாகிய காட்டினைத் தன் காதலனோடு கடந்து நம்மை நீத்துப் போயினள். இனி அவள்பால் உனக்குண்டாகும் அவா உன்னால் அழிக்கப்படற்பாலது.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - செவிலியை ஆற்றுவித்தல். 313

314. அவிர்தொடி கொட்பக் கழுதுபுகவு அயரக்
கருங்கண் காக்கையொடு கழுகுவிசும்பு அகலச்
சிறுகண் யானை ஆள்வீழ்த்துத் திரிதரும்
நீளிடை அருஞ்சுரம் என்பநம்
தோளிடை முனிநர் சென்ற ஆறே

Koviloor Digital Library

தலைமகன் பிரிந்துழி அவனுடன் போய் மீண்டார் வழியது அருமை தங்களில் கூறக்கேட்ட தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

தோழி! நம்மைப் பிரிந்த நம்பெருமானார் சென்றவழி பேய்மகள் இரையை விரும்பிச் சுழலவும், அவள் ஊர்தியாகிய கழுது என்னும் குற்றேவல் பேய் உணவாகத் தின்னவும், காக்கைகளோடு கழுகுகளும் வானத்தில் கத்திக் கொண்டு பறக்கவும் யானைகள் வழிச் செல்வோரைக் கொன்று திரிதற்கு இடனான கடத்தற்கரிய பாலை நிலம் என்று கண்டு வந்தோர் கூறுவர். இத்தகைய கொடுநெறியை அவர் எவ்வாறு கடப்பர். அவிர்தொடி - அன்மொழித் தொகையாக பேய் மகளை உணர்த்தியது. கழுது அடிமைப் பேய்.

மெய்ப்பாடு - அழுகை, பயன் - ஆற்றாமை. 314

315. பாயல் கொண்ட பனிமலர் நெடுங்கண்
பூசல் கேளார் சேயர் என்ப
விழைநெகிழ் செல்லல் உறீஇக்
கழைமுதிர் சோலைக் காடுஇறந் தோரே.

நம்பால் வளை கழலுதற்குக் காரணமான துன்பத்தை நிலைநிறுத்தி விட்டு மூங்கில்கள் முற்றியுலர்ந்த சோலையையுடைய வெங்கானத்தே சென்ற தலைவன் இப்போது வெகுதூரம் சென்றுவிட்டார் என்பர். அவர் பிரியும் போது இனிதே துயின்று கிடந்த நெடிய கண்கள் இப்போது செய்யும் ஆரவாரத்தை அவர் கேட்பாரல்லர். ஆகவே அந்த வன் கண்ணரைக் கருதி வருந்துவதால் யாது பயன்?

சொல்லாது தலைமகன் பிரிந்துழித் தலைவியின் வேறுபாடு கண்ட தோழி இரங்கிச் சொல்லியது. மெய்ப்பாடு - அழுகை. பயன் - ஆற்றுவித்தல். 315

316. பொன்செய் பாண்டில் பொலங்கலம் நந்தத்
தேரகல் அல்குல் அவ்வரி வாட
இறந்தோர் மன்ற தாமே பிறங்குமலைப்
புல்லரை ஓமை நீடிய
புலிவழங்கு அதர கானத் தானே.

Koviloor Digital Library

அந்தோ, பொன் பாண்டில் இடையினது அளவிற்கு ஒவ்வாது மிகும்படியாக அல்குலின் வரிகள் மறைந்தொழிய எம்பெருமாட்டி உடம்பு நனி சுருங்கி வருந்தவிட்டு, வெப்பமிகுந்த மலைகளையும் ஓமை மரங்கள் தழைத்தலின்றி புலிகள் திரிகின்ற பொல்லாத நெறிகளையுடைய பாலை நிலத்தில் நம்மையும் உடன்கொண்டு போகாமல் தமியராய்ச் சென்று விட்டாரே . யாம் என் செய்கோம் . இவற்றையெல்லாம் கேட்ட தலைவி தன் நிலைக்கு இரங்காமல் அத்தலைவனுக்கே பரிவாள் ஆதல் உணர்க . மெய்ப்பாடு - அழுகை . பயன் - ஆற்றுவித்தல் . 316

317. சூழ்கம் வம்மோ தோழி பாழ்பட்டுப்
பைதற வெந்த பாலை வெங்காட்டு
அருஞ்சுரம் இறந்தோர் தேஎத்துச்
சென்ற நெஞ்சம் நீடிய பொருளே.

தோழியே! மழை இன்மையால் பசும்புல் தலையும் காணாத, ஞாயிற்றின் கதிர்களால் வெந்துகிடக்கும் பாலையாகிய கடத்தற்கரிய கொடு நெறியைக் கடந்துசென்ற அந்த வன்கண்ணர்பால் நமது தூதாகப் போன என்னுடைய நெஞ்சம் காலம் நீட்டித்தற்குரிய காரணம் தான் என்னவென்று ஆராய்ந்து பார்ப்போம் வருவாயாக.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - ஆற்றாமை.

மனத்தினைத் தன்னினின்றும் வேறுபடுத்திக் கூறும் வழக்கம் தமிழ்ப் புலனெறி வழக்கிற் காணப்படும் . இதனை வழுவமைதியாகக் கொள்வர் .

317

318. ஆய்நலம் பசப்ப அரும்படர் நலிய
வேய்மருள் பணைத்தோள் வில்லிழை நெகிழ
நசைநனி கொன்றோர் மன்ற இசைநிமிர்ந்து
ஒடெரி நடந்த வைப்பின்
கோடுயர் பிறங்கல் மலைஇறந் தோரே.

Koviloor Digital Library

தோழி! என்னுடைய பேரழகு பசலையுள் மூழ்கி அழியவும், துன்பநினைவுகள் பெரிதும் வருத்தவும் மூங்கில் போன்ற பருத்த தோளினின்றும் அணிகலன்கள் கழன்று வீழவும் தீப் பரவியழித்த பாழ் இடத்தோடு குவடுகள் உயர்ந்து வெப்பம் மிகுந்த பாலை நிலத்தைக் கடந்து சென்றவர் நமக்கு நல்குவர் என்னும் விருப்பத்தையும் அழித்துவிட்டார்.

இத்தகைய வன்கண்மையுடையோரை நான் நல்லர் அருளுடையர் என்று என் பேதைமையால் நம்பினேன். மன்! என்று இரங்கிய படியாம்.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - ஆற்றாமைகூறல். 318

319. கண்பொர விளங்கிய கதிர்தெறு வைப்பின்
மண்புரை பெருகிய மரம்முளி கானம்
இறந்தன ரோநம் காதலர்
மறந்தன ரோதில் மறவா நம்மே.

தோழி! நம்முடைய காதலர் ஞாயிற்றின் சுடர்கள் சுட்டெரித்த பாழ் நிலத்தையுடைய தீமையெல்லாம் நன்கு பெருகியுள்ள மரங்கள் கரிந்து வீழும் கொடிய பாலைக் காட்டினைக் கடந்து போயினரோ? எப்போதும் மறவாத நம்மை மறந்து போயினரோ?

மறந்தனரோ என்றது, தலைவன் கொடுமையையும், மறவா நம்மே என்றது தனது பேரன்பையும் குறித்து நின்றன.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - ஆற்றாமை. 319

320. முள்ளரை இலவத்து ஒள்ளிணர் வான்பூ
முழங்கழல் அசைவளி எடுப்ப வானத்து
உருமுப்படு கனலின் இருநிலத்து உறைக்கும்
கவலை அருஞ்சுரம் போயினர்
தவலில் அருநோய் தலைத்தந் தோரே.

Koviloor Digital Library

முள்ளுடைய இலவ மரத்தினது சிறந்த மலர்கள் அப்பாலை நிலத்துத் தீயினால் உண்டான வெங்காற்று மோதி உதிர்த்தலால், இடியில் தோன்றி நிலத்தில் உதிர்கின்ற தீப்பொறிகள் போன்று உதிர்தற்குக் காரணமான பற்பல கிளை வழிகளையுடைய பாலை நிலத்தே சென்றவராகிய நம் காதலர் உய்தற்கரிய பெருந்துன்பத்தையே நமக்கு வழங்கிவிட்டார்.

யான் அவலிப்பது அவர் பிரிந்ததற்கன்று; வெப்பமிக்க பாலைக் கொடு நெறியை எம்பெருமான் எவ்வாறு கடப்பர் என்று பரிந்து வருந்துகின்றேன் என்று கூறுகின்றாள்.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - தன் மடமைக்கு இரங்குதல். 320

- செலவுப் பத்து முற்றிற்று -

Koviloor Digital Library

33. இடைச்சுரப் பத்து

அஃதாவது தலைவியைப் பிரிந்த தலைமகன் இடைச்சுரத்தில் இருந்து தலைவியை நினைந்து கூறிய கூற்றாக வரும் பத்துச் செய்யுளின் தொகுதி என்றவாறு.

321. உலறுதலைப் பருந்தின் உளிவாய்ப் பேடை
அலறுதலை ஓமை அம்கவட் டேறிப்
புலம்புகொள விளிக்கும் நிலம்காய் கானத்து
மொழிபெயர் பன்மலை இறப்பினும்
ஒழிதல் செல்லாது ஒண்டொடி குணனே.

என் ஆருயிர்க் காதலியினது நற்பண்பு, பருந்தினது பேடை ஓமை மரத்தினது கிளையின் கண் ஏறியிருந்து தன்னுடைய சேவற் பருந்தினைக் கூப்பிட்டு அழைத்தற்குக் காரணமான, தன் கண் வாழ் கின்ற உயிரினத்தை நிலமே சுடுகின்ற இப்பாலையினூடே நடந்து வேற்று மொழிகள் வழங்குகின்ற நாட்டிற்கு வந்துற்ற இப்பொழுதும் என் நெஞ்சினை விட்டு அகலாது. தலைவியின் நற்பண்புகளாவன: கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும், மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின், விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும், கண்கவர் வனப்பும் பிறவுமாம். இப்போது என் காதலி வறிய இல்லத்தின் மாடயிசையே என்னை நினைந்து யான் சென்ற திசைநோக்கி அழாநிற்பாள் என்பது உள்ளுறை உணர்த்தும் பொருள்.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - ஒருவகையான் ஆற்ற முயலுதல். 321

322. நெடுங்கழை முனிய வேனில் நீடிக்
கடுங்கதிர் ஞாயிறு கல்பகத் தெறுதலின்
வெய்ய வாயினை முன்னே இனியே
ஒண்ணுதல் அரிவையை யுள்ளுதொறும்
தண்ணிய வாயின சுரத்திடை யாறே.

Koviloor Digital Library

முன்பெல்லாம் இப்பாலை நிலத்தின் வழிகள் நெடிய மூங்கில்கள் கரிந்து சாய, கொடிய வேனிற் பருவமே நீண்டு, கொடிய சூரிய மண்டிலம் மலைகளும் பிளக்கும்படி சுட்டெரித்தலையான் கடத்தற் கியலா வெப்பமுடையவாய் இருந்தன . பொருள் ஈட்டலை மறந்து, காதலியை நினைக்கின்ற இப்பொழுது அவளை நினைக்கும் தோறும் குளிர்ச்சியுடைய வாயின என்று வியந்தவாறாம்.

மெய்ப்பாடு - மருட்கை. பயன் - உள்ளி மகிழ்தல். 322

323. வள்ளெயிற்றுச் செந்நாய் வயவுறு பிணவிற்குக்
கள்ளியங் கடத்திடைக் கேழல் பார்க்கும்
வெஞ்சுரக் கவலை நீந்தி
வந்த நெஞ்சம்நீ நயந்தோள் பண்பே

என் நெஞ்சமே கேள், நம் காதலியின் நல்லியல்புகள் கூரிய பற்களையுடைய செந்நாய் கருவுற்றிருக்கும் தன் பெண்ணாய்க்கு ஊன் வழங்குதற்பொருட்டு, கள்ளிக்காட்டினூடே பதுங்கியிருந்து பன்றியின் வரவினை எதிர் பார்த்தற்கிடனான யாம் கடந்துள்ள வெவ்விய பாலை நிலத்திலுள்ள பிரிந்து செல்லும் வழிகள் பலவற்றையும் கடந்து ஈண்டும் நம்மைப் பேணுதற்கு வந்தன காண் . வாழ்க அவள் நற்பண்புகள் . தலைவன் மேற்கொண்டுள்ள செலவும் அறத்தின் பாற்பட்டதே என்பது உள்ளுறை உணர்த்தும் பொருள் .

மெய்ப்பாடு - வியப்பு. பயன் - மகிழ்தல். 323

324. எரிகவர்ந் துண்ட என்றூழ் நீளிடைச்
சிறிதுகண் படுப்பினும் காண்குவென் மன்ற
நள்ளென் கங்குல் நளிமனை நெடுநகர்
வேங்கை வென்ற சுணங்கின்
தேம்பாய் கூந்தல் மாஅ யோளே.

தோழி! காட்டுத்தீ பற்றிச் சுட்டழித்த வேனிற்பருவம் நீளுகின்ற பாலை நிலப்பரப்பில் சமயம் அறிந்து சிறிதுநேரம் உறங்குவேனாயினும் வேங்கைப் பூப்போன்ற தேமல் படர்ந்த, நறுமண முடைய கூந்தலையும்

Koviloor Digital Library

மாமையினையும் உடைய இவளை இரவின்கண் மனைப் படப்பை அகத்தேயுள்ள மேனிலை மாடத்து பள்ளியறை இடத்தே என்னோடு உறைபவளாகத் தெளிவாக நனவே போலக் கனவிடை நீண்ட பொழுது காண்பேன். ஆதலால் அக்காட்சி பற்றுக் கோடாகக் கொண்டு ஆங்கு உறைதல் இயல்வதாயிற்று.

மெய்ப்பாடு - மருட்கை; பயன் - மகிழ்ச்சி கூறல். 324

325. வேனில் அரையத்து இலையொலி வெரீஇப்
போகில் புகாவுண்ணாது பிறிதுபுலம் படரும்
வெம்பலை அருஞ்சுரம் நலியாது
எம்வெம் காதலி பண்புதுணைப் பெற்றே.

எம் ஆருயிர் காதலியின் அமிழ்தன்ன நற்பண்புகளையே நெஞ்சிற்கு உறுதுணையாகக் கொண்டமையான் வேனில் பருவத்தில் அரைய மரத்தினது இலைகள் செய்யும் சலசல ஒலிக்கு அஞ்சி, பறவைகள் அம் மரத்தின் பழமாகிய நல்லுணவினை உண்ணாமல் வேற்றிடங்களுக்குச் செல்லுதற்குக் காரணமான வெப்பமிக்க பாலை நிலத்தில் கடத்தற்கரிய வழிகள் என்னை வருத்தவில்லை. அரையம் - அரசமரம். வெம்பல் - பாலை நிலம். ஐ - சாரியை. போகில் - பறவை. புகா - உணவு.

இத்தகையாளோடு யான் பிரியாது இனி துறைவதற்கு இயலாமல் உலகியலை அஞ்சி இவள் வழங்கும் பேரின்பத்தை நுகராமல் பொருள் ஈட்டப் பிரிந்து போயினேன் மன் என்பது உள்ளுறையின் பொருள்.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - மகிழ்தல்; நலம் பாராட்டலுமாம். 325

326. அழலவிர் நனந்தலை நிழலிடம் பெறாது
மடமான் அம்பிணை மறியொடு திரங்க
நீர்மருங்கு அறுத்த நிரம்பா இயவின்
இன்னா மன்ற சுரமே
இனிய மன்றயான் ஒழிந்தோள் பண்பே.

Koviloor Digital Library

இந்தப் பாலைநிலம் தீப்போன்று விளங்கும் வெப்பமிக்க பரப்பில் நிழலுள்ள இடம் சிறிதேனும் கிடைக்கப் பெறாமையால், பிணைமான் தன் குட்டிகளோடு வாடி இளைத்தற்கிடனாய் முன்பு எப்போதோ ஓடிய மழைநீர் பக்கங்களை அரித்துவிட்டமையால் தேய்ந்துபோன சிறிய வழியை உடையதாய் துன்பம் தருவதாய் உள்ளது. பொருளாசையால் என்னால் கைவிடப்பட்ட என் காதலியின் நற்குணங்கள் இன்பமுடையனவாயுள்ளன .. இவ்வாறு உலகம் துயரத்தையும் இன்பத்தையும் தரும் இருவேறு தன்மைகளைப் பெற்றிருக்கிறது. இயவு - வழி.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - ஆற்றுதல். 326

327. பொறிவரித் தடக்கை வேதல் அஞ்சிச்
சிறுகண் யானை நிலந்தொடல் செல்லா
வெயின்முளி சோலைய வேய்உயர் சுரனே
அன்ன ஆர்இடை யானும்
தண்மை செய்தஇத் தகையோள் பண்பே

உலர்ந்த மூங்கில்கள் மட்டும் உயர்ந்து தோன்றுகின்ற இந்தப் பாலையில் வாழ்கின்ற யானைகள் தம்முடைய புள்ளியும் வரியும் பொருந்திய துதிக்கை வெந்து போகுமே என்று அஞ்சி நிலத்தைத் தீண்டமாட்டா. வெயிலில் கரிந்துபட்ட வறிய சோலைகளையுடைய இந்தப் பாலையினது கொடிய நடக்க இயலாத வழியில் வந்து நம் காதலியின் நற்பண்புகள் குளிரச் செய்தன. வாழ்க அவள் பண்பு.

மெய்ப்பாடு - மருட்கை. பயன் - மகிழ்தல். 327

328. நுண்மழை தளித்தென நறுமலர் தாஅய்த்
தண்ணிய வாயினும் வெய்ய மன்ற
மடவரல் இன்துணை ஒழியக்
கடமுதிர் சோலைய காடிறந் தேற்கே.

அன்புடையீர்! என் ஆருயிர்க் காதலி இல்லத்திலேயே இருப்பக் கைவிட்டுக் கடந்து வந்த எனக்கு வற்கடம் நீண்டு முதிர்தலால்

Koviloor Digital Library

கரிந்துபோன சோலையையுடைய இந்தப் பாலையின் வழிகள் அண்மையில் சிறுமழை பெய்தமையால் யாண்டும் புற்பூண்டுகள் தோன்றி மலர் பரவி குளிர்ச்சியுடையனவாயினும் மிகவும் வெப்பமுடையனவாகும். நமக்கு மழைபெய்தமையால் நலம் ஒன்றுமில்லை. கடம் - வற்கடம்.

மெய்ப்பாடு - இளிவரல். பயன் - நோதல். தன் தவறுன்னி இரங்குதலுமாம். இது உழையர்க்குத் தலைமகன் சொல்லியது. உழையர் - ஏவலாளர். 328

329. ஆள்வழக்கு அற்ற பாழ்படு நனந்தலை
வெம்முனை அருஞ்சுரம் நீந்தி நம்மொடு
மறுதரு வதுகொல் தானே செறிதொடி
கழிந்துகு நிலைய வாக
ஒழிந்தோள் கொண்டஎன் உரங்கெழு நெஞ்சே.

அன்புடையீர்! குறுந்தொடி தாமே கழன்று வீழ, காதலியால் கவர்ந்து கொள்ளப்பட்ட வலிபொருந்திய நெஞ்சம் மனித நடமாட்டம் இல்லாத பாழுந் தன்மையுடைய அகன்ற இடத்தையுடைய ஆறலைப் போர் பொருதற்கிடனான இப்பாலை நில வழியைக் கடந்து நம்மோடு இணங்கி வாராது மீளுங்கொல்? நம் நெஞ்சே நமக்குத் துணையாகாமல் இங்ஙனம் மாறுபடின் நம்நிலை என்னாம் என நொந்து கூறியபடியாம்.

மெய்ப்பாடு - இளிவரல். பயன் - நெஞ்சத்தை ஊக்குதல். தொடி - கைவளை; தோள்வளை. 329

330. வெந்துக ளாகிய வெயிற்கடம் நீந்தி
வந்தனம் ஆயினும் ஒழிகஇனிச் செலவே
அழுத கண்ணள் ஆய்நலம் சிதையக்
கதிர்தெறு வெஞ்சுரம் நினைக்கும்
அவிர்கொல் ஆய்தொடி உள்ளத்துப் படரே.

நெஞ்சமே! இடையறாது அழுத கண்ணளாகிவிட்ட குறுந்தொடி அணிந்த நம் காதலியினுடைய நெஞ்சத்திலுள்ள தனிமை நினைவு

Koviloor Digital Library

நம்மால் பெண்மை நலம் சிதைந்து அழியும்படி சூரிய வெப்பத்தால் அழிக்கப்பட்ட இப்பாலை நிலத்தை நினைத்து வருத்தும் ஆகலின் வெய்யில் நிலைபெற்ற இப்பாலையில் வெகுதூரம் கடந்து யாம் வந்துவிட்டோம் ஆயினும் இனி மேற் செல்லுதலைத் தவிர்வேமாக. படர் - தனிமை நினைவு.

இந்நிலையில் நாம் செல்லின் ஒரோவழி அவள் இறந்துபடுதலும் கூடும். ஆகலின் இப்போது செல்லும் இச்செலவினைத் தவிர்வேம் என்பான் இனிச் செலவு ஒழிக என்றான். ஒழிக + இனி = ஒழிகினி - விகாரம் ஒரோவழி - சிறுபான்மை.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - வன்புறை குறித்துத் தவிர்தல். 330

- இடைச்சுரப் பத்து முற்றிற்று -

Koviloor Digital Library

34. தலைவி இரங்கு பத்து

அஃதாவது பொருள் ஈட்டல் முதலிய காரண வகையால் தலைவன் தன்னைக் கைவிட்டுப் பிரிந்தமையானே தலைவி மனைக்கண் இருந்து ஆற்றாமையான் இரங்குதல் பொருளாக வரும் பத்துச் செய்யுளின் தொகுதி என்றவாறு.

331. அம்ம வாழி தோழி அவிழிணர்க்
கருங்கால் மராஅத்து வைகுசினை வான்பூ
அருஞ்சுரம் செல்லுநர் ஒழிந்தோர் உள்ள
இனிய கமழும் வெற்பின்
இன்னா என்பஅவர் சென்ற ஆறே.

தோழி கேட்பாயாக! நம் தலைவர் சென்ற வழி வெண்கடப்ப மரத்தினது கிளையில் மலர்ந்த வெண்மையான மலர்கள் கடத்தற்கரிய வழிகளைக் கடந்துசெல்லும் வழிபோக்கர்கள் தம் துணைவியரை நினைந்து செலவு அழுங்குமாறு நறுமணம் பரப்புதற்கிடனான மலைகளோடு கடத்தற்கியலாத துன்பத்தையும் தருவதாகும் என்று கூறுவர். சிறுபான்மை நம் பெருமான் போக்கு இடையூறுபட்டு மீளவும் நேருமோ?

சென்ற சுரம் பிரிந்தார் தம்தும் துணைவியரை நினையும்படி வெறி கமழும் மலரை உடைத்தாகலும், செலற்கு அருமையால் இன்னாமை உடைமையும் தலைவி இரங்குதற்குக் காரணமாயின என்பது பழைய வுரை.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - அஞ்சுதல். 331

332. அம்ம வாழி தோழி என்னதூஉம்
அறனில மன்ற தாமே விறன்மிசைக்
குன்றுகெழு கானத்த பண்பின் மாக்கணம்
கொடிதே காதலிப் பிரிதல்
செல்லல் ஐய என்னா தவ்வே.

Koviloor Digital Library

(தோழி கேள்! உயர்ந்த மலைக் காட்டில் வாழும் விலங்கினங்கள் ஒரு சிறிதேனும் அறச் செயல் உடையன அல்ல. நம்பெருமான் நம்மை நீத்துச் செல்வதனை அவை கண்டபொழுது காதல் மகளிரைக் கைவிட்டுப் பிரிந்துபோதல் கொடிய செயல்; செல்லாதே என ஒரு சொல்லேனும் சொல்லாது விட்டன ஆதலால் அன்பிலன் கொடியன் என்று தலைவன் குறையே நினைப்பவள் அதனை அவ்விலங்குகட்கு ஏற்றி உரைத்த படியாம்) இவ்வாறு கூறுதல் புலனெறி வழக்கம் என்க. என்னதூஉம் - ஒரு சிறிதும்.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - ஆற்றாது வருந்துதல். என்னாத - சொல்ல மாட்டாவோ? 332

333. அம்ம வாழி தோழி யாவதும்
வல்லா கொல்லோ தாமே அவண
கல்லுடை நன்னாட்டுப் புள்ளினப் பெருந்தோடு
யாஅம் துணைபுணர்ந்து உறைதும்
யாங்குப் பிரிந்துறைதி என்னா தவ்வே.

(தோழி கேட்பாயாக! தலைவன் தங்கியிருக்கும் இடத்தில் வாழ்வனவாகிய குறிஞ்சி நாட்டுப் பறவையினங்கள் நம் தலைவனை நோக்கி ஐயனே! யாங்கள் எம் காதற் பெடைகளைப்பிரியாமல் எப்போதும் கூடியே வாழ்கின்றோம். நீ உன் காதலியை விட்டு எவ்வாறு பிரிந்திருக்கின்றாயோ எனக்கூற மாட்டா போலும். அப்பறவைத்திரள் அறச்செயல் செய்ய மாட்டாவோ? கூறுக. தலைவன் பாலையைக் கடந்து போய்ப் பொருளீட்டியிருக்கும் வளநாட்டிலுள்ள பறவைகளைக் காண்பான் என்பது கருத்து.)

மெய்ப்பாடு - அழுகை. பயன் - இரங்குதல். 333

334. அம்ம வாழி தோழி சிறியிலை
நெல்லி நீடிய கல்வாய் கடத்திடைப்
பேதை நெஞ்சம் பின்செலச் சென்றோர்
கல்லினும் வலியர் மன்ற
பல்லிதழ் உண்கண் அழப்பிரிந் தோரே.

Koviloor Digital Library

தோழி கேட்பாயாக! சிறிய இலைகளையுடைய நெல்லிமரங்கள் தழைத்தலின்றி, உயர்ந்த மலைகள் சுடுகின்ற பாலையில் என்னுடைய நெஞ்சம் பின்தொடர நம்மைப் பிரிந்துசென்ற காதலர் கல்லை விட வன்மையான நெஞ்சையுடையவர் . எப்படியென்றால் தான் மீண்டு வருவதாகக் குறித்த காலமும் கடந்து நம் கண்கள் ஆற்றாமையினால் பெரிதும் அழும்படி காலம் நீடித்து பிரிந்துறைகின்றார் ஆகலின்.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - தனது ஆற்றாமைக்குக் காரணம் கூறுதல். 334

335. அம்ம வாழி தோழி நம்வயின்
நெய்த்தோ ரன்ன செவிய எருவை
கற்புடை மருங்கில் கடுமுடை யார்க்கும்
காடுநனி கடிய என்ப
நீடிஇவண் வருநர் சென்ற ஆறே.

தோழிகேள்! தாம் குறித்த பருவத்தே வாராமல் நீட்டித்தும், இங்கு நம்பால் மீண்டும் வருபராகிய எம்பெருமான் பிரிந்து சென்றவழி குருதி போன்று சிவந்த நிறமுடைய செவிகளையுடைய கழுகுகள் மலைப் பக்கங்களில் நாறுகின்ற முடைநாற்றத்தை அறிந்து ஆரவாரித்தற்கு இடனான பாலைக் காட்டில் மிகவும் அஞ்சத்தக்கனவாம் என்று கூறுவர்.

பாலையின்கண் ஆறலைக் கள்வர் கொன்று போட்ட வம்பலர் உடல்கள் கிடந்து நாறும் என்பாள் கடுமுடை என்றாள் . கழுகிற்குப் பிணத்தின் நாற்றம் மிகத் தொலைவிலேயே புலனாம் என்பர் . அக்கொடிய வழியில் நம் பெருமான் ஏதமின்றி எங்ஙனம் வருவார் என்றே கவல்கின்றேன் என்பது குறிப்பெச்சம்.

மெய்ப்பாடு - அச்சம். பயன் - இரங்குதல். 335

336. அம்ம வாழி தோழி நம்வயின்
பிரியலர் போலப் புணர்ந்தோர் மன்ற
நின்றதில் பொருட்பிணி முற்றிய
என்றூழ் நீடிய சுரன்இறந் தோரே.

Koviloor Digital Library

(தோழி! ஒருவியத்தகு செய்திகேள்! பண்டு நம்மிடத்தினின்றும் பிரிய ஒருப்படாத நல்லோர் போன்று நம்மை மயக்கிக் கூடிய தலைவர் நிலையில்லாத புல்லிய பொருளால் உண்டான அவாவினை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு கோடைநீடிய கொடிய பாலைநில வழியில் நம்மைக் கைவிட்டுப் போயினர். என்னே உலகியல் இருந்தவாறு.)

மெய்ப்பாடு - மருட்கை. பயன் - இரங்குதல். 336

337. அம்ம வாழி தோழி நம் வயின்
மெய்யுற விரும்பிய கைகவர் முயக்கினும்
இனிய மன்ற தாமே
பனியிரும் குன்றம் சென்றோர்க்குப் பொருளே.

தோழி கேள்! நினைத்தோர் நெஞ்சம் நடுங்குதற்குக் காரணமான பாலை நிலத்து மலை நெறிகளைக் கடந்து சென்ற நம்பெருமானார்க்கு நம்மிடத்தே ஒருவரை ஒருவர் விரும்பித் தழுவுதலைக் காட்டினும் பொருட் பேறே உறுதியாக இனிமையுடையன. ஆதலால் அவர் விரைந்து வருவாரல்லர். பாலைத் திணைக்கும் பின்பனிப் பருவமும் உரித்தாகலின் பனியிருங் குன்றம் என்றார்). ஆதலால் அவர் விரைந்து மீள்வாரல்லர் என்பது குறிப்பெச்சம்.

மெய்ப்பாடு - இளிவரல். பயன் - இரங்குதல். - 337

338. அம்ம வாழி தோழி சாரல்
இலையில மலர்ந்த ஓங்குநிலை இலவம்
மலையுறு தீயில் சுரமுதல் தோன்றும்
பிரிவருங் காலையும் பிரிதல்
அரிதுவல் லுநர்நம் காத லோரே.

தோழிகேள் நம் காதலர் மலைச் சாரலின்கண் இலைகள் உதிர்ந்து மலர்கள் நிரம்பிய இலவ மரங்கள் மலைகளிற் பற்றி எரிகின்ற தீப் பிழம்புகள் போன்று தோன்றுதற்கிடனான பிரிந்து உறைதற்கு இயலாத இந்த இளவேனிற் பருவத்தும் நம்மைக் கைவிட்டுப் பிரிந்து போதலின்கண் பேராற்றல் உடையவர்.)

Koviloor Digital Library

மலர்ந்த இலவம் தீப்போன்று தோன்றும் என்றது தலைவன் நம்மைப் பிரிந்து போதல் அறமே யாயினும் பருவம் ஒவ்வாமையின் அஃதெனக்குப் பெருந்துன்பமாகத் தோன்றுகிறது என்பது உள்ளுறை.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - இரங்குதல். இலவ மரம் பாலைக்கருப்பொருள். இஃது இளவேனிற் பருவத்தே மலரும் இயல்புடையது. இளவேனிற் பருவம் காதலர் இன்பம் நுகர்தற்குச் சிறந்த பருவம். பிரிந்துறைவது பெருந்துன்பம் தரும் என்று உரைத்தவாறு. 338

339. அம்ம வாழி தோழி சிறியிலைக்
குறுஞ்சினை வேம்பின் நறும்பழம் உணீஇய
வாவல் உகக்கும் மாலையும்
இன்றுகொல் காதலவர் சென்ற நாடே.

தோழி கேட்பாயாக! நம் காதலர் நம்மை விட்டுச் சென்றுறையும் அந்த நாட்டின் கண் வேப்ப மரத்தினது நறிய பழங்களைத் தின்றற்கு வௌவால்கள் ஏறப்பறக்கின்ற இந்தக் கொடிய மாலைக் காலந்தானும் இல்லையோ? இயம்புக. வாவல் கைக்கின்ற வேம்பின் பழத்தை யுண்ண விரும்பி வானின்கண் ஏறப்பறந்து சுழலுதல் போன்று நம்பெருமானும் ஒப்பற்ற காதற் பேரின்பத்தைப் பொருளாகக் கருதாமல் இழிந்த பொருளையே விரும்பி சுழலா நிற்பர் என்பது உள்ளுறை. முதுவேனிற் பருவத்தே வேம்பு பழுக்கும். அப்பருவம் முடிந்து கார்ப்பருவத் தொடக்கத்தே வருகுவன் என்று கூறிப் போனவன், அவ்வேனில் முடிந்து கார்ப் பருவத்துமுதனாள் மாலையாகியும் வாராமையால் அவர் சென்ற நாட்டில் காரும் மாலையும் இல்லையோ? என்றாள்.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - இரங்குதல். 339

340. அம்ம வாழி தோழி காதலர்
உள்ளார் கொல்நாம் மருள்உற் றனம்கொல்
விட்டுச் சென்றனர் நம்மே
தட்டைத் தீயின் ஊரலர் எழவே.

Koviloor Digital Library

தோழி கேட்பாயாக! நம்மைக் கைவிட்டுச் சென்றவராகிய நம் காதலர் மூங்கில் புதரில் தோன்றிப் பரவும் தீயே போன்று ஊரின்கண் எனது ஆற்றாமை கண்டு அலர்மொழி பரவாநிற்ப கால எல்லையையும் தாம் கைவிட்டுச் சென்ற நம்மையும் நினையாரோ? அல்லது அவர் குறித்த காலம் கடந்து விட்டதென யாமே மயங்கி விட்டேமோ? யாதொன்றும் அறிகிலேன்:

மெய்ப்பாடு - அழுகை. பயன் - இரங்குதல். 340

- தலைவி இரங்கு பத்து முற்றிற்று -

Koviloor Digital Library

35. இளவேனிற் பத்து

அஃதாவது தலைவன் பிரிந்துறையுங்கால் அவன் குறிப்பிட்டுச் சென்ற இளவேனிற் பருவம் வந்தும் அவன் வாராமை கண்ட தலைவி அவ் இளவேனில் வரவு குறித்துக் கூறிய பத்துச் செய்யுட்களின் தொகுதி என்பதாம்.

341. அவரோ வாரார் தான்வந் தன்றே
குயிற்பெடை இன்குரல் அகவ
அயிர்க்கேழ் நுண்ணறல் நுடங்கும் பொழுதே.

தோழி! இளவேனில் பருவம் தொடங்கு முன்னர் நும்பால் ஒருதலையாக வந்து சேர்வேன் அதுகாறும் ஆற்றி இருந்திடுக என நமக்குத் தேற்றுரை கூறிச் சென்ற நம் காதலர் இன்னும் வந்தார் இல்லை. குயிலின் பேடு தனது இனிய குரலால் தன் காதல் துணையாகிய சேவலைக் கூப்பிட்டு அழைத்தற்குக் கூவா நிற்பவும் நுண்மையும் கருநிறமும் உடைய மணல் தென்றல் காற்றால் வரிவரியாக வளைந்து தோன்றுதற்குக் காரணமான இளவேனிற் பருவமோ வந்துவிட்டதே யான் எங்ஙனம் ஆற்றுவல்? இதுமுதல் பத்துச் செய்யுட்கும் இதுவே துறை என்க.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - இரங்குதல். 341

342. அவரோ வாரார் தான்வந் தன்றே
சுரும்புகளித்து ஆலும் இருஞ்சினைக்
கருங்கால் நுணவம் கமழும் பொழுதே.

தோழி! அவரோ வாரார். வண்டினங்கள் பூத்தொறும் சென்று தேனுண்டு, தம் துணையோடு புணர்ந்து யாண்டும் இன்னிசை முரலாநிற்றற் கிடனான பெரிய கிளைகளையும் கரிய அடிப்பாகத்தையும் உடைய நுணா மரங்கள் நன்கு மலர்ந்து திசை எல்லாம் நறுமணம் கமழ்தற்குக் காரணமான அந்த இளவேனிற் பருவம் மட்டும்

Koviloor Digital Library

வந்துவிட்டதே. யான் எவ்வாறு ஆற்றியிருப்பேன். நுணா மலர்ந்து வண்டு ஆலும் பொழுது ஒரு தலையாக வருகுவன் என்று தலைவன் கூறிப் போந்தமையால் அதனையே ஈண்டுக் கொண்டு கூறினள்.

மெய்ப்பாடும் பயனும் அவை. 342

343. அவரோ வாரார் தான்வந் தன்றே
திணிநிலைக் கோங்கம் பயந்த
அணிமிகு கொழுமுகை உடையும் பொழுதே.

தோழி! அவரோ வாரார். கோங்கமரம் ஈன்ற அழகுமிக்க கொழுவிய அரும்புகள் உடைந்து மலருகின்ற இளவேனிற் பருவம் மட்டும் வந்துவிட்டதே. யான் எவ்வாறு ஆற்றுவன். திணிநிலை கோங்கம் ஈன்ற அரும்பு உடையும் பொழுதென்றாள் யானும் எம் பெருமான் சொல் தேறி இது காறும் திண்ணிய நிலையினை யுடையேன் மன், அந்நிலை தானும் இப்பொழுது உடைந்தது காண் என்னும் இறைச்சிப் பொருள் பயந்து நின்றது.

மெய்ப்பாடும் பயனும் அவை. 343

344. அவரோ வாரார் தான்வந் தன்றே
நறும்பூங் குரவம் பயந்த
செய்யாப் பாவை கொய்யும் பொழுதே.

தோழி! அவரோ வாரார். நறிய பூக்களை மலரும் இயல்புடைய குராமரம் ஈன்ற அந்நறுமலரைப் பேதை மகளிர் மகவாகக் கொண்டு விளையாடற்குக் கொய்கின்ற இளவேனிற் பருவம் மட்டும் வந்து விட்டதே என் செய்கோ! குரவம் பூ உருவத்தால் பாவை போன்றிருக்கும்.

மெய்ப்பாடும் பயனும் அவை. 344

345. அவரோ வாரார் தான்வந் தன்றே
புதுப்பூ அதிரல் தாஅய்க்
கதுப்புஅறல் அணியும் காமர் பொழுதே.

Koviloor Digital Library

தோழி! அவரோ வாரார். புனலிக்கொடி படர்ந்து பரவி, தனது புதிய மலர்களால் நிலமகளின் அறலாகிய கூந்தற்கு அழகு செய்யும் இயற்கையழகுமிக்க இளவேனிற்பருவம் மட்டும் வந்துவிட்டதே. யான் என் செய்கோ? அதிரல் - புனலிக்கொடி. காட்டு மல்லகை.

மெய்ப்பாடும் பயனும் அவை. புனலிக்கொடி நிலமகள் கூந்தற்கு மலர்சூட்டி அணி செய்தல்போன்று எம்பெருமான் இவ் இளவேனிலில் புதுமலர் கொய்து என் கூந்தலில் சூட்டி அணி செய்தற்கு இன்னும் வந்திலரே என்னும் இறைச்சிப் பொருள் பயந்து நின்றது. 345

346. அவரோ வாரார் தான்வந் தன்றே
அஞ்சினைப் பாதிரி அலர்ந்தெனச்
செங்கண இருங்குயில் அறையும் பொழுதே.

தோழி அவரோ வாரார். அழகிய கிளைகளையுடைய பாதிரி மரங்கள் நன்கு மலர்ந்தனவாக சிவந்த கண்களையுடைய கரிய குயிலினங்கள் யாண்டும் கூவா நிற்கும், அந்த இளவேனிற் பருவம் வந்து விட்டதே என் செய்கோ?

மெய்ப்பாடும் பயனும் அவை. 346

347. அவரோ வாரார் தான்வந் தன்றே
எழில்தகை இளமுலை பொலியப்
பொரிப்பூம் புன்கின் முறிதிமிர் பொழுதே.

தோழி! அவரோ வாரார். இளமகளிர் தம்முடைய இளமுலைகள் மேலும் அழகு செய்தும்படி நெற்பொறி போன்ற பூக்களையுடைய புன்க மரத்தினது இளந்தளிரை அப்பிக் கொள்ளற்குக் காரணமான இளவேனிற் பருவம் வந்துவிட்டதே. எவ்வாறு ஆற்றுவல்?

மெய்ப்பாடும் பயனும். அவை. திமிர்தல் - அப்புதல் 347

348. அவரோ வாரார் தான்வந் தன்றே
வலஞ்சுரி மராஅம் வேய்ந்துநம்
மணங்கமழ் தண்பொழில் மலரும் பொழுதே.

Koviloor Digital Library

தோழி! அவரோ வாரார் . நம்முடைய மனைப் படப்பையாகிய நறுமணங்கமழும் பூம்பொழிலின்கண் வலமாகச் சூழிக்கும் மலரையுடைய மராமரம் தம் சினைகளை அரும்பால் வேய்ந்து அழகுற மலர்கின்ற இளவேனிற் பருவம் வந்துவிட்டது . என் செய்கோ?

மராமரம்-வெண்கடம்பு . இளவேனிற் பருவத்தே தலைவன் தலைவியர் பொழிலாடி மகிழ்தல் இயல்பாகலின் அப்பேறு பெற்றிலேன் என்று ஏங்குவாள் மராஅம் மலரும் பொழுது வந்தது என்றாள் .

மெய்ப்பாடும் பயனும் அவை. 348

349. அவரோ வாரார் தான்வந் தன்றே
பொரிகால் மாஞ்சினை புதைய
எரிகால் இளந்தளிர் ஈனும் பொழுதே.

தோழீ அவரோ வாரார் . பொரிந்த அடிப்பகுதியையுடைய மாமரத்தினது கிளைகள் மறைந்து போகும்படி தீப்போன்று ஒளிவீசும் இளைய தளிர்களைத் தோற்றுவிக்கும் இள வேனிற் பருவம் வந்து விட்டதே? யான் எங்ஙனம் ஆற்றுகேன்?

மெய்ப்பாடும் பயனும் அவை. 349

350. அவரோ வார் தான்வந் தன்றே
வேம்பின் ஒண்பூ உறைப்பத்
தேம்படு கிளவியவர்த் தெளிக்கும் போதே.

தோழீ! அவரோ வாரார் . தேனும் தோற்கும் இனிய மொழிகளையுடைய தம் காதலிமாரைத் தெளிவித்தற்குக் காரணமான இளவேனிற் பருவம் வேப்பமரத்தினது ஒள்ளிய மலர்கள் உதிரா நிற்ப வந்தது காண் . யான் எவ்வாறு ஆற்றியிருப்பேன்?

மெய்ப்பாடும் பயனும் அவை. 350

- இளவேனிற் பத்து முற்றிற்று -

Koviloor Digital Library

36. வரவுரைத்த பத்து

அஃதாவது தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் மீண்டு வருதலையே நுவலும் பத்துச் செய்யுளின் தொகுதி.

351. அத்தப் பலவின் வெயில்தின் சிறுகாய்
அருஞ்சுரம் செல்வோர் அருந்தினர் கழியும்
காடுபின் ஒழிய வந்தனர் தீர்கினிப்
பல்லிதழ் உண்கண் மடந்தைநின்
நல்லெழில் அல்குல் வாடிய நிலையே.

அன்புடையோய். நம்பெருமான், கடத்தற்கரிய பாலைநிலக் கொடுநெறியிற் செல்லும் வழிப் போக்கர், அப்பாலை வழியில் வற்றி உலர்ந்து நிற்கும் பலா மரத்தினது வெயிலால் காய்ந்துபோன காய்களைத்தின்று ஒருவாறு கடத்தற்கிடனான அந்தக் காடு பிற்படுமாறு நம்மூர்க்கு வந்துள்ளார். கருங்குவளை மலர் போலும் மையுண்ட கண்களையுடைய பெருமாட்டியே! ஆதலால் இப்போது நின்னுடைய அல்குல் வாடியிருக்கின்ற நிலைமை ஒழிந்து இனிதின் மகிழ்வாயாக.

தீர்க + இனி = தீர்கினி, அகரம் தொக்கது.

மெய்ப்பாடு பெருமிதம், பயன் - ஆற்றுவித்தல். 351

352. விழுத்தொடை மறவர் வில்லிடத் தொலைந்தோர்
எழுத்துடை நடுகல் அன்ன விழுப்பிணர்ப்
பெருங்கை யானை இருஞ்சினம் உறைக்கும்
வெஞ்சுரம் அரிய என்னார்
வந்தனர் தோழிநம் காத லோரே.

தோழீ கேள்! நம் காதலர், அறநெறி பிறழாது அம்பு தொடுக்கும் மறவர் தம்வில்லின்கண் அம்புதொடுத்து எய்தமையால் உயிர் நீத்த வீரர் பொருட்டு நடப்பட்ட அவர்தம் பீடும் பெயரும் எழுதிய நடுகல் போன்ற

Koviloor Digital Library

செதும்பையுடைய பெரிய துதிக்கையையுடைய யானைகள் கோபங்கொள்ளுதற் இடனான பாலைநில வழிகள் கடத்தற்கரியன என்று இடையே தங்குதலின்றி விரைந்து வந்துவிட்டனர். ஆதலால் துன்பத்தை விடுக. பிணர்-சொரசொரப்பு, தொங்கும் துதிக்கை நடுகல் போல் தோன்றும் என்பது கருத்து. ஈண்டு யானைகள் பாலையின்கண் உணவும் நீரும் நிழலும் பெறாவாய் சினமிக்குத் திரிவனவாயின: இதுபாலையின்கண் செல்வோர்க்கு உண்டாகும் தீமையை எடுத்தோதிய படியாம்.

மெய்ப்பாடும் பயனும் அவை. 352

353. எரிக்கொடி கவைஇய செவ்வரை போலச்
சுடர்ப்பூண் விளங்கும் ஏந்தெழில் அகலம்
நீ இனிது முயங்க வந்தனர்
மாயிருஞ் சோலை மலையிறந் தோரே.

நங்காய்! பெரிய சோலைகளையுடைய மலையைக் கடந்து சென்ற நம் தலைவர், காட்டுத் தீ படர்ந்த செவ்விய மலையைப் போன்று ஒளி வீசும் அருங்கலன்கள் அணிந்த திருமார்பினை நீ இனிதாகப் பொருந்தித் தழுவிக் கொள்வதற்கு மீண்டு வந்தனர். எரிக்கொடி - சுடர்ப்பூணுக்கும் செவ்வரை திருமார்பிற்கும் உவமைகள்.

மெய்ப்பாடும் பயனும் அவை 353

354. ஈர்ம் பிணவு புணர்ந்த செந்நாய் ஏற்றை
மறியுடை மான்பிணை கொள்ளாது கழியும்
அரிய சுரன்வந் தனரே
தெரியிழை அரிவைநின் பண்புதர விரைந்தே.

ஆராய்ந்தணிந்த அணிகலன்களையுடைய பெருமாட்டியே! நினது பெண்மை நலமே நினக்குத் தூதாகி அழைத்து வருதலான் நம் தலைவர், பெண்ணாயைப் புணர்ந்த செந்நாயாகிய ஆண் நாய் குட்டிகளையுடைய பெண்மானை இரக்கங் காரணமாக உணவாகக் கொள்ள நினையாமல் வறிதே போகின்ற பாலை நிலத்தைக் கடந்து வந்து விட்டார் பார்! நம் தலைவர் அருட் பண்பு மிக்காராய்த்தாம்

Koviloor Digital Library

இன்னும் இருந்து நிரம்பப் பொருள் ஈட்டுதற்கியன்ற தமது அவாவினையும் விட்டு நின்னை நினைந்து வந்தனர் என்பது உள்ளுறை.

மெய்ப்பாடும் பயனும் அவை. 354

355. திருந்திழை அரிவை நின்னலம் உள்ளி
அருஞ்செயல் பொருட்பிணி பெருந்திரு உறுகெனச்
சொல்லாது பெயர்தந் தேனே பல்பொறிச்
சிறுகண் யானை திரிதரும்
நெறிவிலங்கு அதர கானத் தானே.

திருந்திழை நங்காய்! உன்னுடைய பெண்மை நலத்தை நுகர்தற்கு எண்ணி, பொருளீட்டச் சென்ற எனது பேரவா கெட்டொழிக என்று அதனை விட்டொழித்து என் கருத்தினை எவரிடத்தும் கூறாமல் யானைகள் நீரும் நிழலும் பெறாது சுற்றித் திரிகின்ற பல்வேறு கவர் வழிகளையுடைய பாலை நிலத்தில் மீண்டு விரைந்து நின்பால் வந்துற்றேன். 'பெருந்திரு உறுக' என்றது இகழ்ச்சி. மருங்கறக் கெட்டொழிக என்பது கருத்து. உடன் சென்றோர் விலக்குவரெனச் சொல்லாது மீண்டேன் என்றான்.

மெய்ப்பாடு -, பெருமிதம். பயன் - மகிழ்தல். 355

356. உள்ளுதற்கு இனிய மன்ற செல்வர்
யானை பிணித்த பொன்புனை கயிற்றின்
ஒள்ளெரி மேய்ந்த சுரத்திடை
உள்ளம் வாங்கத் தந்தநின் குணனே.

அன்புள்ள காதலியே! காட்டுத்தீயால் சுட்டழிக்கப்பட்ட பாலைப் பரப்பிடையே யான் வரும்பொழுது செல்வர் தங்கள் யானைகளைக் கட்டிவைத்த அழகிய கயிறுகளைப் போன்ற என் நெஞ்சத்தைக் கவர நீ எனக்கு வழங்கிய நின்னுடைய பெண்மை நலன்கள் நினைத்தற்குப் பெரிதும் இன்பம் உடையன. ஈண்டுச் செல்வர் தலைவிக்கும், யானை தலைவன் நெஞ்சிற்கும், பொன்புனைகயிறு தலைவியின் குணங்கட்கும் உவமைகள்.

Koviloor Digital Library

மெய்ப்பாடும் பயனும் அவை. 356

357. குரவம் மலர மரவம் பூப்பச்
சுரன்அணி கொண்ட கானம் காணூஉ
அழுங்குக செய்பொருள் செலவுஎன விரும்பிநின்
அம்கலிழ் மாமை கவின
வந்தனர் தோழிநம் காத லோரே.

தோழி! நம்மைக் கைவிட்டுச் சென்ற நம் காதலர் தாம் வதிகின்ற நாட்டின்கண் குராமரங்கள் மலர்ந்தமையானும் மராமரங்கள் மலர்ந்தமையானும் வழிகள் அழகுற்ற காட்டினை நோக்கி நாம் குறித்து வந்த இளவேனிற் பருவம் தொடங்கிவிட்டது இது காறும் ஈட்டிய பொருளே சாலும் என்று அமைதி கொண்டு நினக்கு அளி செய்தலை விரும்பி நின்னுடைய அழகிய மாமை நிறம் மீண்டும் எழில் பெறும்படி விரைந்து மீண்டு நம்மூரின்கண் வந்துவிட்டனர்.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - ஆற்றுவித்தல். 357

358. கோடுயர் பன்மலை இறந்தனர் ஆயினும்
நீட விடுமோ, மற்றே நீடுநினைந்து
துடைத்தொறும் துடைத்தொறும் கலங்கி
உடைத்தெழு வெள்ள மாகிய கண்ணே.

தோழி கேள். நம் காதலர் பொருளீட்டற் பொருட்டு உயர்ந்த மலைகளைக் கடந்து தொலைவின்கண் சென்றுளராயினும் நீ அவரை நினைத்து கண்கலங்கிச் சொரிகின்ற கண்ணீரைப் பிறமகளிர் காணா வண்ணம் அடிக்கடி துடைத்துக்கொள்ளவும் நில்லாமல் பெருகும் நின்னுடைய கண்ணீர் அவரை ஆங்குக் காலம் நீட்டித்திருக்க விடுமோ? கடிதின் வருவர். தனது ஆற்றாமையைக் கண்ணீர் ஊரறியத் தூற்றித் தலைவனைப் பழிக்கு ஆளாக்கும் என்று கருதி அடிக்கடி துடைத்தனள் என்பது கருத்து.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - ஆற்றுவித்தல். 358

Koviloor Digital Library

359. அரும்பொருள் வேட்கைய மாகிநின் துறந்து
பெருங்கல் அதரிடைப் பிரிந்த காலைத்
தவநனி நெடிய வாயின இனியே
அணியிழை உள்ளியாம் வருதலின்
அணிய வாயின சுரத்திடை யாறே.

காதற் பாவாய் கேள்! முன்னர் முயன்று பொருள் ஈட்டுதற்கு அவாவுடையேமாய் நின்னைக் கைவிட்டு, பெரிய மலைகளின் இடையே செல்லுகின்ற கொடிய வழியின்கண் பிரிந்து சென்றபொழுது அந்தப் பாலைநில வழிகள் யாவும் மிக நீண்டனவாய்க் காணப்பட்டன. யாம் மீண்டுவந்த இப்பொழுதோ நின்னை நினைந்துகொண்டே வந்தமையால் மிகச் சுருங்கியவைகளாகக் காணப்பட்டன. ஆதலால் மகிழ்ச்சி யோடேயே வந்து சேர்ந்தேன். தலைமகளைப் பிரிகின்ற காலத்துச் சுரத்துச் சேய்மையும் வருகின்ற காலத்து அணிமையும் கூறியது.

மெய்ப்பாடு - மருட்கை. பயன் - மகிழ்தல். 359

360. எரிகவர்ந் துண்ட என்றூழ் நீளிடை
அரிய வாயினும் எளிய அன்றே
அவவுஉறு நெஞ்சம் கவவுநனி விரும்பிக்
கடுமான் திண்தேர் கடைஇ
நெடுமான் நோக்கிநின் உள்ளி வரவே

பிணைமான் விழிபோன்ற நெடிய விழிகளையுடையோய்! எரியுண்டமையான் நிழலும் என்றூழ் நீளுதலான் நீரும் இல்லையான பாலைநில நெறிகள், கடத்தற்கு அரியவாயினும் நின்பால் வேட்கை மிக்க எம் நெஞ்சம் நினது முயக்கத்தைப் பெரிதும் விரும்புதலால் குதிரைகள் பூட்டிய திண்ணிய தேரை மேலும் விரைந்து செலுத்திக்கொண்டு நின்னை நினைந்துயாம் வந்தமையால் சுருங்கிவிட்டன. எம் உள்ளம் போன்று திண்தேரில் பூட்டிய புரவிகளும் விரைந்து வந்து உற்றுழி உதவின என்றான்.

மெய்ப்பாடும் பயனும் அவை. 360

- வரவுரைத்த பத்து முற்றிற்று -

Koviloor Digital Library

37. முன்னிலைப் பத்து

அஃதாவது, ஒவ்வொரு செய்யுளும் கேட்போரை விளித்து முன்னிலைப்படுத்திக் கூறுவதாக அமைந்த பத்துச் செய்யுட்களின் தொகுதி என்றவாறு.

361. உயர்கரைக் கான்யாற்று அவிர்மணல் அகன்துறை
வேனிற் பாதிரி விரிமலர் குவைஇத்
தொடலை தைஇய மடவரல் மகளே
கண்ணினும் கதவநின் முலையே
முலையினும் கதவநின் தடமென் தோளே.

இருபாலும் உயர்ந்த கரைகளையுடைய காட்டாற்றின் எக்கர் மணற் பரப்பு அகன்ற துறைக்கண் நின்ற வேனில் காலத்து மலரும் பாதிரி மரத்தின் மலர்களைக் கொய்து மாலை புனைந்த மடமகளே! நின்னுடைய விழிகளைக் காட்டிலும் வெகுளி மிக்கன நின்னுடைய முலைகள். அவைகளைக் காட்டிலும் வெகுளி மிக்கன நின்னுடைய மெல்லிய தோள்கள். அங்ஙனமிருப்பவும் இவற்றை விடுத்து விழிகளை மட்டும் புதைத்தல் எற்றிற்கு?

மெய்ப்பாடு - நகை. பயன் - அசதியாடி மகிழ்தல். புணர்ந்து உடன் போகிய தலைமகன் இடைச் சுரத்துக்கண் விளையாட்டு வகையால் பூத்தொடுக்கின்ற தலைமகளைக் கண்டு புகழ அவள் அதற்கு நாணிக் கண் புதைத்த வழிச் சொல்லியது. 361

362. பதுக்கைத் தாய ஒதுக்கருங் கவலைச்
சிறுகண் யானை உறுபகை நினையாது
யாங்குவந் தனையோ பூந்தார் மார்ப
அருள்புரி நெஞ்சம் உய்த்தர
இருள்பொர நின்ற இரவி னானே.

Koviloor Digital Library

சேணிடைப் பிரிந்த தலைமகன் இடைநிலத்துத் தங்காது இரவின்கண் வந்துழித் தோழி சொல்லியது.

வெற்றிமாலை சூடிய மார்பனே! கற்குவியல்களையுடைய கவர்த்த நெறிகளின் பால் யானைகளாகிய பகை உயிர்கள் திரிவதைப் பொருளாகக் கருதாமல் வழிப் போக்கர்களைத் தடுத்து நிறுத்தும் பேர் இருள் பொழுதில் எம்பால் அருள்மிகும் நின் நெஞ்சம் நின்னை ஊக்குதலால் எப்படித்தான் வந்து சேர்ந்தனையோ. இதனை எண்ணுங்கால் எம் நெஞ்சம் நடுங்குகின்றது.

மெய்ப்பாடு - அச்சம். பயன் - மிகுதிக்கண் மேற் சென்று இடித்தல். 362

363. சிலைவிற் பகழிச் செந்துவ ராடைக்
கொலைவல் எயினர் தங்கைநின் முலைய
சுணங்கென நினைதி நீயே
அணங்கென நினையும்என் அணங்குறு நெஞ்சே.

புணர்ந்துடன் செல்கின்ற தலைமகன் இடைச்சுரத்துத் தலைமகளை நலம் பாராட்டியது. சிலைமரத்தால் செய்யப்பட்ட வில்லையும் அதற்கியைந்த கூரிய அம்புகளையும் சிவந்த துவராடையையும் உடைய கொலைவல் எயினர் தங்கையே! நின் முலையின் கண்ணை தாகிய தேமலை நீ தேமல் என்னும் அளவில் நினைக்கின்றாய். ஆனால் என்னுடைய மனமோ அதனைப் பிற உயிர்களை வருத்துமொரு தெய்வம் என்றே எண்ணுகின்றது.

மெய்ப்பாடு - மருட்கை. பயன் - நலம் பாராட்டிச் சொல்லாடத் தொடங்குதல். எயினர் - பாலை நில மக்கள். 363

364. முளமா வல்சி எயினர் தங்கை
இளமா எயிற்றிக்கும் இந்நிலை அறியச்
சொல்லினேன் இரக்கும் அளவை
வெள்வேல் விடலை விரையா தீமே

Koviloor Digital Library

வெற்றியுடைய வேற்படை ஏந்திய பெருமானே! முள்ளம் பன்றியின் ஊனை உணவாகக் கொள்ளும் எயினருடைய தங்கையாகிய இளமையும் பெருமையும் உடைய எம் பெருமாட்டிக்கு இந்தப் புதிய சூழ்நிலையை விளங்கும்படி கூறி, உடம்படுவிக்கும் அளவும் நீ இவ்வாறு விரைய வேண்டா. அதுகாறும் அமைதியாக இருக்க வேண்டுகின்றேன்.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - வரைவு கடா அதல்.

நீ உலகியலோடு ஒன்ற எம் சுற்றத்தார் பால் மகட் பேசி வந்து வரைந்து கொள்ளுதற்கண் சிறிதும் முயலாமல், உடன் கொடு போதற்கண் மிகவும் விரைவுடையை ஆகின்றாய். சிறிது அமைதியோடிருந்து வரைந்து கோடலே நன்று என்று குறிப்பால் உணர்த்துவாள் விரையாதீம் என்றாள். 364

365. கணமா தொலைச்சித் தன்னையர் தந்த
நிணவூன் வல்சிப் படுபுள் ஓப்பும்
நலமாண் எயிற்றி போலப் பலமிகு
நல்நலம் நயவர உடையை
என்நோற் றனையோ மாஇன் தளிரே.

மாமரத்தினது காட்சிக்கினிய மாந்தளிரே! கூட்டமாகிய விலங்குகளைக் கொன்று தன் தமையன்மார் கொண்டுவந்த மாமிச உணவின் கண் விழுகின்ற பறவைகளை ஓட்டுகின்ற பலவாய் மிகுந்த பெண்மை நலத்தால் மாட்சிமையுடைய என் காதலியாகிய எயினர் தங்கை போல கண்டோர் விரும்பும் நல்ல பேரெழில் பெற்றிருக்கிறாய். அத்தகைய பேறு பெறுதற்கு நீ என்ன தவஞ்செய்தாய்? அறிகின்றிலேன். தலைவன் தலைவியின் பெண்மை நலனெல்லாம் நுகர்ந்துணர்ந்த நினைவால் பலமிகு நலமாண் எயிற்றி என்று பாராட்டினான்.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - ஆற்றுதல். 365

Koviloor Digital Library

366. அன்னாய் வாழிவேண் டன்னைஎன் தோழி
பசந்தனள் பெரிதெனச் சிவந்த கண்ணை
கொன்னே கடவுதி யாயின் என்னதூஉம்
அறிய ஆகுமோ மற்றே
முறியிணர்க் கோங்கம் பயந்த மாறே.

தாயே வாழ்வாயாக! நான் கூறுவதைக் கேள். தலைவி மிகவும் பசலையுள் மூழ்கி மெலிந்தனள் என்று என்பாற் சினங்கொண்டு சிவந்த கண்ணையுடையையாய் இதற்குக் காரணம் யாது கூறுக என்று யான் அஞ்சும்படி என்னை வினவுகின்றாய். ஒருநாள் யாங்கள் விளையாடுமிடத்தே வந்த தோன்றல் ஒருவன் ஒரு கோங்க மலரை இவட்கு ஈந்து சென்றான். அம்மலரே இவட்கு அப்பசலை நோயைத் தந்தது போலும். அந்த நிகழ்ச்சியன்றி வேறில்லை. நீ சினத்தலால் பயன் யாது?

மெய்ப்பாடு - அச்சம். பயன் - மறை வெளிப்படுத்துதல். 366

367. பொரியரைக் கோங்கின் பொன்மருள் பசுவீ
விரியிணர் வேங்கையொடு வேறுபட மிலைச்சி
விரவுமலர் அணிந்த வேனில் கான்யாற்றுத்
தேரொடு குறுக வந்தோன்
பேரொடு புணர்ந்தன்று அன்னைஇவள் உயிரே.

நொதுமலர் வரைவின்கண் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

தாயே! கேட்டருள்க. இளவேனில் பருவத்தில் மலர்களுடன் வெள்ளம் வருகின்ற காட்டாற்றில் நின்மகளும் ஆயத்தாரும் யானும் நீராடிய போது நின்மகள் ஆழ் புனலில் பட்டு நீரோடு அடித்துச் சென்றாளாக அத்தகைய இன்னாப் பொழுதில், கோங்க மரத்தினது பொன் போன்ற பசிய மலரை விரிந்த பூங்கொத்துக்களையுடைய வேங்கை மலரோடு அவை வேறு வேறாகத் தோன்றும்படி அணிந்துகொண்டு எங்கிருந்தோ தேரோடு ஒரு தோன்றல் வந்தனன்.

Koviloor Digital Library

அப்பெருமகனால் நீரின்றும் கரையேற்றி உய்யக் கொண்ட இவளுடைய உயிர், அந்த நம்பியினுடைய பேரோடு இணைவதாயிற்று . ஆதலால் அன்று தொட்டு நின்மகள் அவனுக்கே உரிமை உடையவளாய்க் கற்புக் கடம் பூண்டனள் .

மெய்ப்பாடும் பயனும் அவை. 367

368. எரிப்பூ இலவத்து ஊழ்கழி பன்பலர்
பொரிப்பூம் புன்கின் புகர்நிழல் வரிக்கும்
தண்பத வேனில் இன்ப நுகர்ச்சி
எம்மொடு கொண்மோ பெருமநின்
எம்மெல் ஓதி அழிவிலள் எனினே.

பெருமானே! இலவமரத்தில் பருவத்தே மலர்ந்து பின்வாடி உதிர்கின்ற மலர்கள் புன்க மரத்ினது நிழலிடத்தைக் கோலம் செய்தற்குக் காரணமான குளிர்ந்த செவ்வியையுடைய இளவேனிற் பருவத்தே நுகர்கின்ற பேரின்ப நுகர்ச்சியை நின்னுடைய ஆருயிர் காதலி அப்பருவம் வருந்துணையும் இறந்து படாமல் உயிரோடு இருப்பாளாயின் நீ மீண்டுவந்து எம்மோடு கூடி நுகர்வாயாக . அழிவிலள் எனின் கொண்மோ என்றது ஒருதலையாக இவள் நின் பிரிவால் இறந்து படுவள் என்பதனை வற்புறுத்துகின்றது .

மெய்ப்பாடு - அழுகை. பயன் - செலவு அழுங்குவித்தல். 368

369. வளமலர் ததைந்த வண்டுபடு நறும்பொழில்
முளைநிரை முறுவல் ஒருத்தியொடு நெருநல்
குறிநீ செய்தனை என்ப அலரே
குரவ நீள்சினை உறையும்
பருவ மாக்குயில் கௌவையில் பெரிதே.

கள்வனே! மலர்கள் செறிந்தமையால் வண்டுகள் மொய்த்து இசை முரல்கின்ற பூம்பொழிலில் நேற்று நிரல்பட்ட பற்களையுடைய பரத்தையோடு புணர்குறி செய்தாய் என்று கண்டோர் கூறுகின்றனர் . அப்பழிச் சொல் இவ் இளவேனிற் பருவத்தே மலர்ந்த குராமரத்தின்

Koviloor Digital Library

கிளையில் வதியும் கரிய குயிற்குலம் செய்யும் ஆரவாரத்தைக் காட்டிலும் மிகுதியாக யாண்டும் கேட்கப்படுகின்றது. ஆதலால் நீ பொய் கூறி எம்மை மருட்ட வேண்டா! வந்த நெறியே திரும்பிச் செல்க. என்பது குறிப்பெச்சம்.

குறி - பற்குறி நகக்குறி முதலிய புணர்குறிகள்.

மெய்ப்பாடு - வெகுளி. பயன் - வாயில் மறுத்தல்.

இது பாலைக்கு உரித்தாகிய வேனிற்கண் நிகழும் குரவும் குயிலும் கூறுதலால் பாலையாயிற்று. 369

370. வண்சினைக் கோங்கின் தண்கமழ் படலை
இருஞ்சிறை வண்டின் பெருங்கிளை மொய்ப்ப
நீநயந்து உறையப் பட்டோள்
யாவ ளோஎம் மறையா தீமே

இது பாலைக்குரிய கருப்பொருளாகிய கோங்கு கூறினமையின் பாலையாயிற்று. கள்வனே! நீ மிகவும் விரும்பி கோங்க மரத்தினது மலராற் புனையப்பட்ட தண்ணிய நறுமணமுடைய மாலையை கரிய சிறகுகளையுடைய வண்டுகளின் திரள் மொய்க்கும் படி சூட்டி நின்னால் உடன் உறையப்பட்ட பரத்தை யார்? எமக்கு மறைக்க முயலாமல் உண்மை கூறுக. பரத்தையர் தங்கள் இனத்தொடு திரண்டு நின்னை வாழ்த்த என வெளிப்படையாற் கூறாமல் அக்கருத்து இறைச்சி வகையால் தோன்ற 'இருஞ்சிறை வண்டின் பெருங்கிளை மொய்ப்ப' என்றாள்.

மெய்ப்பாடும் பயனும் அவை. யாம் இச்செய்தியைப் பலர் கூறக் கேட்டுள்ளோம் என்பதாம். 370

- முன்னிலைப் பத்து முற்றிற்று -

Koviloor Digital Library

38. மகட் போக்கிய வழித் தாயிரங்கு பத்து

அஃதாவது, களவொழுக்கத்தின்கண் தலைவியை இற்செறித்தலும், காப்பு மிகுதியும், அயலோர் மகட் பேசி வருதலும் பிறவுமாகிய இடையூறுகளால் தலைவனும் தலைவியும் கூடிக் களித்தற்கும் அல்லது வரைந்து கோடற்கும் வழியில்லாமல் போனபோது, உயிரினும் சிறந்த கற்பினைப் பேணிக் கோடற்குத் தோழி தலைவியையும் தலைவனையும் உடம்படுவித்து இரவின்கண் சுற்றத்தார் யாரும் அறியாதபடி தலைவன்பால் ஓம்படை (பாதுகாப்பு) செய்து இருவரையும் ஊரைவிட்டுப் போய்விடும்படி செய்வள் . அவ்வாறு நிகழ்ந்துழி தம்மகள் ஒருவனுடன் போய்விட்டாள் என்னும் செய்தியை மறுநாள் நற்றாயும் செவிலித்தாயுமாகிய தாயர் அறிந்துழி அன்பு கெழுமிய மகளையிழந்த வருத்தத்தால் வருந்திய வருத்தம் நுதலிவந்த பத்துப்பாட்டின் தொகுதி என்றவாறு .

371. மள்ளர் கோட்டின் மஞ்ஞை யாலும்
உயர்நெடும் குன்றம் படுமழை தலைஇச்
சுரநனி இனிய வாகுக தில்ல
அறநெறி இதுவெனத் தெளிந்தஎன்
பிறைநுதற் குறுமகள் போகிய சுரனே.

ஆண்டால் மிகவும் இளமையுடையோள் ஆயினும் இங்ஙனம் உடன் போதலே கற்புக் கடம் பூண்ட மகளிர்க்கு அறநெறியாகும் என்று ஐயம் திரிபு அற உணர்ந்து கொண்ட என்னுடைய பிறைபோன்ற சுடர் நுதலையுடைய இளமகள் தன் கணவனோடு சென்ற பாலை நிலப்பரப்பு மறவர் முழக்கும் போர் முரசொலிக்கு ஏற்ப மயில்கள் களித்துக் கூத்தாடுகின்ற அப்பாலைக் கண் உள்ள மிக உயர்ந்த மலைகளின் உச்சியில் வம்பமாரி பெய்து வழிகள் மிகவும் குளிர்ந்து இனிமை பயப்பனவாகுக . மள்ளர் - போர்மறவர் .

Koyiloor Digital Library

மழை தானும், மடவார் கற்பின் வழித்தாகலின் அவள் சென்ற சுரம் குளிரும்படி அம்மழை பொழியும் என்னும் துணிவு பற்றி மழை தலைஇச் சுரம் இனியவாகுக என்றாள்.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - இரங்குதல். 371

372. என்னும் உள்ளினள் கொல்லோ தன்னை
நெஞ்சுணத் தேற்றிய வஞ்சினக் காளையொடு
அழுங்கல் மூதூர் அலரெழச்
செழும்பல் குன்றம் இறந்தஎன் மகளே.

இளமையுடைய தன்னை நெஞ்சைக் கவர்ந்து கொள்ளும்படி சூள் மொழிந்து தெளிவித்த பிறன்மகன் ஒருவனோடு, பிறர் பழியை யாண்டும் தூற்றி ஆரவாரம் செய்யும் இயல்புடைய பழமையான இவ்வூரின் கண் யாண்டும் அலர் உண்டாகும்படி வளப்பமுள்ள பல மலைகளைக் கடந்து வெப்பம் மிகுந்த பாலை நிலத்தில் சென்ற என் அரும்பெறல் மகள் அங்ஙனம் போகும்போது என்னை ஒருமுறையேனும் நினைத்திருப்பாளோ! நினைத்திருப்பின் என் அன்பு அவளைத் தடுத்திருக்குமே.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - இரங்குதல். 372

373. நினைத்தொறும் கலிழும் இடும்பை எய்துக
புலிக்கோட் பிழைத்த கவைக்கோட்டு முதுகலை
மான்பிணை அணைதர ஆண்குரல் விளிக்கும்
வெஞ்சுரம் என்மகள் உய்த்த
வம்பமை வல்வில் விடலை தாயே

புலி தன்னைப் பற்றிக் கோடலினின்றும் தப்பியுய்ந்த கவருடைய கொம்புகளையுடைய முதுமையுடைய ஆண்மான், அப்புலியை அஞ்சித் தன்னைப் பிரிந்து போன தன்னுடைய பெண்மான் மீண்டும் தன்பால் வந்து சேரும்பொருட்டு, தன்னுடைய ஆண்மைத்தன்மை தோன்றும் குரலால் கூப்பிட்டு அழைத்தற்குக் காரணமான வெவ்விய பாலை

Thanmanam is a beautiful girl

Koviloor Digital Library

நெறியின் கண் என் மகளைச் செலுத்திய தீவினையைச் செய்த புதிய மூங்கிலால் செய்யப்பட்ட வலிய விற்படையையுடைய அந்த நம்பியின்தாய், நினைக்குந்தோறும் கண்கலங்கி அழுதற்குரிய பெருந்துயரத்தை என்போன்று அடைவாளாக.

மெய்ப்பாடு - வெகுளி. பயன் - இரங்குதல். 373

374. பல்லூழ் நினைப்பினும் நல்லென் றூழ
மீளி முன்பின் காளை காப்ப
முடியகம் புகாக் கூந்தலள்
கடுவனும் அறியாக் காடுஇறந் தோளே.

நன்கு வளர்ச்சியுறாத கூந்தலையுடைய மிக்க இளமையுடையவளாகிய என் மகள் மறலி போன்ற வலி படைத்த இளையான் ஒரு நம்பி தன்னைக் காத்து வர குரங்கும் கடந்தறியாத செறிவினையும் கடுங்கோடையையும் உடைய காட்டையும் கடந்து சென்றாள் என்னும் இச் செய்தியை பல்வேறு முறையானும் நினைந்து பார்க்கினும் ஆற்றியிருத்தற்கு வழி காண்கிலேன். என்றூழ் கோடை

மெய்ப்பாடு - அழுகை. பயன் - இரங்குதல். 374

375. இதுவென் பாவை பாவை இதுஎன்
அலமரு நோக்கின் நலம்வரு சுடர்நுதல்
பைங்கிளி எடுத்த பைங்கிளி என்றிவை
காண்தொறும் காண்தொறும் கலங்க
நீங்கின ளோஎன் பூங்க ணோளே.

என்மகளாகிய கருங்குவளை மலர் போன்ற அழகிய கண்களையுடையோள் இவ்விளையாட்டுக் கருவிகளைப் பார்க்குந்தோறும் பார்க்குந்தோறும் இஃது என் மகளாகிய பாவை போல்வாளின் விளையாட்டுப் பாவை என்றும் இஃது என்னுடைய சுழலும் விழிகளையும் அழகு மிகுந்த ஒளி நுதலையும் உடைய பச்சைக் கிளியை ஒத்த செல்வி விரும்பித்தன் கையிலேந்திய பச்சைக் கிளியாகும் என்றும் கூறி, மனம் கலங்கி யழும்படி என்னைக் கைவிட்டுச் சென்றுவிட்டாளோ? இனியான் என் செய்கோ?

Koviloor Digital Library

மெய்ப்பாடு - அழுகை. பயன் - இரக்கம். 375

376. நாள்தொறும் கலிழும் என்னினும் இடைநின்று
காடுபடு தீயின் கனலியர் மாதோ
நல்வினை நெடுநகர் கல்லெனக் கலங்கப்
பூப்புரை உண்கண் மடவரல்
போக்கிய புணர்த்த அறனில் பாலே.

தலைமகள் போயவழி நற்றாய் விதியை வெகுண்டு சொல்லியது. நல்லறங்களே நிகழ்தற்கு இடனான இந்த நெடிய இல்லத்தின்கண் வாழும் எம்மனோர் இனி நாள்தோறும் அழுதுகலங்கும்படி நீலப்பூ போன்ற மையுண்ட கண்களையுடைய என் மட மகளை எம்மை நீத்துப் போதற்கு வழி செய்த அறப்பண்பற்ற தீவினை, மகட் போக்கிய துயரத்தால் அழுகின்ற என் நெஞ்சு வேதலினும் மிகுதியாக காட்டுத் தீயின் நாப்பண் அகப்பட்டு நின்று வெந்தொழிக! கனலியர் - வியங்கோள்.

மெய்ப்பாடும் பயனும் அவை. 376

377. நீர்நசைக்கு ஊக்கிய உயவல் யானை
இயம்புணர் தூம்பின் உயிர்க்கும் அத்தம்
சென்றனள் மன்றஎன் மகளே
பந்தும் பாவையும் கழங்கும்எமக்கு ஒழித்தே.

என் அன்பு மகள் தான் மகிழ்ந்தாடும் பந்தும் பாவையும் கழங்கு மாகிய இவற்றை யாம் அழும்படி எம்பால் விட்டு வைத்து, நீர் வேட்கையால் மன எழுச்சி கொண்ட யானை நீர் பெறாமையால் நெடுவங்கியம் என்னும் துளைக் கருவிபோலத் துதிக்கையை உயர்த்தி, பிளிறுதற்கிடனான கொடிய பாலை நிலத்து வழியில் மன உறுதியுடன் பிறள்மகன் ஒருவனோடு போயினள். யான் எவ்வாறு இத்துயரை ஆற்றியிருப்பேன்.

மெய்ப்பாடும் பயனும் அவை. 377

Koviloor Digital Library

378. செல்லிய முயலிப் பாஅய சிறகர்
வாவல் உகக்கும் மாலையாம் புலம்பப்
போகிய அவட்கோ நோவேன் தேமொழித்
துணையிலள் கலிழும் நெஞ்சின்
இணையேர் உண்கண் இவட்குநோ வதுவே.

தோழியின் ஆற்றாமை கண்டு நற்றாய் சொல்லியது இது.

பழத்தை நுகர்தற்குப் போக நினைந்து பின்னர் அம் முயற்சிக்கேற்ப விரித்த சிறகுகளையுடைய வௌவால் தான் விரும்பியவாறே தடையின்றி உயர்ந்து பறப்பதற்குக் காரணமான இந்த மாலைப் பொழுதில் யாங்கள் அழும்படி எம்மைக் கைவிட்டுத்தான் விரும்பிய காளையோடு போய்விட்ட என் மகளுக்காக யான் வருந்தவில்லை. நான் இப்போது வருந்துவது என் மகளை இழந்த தோழியாகிய இவள் பொருட்டேயாம். முயலி - முயன்று, பாஅய் - பரப்பிய. உகத்தல் - ஏறப்பறத்தல்.

மெய்ப்பாடும் பயனும் அவை. 378

379. தன்னமர் ஆயமொடு நன்மண நுகர்ச்சியின்
இனிதாங் கொல்லோ தனக்கே பனிவரை
இனக்களிறு வழங்கும் சோலை
வயக்குறு வெள்வேல் அவற்புணர்ந்து செலவே.

தோழி! அவள் தன் காதலனுடன் சென்றது நன்றே ஆயினும், அவளுக்குப் பனி படர்ந்த மலை நிலத்தின்கண் உள்ள பிடியும் கன்றுமாகிய தன் இனத்தோடு களிற்று யானைகள் திரிகின்ற அஞ்சத் தகுந்த சோலைகளினூடே அந்த வேலேந்திய நம்பியோடு கூடி அன்பு மிக்க எம்மைக் கைவிட்டுச் செல்லுகின்ற செலவு, தன்னைப் பெரிதும் விரும்புகின்ற தோழியர் சூழலில் ஈண்டே இயற்றப்படும் பலரறி மணந்தரும் இன்பத்தினும் மிக்க இன்பம் தருவதாகுமோ. கூறுவாயாக

மெய்ப்பாடும் பயனும் அவை. 379

Koviloor Digital Library

380. அத்தம் நீளிடை அவனொடு போகிய
முத்தேர் வெண்பல் முகிழ்நகை மடவரல்
தாயர் என்னும் பெயரே வல்லாறு
எடுத்தேன் மன்ற யானே
கொடுத்தோர் மன்றஅவள் ஆயத் தோரே.

ஊரிரே! எளியேன், வழி மிகவும் நீண்ட பாலை நிலத்தில் தலைவனோடு தானே சென்ற வெண்பற்களையும் புன்முறுவலையும் மடப்பத்தையும் உடையவளுக்கு இவள் தாயாவாள் என்று கண்டோர் கூறும் நற்பெயரை இயன்ற வகையால் நான் பெற்றுக் கொண்டேன். அந்த நற்பெயரையும் அவளுடைய தோழிமாரே எனக்கு வழங்கினார்கள். இனி அழுது என்ன பயன்? அலர் மொழிக்கு அஞ்சிய செவிலி இப்பழியைத் தனக்கு உண்டாக்கியவள் தன் மகளாகிய தோழியே என்று, தன் மகள் அறத்தொடு நின்று தனக்கு உணர்த்தாமல் உடன் போந்துணையும் வாளா இருந்தமைக்கு நொந்து கூறியது.

மெய்ப்பாடு - அழுகை, பயன் - தன்னையே நொந்து கோடல். 380

- மகட்போக்கிய வழித் தாயிரங்கு பத்து முற்றிற்று -

Koviloor Digital Library

39. உடன் போக்கின் கண் இடைச் சுரத்து உரைத்த பத்து

அஃதாவது தலைவன் தலைவியை உடன் அழைத்துக் கொண்டு போகும்போது சுரத்தின்கண் கண்டோரும், தேடிச் செல்லும் செவிலியும் அவட்கு எதிர்ப்பட்ட அந்தணரும் கூறும் கூற்றுக்களும் தலைவன் தலைவியர் தம்முட் கூறும் கூற்றுக்களுமாகிய பத்துச் செய்யுளின் தொகுதி என்பதாம்.

381. பைங்காய் நெல்லி பலவுடன் மிசைந்து
செங்கால் மராஅத்த வரிநிழல் இருந்தோர்
யார்கொல் அளியர் தாமே வார்சிறைக்
குறுங்கால் மகன்றில் அன்ன
உடன்புணர் கொள்கைக் காத லோரே.

பசிய நெல்லிக் காய்கள் பலவற்றையும் இருவரும் கூடித் தின்று கொண்டு, மராமரத்தினது வரி நிழலில் வீற்றிருக்கும் இம்மென் மக்கள் யார் பெற்ற மக்களோ? அறிகின்றிலேம். இவர் நீண்ட சிறகுகளையும் குறிய கால்களையும் உடைய மகன்றில் பறவையின் பிரிவரிய காதற் கேண்மையை ஒத்தவராகக் காணப் படுகின்றனர். இவர் நம்மால் இரங்கப் படுதற்குரியர். இங்ஙனம் கண்டு இரங்கிக் கூறுவோர் தாமும் மகப் பயந்து வாழ்வோர் ஆகலின் இவரைக் கண்டுழி அருள் பிறந்து இங்ஙனம் இரங்குகின்றனர்.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - இரங்குதல்.

பாலைப் பரப்பில் நீர் வேட்கை தணித்தற்கு நீர் இன்மையின் நெல்லிக்காய்-கனிகளை அவ்வழியே செல்வோர் தின்ற வேட்கை தணிவது வழக்கம். இளைப்பாறுதற்குச் செறிந்ததொரு நறுநிழலும் அங்கு இலதாமிற்று.

Koviloor Digital Library

382. புள்ளொலிக்கு அமர்த்த கண்ணன் வெள்வேல்
திருந்துகழல் காளையொடு அருஞ்சுரம் கழிவோள்
எல்லிடை அசைந்த கல்லென் சீறூர்ப்
புனையிழை மகளிர்ப் பயந்த
மனைகெழு பெண்டிர்க்கு நோவுமார் பெரிதே.

பண்டு தான் கேட்டறியாமையால் இப்பாலைநில புறவு முதலியவற்றின் குரல் கேட்டு அஞ்சி மருண்ட கண்ணையுடையவளாய் வேற்படை அண்ணலொடு தன் தாயர் முதலியோரை நீத்துப் பாலை வெந் நெறிகளைக் கடக்கும் இவள் கடு வெயிலில் இளைப்பாறுதற்கு இந்தச் சிறிய ஊரில் இல்லறத்தே பொருந்திய பெண் மக்களைப் பெற்று வளர்க்கும் தாய்மைப் பேறுடைய மனைக் கிழத்தியர்க் கெல்லாம் உண்டாகிய மகிழ்ச்சியோடு வருத்தமும் மிகப் பெரிதாயிற்று.

புள் - பாலைக் கருப் பொருளாகிய கழுகும் பருந்தும் புறவுமாம். புறவு - புறா.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - இரங்குதல். இது கண்டோர் கூற்று. 382

383. கோள்சுரும்பு அரற்றும் நாள்சுரத்து அமன்ற
நெடுங்கால் மராஅத்துக் குறுஞ்சினை பற்றி
வலஞ்சுரி வாலிணர் கொய்தற்கு நின்ற
மள்ளன் உள்ள மகிழ்கூர்ந்து அன்றே
பஞ்சாய்ப் பாவைக்கும் தனக்கும்
அம்சாய் கூந்தல் ஆய்வது கண்டே

இந்த விடியற் காலத்தே தன் ஆருயிர்க் காதலியாகிய இந் நங்கை பாலை நிலத்தில் மராமரத்தினது குறிய கிளையை வளைத்துப் பிடித்துக் கொண்டு தேனைக் கொள்கின்ற வண்டுகள் முரல்கின்ற வெள்ளிய மலர்களைக் கொய்தற் பொருட்டு, தன் செலவு தவிர்ந்து அவளையே கூர்ந்து நோக்கி நின்ற இந்த இளமறவன் நெஞ்சம் அம்மலர்களைத் தன் விளையாட்டுப் பாவைக்கும் தனக்குமாக இரு கூறு படுத்தும் செயலைக் கண்டு பெரிதும் மகிழ்தலைக் காணுங்கள். இது கண்டோர் கூற்று.

Koviloor Digital Library

மெய்ப்பாடு - வியப்பு. பயன் - மகிழ்ச்சி. 383

384. சேண்புலம் முன்னிய அசைநடை அந்தணிர்
நும்மொன்று இரந்தனென் மொழிவல் எம்மூர்
ஆய்நயந்து எடுத்த ஆய்நலம் கவின
ஆரிடை இறந்தனள் என்மின்
நேர்இறை முன்கைஎன் ஆயத் தோர்க்கே.

தூர நாட்டைக் கருதிச்செல்லும் அந்தணிர்! பெரியீராகிய நும் பால் அடியேன் ஒருவிண்ணப்பம் கூறுகின்றேன் செவியேற்றருள்க. எம்மூரின் கண் செல்லுங்கால் ஆண்டு என்னைக் காணாமையால் அலமருகின்ற என் தோழிமார்க்கு நும் தோழியாவாள் தன் தாய் விரும்பி வளர்த்த பேரழகு புதுமையுற்றுப் பொலியும்படி, கடத்தற்கரிய பாலை நெறியைக் கடந்து சென்றனள் என்று கூறுங்கள். அந்தணர் - ஈங்குப் பற்றற்ற தாபதர்.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - தோழியர் துயர் போக்குதல். இது தலைவி கூற்று. 384

385. கடுங்கண் காளையொடு நெடுந்தேர் ஏறிக்
கோள்வல் வேங்கை மலைபிறக் கொழிய
வேறுபல் அருஞ்சுரம் இறந்தனள் அவளெனக்
கூறுமின் வாழியோ ஆறுசெல் மாக்கள்
நல்தோள் நயந்துபா ராட்டி
என்கெடுத்து இருந்த அறனில் யாய்க்கே.

வழிப்போக்கர்களே நீவிர் நெடிது வாழ்வீராக! நீயிர் எம்மூர் புக்குழி, யான் பிறந்த நாள் தொடங்கி என்னைப் பாராட்டி வளர்த்துப் பின்னர் தனது அறியாமையால் என்னை இழந்து அலமந்து மனைக்கண் இருந்த அறநெறி அறியாத என் தாய்க்கு, நின்மகள் அஞ்சாமையுடைய ஒரு காளை போல்வானோடு பெரியதேரில் ஏறிக்கொண்டு கொல்லும் வேங்கைகள் பதுங்கிக் கிடக்கின்ற மலைகள் பல பிற்பட்டொழியும்படி கடத்தற்கரிய பாலைக் கொடு நெறிகளைக் கடந்து சென்றுவிட்டாள் என்று சொல்லுங்கள்.

Koviloor Digital Library

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - தமர்க்கு அறிவுறுத்தல். 385

386. புன்கண் யானையொடு புலிவழங்கு அத்தம்
நயந்த காதலற் புணர்ந்துசென் றனளே
நெடுஞ்சுவர் நல்லில் மருண்ட
இடும்பை உறுவிநின் கடுஞ்சூல் மகளே.

நெடிய சுவர்களால் சூழப்பட்ட அறஞ் செய்தலையுடைய நல்ல இல்லத்தின் கண் இருந்து நன்மகளைக் காணாமையால் துயருற்றிருக்கும் பெருமாட்டியே கேள்! நின் முதற் பிரசவத்தில் பிறந்த தலைமகள் விதி ஏவியபடி, தன்னைப் பெரிதும் விரும்பிக் காதலித்த காளை ஒருவனோடு கூடி யானைகளும் புலிகளும் திரிகின்ற பாலைக் கொடு வழியில் சென்றாள் . யாம் கண்கூடாகக் கண்டு வருகின்றோம் . ஆதலால் வருந்தற்க.

உறுவி - நுகர்பவள். கடுஞ்சூல் - முதற்சூல்.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - ஆற்றுவித்தல். 386

387. அறம்புரி அருமறை நவின்ற நாவில்
திறம்புரி கொள்கை அந்தணிர் தொழுவலென்று
ஒள்தொடி வினவும் பேதையம் பெண்டே
கண்டனெம் அம்ம சுரத்திடை அவளை
இன்துணை இனிதுபா ராட்டக்
குன்றுயர் பிறங்கல் மலையிறந் தோளே.

மறைகளை இடையறாது பயின்று அடிப்பட்ட செந்நாவினையும், கற்றாங்கு ஒழுகும் கொள்கையும் உடைய அந்தணர்களே! நும்மை வணங்குகின்றேன் என்று முதலில் எமக்கு வணக்கம் செய்து, பின்னர் அழகிய வளையணிந்த பெண் ஒருத்தியைக் கண்டதுண்டா என்று வினவுகின்ற அறியாமை நிறைந்த மனைக் கிழத்தியே! யாம் கூறுவதைக் கேட்பாயாக. நீ வினவும் அந்த நங்கையை யாங்கள் வரும் இச்சுரத்தில் எம் எதிர் சென்றாளைக் கண்டு வருகின்றேம். அவள் தன் காதலன் நல்லன சொல்லி உடன் செல்ல அதோ தோன்றுகின்ற மலையையும்

Koviloor Digital Library

கடந்து சென்று விட்டாள். இனி நீ அவளைத் தொடர்ந்து செல்வது அறியாமையாகும்.

இன் துணை - காதலன்.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - செவிலியை ஆற்றுவித்தல். 387

388. நெருப்பவிர் கனலி உருப்புச்சினந் தணியக்
கருங்கால் யாத்து வரிநிழல் இரீஇச்
சிறுவரை இறப்பின் காண்குவை செறிதொடிப்
பொன்னேர் மேனி மடந்தையொடு
வென்வேல் விடலை முன்னிய சுரனே.

அன்னையே! வெயிற் கொடுமை தணிதற் பொருட்டு இந்த யா மரத்தினது கோடு கோடாக அமைந்த புல்லிய நிழலில் இருந்து இளைப்பாறிய பின்னர், சிறிது தூரம் சென்றால் நின்னால் வினவப்பட்ட செறிந்த தொடியையும் பொன்னிறத்தையும் உடைய நின் மகளோடு வெற்றி வேல் ஏந்திய நம்பி சென்ற வழியைக் காண்பாய். சிறுபான்மை அவர்களையும் காணக் கூடும். கனலி - ஞாயிறு. உருப்புச்சினம் - வெதுப்பும் வெயில். வரிநிழல் - கோடு கோடான சிறுநிழல். இரீஇ - இருந்து.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - ஆற்றுவித்தல். 388

389. செய்வினை பொலிந்த செறிகழல் நோன்தாள்
மையணல் காளையொடு பைய இயலிப்
பாவை யன்னஎன் ஆய்தொடி மடந்தை
சென்றனள் என்றிர் ஐய
ஒன்றின வோஅவள் அம்சிலம் படியே.

ஐயன்மீர்! வீரக்கழலையும், வலிய அடிகளையும், கரிய தாடியையும் உடைய இளையானோடு கொல்லிப் பாவை போன்ற என்னுடைய செல்வி மெல்ல மெல்ல நடந்து போகக் கண்டோம் என்று சொன்னீர்கள். அப்பெருமகளுடைய அழகிய சிலம்புகள் அணியப்பட்ட

Koviloor Digital Library

தோழி கேள். யான் பாலையின்கண் பகற்பொழுதில் மலை நாடனோடு வந்தமையால் வெயில் காய்ந்து வருத்துதலான் என் தோள்களையும் எனது நுதலையும் பிற உறுப்புக்களையும் நோக்கி இவ்வாறு பிறர் அறிய வருந்தாதே. நீ இவ்வாறு வருந்துவாய் ஆயின் அதை நம் பெருமான் அறிந்தால் எல்லையற்ற துன்பத்தை விளைவிப்பதாய் முடியும். ஆதலால் அமைதியாய் இரு.

மெய்ப்பாடு - அச்சம், பயன் - தற்கொண்டான் பேணுதல். 392

393. துறந்ததன் கொண்டு துயரடச் சாஅய்
அறம்புலந்து பழிக்கும் அண்க ணாட்டி
எவ்வ நெஞ்சிற்கு ஏம மாக
வந்தன ளோநின் மகளே
வெந்திறல் வெள்வேல் விடலைமுந் துறவே.

நின்னைப் பிரிந்து சென்றதனைக் காரணமாகக் கொண்டு துன்பம் நின்னை வருத்துதலான் உடன் மெலிந்து, அறக்கடவுளோடு பிணங்கி, அதனைப் பழி தூற்றுகின்ற அயலில்லாட்டியே! கேள். நின் அன்பு மகள் தன்னால் காதலிக்கப்பட்ட வேல் ஏந்திய பெருங்குடித் தோன்றல் தனக்கு முன்னால் வர நினது துன்ப நெஞ்சிற்குப் பாதுகாவலாம்படி அதோ நின் முன்றிலில் வந்துவிட்டாள். இனித் துயர் தீர்ந்து மகிழ்க. அங்கணாட்டி - அயல் இடத்தே இருப்பவள்.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - ஆற்றுவித்தல். 393

394. மாண்பில் கொள்கையொடு மயங்குதுயர் செய்த
அன்பில் அறனும் அருளிற்று மன்ற
வெஞ்சுரம் இறந்த அம்சில் ஓதிப்
பெருமட மான்பிணை அலைத்த
சிறுநுதல் குறுமகள் காட்டிய வம்மே

வருக நமரங்காள்! மாட்சிமையில்லாத கோட்பாட்டோடு யாம் பெரிதும் மயங்குதற்குக் காரணமான பெருந்துன்பத்தைச் செய்த

Koviloor Digital Library

அன்பற்ற வறிய உடன்போக்கு என்னும் இந்த அறந்தானும் வெப்ப மிக்க பாலை நிலத்தைக் கடந்து சென்ற இளமையுடைய என் மகளை எமக்கு மீண்டும் கொண்டுவந்து காட்டுதற்குத் துணை புரிந்தது. அவளை வந்து காண்மின். உடன்போக்குக் கற்புடை மகளிர்க்குத் தலை சிறந்த அறமாம் என்பது சான்றோர் கொள்கை.

மெய்ப்பாடு - பெருமிதம், பயன் - அயலில்லாட்டியரை மகிழ்வித்தல். 394

395. முளிவயிர்ப் பிறந்த வளிவளர் கூர்எரிச்
சுடர்விடு நெடுங்கொடி விடர்முகை முழங்கும்
இன்னா அருஞ்சுரம் தீர்ந்தனம் மென்மெல
ஏகுமதி வாழியோ குறுமகள் போதுகலந்து
கறங்கிசை அருவி வீழும்
பிறங்கிரும் சோலைநம் மலைகெழு நாட்டே

இள நங்காய்! யாம் கோடை வெயிலால் உலர்ந்த மூங்கிலில் தோன்றிய காற்றால் வளர்க்கப்பட்ட மிக்க காட்டுத் தீயினது பிழம்புகள் மலை முழுதும் படர்ந்து ஆரவாரித்தற்கிடனான இக்கொடிய பாலைப் பரப்பினை ஒருவாறு கடந்துவிட்டோம். இனி இளவேனிற் பருவத்தில் மலர்களோடு அருவிகள் பலவும் விழுகின்ற புத்தொளி படைத்துத் திகழ்கின்ற பெரிய சோலைகள் நிறைந்த மலைகள் பொருந்திய நம்முடைய நாடு இதுகாண். இனி நீ மெல்ல மகிழ்ந்து செல்வாயாக. முளிதல் - உலர்தல். வயிர் - மூங்கில். ஈண்டு நம்நாடு என்றது தலைவி நாட்டினை.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - ஆற்றுவித்தல். 395

396. புலிப்பொறி வேங்கைப் பொன்னிணர் கொய்துநின்
கதுப்பயல் அணியும் அளவை பைபயச்
சுரத்திடை அயர்ச்சியை ஆறுக மடந்தை
கல்கெழு சிறப்பின் நம்மூர்
எல்விருந் தாகிப் புகுக நாமே.

Koviloor Digital Library

மடந்தையே! நான் புலியின் புள்ளிகளைப் போன்ற இவ் வேங்கை மரத்தினது பொன்னிற மலர்க்கொத்துக்களைக் கொய்து நினது கூந்தலின் கண் சூட்டிந் துணையும் பாலைப் பரப்பில் வழி நடந்த இளைப்பை உடையை யாகலான் மெல்ல நடந்து அவ் இளைப்பினை ஆற்றிக் கொள்க. நாம் விரைந்து வந்தமையின் முன்னாடியாக வந்து விட்டோம். மலைகள் பொருந்திய நம்மூரின் கண் நண்பகல் விருந்தினராகி நம் மனைக்கண் புகுவேம். கதுப்பு - கூந்தல்.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - இடம் அணித்தென்று இளைப்பாற்றுதலும் மெய்தொட்டுப் பயிறலும். 396

397. கவிழ்மயிர் எருத்தின் செந்நாய் ஏற்றை
குருளைப் பன்றி கொள்ளாது கழியும்
சுரன்அணி வாரா நின்றனள் என்பது
முன்னுற விரைந்தநீர் உரைமின்
இன்நகை முறுவல்என் ஆயத் தோர்க்கே.

அன்புடையீர்! விரைந்த செலவினை உடையீர்! என் தோழிமாரைக் கண்டு அவர்பால், கவிழ்ந்து தொங்கும் பிடரியையுடைய ஆண் செந்நாய் இரக்க முடைமையால் குட்டிகளையுடைய பெண் பன்றியைக் கொல்லாமல் செல்லுதற்கிடனான பாலைப்பரப்பில் ஊர் அணித்தாக நும் தோழி வருகின்றாள் என்னும் இச் செய்தியை முற்படக் கூறுங்கள்.

எம் பெருமானும் உடன் போக்கின்கண் எம்மைப் பின் தொடர்ந்து வந்த எம் சுற்றத்தார்பால் இரக்கமே கொண்டு அவர்க்கு அஞ்சுவார் போன்று மலையிடை மறைந்திருந்து அவரைக் கொல்லாது விடுத்துப் போயினர் என்பது உள்ளுறை.

மெய்ப்பாடு - பெருமிதம், பயன் - தம் சுற்றத்தாரை ஆற்றுவித்தல். 397

Koviloor Digital Library

398. புள்ளும் அறியாப் பல்பழம் பழுனி
மடமான் அறியாத் தடநீர் நிலைஇச்
சுரநனி இனிய வாகுக என்று
நினைத்தொறும் கலிழும் என்னினும்
மிகப்பெரிது புலம்பின்று தோழிநம் ஊரே.

பெருமாட்டியே! நீ நம் பெருமானுடன் போயபின்னர் நீ செல்கின்ற வழிகள் வௌவால் முதலிய பறவைகளும் கண்டிராத புதுமையுடைய பல்வேறு நறுங்கனிகள் மிக்கும், நீர் காண்டற்கு நெடுந்தொலை செல்லும் மானினமும் கண்டிராத நீர் நிலைகள் பல நிலை பெற்றும், நுமக்கு இன்பம் நல்குவனவாக அமைக! . என்று இறைவனை ஏத்தி அழுகின்ற என்னைக் காட்டிலும் நம்மூர் மக்கள் அழுது வருந்தினர் . இன்று என்னினும் இவ்வூரவர் பெரிதும் மகிழ்வர் .

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - மகிழ்தல். 398

399. நும்மனைச் சிலம்பு கழீஇ அயரினும்
எம்மனை வதுவை நன்மணம் கழிகெனச்
சொல்லின் எவனோ மற்றே வென்வேல்
மையற விளங்கிய கழலடிப்
பொய்வல் காளையை ஈன்ற தாய்க்கே.

சுற்றத்தீரே! வேற் படையையும் மறக்கழல் யாத்த அடிகளையும் உடைய பொய்யான் மருட்டுதல் வல்ல அந்த இளைஞனை ஈன்றதாயின் பால் நீயிர் இச் சிலம்பு கழீஇ என்னும் சடங்கை நுங்கள் இல்லத்தே நிகழ்த்தினிர் ஆயினும் வதுவைத் திருமண விழாவேனும் மகள் ஈன்றாளாகிய எம்முடைய இல்லத்திலேயே நிகழ்த்தி முடிக்கப் படுவதாக என்று சொல்லி அவளை உடம்படுத்தின் அதனால் உண்டாகும் ஏதம் என் கொலோ? நீயிர் அவள் பாற் சென்று உடம்படுத்துமின் .

சிலம்பு கழீஇ - என்பது மணவினைக்கண் ஒரு சடங்கு மணமகள் இளம்பருவத்தே தொடங்கி அணிந்துள்ள சிலம்பைக்

Koviloor Digital Library

கழற்றுதலாகிய ஒரு சடங்கு . இச் சடங்கைக் கணவனுடன் பிறந்த மகளிர் செய்தல் மரபு .

வதுவை நன் மணம் என்பது மகளின் இருமுது குரவரும் நீர்வார்த்துத் தம் மகளைத் தலைமகன் கையில் ஓம்படை செய்வது .

மெய்ப்பாடு - பெருமிதம் . பயன் - மணமக்களைத் தம் மனைக்கு அழைத்தல் . 399

400. மள்ளர் அன்ன மரவந் தழீஇ
மகளிர் அன்ன ஆடுகொடி நுடங்கும்
அரும்பதம் கொண்ட பெரும்பத வேனில்
காதல் புணர்ந்தனள் ஆகி ஆய்கழல்
வெஞ்சின விரல்வேல் காளையொடு
இன்றுபுகு தருமென வந்தன்று தூதே.

பெருமாட்டி! மறவரை யொத்த வன்மையுடைய மராமரத்தைப் பற்றித் தழுவிக் கொண்டு இளமகளிரை யொத்த ஆடும் இயல்புடைய பூங்கொடி அசையா நிற்றற்குக் காரணமான செவ்வியை யுடைய இளவேனிற் பருவத்தில் நம் அன்புமகள் மீண்டும் நம்பால் அன்பு கொண்டவளாகி மறக்கழலையும் வெற்றி வேற் படையையும் உடைய இளங்காளையாகிய தன் கணவனோடு இன்றே வருவாள் என்று அவள் விடுத்த தூதுவர் வந்து கூறுகின்றனர் . ஆதலால் வருந்தற்க .

இவ்வுள்ளுறைப் பொருட்கண் மரவம் தலைவனுக்கும் ஆடுகொடி தலைவிக்கும் உவமையாகிவிடும் நுணுக்கம் காண்க .

மெய்ப்பாடு - பெருமிதம் . பயன் - ஆற்றுவித்தல் . இது செவிலித்தாய் நற்றாய்க்குக் கூறியது 400

- மறுதரவுப் பத்து முற்றிற்று -

பாலை முற்றிற்று

Koviloor Digital Library

V முல்லை

அஃதாவது முல்லைத் திணைபற்றிப் புனைந்த நூறு பாடல்கள் என்றவாறு.

ஆசிரியர் இந்நூலின் ஐந்தாவதாகிய முல்லைத் திணையைப் பாடியவர் பேயனார் என்னும் நல்லிசைப் புலவராவார். இவர் பெயர் பேயன் என்றும் பேயார் என்றும் பாடபேதமாகக் காணப்படுகின்றது. இவருடைய பாடல்கள் மிகவும் இனிமையாகவும் ஆழமுடையன வாகவும் உள்ளன. இவர் செய்யுளாக இந்நூலிற் காணப்படும் நூறு செய்யுட்களேயன்றிக் குறுந்தொகையில் நான்கு செய்யுட்கள் காணப்படுகின்றன. பேயன் என்னும் பெயர் வழக்கு சேர நாட்டில் பயில வழங்கப்படுகின்ற தென்றும், ஆதலால் இவர் சேர நாட்டுப் புலவராதல் கூடும் என்றும் ஊகிப்பாருமுளர்.

இப்பகுதியில் அடியிற்கண்ட பத்துப் பிரிவுகள் உள்ளன.

41. செவிலி கூற்றுப் பத்து.
42. கிழவன் பருவம் பாராட்டுப் பத்து.
43. விரவுப்பத்து.
44. புறவணிப்பத்து.
45. பாசறைப் பத்து.
46. பருவங்கண்டு கிழத்தியுரைத்த பத்து.
47. தோழி வற்புறுத்தப் பத்து.
48. பாணன் பத்து.

Koviloor Digital Library

49. தேர்வியங்கொண்டபத்து.

50. வரவுச்சிறப்புரைத்தபத்து.

முதற்பொருள் : நிலம் : காடும் காடு சேர்ந்த நிலப் பகுதியுமாம்.

காலம் : கார்காலமும்மாலைப்பொழுதுமாம்.

கார்காலம் என்பது ஆவணித் திங்களும் புரட்டாசித் திங்களும் கூடிய பருவம் . இக்காலம் பற்றி ஆசிரியர் நச்சினார்க்கினியர், " வினைவயின் பிரிந்து மீள்வோன் விரை பரித் தேரூர்ந்து பாசறையினின்று மாலைக் காலத்து ஊர் வயின் வரும் காலம் ஆவணியும் புரட்டாசியும் ஆதலின், அவை வெப்பமும் தட்பமும் மிகாது இடை நிகர்த்தனவாகி ஏவல்செய்து வரும் இளையோருக்கு நீரும் நிழலும் பயத்தலானும் ஆர்பதம் மிக்கு நீரும் நிழலும் பெறுதலின் களி சிறந்து மாவும் புள்ளும் துணை யோடின்புற்று விளையாடுவன கண்டு தலைவற்கும் தலைவிக்கும் காமக் குறிப்பு மிகுதலானும் என்பது.

புல்லை மேய்ந்து கொல்லேற்றோடே புனிற்றாக் கன்றை நினைந்துமன்றில் புகுதரவும், தீங்குழல் இசைப்பவும் பந்தர் முல்லை வந்து மணங் கஞற்றவும் வருகின்ற தலைவற்கும் இருந்த தலைவிக்கும் காமக் குறிப்புச் சிறத்தலின் அக்காலத்து மாலைப்பொழுதும் உரித்தா யிற்று" என இனிதின் ஓதுவர்.

கருப் பொருள் : அகல்பொருள் விளக்கத்தில் காண்க.

உரிப்பொருள் : இருத்தலும்இருத்தல்நிமித்தமும்.

இம்மூன்றனுள் உரிப்பொருள் இன்றியமையாததாய் வரும்.

Koviloor Digital Library

41. செவிலி கூற்றுப் பத்து.

அஃதாவது, கற்புக் காலத்தே தலைவன் மனைக்கண் சென்று ஆங்குத் தலைவனும் தலைவியும் ஆவியும் உடலும் போல ஒருவரை யொருவர் இன்றியமையாராய் அன்பாற் கலப்புற்று இன்புற்றமர்ந்து வாழ்கின்ற நல்வாழ்க்கையின் மாண்பினைச் செவிலி கண்ணும் நெஞ்சும் குளிரக் கண்டு மீண்டு வந்து அந்த மாண்பினை நற்றாய்க்குக் கூறி மகிழ் வித்தலே பொருளாக வந்த ஒரு பத்துச் செய்யுளின் தொகுதி என்பதாம். (இப்பத்தின் இறுதிச் செய்யுள் மட்டும் செவிலி தன்னுள் கூறிக் கொண்டதாக அமைந்துள்ளது.)

401. மறியிடைப் படுத்த மான்பிணை போலப்
புதல்வன் நடுவண னாக நன்றும்
இனிது மன்றஅவர் கிடக்கை முனிவின்றி
நீல்நிற வியலகம் கவைஇய
ஈனும் உம்பரும் பெறலருங் குரைத்தே.

கடிமனைச் சென்று வந்த செவிலி உவந்த உள்ளத்தளாய் நற்றாய்க்குச் சொல்லியது. பெருமாட்டி! தம்குட்டியை இடைநிலத்தே கிடக்கவிட்டு இருமருங்கும் கிடக்கும் கலைமானும் பிணைமானும் போல, தம்மகன் தமக்கிடை நிலத்தே கிடப்பானாகக் கொண்டு அந்த நம்பியும் நம்மகளுமாகிய இருவரும் இருமருங்கும் இனிது பாயல் கொண் டிருப்பது பெரிதும் காண்டற்கினிய காட்சியாகும். இவ்வின்பக் காட்சி இந்த நிலவுலகத்தும் மேனிலை உலகத்தும் நம்மனோர் பெறலரிய தொன்றாகும்.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - மகிழ்வித்தல். 401

402. புதல்வற் கவைஇய தாய்புற முயங்கி
நசையினன் வதிந்த கிடக்கை பாணர்
நரம்புளர் முரற்கை போல
இனிதால் அம்ம பண்புமா ருடைத்தே.

Koviloor Digital Library

பெருமாட்டி! கேள். தன் மகனைத் தழுவிக் கிடக்கும் தாயாகிய நம் மகளைப் புறத்தே தழுவிக் கொண்டு மேலும் ஆர்வமுடையவனாய் அவள் கணவன் கிடந்த கிடக்கை பாணர் தம்முடைய யாழினது நரம்பினை வருடுங்கால் எழுகின்ற இன்னிசை, கேள்விக்கு இனிதாமாறு போல காண்டற்குப் பெரிதும் இன்பம் தருவதாயுள்ளது. இன்பம் தருவதோடன்றி அக்கிடக்கை மக்கட் பண்பிற்கு ஓர் எடுத்துக் காட்டாகவும் திகழ்கின்றது. முரற்கை - இசை.

மெய்ப்பாடும் பயனும் அவை. 402

403. புணர்ந்தகா தலியின் புதல்வன் தலையும்
அமர்ந்த உள்ளம் பெரிதா இன்றே
அகன்பெருஞ் சிறப்பின் தந்தை பெயரன்
முறுவலில் இன்னகை பயிற்றிச்
சிறுதேர் உருட்டும் தளர்நடை கண்டே.

பெருமாட்டி! புணர்ந்த காதலியின் பால் மட்டும் பொருந்திக் கிடந்த தலைவனுடைய நெஞ்சம், புகழையுடைய தன் தந்தையின் பெயரைத் தாங்கும் உரிமையுடைய தன் அரும் பெறல் மகன் பற்கள் முளைக்காத இனிய நகைப்பினைச் செய்துகொண்டு, சிறிய தேரினை உருட்டி வருங்கால் அவனுடைய தளர்நடையைக் கண்டு விரிந்து பெரிதாகின்றது.

மெய்ப்பாடும் பயனும் அவை. 403

404. வாள்நுதல் அரிவை மகன்முலை யூட்டத்
தானவன் சிறுபுறம் கவையினன் நன்று
நறும்பூம் தண்புற அணிந்த
குறும்பல் பொறைய நாடுகிழ வோனே.

பெருமாட்டி! கேள். நறிய பூக்கள் நிறைந்த முல்லை நிலத்தால் அணி செய்யப்பட்ட சிறு மலைகள் பொருந்திய பெருநாடன், நம்மகள் தன் மகனுக்கு முலைப்பாலூட்ட, ஆங்கு வந்துற்றவன் அவளுடைய

Koviloor Digital Library

முதுகுப் புறத்தை ஆர்வத்தோடு தழுவிக் கொண்டான் . அத்தகைய பெருமையுடையது அவன் காதல்.

கணவன் சிறுபுறம் கவவுதல் முதலிய இச் சிறு சிறு அன்புச் செயல்களான் தலைவியின் நெஞ்சம் நெகிழும் என்பதாம்.

மெய்ப்பாடும் பயனும் அவை. 404

405. ஒண்சுடர்ப் பாண்டில் செஞ்சுடர் போல
மனைக்குவிளக் காயினள் மன்ற கனைப்பெயல்
பூப்பல அணிந்த வைப்பின்
புறவணி நாடன் புதல்வன் தாயே.

பெருமாட்டி! கேள் . ஆரவாரமுடைய மழை பெய்தமையால் பலவேறு வகைப்பட்ட மலர்களாலும் அழகு செய்யப்பட்ட பரப்பையுடைய முல்லையாகிய நாட்டையுடைய தலைமகனுடைய மகனுக்குத் தாயாம் பேறு பெற்ற நம் மகள், ஒளியுடைய பொன் பாண்டில் என்னும் தகழியில் ஏற்றப்பட்ட செவ்விய ஒளிப் பிழம்பு போல அவனுடைய நன்மனைக்கு விளக்கே யாகித் திகழ்கின்றாள். பாண்டில் தலைவன் மனைக்கும் அதன்கண் நின்றெரியும் செஞ்சுடர் தலைவிக்கும் உவமையாயின . மகப்பேறும் பெற்றனள் என்று மகிழ்வாள் நாடன் புதல்வன் தாய் என்றொரு பெயர் ஈந்தனள்,

மெய்ப்பாடும் பயனும் அவை. 405

406. மாதர் உண்கண் மகன்விளை யாடக்
காதலித் தழீஇ இனிதிருந் தனனே
தாதார் பிரசம் ஊதும்
போதார் புறவின் நாடுகிழ வோனே.

பெருமாட்டி! தேன் நிரம்பிய மலர் தேர்ந்துண்ணும் வண்டுகள் களித்து இன்னிசை முரல்கின்ற முல்லை நிலத் தலைவன் அழகிய மையூட்டப் பெற்ற கண்களையுடைய தம் மைந்தன் மகிழ்ந்து தம்முன் விளையாட அதனைக் கண்டு தான் தன் ஆருயிர்க் காதலியாகிய நம் மகளைத் தழுவிக் கொண்டு இனிதே வீற்றிருப்பக் கண்டேன்.

Koviloor Digital Library

தாது-தேன்; பிரசம்-வண்டு. முல்லை ஒழுக்கமாகிய 'இருத்தல்' பலவகைப்படும். அவற்றுள் தலைசிறந்த இருப்பு இஃதேயாம். 'அன்புற்றமர்ந்த வழக்கு' என்றும், 'இன்புற்றார் எய்தும் சிறப்பு' என்றும் நம் வள்ளுவப் பெருந்தகையார் பாராட்டும் நல்வாழ்க்கை. இதுவே யாம். இவ்வுலகில் மக்கள் பெறக்கூடந்த பேறும் இதுவேயாம்.

மெய்ப்பாடும் பயனும் அவை. 406

407. நயந்த காதலித் தழீஇப் பாணர்
நயம்படு முரற்கையின் யாத்த பயன்தெரிந்து
இன்புறு புணர்ச்சி நுகரும்
மென்புல வைப்பின் நாடுகிழ வோனே.

பெருமாட்டி! பலகாலும் உழுது பண்படுத்தப்பட்டு மென்புலமாய்த் திகழும் முல்லை நிலத் தலைவனாகிய நம்பெருமகன் தன் ஆருயிர்க் காதலியை இனிதே தழுவிக் கொண்டிருந்து, தன் இசைவாணர்கள் பண்ணால் தொடுத்த பாடலின் சுவையை நன்கு உணர்ந்து பின்னர் அவளோடும் இன்பம் மிகுகின்ற ஐம்புல இன்பங்களையும் நுகர்கின்றான். இவ்வாறு நம் மகளும் அவள் காதலனும் இன்புற்றமர்ந்து வாழ்கின்றனர். சான்றோர் ஓதுதற் கிணங்க இரட்டுற மொழிதல் என்னும் உத்தியால் இருபொருள் பயப்ப இங்ஙனம் கூறினள். முரற்கை - பண். இன்னிசை இன்பம் காம இன்பத்திற்கு ஆக்கமாகும்.

மெய்ப்பாடும் பயனும் அவை. 407

408. பாணர் முல்லை பாடச் சுடரிழை
வாணுதல் அரிவை முல்லை மலைய
இனிதிருந் தனனே நெடுந்தகை
துனிதீர் கொள்கைத்தன் புதல்வனொடு பொலிந்தே.

நம் பெருமகன் தன் இசைவாணர் செவ்வியறிந்து முல்லைப் பண்ணை இசைத்து இன்புறுத்த ஒளியுடைய அணிகளையும் ஒளிரும் நுதலையும் உடைய நம் மகள் முல்லை மலர் மாலையைச் சூடாநிற்ப 'எழு-

Koviloor Digital Library

பிறப்பும் தீயவை தீண்டா' என்னும் கொள்கைக்குக் காரணமான தன் நன்மகனோடு சிறப்புற்று உலகின்புறும்படி இனிதே வீற்றிருந்தனன். குலமகளிர் தம் கற்புடைமைக்கு அறிகுறியாகத் தூய வெண்ணிறமும் சிறந்த மணமும் ஒருங்கமைந்த முல்லை மலரைச் சூடுதல் மரபாகும்.

மெய்ப்பாடும் பயனும் அவை. 408

409. புதல்வன் கவைஇயினன் தந்தை மென்மொழிப்
புதல்வன் தாயோ இருவரும் கவையினள்
இனிது மன்றஅவர் கிடக்கை
நனியிரும் பரப்பின்இவ் உலகுடன் உறுமே

தலைவனாகிய தந்தை தன் புதல்வனைக் காதலால் அணைத்துக் கிடந்தான். அப்புதல்வனுக்குத் தாயாகிய நம் மகள் தன் பேரன்பினால் அவ்விருவரையும் ஒரு சேர அணைத்துக் கிடந்தாள். அந்தக் கிடக்கை நினைக்கும் தொறும் இனிமை நல்குவதாயிருந்தது. அந்த இடம் சிறிதேயாயினும் உலகுயிரெல்லாம் அதனுள் அடங்கிக் கிடக்கும் பெருமையுடையது.

மெய்ப்பாடும் பயனும் அவை. 409

410. மாலை முன்றில குறுங்கால் கட்டில்
மனையோள் துணைவி யாகப் புதல்வன்
மார்பின் ஊரும் மகிழ்நகை இன்பப்
பொழுதிற்கு ஒத்தன்று மன்னே
மென்பிணித் தம்ம பாணனது யாழே

நெஞ்சே கேள்! பாணனது இன்னிசை, தலைவன் தன் இல்லத்து நிலாமுற்றத்து இடப்பட்ட குறுங்கால்களையுடைய கட்டிலின் மேல் தன் காதலி அருகில் இனிதிருப்ப, தன் மகன் தன் மார்பில் தவழ்ப் பாயல் கொண்டிருக்கும் கார் காலத்து அந்தி மாலையாகிய மகிழ்ச்சியும் நகைப்பும் கலந்த இன்பமான இந்த நேரத்திற்கு மட்டும் பொருந்திற்றில்லை. மேலும் அது மெல்லியதொரு துன்பத்தையும் உடையதாயிற்று.

Koviloor Digital Library

யாழிசை, அவன் மகனது மழலை இன்பத்தை நுகர இடையூறு ஆயிற்று என்றாள்.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - மகிழ்தல்.

புதல்வன் தானே ஏறவும் இறங்கவும் பொருட்டு, குறுங்கால் கட்டில் இடப்பட்டது. இசை இன்பப் பொழுதிற்கு ஒத்ததன்று எனவே ஏனைப் பொழுதிற்குப் பெரிதும் ஒத்ததாம் என்றாளாயிற்று. இது செவிலி கூற்று. 410

- செவிலி கூற்றுப் பத்து முற்றிற்று -

Koviloor Digital Library

42. கிழவன் பருவம் பாராட்டுப் பத்து

அஃதாவது, பிரிந்து சென்ற தலைவன் தான் மீண்டு வருவதாகக் குறிப்பிட்ட பருவம் வருமுன்னர் மீண்டு வந்தோன் பின்னர் அப்பருவ வருகை கண்டு அதனைப் பாராட்டுவதாக வரும் அப்பத்துச் செய்யுளின் தொகுதி என்றவாறு. பருவம் என்றது ஈண்டுக் கார்ப் பருவத்தை.

411. ஆர்குரல் எழிலி அழிதுளி சிதறிக்
கார்தொடங் கின்றால் காமர் புறவே
வீழ்தரு புதுப்புனல் ஆடுகம்
தாழிருங் கூந்தல் வம்மதி விரைந்தே.

நிலந்தோயத் தாழ்ந்த கரிய கூந்தலையுடைய நங்கையே! அழகிய நம் முல்லை நிலத்தின் கண்ணே முழங்கும் முகில்கள் மிக்க மழைத்துளிகளைப் பொழியா நிற்ப சிறந்த கார்ப் பருவம் தொடங்கிவிட்டது. நமது கான்யாற்றில் பெருகிவரும் புதுப்புனலில் யாம் விளையாட்டயர்வோம். விரைந்து என்னோடு வருவாயாக.

புறவு - முல்லை நிலம்.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - மகிழ்தல்.

அவ்விளையாட்டை நின்னொடு ஆடுதல் விரும்பியன்றே யான் குறித்த நாளினும் முந்துற வந்தது என்பது குறிப்பெச்சம். 411

412. காயா கொன்றை நெய்தல் முல்லை
போதவிழ் தளவொடு பிடவலர்ந்து கவினிப்
பூவணி கொண்டன்றால் புறவே
பேரமர்க் கண்ணி ஆடுகம் விரைந்தே.

ஒன்றேடொன்று போர் செய்வன போன்று பிறழும் கண்களையுடைய நங்காய்! அதோ பார். நம் முல்லை நிலப் பரப்பு

Koviloor Digital Library

இக்கார்ப்பருவ வருகையால் யாண்டும் காயாவும் கொன்றையும் நெய்தலும் முல்லையும் இதழ் விரிகின்ற செம் முல்லையும் பிடவும் பிறவுமாகிய செடி கொடிகளும் மரமும் மலர்ந்து அழகுறலால் முழுதும் பூ அணியே கொண்டு திகழ்கின்றது. யாம் விரைந்து புகுந்து மனம் விரும்பிய வண்ணம் இனிதே விளையாடுவோம்.

வருக. தளவு - செம் முல்லை. பிடா ஒருவகை மரம். காரும் முல்லையும் இயைந்து பூவணி கொண்டாங்கு யாமும் இயைந்து இன்புற்றுப் பொலிவோம் என்பது இறைச்சி.

மெய்ப்பாடும் பயனும் அவை. 412

413. நின்னுதல் நாறும் நறுந்தண் புறவின்
நின்னே போல மஞ்ஞை யாலக்
கார்தொடங் கின்றால் பொழுதே
பேரியல் அரிவை நாநயத் தகவே

குலமகளிர்க்குரிய உயரிய நற்பண்புகள் எல்லாம் அமைந்த நங்காய்! இப்பொழுது நின்னுடைய நுதல் போன்று பல்வேறு மணமும் விரவிக் கமழ்கின்ற முல்லைப் பரப்பில் நின்னைப் போலவே மயில்கள் களித்துக் கூத்தாட, சிறந்த கார்ப்பருவம் தொடங்கிவிட்டது. எதற்கென்றால் நாம் விரும்பி இன்புற்றிருத்தற்கே யாம். மயில் கார் வருகையால் களித்தாடுகின்றது; நீ என் வருகையால் களித்து ஆடுமாறு போல என்பது குறிப்பெச்சம். "கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும், மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின், விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்," பிறவுமாகிய மாண்புகளும் என்க.

மெய்ப்பாடும் பயனும் அவை. 413

414. புள்ளும் மாவும் புணர்ந்தினது உகளக்
கோட்டவும் கொடியவும் பூப்பல பழுனி
மெல்லியல் அரிவை கண்டிகு
மல்லல் ஆகிய மணங்கமழ் புறவே

Koviloor Digital Library

மென்மையான இயல்பையுடைய நங்கையே! பறவைகளும் விலங்குகளும் காதலால் தம் துணையொடு புணர்ந்து களித்து ஆட, கொம்பிலும் கொடியிலும் மலர்கள் நிறைந்து வளமே தானாகத் திகழ்கின்ற பல்வேறு மணங்களும் விரவிக் கமழ்கின்ற நம் முல்லை நிலப் பரப்பினைக் கண்டு களிப்பாயாக. பழுனி - நிறைந்து.

மெய்ப்பாடும் பயனும் அது. அஃறிணை உயிர்களும் இயற்கையால் தூண்டப்பட்டுக் காதல் வாழ்வில் புகுந்து களித்து விளையாடுகின்றன. இயற்கை அன்னையும் நின் அழகிற்கு அழகு செய்ய பல்வேறு மலர்களையும் ஏந்தி நிற்கின்றாள். அவற்றைக் கொய்து நின் கூந்தலில் அணிகுவன் வருதி என்பதாம்.

மெய்ப்பாடும் பயனும் அவை. 414

415. இதுவே மடந்தைநாம் மேவிய பொழுதே
உதுவே மடந்தைநாம் உள்ளிய புறவே
இனிதுடன் கழிக்கின் இளமை
இனிதால் அம்ம இனிஅவர்ப் புணர்வே

நங்காய்! யாம் நின்னைப் பிரிந்துறைந்த காலத்து விரும்பி நினைத்த பருவம் இந்தக் கார்ப்பருவமேயாம். அப்போது யாம் விரும்பி நினைத்த நிலமும் இம் முல்லையேயாம். இப்போது இப்புறவில் தமக்கினிய காதலரோடு கூடியிருத்தல் சாலவும் இனிமையுடையது. இப்பருவத்தில் காதலர் ஒருங்கிருந்து கழிக்குமிடத்து இளமைதான் அதைக்காட்டிலும் பேரின்பம் தருவது. இனி இதன்கண் தலைவன் பொருளுக்காகப் பிரிந்துழி நாளது சின்மையும் இளமையது அருமையும் அன்பினது அகலமும், அகற்சியது அருமையும் உன்னினான் என்பது குறிப்பெச்சம்.

மெய்ப்பாடும் பயனும் அவை. 415

416. போதார், நறுந்துகள் கவினிப் புறவில் தாதார்ந்து
களிச்சுரும்பு அரற்றும் காமர் புதலின்
மடப்பிடி தழீஇய மாவே
சுடர்த்தொடி மடவரல் புணர்ந்தனம் யாமே

Koviloor Digital Library

மகிழ்ச்சியுடைய வண்டுகள் மலர்களில் தேன் தேர்ந்துண்டு, பொன் நிறம் பெற்றுப் புத்தழகுடையவாய் இன்னிசை முரல்தற்கு இடனான அழகிய பூம்புதர்களில் களிறுகள் தம் காதல் துணையாகிய பிடிகளை அன்பால் தழுவுகின்றன . யாம் நம் காதலியை இனிதே கூடி களித்தேம். முல்லைப் புறவும் கார்ப் பருவமும் வாழிய.

மெய்ப்பாடும் பயனும் அவை. இது தலைவன், தலைவியுணருமாறு முன்னிலைப் புறமொழியாகக் கூறியது. 416

417. கார்கலந் தன்றால் புறவே பலவுடன்
நேர்பரந் தனவால் புனமே ஏர்கலந்து
தாதார் பிரசம் மொய்ப்பப்
போதார் கூந்தல் முயங்கினள் எம்மே

முல்லை நிலத்தில் அதற்கியைந்த கார்ப்பருவமும் நிகழ்கின்றது. காடுகள் நன்கு தழைத்து மலர்ந்து அழகு பெற்றன . எம் ஆருயிர்க் காதலியும் பேரழகு மீண்டும் வரப்பெற்று வண்டுகள் மொய்க்கும்படி எம்மைக் காதலோடு தழுவிக் கொள்வாள் ஆயினாள் . இனி யாம் ஏதும் குறைவிலேம் என்பது குறிப்பெச்சம்.

மெய்ப்பாடும் பயனும் அவை . கார்ப்பருவத்தால் உலகம் வளம் பெறுவதால் உண்டி, உடை, பிற ஆகிய துணைப் பொருள்களும் உளவாதல் உணர்க . அழகுணர்ச்சி யுடையோர் அழகிய சூழலிலேயே இருந்து வாழ விரும்புதல் இயல்பு. 417

418. வானம் பாடி வறங்களைந் தானாது
அழிதுளி தலைஇய புறவின் காண்வர
வானர மகளோ நீயே
மாண்முலை அடைய முயங்கி யோயே.

மாட்சிமையுடைய முலைகள் அழுந்த எம்மைத் தழுவிக் கொண்ட காதற் பாவையே! மிக்க மழைத்துளிகள் வானம்பாடி என்னும் பறவையின் வறுமையை அடியோடு போக்கி, பின்னும் நீங்காமல்

Koviloor Digital Library

பெய்கின்ற காட்டில் யான் காண என் முன் வந்து தோன்றுதற்கு நீதான் தெய்வ மகளோ? கூறுக. வானம்பாடி மழைத்துளியையே உணவாக உட்கொண்டு உயிர் வாழ்கின்ற ஒரு பறவை. யான் நின்னை இடையறாது நினைத்திருந்ததால் வழியிடையே உருவெளித்தோற்றத்திலும் நின்னைக் கண்டு ஆறுதல் எய்தினேன் என்றான். இது உள்ளுறை உவமை.

மெய்ப்பாடும் பயனும் அவை. 418

419. உயிர்கலந்து ஒன்றிய செயிர்தீர் கேண்மைப்
பிரிந்துறல் அறியா விருந்து கவவி
நம்போல் நயவரப் புணர்ந்தன
கண்டிகு மடவரல் புறவின் மாவே

மடப்பம் பொருந்திய நங்காய்! முல்லை நிலத்தில் மானும் முயலும் பிறவுமாகிய விலங்குகளும் நம்மைப் போன்றே உடம்பால் மட்டுமன்றி உள்ளங்களும் கலந்து காதற் கேண்மை உடைமையால் ஒன்றினை ஒன்று பிரியாமல் நாளும் புதுமையுறத் தழுவிப் பேரின்பம் தோன்றும்படி, கூடிக்களிப்பதைக் காண்பாயாக.

குற்றம் - செயிர்.

யாமும் அச்சிறப்புற்றமர்ந்து இனிதே வாழ்குவம் என்பது குறிப்பெச்சம்.

மெய்ப்பாடும் பயனும் அவை. 419

420. பொன்னென மலர்ந்த கொன்றை மணியெனத்
தேம்படு காயா மலர்ந்த தோன்றியொடு
நன்னலம் எய்தினை புறவே நின்னைக்
காணிய வருதும் யாமே
வாள்நுதல் அரிவையொடு ஆய்நலம் படர்ந்தே.

Koviloor Digital Library

முல்லை நிலமே! நீதான் பொன் போன்று மலர்ந்த கொன்றை மரங்களோடும் நீல மலர்களையுடைய காயாவோடும், மலர்ந்து திகழும் தோன்றியோடும் பேரெழில் பெற்றுத் திகழ்கின்றனை. பொருள் வயின் பிரிந்த யாம் எம் காதலியையும் அவளுடைய அழகினையும் கருதி நின்னைக் கண்டு மகிழும் வண்ணம் விரைந்து வருகின்றேன்.

முல்லை நிலத்தைத் தலைவியாகவும் கார்ப்பருவத்தை அவள் கணவனாகவும் சான்றோர் உருவகப் படுத்துவர்.

மெய்ப்பாடு - பெருமிதம், பயன் - ஆறுதல். 420

- கிழவன் பருவம் பாராட்டுப் பத்து முற்றிற்று -

Koviloor Digital Library

ALAGAPPA UNIVERSITY LIBRARY KARAIKUDI

43. விரவுப் பத்து

அஃதாவது முல்லைத் திணைக்கண் பட்ட பல்வேறு துறைகளும் விரவி வந்த பத்துச் செய்யுளின் தொகுதி என்றவாறு.

421. மாலை வெண்காழ் காவலர் வீச
நறும்பூம் புறவின் ஒடுங்குமுயல் இரியும்
புன்புல நாடன் மடமகள்
நலங்கிளர் பணைத்தோள் விலங்கின செலவே

நம் பெருமான் அடிக்கடி நம்பெருமாட்டியைத் தனியே விடுத்துச் செல்லும் செலவினை மாலைப்பொழுதில் காவலர் வெள்ளிய கைத்தடியை வீசும் ஓசையைக் கேட்டு முல்லை நிலத்தில் குழியில் பதுங்கிக் கிடந்த குறுமுயல் அஞ்சி புறப்பட்டு ஓடுதற்குக் காரணமான நம் பெருமாட்டியினுடைய தோள்கள் தடுத்து விட்டன. தலைவன் செல்லாமைக்குக் காரணம் குறிப்பால் உணர்த்துவார் நலங்கிளர் பணைத்தோள் என்றார். இது தலைவி கேட்பக் கூறியபடியாம்.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - மகிழ்தல். துடி வீழ்ந்த ஒலியை அஞ்சிக் குறுமுயல் இரியல் போனாற் போன்று, தலைவியைப் பிரியின் இவள் இறந்து படுவாள் என்பது உள்ளுறை. 421

422. கடும்பரி நெடுந்தேர்க் கால்வல் புரவி
நெடுங்கொடி முல்லையொடு தளவமலர் உதிர
விரையுபு கடைஇநாம் செல்லின்
நிரைவளை முன்கை வருந்தலோ இலளே.

வினை முடிந்து மீளும் தலைமகன் தேர்ப்பாகன் கேட்பச் சொல்லியது.

Koviloor Digital Library

வலவ கேள்! நாம் வழியில் படர்ந்துள்ள முல்லைக் கொடியின் மலர்களும் செம் முல்லை மலர்களும் உதிரும்படி விரைந்து செல்லும் நெடிய தேரில் பூட்டிய காற்றுப் போல விரையும் நம் குதிரைகளை மேலும் விரைந்து ஓடுமாறு தூண்டிச் செலுத்தி போவோமாயின் வளையல் அணிந்த முன் கையினையுடைய எம் காதலி வருந்தாதவள் ஆதலும் கூடும். இன்றேல் வருந்துவள். தளவம் - செம்முல்லை.

மெய்ப்பாடு - அச்சம். பயன் - தேரினை விரைவித்தல். 422

423. மாமழை இடியூஉத் தளிசொரிந் தன்றே
வாள்நுதல் பசப்பச் செலவயர்ந் தனையே
யாமே நின்துறந்து அமையலம்
ஆய்மலர் உண்கணும் நீர்நிறைந் தனவே.

பெருமானே! யாங்களோ நின்னைப் பிரிந்து உயிர் வாழமாட்டோம். பருவமோ கார்ப் பருவமாகிக் கரிய முகில்கள் இடித்து முழங்கி நிரம்ப மழை பொழிகின்றது. இப்பருவத்தில் எம்மைப் பிரிந்து நீ செல்லக் கருதுகின்றனை. இதையறிந்த எம் பெருமாட்டியின் ஒளி நுதல் பசலை பாய மையுண்ட கண்கள் நீர் நிறைந்தன. ஆதலால் இப்போது பிரியாதே. இது தோழி கூற்று. தளி - மழை.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - செலவு அழுங்குவித்தல் இடியூ - இடித்து. 423

424. புறவணி நாடன் காதல் மடமகள்
ஒண்ணுதல் பசப்ப நீசெலின் தெண்ணீர்ப்
போதவிழ் தாமரை அன்னநின்
காதலம் புதல்வன் அழும்இனி முலைக்கே.

பெருமானே! புறவணி நாடன் காதல் மடமகளின் ஒளி நுதல் பசலை பாய்வதைக் கண்டு வைத்தும் நீ செல்வாய் ஆயின் தாமரையினது நாள்மலர் போன்ற நின்னுடைய அன்பிற்கிடனான அழகிய மகன் இனி தாயின் முலைப் பாலுக்கு ஏக்கமுற்று அழுவான். எல்லாவற்றையும் எண்ணித் துணிக. நீ பிரிந்தவுடனேயே எம் பெருமாட்டி இறந்து

Koviloor Digital Library

படுவாள் எனக்குறிப்பால் உணர்த்துவாள் இனிப் புதல்வன் முலைக்கு அழும் என வேறுவாய்பாட்டால் கூறினாள். நின் காதலி என்னாது, புறவணி நாடன் காதல் மடமகள் என அவள் தந்தையின் சிறப்பைக் கூறியது தலைவனது அன்பின்மையைக் குறிப்பிட்டபடியாம்.

மெய்ப்பாடு - அழுகை, பயன் - செலவழுங்குவித்தல். 424

425. புன்புறப் பேடை சேவல் இன்புற
மன்னர் இயவரின் இரங்கும் கானம்
வல்லை நெடுந்தேர் கடவின்
அல்லல் அருநோய் ஒழித்தல்எமக் கெளிதே.

வினைமுற்றி மீளும் தலைமகன் தேர்பாகற்குச் சொல்லியது.

வலவ! மயிற் பேடை, தன் கணவனாகிய சேவலை அழைத்துக் கூடி இன்புறுதற் பொருட்டு வேந்தனுடைய இசைக் கருவியாளர் போன்று ஒலிக்கும் இந்தக் காட்டினூடே நீ இன்னும் நம் நெடிய தேரை விரையச் செலுத்துவாய் ஆயின் எம் தலைவியின் துன்பத்தை அகற்றுதல் எமக்கு எளிதாக இருக்கும். இன்றேல் அவள் இறந்து பாடுறுதலும் கூடும். மயிலின் குரல் அரசன் வருகை உணர்த்தும் சின்னம் என்னும் ஊதுகுழலை ஒத்திருத்தலின் மன்னர் இயவரின் இரங்கும் என்றான்.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - விரைந்து சேறல். 425

426. வெண்வேல் வேந்தன் அருந்தொழில் துறந்தினி
நன்னுதல் யானே செலவொழிந் தனனே
முரசுபாடு அதிர ஏவி
அரசுபடக் கடக்கும் அருஞ்சமத் தானே.

நல்ல நுதலையுடைய நங்கையே! வெற்றிவேலையுடைய நம் மன்னவன் பகைவர்ப் பெறாமையின் செயற்கரிய போர்த் தொழிலை மேற்கோடல் தவிர்ந்தமையான் இப்போது யானும் கொற்ற முரச முழக்கத்தால் உலகம் அதிரும்படி நால்வகைப் படைகளையும் போர் தொழிலின்கண் ஏவி பகை மன்னர் இறந்தொழியுமாறு பொருது

Koviloor Digital Library

வெல்லுதற்கிடனான அரிய போர்க் களத்திற்குச் செல்லும் செலவினைத் தவிர்ந்துளேன். ஆதலின் நீ அஞ்சற்க.

மெய்ப்பாடு - பெருமிதம், பயன் - ஆற்றுவித்து அளிசெய்தல். தலைமகன் வேந்தற்குத் தானைத் தலைவனாய் ஒழுகுபவன். 426

427. பேரமர் மலர்க்கண் மடந்தை நீயே
காரெதிர் பொழுதென விடல்ஒல் லாயே
போருடை வேந்தன் பாசறை
வாரான் அவனெனச் செலவழுங் கினனே.

என் ஆருயிர்க் காதலி கேள்! நீயோ, இது பிரிந்துறைதற்கு இயலாத கார்காலம் என்று கருதி என்னைக் கைவிடுதற்கு உடன்படவில்லை. இனி என்னைத் துணைகொண்டு செல்லக் கருதிய நம் முடிவேந்தனும் இது காரெதிர் பொழுதாகலின் பாசறைக்கு வருவான் அல்லன் என்று தெளிந்து இப்போது போர்மேல் செல்லுதலைத் தவிர்ந்தேன். ஆதலால் நீ அஞ்சாதே.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - மகிழ்வித்தல். 427

428. தேர்செல அழுங்கத் திருவில் கோலி
ஆர்கலி எழிலி சோர்தொடங் கின்றே
வேந்துவிடு விழுத்தொழில் ஒழிய
யான்தொடங் கினனால் நின்புறந் தரலே.

ஆருயிர்க் காதலியே வருந்தாதே! மிகுந்த ஆரவாரத்தையுடைய முகில் வானத்தில் இந்திர வில்லை வளைத்து, தேரில் செல்லுதலைக் கைவிட்டு விடும்படி மழைபெய்தலைத் தொடங்கியது. ஆதலின் நம் மன்னவன் என்னை விடுதற்கெண்ணிய சிறந்த தூதுத் தொழிலும் அவனால் கைவிடப்பட்டது. யானோ இப்போது பேரன்புடைய நின்னைப் பேணுதலையே சிறந்த தொழிலாகக் கருதி அதனையே மேற்கொண்டேன்.

மெய்ப்பாடு - பெருமிதம், பயன் மகிழ்வித்தல். அரசனுடைய தொழில் நிகழாவண்ணம் எழிலி விற்கோலி அப்புமாரி சொரிந்தது என்ற பொருள் நயத்தை உன்னுக. 428

Koviloor Digital Library

429. பல்லிருங் கூந்தல் பசப்பு நீவிடின்
செல்வேம் தில்ல யாமே செற்றார்
வெல்கொடி அரணம் முருக்கிய
கல்லா யானை வேந்துபகை வெலற்கே.

பலவாகிய கரிய கூந்தலை யுடையோய்! அரசனால் வேண்டிக் கொள்ளப்பட்ட யாம் தன் பகைவருடைய வெற்றிக் கொடி உயர்த்திய மதில்களை அழித்த போர்த் தொழிலன்றி பிற கல்லாத யானைப் படைகளையுடைய நம் மன்னனுடைய பகை வேந்தரைப் பொருது வெல்லுவதற்கு யாம் பிரிவதனால் நினக்கு உண்டாகும் பசலை நோயை ஒழித்து ஆற்றியிருப்பின் செல்லக் கருதி யிருக்கின்றோம். ஆற்றாயாயின் யாமும் செல்லப் போவதில்லை. இவ்வாறு என் கடமைக்கு இடையூறாக வருந்துதல் தகவன்று என்பது குறிப்பு.

மெய்ப்பாடு - இளிவரல். பயன் - உடம்படுவித்தல். 429

430. நெடும்பொறை மிசைய குறுங்கால் கொன்றை
அடர்பொன் என்னச் சுடரிதழ் பகரும்
கான்கெழு நாடன் மகளே
அழுதல் ஆன்றிசின் அழுங்குவல் செலவே

நெடிய மலைமேல் நிற்பனவாகிய குறுகிய அடிப்பகுதியையுடைய கொன்றை மரங்கள் தகட்டு வடிவமைந்த பொன் போன்ற ஒளியுடைய மலர்களை உலகிற்கு வழங்குதற்கு இடனான காடு பொருந்திய நாடனது மகளே! நீ இனி அழாதே. யான் இனி நின்னைப் பிரிந்து செல்லுதலைத் தவிர்வேன்.

பொறை - மலை. அடர்-தகடு பகரும்-வழங்கும். நெடும் பொறை மிசை கொன்றை இதழ் பகரும் என்றது கார்ப்பருவமும் வந்தெய்தியது, நீயும் வருந்தினை. ஆதலால் யான் செலவழுங்குவல் என்று காரணம் தோன்றுமாறு நின்றது.

மெய்ப்பாடு - அழுகை, பயன் - ஆற்றுவித்தல். 430

- விரவுப் பத்து முற்றிற்று -

Koviloor Digital Library

44. புறவணிப் பத்து

அஃதாவது, காடும் காடு சார்ந்த நிலனுமாகிய முல்லை நிலம் தனக்குரிய கார்ப் பருவத்தே அழகுற்றுத் திகழ்வதனை நுதலிவரும் ஒரு பத்துப் பாட்டின் தொகுதி என்பதாம். புறவு - முல்லை நிலம். அணி - அழகு.

431. நன்றே காதலர் சென்ற ஆறே
அணிநிற இரும்பொறை மீமிசை
மணிநிற உருவின தோகையும் உடைத்தே.

தலை மகட்கு 'வேனிற்காலம் கழிந்தது. கார்ப்பருவத் தோற்றத்தில் பிரிந்தாராகலான் அச்சுரம் நன்று' என்று தோழி சொல்லி ஆற்றுவித்தது. இனி வருகின்ற பாட்டு ஒன்பதுக்கும் இஃது ஒக்கும்.

பெருமாட்டி! நம் பெருமான் ஆள்வினை மேற்கொண்டு நம்மை நீத்துச் சென்ற வழி, அழகிய நிறம் அமைந்த பெரிய மலைகளின் உச்சியில் நீலமணி போன்ற தோகை மா மயில்களை மிகுதியும் உடையது. ஆகலான் நம்பெருமானுக்குக் காட்சியின்பம் நல்கிப் பெரிதும் நல்லதாய்த் திகழும். ஆதலால் நீ அவர் பொருட்டு வருந்தாதே.

மெய்ப்பாடு - மருட்கை. பயன் - ஆற்றுவித்தல். வருகின்ற செய்யுட்களுக்கும் இவை ஒக்கும். 431

432. நன்றே காதலர் சென்ற ஆறே
சுடுபொன் அன்ன கொன்றை சூடிக்
கடிபுகு வனர்போல் மள்ளரும் உடைத்தே.

தலைவியே! நம் பெருமான் சென்றவழி தீயிடைச் சுட்டுத் தூய்மை செய்த பொன் போன்று நிறமும் ஒளியும் உடைய கொன்றை மலரைச் சூடிக் கொண்டு தன்கண் செல்வோர்க்குக்

Koviloor Digital Library

காட்சியின்பம் நல்கிப் பெரிதும் நல்லதே ஆகும். மேலும் அது திருமண விழாவிற்குச் செல்வார் போன்று அணிசெய்து கொண்டு திரிகின்ற மறவர்களையும் தன்பாலுடைத்து. ஆதலால் நம் பெருமான் அவர்தம் துணையும்பெற்று இனிதே செல்வர். நீ வருந்தற்க. 432

433. நன்றே காதலர் சென்ற ஆறே
நீர்ப்பட எழிலி வீசும்
கார்ப்பெயற்கு எதிரிய கானமும் உடைத்தே.

தலைவியே! நம் பெருமான் போன நெறி, நீர் நிலைகளிலும் யாறுகளிலும் நீர் நிரம்பும்படி முகில்கள் சொரிகின்ற கார்ப்பருவத்துச் சிறந்த மழையை எதிர் கொண்ட காடுகளையும் உடையது. ஆதலால் நம் பெருமான் செலவிற்கு நீரும் நிழலும் கனியும் பிறவும் நல்கும் நன்மையுடைத்து. நீ வருந்தற்க. 433

434. நன்றே காதலர் சென்ற ஆறே
மறியுடை மான்பிணை உகளத்
தண்பெயல் பொழிந்த இன்பமும் உடைத்தே.

பெருமாட்டி! நம் பெருமான் போனவழி குட்டிகளையுடைய கலைமானும் பிணைமானும் ஆங்காங்கே களித்து விளையாட குளிர்ந்த மழை பெய்தமையால் உண்டான எல்லா இன்பங்களையும் உடைத்து. ஆதலால் நம் பெருமானுக்குத் துன்பம் சிறிதும் உண்டாகாது. இன்பமே எய்தும். நீ வருந்தற்க. கலை ஆண்மான். பிணை - பெண்மான். 434

435. நன்றே காதலர் சென்ற ஆறே
நிலன்அணி நெய்தல் மலரப்
பொலன்அணி கொன்றையும் பிடவமும் உடைத்தே.

பெருமாட்டி! நம் பெருமான் போன வழி நிலத்தை அழகு செய்கின்ற நெய்தற் பூக்கள் யாண்டும் மலர பொன் போன்ற நிறமுடைய மலர்களையுடைய கொன்றை மரங்களையும் பிடவஞ்

Koviloor Digital Library

செடிகளையும் தன்பால் நிறைய உடையது. நம் பெருமான் செலவிற்கு பெரிதும் நலம் பயப்பதாம். வருந்தற்க. பிடவ மலரும் பொன்னிறமுடையது. 435

436. நன்றே காதலர் சென்ற ஆறே
நன்பொன் அன்ன சுடரிணர்க்
கொன்றையொடு மலர்ந்த குருந்துமா றுடைத்தே.

தலைமகளே! நம் தலைமகன் சென்ற வழி, ஓடவிட்ட நல்ல பொன்னையொத்த ஒளிபடைத்த பூங்கொத்தினையுடைய கொன்றை மரங்களையும் நன்கு மலர்ந்த குருந்த மரங்களையும் உடையதாம். ஆதலால் நம் பெருமான் செலவிற்குப் பெரிதும் நலம் பயப்பதாம். நீ வருந்தாதே. குருந்த மரமும் கார்ப்பருவத்தில் மலரும் இயல்புடையது. 436

437. நன்றே காதலர் சென்ற ஆறே
ஆலித் தண்மழை தலைஇய
வாலிய மலர்ந்த முல்லையும் உடைத்தே.

தலைமகளே! நம் காதலர் போன வழி, ஆலியாகிய குளிர்ந்த மழை பெய்தமையால் வெண்ணிற முடையவாய் முழுதும் மலர்ந்த முல்லைக் கொடிகளையும் உடையது. ஆதலால் நம் பெருமான் செலவிற்கு அது பெரிதும் துணை செய்யும் நீ வருந்தற்க.

ஆலி - அலங்கட்டி. தலைஇய - பெய்த, வாலிய - வெண்ணிற முடையன. 437

438. நன்றே காதலர் சென்ற ஆறே
பைம்புதல் பம்பூ மலர
இன்புறத் தருந பண்புமார் உடைத்தே.

தலைவி! நம் தலைவர் சென்ற வழி, தன்பால் பசிய புதல்களிடத்து பல்வேறு வகைப்பட்ட மணமும் நிறமும் உடைய மலர்கள் நிரம்ப மலர்ந்திருத்தலால் அதன்கண் செல்வோர் பெரிதும்

Koviloor Digital Library

இன்புறுதற்கு ஏதுவான நலம் பலவும் உடையதாம். ஆதலால் நம் காதலர் இனிதே இயங்குதற்கு அது மிகவும் நலம் பயக்கும். வருந்தாதே 438

439. நன்றே காதலர் சென்ற ஆறே
குருந்தங் கண்ணிக் கோவலர்
பெருந்தண் நிலைய பாக்கமும் உடைத்தே.

பெருமாட்டி! நம் காதலர் போன நெறி, குருந்த மலர்மாலையைத் தலையில் சூடி மகிழும் இடையர் குடியிருக்கின்ற பெரிய குளிர்ந்த நிலையுடைய சிற்றூர்களையும் தன்பால் இடை இடையே உடையது. ஆதலால் நம் பெருமான் இளைப்பாறியிருந்து செல்லுதற்கு நன்றே யாம். வருந்தற்க.

கண்ணி - தலைமாலை. பாக்கம் - ஊர். 439

440. நன்றே காதலர் சென்ற ஆறே
தண்பெயல் அளித்த பொழுதின்
ஒண்சுடர்த் தோன்றியும் தளவமும் உடைத்தே.

தலைமகளே! நம் தலைமகன் சென்ற நெறி குளிர்ந்த மழையால் பாதுகாக்கப்பட்ட இவ் இனிய கார்ப் பருவத்தே ஒள்ளிய சுடர்வீசும் தோன்றிமலரையும் செம் முல்லை மலரையும் தன்பால் மிகுதியாக உடையது ஆதலின் நம் காதலர் செலவிற்கு மிகவும் நலம் பயப்பதாகும். அது பற்றி நீ வருந்தாதே. புயல் அளித்த பொழுது என்றது கார்ப்பருவத்தைச் சுட்டியது. 440

- புறவணிப் பத்து முற்றிற்று -

Koviloor Digital Library

45. பாசறைப் பத்து

அஃதாவது தலைமகன் போர் செய்தற் பொருட்டுத் தலைவியைப் பிரிந்து சென்று பாசறை இடத்தானாக இருந்துழிக் கூறிய கூற்றாக வரும் பத்துச் செய்யுட்களின் தொகுதி என்றவாறு.

441. ஐய ஆயின செய்யோள் கிளவி
கார்நாள் உருமொடு கையறப் பிரிந்தென
நோய்நன்கு செய்தன எமக்கே
யாம்உறு துயரம்அவள் அறியினோ நன்றே.

இதன்கண் வரும் பத்துச் செய்யுளும் 'முல்லையுட் பாலை' என்பர் ஆசிரியர் நச்சினார்க்கினியர்.

தூதுவரே கேண்மின்! குறித்த பருவத்தே செல்லாமையால் அவள் செயலற்றுக் கலங்குமாறு என்னைத் துன்புறுத்துகின்ற இக்கார்ப் பருவத்தோடும் அதன்கண் படும் இடியோடும் சேர்ந்து வியப்பும் செப்பமும் உடைய எம் காதலியின் சொற்களும் எமக்குப் பெரிதும் துன்பத்தைச் செய்வனவாயின. யாம் படுகின்ற எல்லையற்ற துன்பத்தை அவள் அறியின் நன்று. உணர மாட்டாமையின் இங்ஙனம் கூறத் துணிந்தனள்.

எனவே எம் நிலையினை நீயிர் நன்கு அவட்கு உணர்த்தி வினை முடியுங்காறும் ஆற்றுவிப்பீர் என்பது குறிப்பெச்சம்.

மெய்ப்பாடு - இளிவரல், பயன் - தலைவியை ஆற்றுவித்தல். 441

442. பெருஞ்சின வேந்தன் அருந்தொழில் தணியின்
விருந்துநனி பெறுதலும் உரியள் மாதோ
இருண்டு தோன்றும் விசும்பினுயர் நிலையுலகத்து
அருந்ததி அனைய கற்பின்
குரும்பை மணிப்பூண் புதல்வன் தாயே

Koviloor Digital Library

கார்ப்பருவ வரவினால் யாண்டும் இருண்டு தோன்றும் வானத்தில் தேவருலகத்து என்றென்றும் புகழோடு விளங்குகின்ற அருந்ததியாகிய வடமீனை ஒத்த தெய்வக் கற்பினையுடைய, என் அருமைப் புதல்வன் தாயாகிய என் ஆருயிர்க் காதலி நம் மன்னவன் தொழிலாகிய போர்த் தொழிலைக் கைவிட்டு அமைதியுற்றால் தான் பெரிதும் விரும்பியிருக்கும் விருந்தோம்பல் தொழிலை மிகவும் பெறுதற் குரியள். அவள் திறத்தில் யான் செயலற்றிருக்கிறேன். என் செய்கோ?

மெய்ப்பாடு - அழுகை, பயன் ஆற்றியிருத்தல். பிரிந்துறையும் கணவர் மீண்டு வந்துழிக் கற்புடை மகளிர் மகிழ்ச்சி மிகுதியால் மனைக்கண் விருந்தயர்தல் மரபு. குரும்பை மணிப்பூண் - கிண்கிணி. 442

443. நனிசேய்த்து என்னாது நல்தேர் ஏறிச்சென்று
இலங்கு நிலவின் இளம்பிறை போலக்
காண்குவம் தில்அவள் கவின்பெறு சுடர்நுதல்
விண்ணுயர் அரண்பல வௌவிய
மண்ணுறு முரசின் வேந்துதொழில் விடினே.

வானுயர உயர்ந்த பகைமன்னர் அரண்கள் பலவற்றையும் வென்று கைக் கொண்ட, நீராட்டிப் பலியூட்டி வணங்குதற்குரிய கொற்ற முரசத்தையுடைய நம் மன்னவன் தான் மேற் கொண்டுள்ள இப் போர்த் தொழிலைக் கைவிடுவானாயின் நம் ஊர் வெகு தூரத்திலுள்ளது என்று கருதாமல் விரைந்து செல்லும் நல்ல தேரில் ஏறி விரைந்துசென்று அதே நாளில் இளம்பிறை போன்று ஒளிவீசும் என் காதலியின் நுதலை உறுதியாகக் கண்டு மகிழ்வேன்.

மெய்ப்பாடு - அழுகை, பயன் - ஆற்றியிருத்தல். 443

444. பெருந்தோள் மடவரல் காண்குவெம் தில்ல
நீண்மதில் அரணம் பாய்ந்தெனத் தொடிபிளந்து
வைந்நுதி மழுகிய தடங்கோட்டு யானை
வென்வேல் வேந்தன் பகைதணிந்து
இன்னும் தன்னாட்டு முன்னுதல் பெறினே.

Koviloor Digital Library

பகைமன்னருடைய நீண்ட மதிலாகிய அரண்களைக் குத்திப் பெயர்த்தலையான் பூண்கள் பிளக்கப்பட்டு, கூர்த்த நுனிகள் மழுங்கிப் போன பெரிய மருப்புகளையுடைய யானைகளையும் வெற்றி பொருந்திய வேற்படையையும் உடைய நம் மன்னவன் பகை குறைந்து இப்பொழுதேனும் தன் நாட்டிற்குச் செல்லக் கருதுவானாயின் யாம் விரைந்து சென்று எம்முடைய காதலியைக் கண்டு மகிழ்வேம். அவன் அது நினைந்திலன். யாம் என் செய்தும் வேந்தன் மண்ணாசையால் மீள நினைந்திலன் என்பதாம்.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - ஆற்றியிருத்தல். 444

445. புகழ்சால் சிறப்பின் காதலி புலம்பத்
துறந்துவந் தனையே அருந்தொழில் கட்டூர்
நல்லேறு தழீஇ நாகுபெயர் காலை
உள்ளுதொறும் கலிழும் நெஞ்சம்
வல்லே எம்மையும் வரவிழைந் தனையே.

போர்த் தொழில் குறித்து அமைத்த பாசறைக்கண் இருந்தும் எருதுகளைத் தொடர்ந்து இளைய பசுக்கள் செல்லாநின்ற இக்கார்ப்பருவம் வந்ததும் நம் காதலியை நினைக்கும் தொறும் கலங்குகின்ற மட நெஞ்சமே! கற்பு முதலிய நற்பண்புகள் நிறைந்த நம் காதலி வருந்துதல் கண்டும், வினையே ஆடவர்க்குயிர் என வீறு பேசி அவளைக் கைவிட்டு ஈண்டு வந்தனை, அவளைப் பிரிந்து வரவிரும்பாத எம்மையும் நின்னோடு விரைந்து வரச் செய்தனை. நீயே இரங்கின் என்னாம்? அமைதியாய் இரு.

கட்டூர் - பாசறை.

மெய்ப்பாடு - இளிவரல், பயன் - ஆற்றியிருத்தல். 445

446. முல்லை நாறும் கூந்தல் கமழ்கொள
நல்ல காண்குவ மாஅ யோயே
பாசறை அருந்தொழில் உதவிநம்
காதல்நன் னாட்டுப் போதரும் பொழுதே.

Koviloor Digital Library

பாசறைக்கண் இருந்த தலைமகன் பருவ வரவின்கண் உருவ வெளிப்பாடு கண்டு சொல்லியது. மாமை நிறம் உடையவளே! நாம் இருவரும் இப்பாசறைக்கண் இருந்து செயற்குரிய உதவிகளைச் செய்து, வினை முற்றி யாம் நம்முடைய காதலுக்குரிய நல்ல நாட்டிற்குச் செல்லும் போது முல்லைப்பூ மணக்கும் நின்னுடைய கூந்தல் கமழும்படி மலர் கொய்து அணிந்து ஆடியும் இக்கார்ப்பருவத்தில் இன்பங்கள் பலவற்றையும் நுகர்ந்து மகிழ்வோமாக.

மெய்ப்பாடு - மருட்கை, பயன் - ஆற்றுதல். மருட்கையால் தலைவன், தலைவி தன்னைத் தேடிவந்து விட்டதாகவே கருதிக் கூறிய படியாம். 446

447. பிணிவீடு பெறுக மன்னவன் தொழிலே
பனிவளர் தளவின் சிரல்வாய்ச் செம்முகை
யாடு சிறைவண்டு அழிப்பப்
பாடல் சான்ற காண்கம்வாள் நுதலே.

செம்முல்லையின் மீன் கொத்திப் பறவையின் அலகு போன்ற சிவந்த நாள் அரும்பினைச் சூழ்ந்துள்ள வண்டுகள் காலால் கிளைத்து மலர்த்துதலான் மலர்ந்து, அவ்வண்டுகள் தேன் பருகி இசை முரலுதற்கு அமைவனவாயின. நம் மன்னவன் தான் மேற்கொண்டுள்ள போர்த் தொழிலின் பிணிப்பினின்றும் வீடு பெறுவானாக. பெற்றுழி நாம் நம் காதலியை அப்பொழுதே கண்டு மகிழ்வேம்.

தளவு - செம் முல்லை.

மெய்ப்பாடு - இளிவரல். பயன் - ஆற்றாமை. 447

448. தழங்குரல் முரசம் காலை இயம்பக்
கடுஞ்சின வேந்தன் தொழில்எதிர்ந் தனனே.
மெல்லவல் மருங்கின் முல்லை பூப்பப்
பொங்குபெயல் கனைதுளி கார்எதிர்ந் தன்றே
அஞ்சில் ஓதியை உள்ளுதொறும்
துஞ்சாது அலமரல் நாம்எதிர்ந் தனமே

சிறு பள்ளங்களின் பக்கத்தே படர்ந்துள்ள முல்லைக் கொடிகள் அரும்பி மலரும்படி கார்ப் பருவம் மழை பொழிதலை மேற்கொண்டது.

Koviloor Digital Library

தேர்ப்பாகனே! வேலேந்திய பகைவரை வெல்லும் நால்வகை படையையும் உடைய நம் முடி மன்னனோடு சிறிது நேரம் இவ்விடைச் சுரத்தே தங்கினும் அது ஓர் ஊழிக் காலத்தின் அளவு நீண்டு தோன்றும். ஆதலால் நாம் இன்று மாலைப் பொழுதிலேயே எம் காதலிக்குப் பெரிய விருந்தினேம் ஆகுமாறு நம் தேரை மிகவும் விரைந்து செலுத்துவாயாக. சேப்பின் - தங்கினால்.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - தலைவியைக் காண்டல். 482

483. ஆறுவனப்பு எய்த அலர்தா யினவே
வேந்துவிட் டனனே மாவிரைந் தனவே
முன்னுறக் கடவுமதி பாக
நன்னுதல் அரிவை தன்னலம் பெறவே.

பாகனே! நம் அரசன் நமக்கு விடை ஈந்தனன். நம்குதிரைகளும் மிகவும் விரைந்து செல்கின்றன. இனி நாம் செல்ல வேண்டிய சுரம் காட்சிக்கு இனிதாம்படி யாண்டும் மலர்கள் பரவின. நம் ஆருயிர்க் காதலி தனது பழைய பேரழகினை மீண்டும் எய்தும் பொருட்டு நாம் குறிப்பிட்ட இற்றை நாள் அந்தி மாலைக்கு முன்பே யாம் அவள்பால் சேரும்படி நம் தேரைச் செலுத்துவாயாக. விடுதல் - விடை தருதல்.

மெய்ப்பாடும் பயனும் அவை. 483

484. வேனில் நீங்கக் கார்மழை தலைஇக்
காடுகவின் கொண்டன்று பொழுது பாடுசிறந்து
கடியக் கடவுமதி பாக
நெடிய நீடினம் நேரிழை மறந்தே.

பாகனே! முதுவேனில் பருவம் கழியவும் பின்னர்க் கார்ப்பருவத்து மழையைத் தலையிட்டுக் காடு அழகுற்று விளங்குகின்றன. ஆதலால், யாம் எம் காதலியையும் அவட்குக் குறித்த பருவத்தையும் மறந்து காலம் நீளும்படி பெரிதும் தாழ்த்திவிட்டேம். ஆதலால் நின்னுடைய தொழிற் பெருமை மேலும் சிறக்கும்படி விரையத் தேரைச் செலுத்துவாயாக. கொண்டன்று - கொண்டது.

Koviloor Digital Library.

மெய்ப்பாடு - அழுகை, பயன் - விரைந்து போதல். 484

485. அரும்படர் அவலம் அவளும் தீரப்
பெருந்தோள் நலம்வர யாமும் முயங்க
ஏமதி வலவ தேரே
மாமருண்டு உகளும் மலரணிப் புறவே.

பாகனே! நினைவாலுண்டாகும் விலக்குதற்கரிய துன்பத்தினின்றும் எம் காதலியும் நீங்க, யாமும் அவளுடைய பெரிய தோள்களின் அழகு மீண்டு வந்தெய்தும்படி அவற்றைத் தழுவிக் கொள்ளவும் நம் தேரைக் கண்டு மான்முதலிய விலங்குகள் மருண்டு பாய்கின்ற பல்வேறு மலர்களானும் எழில் பெற்ற முல்லை நிலத்தின்கண் நமது தேரினை விரைந்து செலுத்துவாயாக. ஏ - செலுத்துக. மதி முன்னிலையசை.

மெய்ப்பாடு - அழுகை, பயன் - தலைவியைக் காண்டல். 485

486. பெரும்புன் மாலை ஆனது நினைஇ
அரும்படர் உழத்தல் யாவது என்றும்
புல்லி ஆற்றாப் புரையோள் காண
வள்புதெரிந்து ஊர்மதி வலவநின்
புள்ளியல் கலிமாப் பூண்ட தேரே.

பாகனே! நீளிய புல்லிய மாலைப் பொழுதில் துன்பத்தை நுகர்வது எத்தகைய கொடியதாயிருக்கும். நாள்தோறும் தழுவியும் ஆற்றொணாத உயர்ச்சியை யுடையவளுமாகிய காதலியை இன்னே சென்று காண்டற் பொருட்டு நின்னுடைய பறவைபோல நிலம் தீண்டாதவகை விரைந்து செல்லும் குதிரைகள் பூட்டிய தேர் இன்னும் விரைந்துசெல்லும்படி குதிரைகளின் விசைவாரினை ஆராய்ந்து கையிற்கொண்டு செலுத்துவாயாக. வள்பு கடிவாளத்தோடு இணைத்த விசைவார்.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - விரைந்து போதல். 486

Koviloor Digital Library

வரவினை அவர் உணரார் ஆயினும் ஆகுக. தம்பால் தம்மொழி பொய்படு மொழியாதற்கு நாணவும் அறியாதார் ஆதற்கே யான் வருந்துகின்றேன்.

மெய்ப்பாடு - அழுகை. பயன் தலைவனுக்குத் தலைவியின் ஆற்றாமை உணர்த்துவித்தல். 472

473. பலர்புகழ் சிறப்பின்நும் குருசில் உள்ளிச்
செலவுநீ நயந்தனை யாயின் மன்ற
இன்னா அரும்படர் எம்வயின் செய்த
பொய்வ லாளர் போலக்
கைவல் பாணஎம் மறவா தீமே

தொழில் வன்மையுடைய பாண்மகனே! நீ சான்றோர் பலரும் புகழ்தற்குக் காரணமான சிறப்புக்களையுடைய நும் தலைவனைக் காண்டற் கெண்ணி அவன் உறைகின்ற நாட்டிற்குச் செல்ல விரும்பினையாயின் துன்பத்தை எம்பால் தோற்றுவித்த அந்தப் பொய் பேசும் நும் தலைவனைப் போன்று எம்மை மறந்துவிடாதே எம் துன்பத்தை அவர்க்குச் சொல்லி எம்மையும் குறிக் கொள்ளுமாறு செய்வாயாக. தலைவன் தான் குறித்த பருவத்தே விரைந்துவந்து நும்மை அளி செய்வேன் எனக்கூறிய உறுதிமொழியை பொய்யாக்கிவிட்டனன் என்பாள் பொய் வலாளன் என்றாள்.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - தூதுவிடுதல். இது தலைமகள் சொல்லியது. 473

474. மையறு சுடர்நுதல் விளங்கக் கறுத்தோர்
செய்யரண் சிதைத்த செருமிகு தானையொடு
கதழ்பரி நெடுந்தேர் அதர்படக் கடைஇச்
சென்றவர்த் தருகுவல் என்னும்
நன்றால் அம்ம பாணனது அறிவே

ஆயத்தீரே கேண்மின்! குற்றமற்ற எனது ஒளிநுதல் பண்டு போலத் திகழும்படி, தம் பகைவர் அரண்கள் பலவற்றையும் தகர்த்த

Koviloor Digital Library

மெய்ப்பாடு - அழுகை, பயன் - விரைந்து போதல். 484

485. அரும்படர் அவலம் அவளும் தீரப்
பெருந்தோள் நலம்வர யாமும் முயங்க
ஏமதி வலவ தேரே
மாமருண்டு உகளும் மலரணிப் புறவே

பாகனே! நினைவாலுண்டாகும் விலக்குதற்கரிய துன்பத்தினின்றும் எம் காதலியும் நீங்க, யாமும் அவளுடைய பெரிய தோள்களின் அழகு மீண்டு வந்தெய்தும்படி அவற்றைத் தழுவிக் கொள்ளவும் நம் தேரைக் கண்டு மான்முதலிய விலங்குகள் மருண்டு பாய்கின்ற பல்வேறு மலர்களாலும் எழில் பெற்ற முல்லை நிலத்தின்கண் நமது தேரினை விரைந்து செலுத்துவாயாக. ஏ - செலுத்துக. மதி முன்னிலையசை.

மெய்ப்பாடு - அழுகை, பயன் - தலைவியைக் காண்டல். 485

486. பெரும்புன் மாலை ஆனது நினைஇ
அரும்படர் உழத்தல் யாவது என்றும்
புல்லி ஆற்றாப் புரையோள் காண
வள்புதெரிந்து ஊர்மதி வலவநின்
புள்ளியல் கலிமாப் பூண்ட தேரே.

பாகனே! நீளிய புல்லிய மாலைப் பொழுதில் துன்பத்தை நுகர்வது எத்தகைய கொடியதாயிருக்கும். நாள்தோறும் தழுவியும் ஆற்றொணாத உயர்ச்சியை யுடையவளுமாகிய காதலியை இன்னே சென்று காண்டற் பொருட்டு நின்னுடைய பறவைபோல நிலம் தீண்டாதவகை விரைந்து செல்லும் குதிரைகள் பூட்டிய தேர் இன்னும் விரைந்துசெல்லும்படி குதிரைகளின் விசைவாரினை ஆராய்ந்து கையிற்கொண்டு செலுத்துவாயாக. வள்பு கடிவாளத்தோடு இணைத்த விசைவார்.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - விரைந்து போதல். 486

Koviloor Digital Library

வரவினை அவர் உணரார் ஆயினும் ஆகுக. தம்பால் தம்மொழி பொய்படு மொழியாதற்கு நாணவும் அறியாதார் ஆதற்கே யான் வருந்துகின்றேன்.

மெய்ப்பாடு - அழுகை. பயன் தலைவனுக்குத் தலைவியின் ஆற்றாமை உணர்த்துவித்தல். 472

473. பலர்புகழ் சிறப்பின்நும் குருசில் உள்ளிச்
செலவுநீ நயந்தனை யாயின் மன்ற
இன்னா அரும்படர் எம்வயின் செய்த
பொய்வ லாளர் போலக்
கைவல் பாணஎம் மறவா தீமே

தொழில் வன்மையுடைய பாண்மகனே! நீ சான்றோர் பலரும் புகழ்தற்குக் காரணமான சிறப்புக்களையுடைய நும் தலைவனைக் காண்டற் கெண்ணி அவன் உறைகின்ற நாட்டிற்குச் செல்ல விரும்பினையாயின் துன்பத்தை எம்பால் தோற்றுவித்த அந்தப் பொய் பேசும் நும் தலைவனைப் போன்று எம்மை மறந்துவிடாதே எம் துன்பத்தை அவர்க்குச் சொல்லி எம்மையும் குறிக் கொள்ளுமாறு செய்வாயாக. தலைவன் தான் குறித்த பருவத்தே விரைந்துவந்து நும்மை அளி செய்வேன் எனக்கூறிய உறுதிமொழியை பொய்யாக்கிவிட்டனன் என்பாள் பொய் வலாளன் என்றாள்.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - தூதுவிடுதல். இது தலைமகள் சொல்லியது. 473

474. மையறு சுடர்நுதல் விளங்கக் கறுத்தோர்
செய்யரண் சிதைத்த செருமிகு தானையொடு
கதழ்பரி நெடுந்தேர் அதர்படக் கடைஇச்
சென்றவர்த் தருகுவல் என்னும்
நன்றால் அம்ம பாணனது அறிவே

ஆயத்தீரே கேண்மின்! குற்றமற்ற எனது ஒளிநுதல் பண்டு போலத் திகழும்படி, தம் பகைவர் அரண்கள் பலவற்றையும் தகர்த்து

Koviloor Digital Library

அழித்த போர்த்திறம் மிக்க நால்வகைப் படைகளோடும் விரைந்து செல்லும் குதிரைகள் பூட்டிய தமது தேரைச் சுவடு உண்டாகும்படி விரையச் செலுத்திப் போர்மேற் சென்றுள்ள நம் பெருமானை 'நான் விரைந்து சென்று இப்பொழுதே அழைத்து வருவேன்' என்று கூறுகின்றான். இப்பாண்மகனது பண்பு மிகவும் நன்று.

மெய்ப்பாடு - மருட்கை. பயன் - பாணனைப் பாராட்டித் தூது போக்கல். இது தலைமகள் கூறியது. 474

475. நொடிநிலை கலங்க வாடிய தோளும்
வடிநலன் இழந்தஎன் கண்ணும் நோக்கிப்
பெரிதுபுலம் பினனே சீறியாழ்ப் பாணன்
எம்வெம் காதலொடு பிரிந்தோர்
தம்மோன் போலான் பேரன் பினனே.

தோழி கேள்! சிறிய யாழையேந்திய இப்பாண்மகன் என் கையில் அணிந்த தொடலைக் குறுந்தொடி கழன்று விழும்படி மிகவும் மெலிந்து போன என் தோள்களையும் மாவடுப் பிளவு போன்ற தம் அழகினை இழந்த கண்களையும் நோக்கி மிகவும் வருந்தினான். விருப்பமுடைய காதலோடு எம்மை நீத்துச் சென்றவன் கண்ணராகிய நம் தலைவர் தமன் போல்கின்றான் அல்லன். இவன் அவரின் மாறுபட்டுப் பேரன் புடையனாக விளங்குகின்றான். தொடி முன்கையில் இடும் ஒரு குறு வளையல்.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - பாணனுக்கும் உழையர்க்கும் தலைவி தன் ஆற்றாமை கூறித் தூது போக்குதல். 475

476. கருவி வானம் கார்சிறந்து ஆர்ப்பப்
பருவம் செய்தன பைங்கொடி முல்லை
பல்லான் கோவலர் படலைக் கூட்டும்
அன்புஇல் மாலையும் உடைத்தோ
வன்புறை பாண அவர்சென்ற நாடே

ஆற்றியிருப்பாயாக என்று எம்மை வற்புறுத்துகின்ற பாணனே! நம் தலைவர் குறித்துச் சென்ற கார்ப்பருவம் வந்து, முகில்கள் முழங்க பல

Koviloor Digital Library

பசுக்களையுடைய இடையர் முல்லையின் மலர்களைத் தாம் தொடுக்கின்ற மாலையோடு தேர்த்துத் தொடுத்தற்குக் காரணமான இந்த மாலைப் பொழுதுகளையும் நம் தலைவர் சென்றுறையும் அந்தநாடு உடையதோ இலதோ அறிகிலேன். கருவி - தொகுதி. காரும் மாலையும் உளவாகவும் அவர் பிரிவாற்றார் ஆகாமைக்குக் காரணம் அவர்தம் வன்கண்மையே யன்றிப் பிறிதில்லை.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - தூது போக்குதல். 476

477. பனிமலர் நெடுங்கண் பசலை பாயத்
துனிமலர் துயரமொடு அரும்படர் உழப்போள்
கையறு நெஞ்சிற்கு உயவுத்துணை யாகச்
சிறுவரைத் தங்குவை யாயின்
காண்குவை மன்ஆல் பாணஎம் தேரே.

பாணனே! நீ இங்கிருந்து விரைந்து சென்று, இங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளைத் தலைவிக்கு எடுத்துக்கூறி, தன் விழிகள் பசலையுள் மூழ்க துன்பம் மிகுந்துள்ள எம் காதலியின் செயலற்றுக் கலங்கும் நெஞ்சத்திற்கு உசாஅத் துணையாக சிறிது காலம் ஆங்குத் தங்குவாய் ஆயின் ஆங்கு எம்முடைய தேரை நீ தப்பாது காண்பாய். நீ இப்போதே விரைக. மன் - ஒழியிசை. யான் என் செய்வேன். இப்போதே செல்ல இயலாமல் உள்ளேன் என்பதாம்.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - தலைவியை ஆற்றுவித்தல். இது தலைவன் கூற்று. 477

478. நீடினம் என்று கொடுமை தூற்றி
வாடிய நுதல ளாகிப் பிறிதுநினைந்து
யாம்வெம் காதலி நோய்மிகச் சாஅய்ச்
சொல்லியது உரைமதி நீயே
முல்லை நல்யாழ்ப் பாணமற்று எமக்கே.

முல்லைத் திணைக் கருப்பொருளாகிய நல்ல யாழை ஏந்திய பாண்மகனே! எம்முடைய ஆருயிர்க் காதலி, யாம் குறித்த பருவத்தில்

Koviloor Digital Library

மீண்டு வராமல் காலம் தாழ்த்தேம் என்று எம் கொடுமையைத் தோழியர் அறியத் தூற்றி, எம் பிரிவு ஆற்றாமையான் வாடிய நுதலை உடையளாகி, எம்மை மாறுபட நினைந்து, துன்பம் மிகுதலால் உடம்பு நுனி சுருங்கி, நின்பாற் கூறிவிடுத்த செய்தியை விரைந்து எமக்குச் சொல்வாயாக.

மெய்ப்பாடு - அழுகை. பயன் - தலைவி நிலையை அறிதல். இது தலைவன் கூற்று. 478

479. சொல்லுமதி பாண சொல்லுதோறு இனிய
நாடிடை விலங்கிய எம்வயின் நாள்தொறும்
அரும்பனி கலந்த அருளில் வாடை
தனிமை எள்ளும் பொழுதில்
பனிமலர்க் கண்ணி கூறியது எமக்கே.

பாணனே! பலநாடுகள் இடையே கிடப்பத் தூரத்திலுள்ள வேற்று நாட்டின்கண் வந்து ஒதுங்கிய எம்பால் இரக்கமில்லாத பொறுத்தற்கரிய பனிவிரவிய இவ்வாடைக் காற்று நாள்தோறும் எம்மை வருத்துதற்கிடனான இந்த நள்ளிரவின்கண், எம் காதலி நின்பால் கூறிய சொற்களை எமக்குக் கூறுவாயாக. ஏனெனில் நீ அவற்றைச் சொல்லுந் தோறும் புதியனவாய் எமக்குப் பேரின்பம் செய்கின்றன.

மெய்ப்பாடு - அழுகை, பயன் - ஆற்றுவித்தல். மதி - முன்னிலையசை. 479

480. நினக்குயாம் பாணரும் அல்லேம் எமக்கு
நீயும் குருசிலை யல்லை மாதோ
நின்வெம் காதலி தன்மனைப் புலம்பி
ஈரிதழ் உண்கண் உகுத்த
பூசல் கேட்டு மருளா தோயே

பெருமானே! நின் அருயிர்க் காதலியாகிய எம் பெருமாட்டி தன் மனைக்கண் தனிமையுற்றிருந்து சொரிந்த கண்ணீரின் மிகுதியை யாம் கூறக் கேட்ட பின்னரும் அவளுக்கு இரங்குகின்றிலை. பெரும! நினக்கு

Koviloor Digital Library

466. வேந்துவிடு விழுத்தொழில் எய்தி ஏந்துகோட்டு
அண்ணல் யானை அரசுவிடுத்து இனியே
எண்ணிய நாள்அகம் வருதல் பெண்ணியல்
காமர் சுடர்நுதல் விளங்கும்
தேமொழி அரிவை தெளிந்திசின் யானே.

பெண்டிர்க்குரிய நல்லியல்புகளையும், ஒளி நுதலையும் இன்மொழியையும் உடைய நங்கையே! நம் தலைவர் மேற்கொண்டு சென்ற நம் மன்னனால் விடுக்கப்பட்ட சிறந்த தூதுத் தொழிலின் பயனையும் அடைந்து, உயர்ந்த மருப்புக்களையுடைய யானைப் படையையுடைய அம்மாற்று வேந்தனால் நன்கு பாராட்டப்பட்டு விடைகொடுக்கப் பெற்று, தாம் குறித்த நாளின் அகத்திலேயே மீண்டு வருதலை யான் தெளிந்தேன். ஆதலின் நீ வருந்தாதே. நாளகம் - குறித்த நாளுக்கு முன்பாகவே.

மெய்ப்பாடும் பயனும் அவை. யானையைப் பரிசாகப் பெற்று என்றுமாம். 466

467. புனைஇழை நெகிழச் சாஅய் நொந்துநொந்து
இனையல் வாழியோ இகுளை வினைவயின்
சென்றோர் நீடினர் பெரிதெனத் தங்காது
நம்மினும் விரையும் என்ப
வெம்முரண் யானை விறல்போர் வேந்தே.

தலைவி! போர்த் தொழிலை மேற்கொண்டு சென்ற நம் பெருமானார் மிகவும் காலம் தாழ்ப்பாராயினார் என்று கூறி, அணிகலன்கள் நெகிழும்படி வருந்தாதே. நம் பெருமான் பாசறைக்கண் இருந்து ஈண்டு வந்தோர் யானைப் படைகளையும் போர்த்திறத்தையும் உடைய நம் தலைவர் நம்மைக் காண நம்மைக் காட்டிலும் அவர் ஆவல் உள்ளவராய் இருப்பதாகக் கூறுகின்றனர். ஆதலால் இன்னே வருவார். அமைதியுறுக.

இகுளை - தோழி - இங்குத் தலைவியைச் சுட்டியது.

மெய்ப்பாடும் பயனும் அவை. 467

Koviloor Digital Library

286

468. வரிநுணல் கறங்கத் தேரை தெவிட்டக்
கார்தொடங் கின்றே காலை இனிநின்
நேர்இறை பணைத்தோட்கு ஆர்விருந் தாக
வடிமணி நெடுந்தேர் கடைஇ
வருவர் இன்றுநம் காத லோரே.

பெருமாட்டி! இப்போது தவளைகள் ஆரவாரிக்கவும், தேரைகள் ஒலிக்கவும் கார்ப்பருவம் தொடங்குகின்றது. இனி நம் காதலர் வடித்த மணிகள் கட்டப்பட்ட தமது நெடிய தேரைக் கடுகச் செலுத்தி நின்னுடைய தோள்களுக்கு இனிது நுகரும் நல்விருந்தாகும்படி இன்று மாலைப் போதில் ஒரு தலையாக வருவார். ஆதலால் மனம் வருந்தாதே. ஆற்றியிரு. நுணல் - தவளை. தலைவன் வந்துழி அவனைத் தலைவி தன் ஆற்றாமை தீரத் தழுவி இன்புறுவள் ஆகலின், தோட்கு ஆர் விருந்தாக் வருவர் என்றாள்.

மெய்ப்பாடும் பயனும் அவை. 468

469. பைந்தினை உணங்கல் செம்பூழ் கவரும்
வன்புல நாடன் தரீஇய வலன்ஏர்பு
அம்கண் இருவிசும்பு அதிர ஏறொடு
பெயல்தொடங் கின்றே வானம்
காண்குவம் வம்மோ பூங்க ணோயே.

மலர்போன்ற அழகிய கண்களை யுடையோய்! பசிய தினையின் உணங்கலை குறும்பூழ்ப் பறவைகள் கவர்ந்து உண்பதற்குக் காரணமான முல்லை நிலத் தலைவனை நமக்குக் கொணர்ந்து தருதற் பொருட்டு முகில் தான் கிடந்த மலையை வலம் சூழ எழுந்து பெரிய வானம் அதிரும்படி முழங்கும் இடியோடு மழை பெய்யத் தொடங்குகின்றது. அவ் இனிய காட்சியைக் கண்டு மகிழ்வோம் வா! தினை உணங்கல்-உலர வைத்த தினை. தலைவன் நுகர்தற்குரிய பேரழகினை இப்பசலை உண்டு அழிக்கின்றது என்பது உள்ளுறை.

மெய்ப்பாடும் பயனும் அவை. 469

Koviloor Digital Library

470. இருநிலம் குளிர்ப்ப வீசி அல்கலும்
அரும்பனி அளைஇய அற்சிரக் காலை
உள்ளார் காதல ராயின் ஒள்ளிழை
சிறப்பொடு விளங்கிய காட்சி
மறக்க விடுமோநின் மாமைக் கவினே.

ஒளி பொருந்திய அணிகலன்களையுடைய தலைவி! நம் காதலர், இந்நிலம் குளிருமாறு மழையையும் காற்றையும் வீசி, இந்தப் பனியும் கலக்கப் பெற்றதுமான பனிப் பருவத்தை நினையாது மறப்பராயின் மறந்திடுக. நின்னுடைய மாமையாகிய அழகினைக் கண்ட அவர் தம் மானதக் காட்சி நின்னை நினையாது மறந்திருக்க விடுமோ? விடாது. ஆதலால் இன்னே விரைந்து வருவார். வருந்தாதே. மறவார் இன்னே வருகுவர் நீ வருந்தற்க என்பது குறிப்பெச்சம்.

மெய்ப்பாடும் பயனும் அவை. 470

- தோழி வற்புறுத்தப் பத்து முற்றிற்று -

Alagappa university
Central Library
43317

Koviloor Digital Library

48. பாணன் பத்து

அஃதாவது பாணனுக்குக் கூறுங் கூற்றாகவும், பாணன் கூற்றாகவும் வருகின்ற பத்துப் பாடல்களின் தொகுதி

471. எல்வளை நெகிழ மேனி வாடப்
பல்லிதழ் உண்கண் பனிஅலைக் கலங்கத்
துறந்தோன் மன்ற மறங்கெழு குருசில்
அதுமற்று உணர்ந்தனை போலாய்
இன்னும் வருதி என்அவர் தகவே

பாண்மகனே! வீரம் பொருந்திய நம் பெருமான் தாம் நம் பெருமாட்டியைப் பிரியுங்காலத்து வளையல்கள் கழலவும், மாமை நிறம் மழுங்கி வாடவும் அவளது மையுண்ட கண்கள் துன்பக்கண்ணீர் கலங்கவும் பிரிந்து போவாராயினார். அந் நிகழ்ச்சியினை நீ உணர்ந்திருந்தும் உணராதாய் போன்று, இப்பொழுதும் ஆற்றியிருந்திடுக என்னும் அவர் செய்தியோடு தூதாகி வருகின்றனை. நின்னை அனுப்புகின்ற நம் தலைவருடைய பெருந்தன்மை தான் எத்தகையது? யான் அறிகிலேன்.

மெய்ப்பாடு - வெகுளி. பயன் - தலைவியின் ஆற்றாமை கூறுவித்தல். 471

472. கைவல் சீறியாழ் பாண நுமரே
செய்த பருவம் வந்துநின் றதுவே
எம்மின் உணரா ராயினும் தம்வயின்
பொய்படு கிளவி நாணலும்
எய்யார் ஆகுதல் நோகோ யானே.

கைத்தொழில் வன்மையுடைய சிறிய யாழினை இயக்குகின்ற பாண்மகனே! நும் தலைவர் தாம் மீண்டு வருதற்குக் குறி செய்த கார்ப்பருவமோ வந்து நிலைபெறுவதாயிற்று. எம்பொருட்டு இப்பருவ

Koviloor Digital Library

வாராவாயின. துன்பத்தைத் தரும் வாடைக் காற்றும் வாழை மரத்தின் அடிப்பாகம் அசையும் படி வீசிப் பெரிதும் வருத்தும். அளிக்கத் தகுந்த யான் என் நிலையடைவனோ அறியேன்.

ததைதல் செறிதல். முழுமுதல் - கிழங்கு.

மெய்ப்பாடு - அழுகை. பயன் கையறவுகோடல். இது கையற்றுக் கலங்கி மொழிதல். யான் இப்போது அளித்தற்கு உரியவளாய் இருக்கின்றேன். ஆனால் அளிப்பவரோ வந்திலர் என்பதாம். 460

- பருவங் கண்டு கிழத்தியுரைத்த பத்து முற்றிற்று -

Koviloor Digital Library

47. தோழி வற்புறுத்த பத்து

அஃதாவது, தலைவன் பிரிந்துழி ஆற்றாமையான் வருந்தும் தலைவியைப், பல்வேறு வகையாலும் தோழி ஆற்றுவித்தலைப் பொருளாகக் கொண்டுள்ள பத்துச் செய்யுளின் தொகுதி.

461. வான்பிசிர்க் கருவியின் பிடவுமுகை தகையக்
கான்பிசிர் கற்பக் கார்தொடங் கின்றே
இனையல் வாழி தோழி எனையதூஉம்
நின்துறந்து அமைகுவர் அல்லர்
வெற்றி வேந்தன் பாசறை யோரே.

எம்பெருமாட்டி! அதோ பார்! மேகம் தனது தூறல் ஆகிய கருவியைக் கொண்டு பிடவு என்னும் செடியில் அரும்புகளை இயற்றி அழகு செய்யவும், வான் துளித்தலைக் கண்ட காட்டு மரங்களும் துளித்தலைச் செய்யவும் நம் பெருமான் குறித்துச் சென்ற கார்ப்பருவம் தொடங்கிவிட்டது. நம் முடி மன்னன் பாசறைக்கண் அவனுக்கு உறுதுணையாய் இருக்கின்ற நம் தலைவன் இனி ஒரு சிறுபொழுதும் நின்னைப் பிரிந்து பாசறைக்கண் உறைவாரல்லர். இப்போதே நிச்சயமாய் வருவர். ஆதலால் நீ வருந்தாதே.

வான் - முகில்.

மெய்ப்பாடு - அழுகை, பயன் - ஆற்றுவித்தல். 461

462. ஏதில பெய்ம்மழை காரென மயங்கிய
பேதையம் கொன்றைக் கோதைநிலை நோக்கி
எவன்இனி மடந்தைநின் கலிழ்வே நின்வயின்
தகையெழில் வாட்டுநர் அல்லர்
முகையவிழ் புறவுஇன் நாடிறந் தோரே.

Koviloor Digital Library

அரும்புகள் மலர்ந்து அழகுறுதற்கு இடனான நமது முல்லை நிலமாகிய இனிய நாட்டினைக் கடந்து சென்ற நம் காதலர் நின்பால் அமைந்த பேரழகினை அழிக்கும் வன்கண்ணர் அல்லர். அவர்குறித்த பருவத்தில் உறுதியாக வருவார். மடப்ப முடையோய்! முதுவேனிற் பருவமாகிய இப்போது காரணமின்றி பெய்த வம்ப மாரியைக் கார்ப்பருவ மழை என்று பிறழவுணர்ந்த கொன்றை மரங்கள் மலர்ந்த நிலைமையைக் கண்டு அறிவுடைய நின் துன்பம் எத்தகையது? அழாதே.

வம்பமாரி - நிலையில்லாத மழை. அவர் கூறிய உறுதி மொழி வாய்மையாகும் என்பது இறைச்சி வகையால் தோன்றுவதற்கு முகையவிழ் புறவு என்றாள். மெய்ப்பாடும் பயனும் அவை. 462

463. புதன்மிசை நறுமலர் கவின்பெறத் தொடரிநின்
நலமிகு கூந்தல் தகைகொளப் புனைய
வாராது அமையலோ இலரே நேரார்
நாடுபடு நன்கலம் தரீஇயர்
நீடினர் தோழிநம் காத லோரே.

தலைவியே! கேள். நம்பால் பேரன்புடைய நம் தலைவர் தம்மால் வென்று அடக்கப்பட்ட பகைவருடைய நாட்டில் உருவாகின்ற அணிகலன்களை ஈட்டிக் கொணர்ந்து நமக்கு வழங்கும் பொருட்டுச் சிறிதுகாலம் நீட்டித்துள்ளார். ஆயினும் நின் கூந்தல் மேலும் அழகு பெற, புதர்களின் மேல் மலர்ந்துள்ள மலர்களைக் கொய்து, அழகாகத் தொடுத்துச் சூட்டுதற்கு வராமல் அங்குத் தங்கமாட்டார். இன்னே வருவார். அழாதே.

தொடரி - மாலையாகத் தொடுத்து

மெய்ப்பாடும் பயனும் அவை, நேரார் - பகைவர், தரீயர் - தருதற்கு. 463

Koviloor Digital Library

464. கண்ணெனக் கருவிளை மலரப் பொன்னென
இவர்கொடிப் பீரம் இரும்புதல் மலரும்
அற்சிரம் மறக்குநர் அல்லர்நின்
நல்தோள் மருவரற்கு உலமரு வோரே.

தலைவி! நின்னுடைய நல்ல தோளைத் தழுவிக்கொள்ளுதற்குப் பேரன்புடையோர் கருவிளங் கொடிகள் நின் கண்ணைப் போன்று மலர, பெரிய புதர்தோறும் படர்ந்துள்ள பீர்க்குக் கொடி பொன்போல் மலரும், இந்தப் பனிபடு பருவத்தே மறைந்துறைவாரல்லர் . இன்னே வருவர் . இன்னல் உறாதே. கருவிளை காக்கணம் கொடி.

கண்ணெனக் கருவிளை மலரப் பொன்னெனப் பீரம் மலரும் அற்சிரம் எனக் கூறினாள் - இஃது இறைச்சிப் பொருள்.

மெய்ப்பாடும் பயனும் அவை. 464

465. நீர்இருவு அன்ன நிமிர்பரி நெடுந்தேர்
கார்செய் கானம் பிற்படக் கடைஇ
மயங்கு மலர்அகலம் நீஇனிது முயங்க
வருவர் வாழி தோழி
செருவெம் குருசில் தணிந்தனன் பகையே.

தலைவி! ஒரு நற்செய்தி கேள் . போரைப் பெரிதும் விரும்பும் நம் மன்னன் போரை நிறுத்தி விட்டான் என அறிந்தோர் கூறக் கேட்டேன் . நீர் வீழ்ச்சி போன்று விரைந்து செல்லும் செலவினையுடைய நெடிய தம் தேரினை கார்ப் பருவத்தால் ஆக்கம் பெற்றகாடு, தன் பின்னே கிடக்க, விரையச் செலுத்தி, நீ விரும்பித் தழுவும் அகன்ற தம் மார்பினை நீ இனிதே தழுவிக் கொள்ளுதற்கு இன்னே வருவார் . வருந்தாதே.

செரு - போர் . நீர் இருவு - நீர் வீழ்ச்சி . நிமிர்ந்து செல்லும் குதிரைகள் பூட்டிய தேர் எனினுமாம்.

மெய்ப்பாடும் பயனும் அவை. 465

Koviloor Digital Library

487. இதுமன் பிரிந்தோர் உள்ளும் பொழுதே
செறிதொடி உள்ளம் உவப்ப
மதியுடை வலவ ஏமதி தேரே.

அறிவுடைய பாகனே! துணை பிரிந்து தனித்துறைவோர் தம் காதலரை நினைந்து வருந்தும் நேரம் இப்பொல்லாத மாலைப் பொழுதே! அத்தகைய துன்பத்திற்கு ஆளாகியிருக்கும் எம் காதலி மனம் மகிழும் வண்ணம் நினது தேரை விரைந்து செலுத்துவாயாக. மன் - ஒழியிசை.

மெய்ப்பாடும் பயனும் அவை. 487

488. கருவி வானம் பெயல்தொடங் கின்றே
பெருவிறல் காதலி கருதும் பொழுதே
விரிஉளை நன்மாப் பூட்டிப்
பருவரல் தீரக் கடவுமதி தேரே.

மதியுடை வலவ! மின் இடி முதலிய தொகுதிகளையுடைய முகில் மழைபெய்யத் தொடங்கிவிட்டது. தனது கடமையை நன்கு ஆற்றிப் பெரிய வெற்றியைக் காண்பவளாகிய எம் காதலி நம் வரவினை நினைந்து எதிர்பார்க்கும் இற்றைப் பொழுதில் அவளுடைய துன்பம் தீரும்படி நின் தேரின்கண் விரிந்த பிடரி மயிரையுடைய சிறந்த குதிரைகளை ஆராய்ந்து பூட்டி இன்னே விரைந்து செலுத்துவாயாக. பருவரல் - துன்பம்.

மெய்ப்பாடும் பயனும் அவை. 488

489. அம்சிறை வண்டின் அரியினம் மொய்ப்ப
மென்புல முல்லை மலரும் மாலைப்
பையுள் நெஞ்சின் தையல் உவப்ப
நுண்புரி வண்கயிறு இயக்கிநின்
வண்பரி நெடுந்தேர் கடவுமதி விரைந்தே.

தேர்ப் பாகனே! அழகிய சிறகுகளையுடைய வண்டினது இனங்கள் தம்மைச் சூழ்ந்து மொய்க்கும்படி மென்மையுடைய நிலமாகிய

Kuviloor Digital Library
294

முல்லை நிலத்தின்கண் முல்லைக் கொடிகள் மலர்கின்ற இற்றைநாள் மாலைப் பொழுதில் நம் வரவு எதிர்பார்த்துத் துன்புறுகின்ற நெஞ்சையுடைய எம் காதலி நம்மைக் கண்டு பெரிதும் மகிழும்படி குதிரையின் கடிவாளத் திட்ட விசைக் கயிற்றை இழுத்துப் பிடித்து நினது வளவிய குதிரைகள் பூட்டிய நெடிய தேரை விரைந்து செலுத்துவாயாக. பையுள் - துன்பம்.

மெய்ப்பாடு - அச்சத்தைச் சார்ந்த பெருமிதம். பயன் - விரைந்து சென்று தலைவியை அளி செய்தல். 489

490. அம்தீம் கிளவி தான்தர எம்வயின்
வந்தன்று மாதோ காரே ஆவயின்
ஆய்தொடி அரும்படர் தீர
ஆய்மணி நெடுந்தேர் கடவுமதி விரைந்தே

தேர்ப்பாகனே! இக்கார்ப்பருவம் அழகிய இனிய சொற்களையுடைய எம் காதலியை எம் இடத்தே தருதற் பொருட்டு வந்தது. அவளுடைய விலக்கற்கரிய நினைவாலுண்டாகும் துன்பம் தீரும்படி அழகிய மணிகள் கட்டிய நின் நெடிய தேரை இற்றைநாள் மாலைப்பொழுது வருமுன்னர் அவளிடத்தே செல்லும்படி மிகவும் விரைந்து செலுத்துவாயாக.

தான் - அசை. ஆவயின் என்றது தனது இல்இடத்தை. மணிஓசையைச் செவியால் ஓர்ந்திருப்பாள். அது கேட்டலும் மகிழ்வாள் என்னும் நினைவான் ஆய்மணி நெடுந்தேர் என்றான்.

மெய்ப்பாடு - பெருமிதம், பயன் - விரையச் செல்லுதல். 490

- தேர்வியங் கொண்ட பத்து முற்றிற்று -

Koviloor Digital Library

50. வரவுச் சிறப்புரைத்த பத்து.

அஃதாவது, தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் வரவின் சிறப்பைப் பொருளாகக் கொண்ட ஒரு பத்துச் செய்யுள் தொகுதி என்றவாறு.

491. காரெதிர் காலையாம் ஒவின்று நலிய
நொந்துநொந்து உயவும் உள்ளமொடு
வந்தனெம் மடந்தைநின் ஏர்தர விரைந்தே.

தலைவன்

இது வினைமுற்றிப் புகுந்த தலைமகன் தலைவிக்குச் சொல்லியது.

மடப்பமுடையோய்! கார்ப்பருவம் தொடங்குகின்ற இற்றை நாள் யாம் நின் நினைவு இடையீடின்றி எம்மை வருத்துதலால், ஆற்றாது நொந்து வருந்துகின்ற நெஞ்சத்தோடு நின்னுடைய பேரழகினை மீண்டும் நினக்குத் தருதற்கு மிகவும் விரைந்து வந்தேம். ஏர் அழகு.

மெய்ப்பாடு - உவகை. பயன் - மகிழ்தல். 491

492. நின்னே போலும் மஞ்ஞை ஆலநின்
நன்னுதல் நாறும் முல்லை மலர
நின்னே போல மாமருண்டு நோக்க
நின்னே உள்ளி வந்தனென்
நன்னுதல் அரிவை காரினும் விரைந்தே.

தலைவன்

நல்ல நுதலையுடைய நங்கையே! யாம் வரும் வழியின்கண் சாயலான் நின்னையே ஒத்த மயில்கள் கூத்தாடக் கண்டும், நினது நல்ல நுதலைப் போலவே நறுமணம் கமழும் முல்லை மலர்கள் மலரக் கண்டும், நின்னைப் போலவே மான்கள் மருண்டு பார்க்கக் கண்டும் இவ்வாற்றான் பெரிதும்நின்னையே நினைந்து முகிலைக் காட்டிலும் பெரிதும் விரைந்து வந்தேம்.

Koviloor Digital Library

கார் - முகில்.

மெய்ப்பாடும் பயனும் அவை. 492

493. ஏறுமுரண் சிறப்ப ஏறெதிர் இரங்க
மாதர் மான்பிணை மறியொடு மறுகக்
கார்தொடங் கின்றே காலை
நேரிறை முன்கைநின் உள்ளியாம் வரவே.

அழகிய கோடுகள் அமைந்த முன்கையையுடைய நங்காய்! நின்னை நினைந்து யாம் மீண்டு வரும்பொழுது ஆனேறுகள் கோட்டு மண் கொண்டு மாறுபாடு மிகாநிற்ப, வானத்தே இடியேறுகள் மாறுபாடுமிக்க அவ் ஆனேற்றின் எதிரே முழங்க, அழகிய கலைமான்கள் தத்தம் பிணைமானோடும் மறிகளோடும் கூடிக் குலாவ, காலம் கார்ப்பருவத்தைத் தொடங்கிற்று. யாம் பெரிதும் விழிப்புடன் இருந்து நினக்குக் கூறிப் போந்த நாளிலேயே வந்து விட்டேம். ஆனேறு - காளைமாடு. இடியேறு - ஆண்இடி. காளைக்குக் கோபம் வரும் போது அது கொம்பால் மண்ணைக் குத்தும். கலை - ஆண்மான். பிணை - பெண்மான். மறி - குட்டி. மாதர் மான்பிணையோடு மறுக என்றது இனியான் நின்னோடு கூடிக்களித்துப் பேரின்பம் நுகர்வேன் என்பது இறைச்சிப் பொருள்.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - இன்புற்று அமர்ந்து வாழ்தல். 493

494. வண்டுதாது ஊதத் தேரை தெவிட்டத்
தண்கமழ் புறவின் முல்லை மலர
இன்புறுத் தன்று பொழுதே
நின்குறி வாய்த்தனம் தீர்கினிப் பட்டே.

நங்காய்! யாம் நினக்குக் கூறிச் சென்ற பருவம் தப்பாது வாய்க்கும்படி மீண்டு வந்து சேர்ந்தேம். இனி இக்கார்ப்பருவமும் தண்ணிதாய் நறுமணம் கமழ்கின்ற நம் முல்லை நிலத்தில் யாண்டும் முல்லைக் கொடிகள் மனக் கினியவாக மலரவும், வண்டுகள் மலர்களில்

Koviloor Digital Library

னைப் பருகி இசை முரலவும், புதுப்பெயல் பெற்றமையால் தேரைகள் னிதே ஒலிக்கவும் பெரிதும் இன்பம் செய்வதாயிற்று. இனி நீ துன்பம் ர்ந்து மகிழ்வாயாக. தீர்க + இனி = தீர்கினி ஈறுகெட்டது.

மெய்ப்பாடும் பயனும் அவை. 494

495. செந்நில மருங்கின் பல்மலர் தாஅய்ப்
புலம்புதீர்ந்து இனிய வாயின புறவே
பின்னிருங் கூந்தல் நன்னலம் புனைய
உள்ளுதொறும் கவிழும் நெஞ்சமொடு
முள்எயிற்று அரிவையாம் வந்த ஆறே.

முள்போலும் கூர்த்த பற்களையுடைய பாவாய்! நின்னை நினையும்தோறும் உருகி யொழுகும் நெஞ்சத்தோடு இக்கார்ப் பருவம் தரும் மலர்களால் நின்னுடைய பின்னுதலுற்றகரிய கூந்தலின் இயற்கைப் பேரழகினை மேலும் அழகுறுத்த காட்டினூடே யாம் வந்த வழிகள் சிவந்த தம் நிலப் பரப்பெங்கும் பல்வேறு மலர்களும் பரப்பப்பட்டு, தமது தனிமைத் தன்மை தீர்ந்து எமக்கு மிகவும் இனியனவாயிருந்தன. ஆறுபுலம்பு தீர்ந்து இனியவாயின. அங்ஙனமே நீயும் இனிப் புலம்பு தீர்ந்து இனியை ஆகுதி என்பது குறிப்பு.

மெய்ப்பாடும் பயனும் அவை. புலம்பு - தனிமைத் தன்மை. 495

496. மாபுதல் சேர வரகுஇணர் சிறப்ப
மாமலை புலம்பக் கார்கலித்து அலைப்பப்
பேரமர்க் கண்ணி நின்பிரிந்து உறைநர்
தோள்துணை யாக வந்தனர்
போதுஅவிழ் கூந்தலும் பூவிரும் புகவே

குறித்த பருவத்தின்கண் தலைமகன் வந்துழித் தோழி தலைமகட்குச் சொல்லியது. பெரிய அமர்த்த விழிகளையுடையோய்! நின்னைப் பிரிந்து போய் வேற்று நாட்டகத்தே உறைந்தவராகிய நம் தலைவர், விலங்கினங்கள் அடர்ந்த புதர்களை அடையவும், வரகு தம்

Koviloor Digital Library

கதிர்க் கொத்துக்களால் சிறப்பெய்தவும், பெரிய மலைகள் தம்ப உயிரினங்கள் இயங்காமையால் தனிமை எய்தவும் மழைபெரித் ஆரவாரித்துப் பெய்துவருத்துதலான் மெலிந்த நின் தோள்களுக் ஆக்கம் செய்யும் துணையாதற்கு மீண்டு வந்தனர் ஆதலான் இன் நாளரும்புகள் மலர்ந்து மணம் பரப்புதற்குரிய நின்னுடைய வறுங் கூந்தல் அம்மலர்களை விரும்பி அணிவதாக.

மெய்ப்பாடு - பெருமிதம், பயன் - ஆற்றுவித்தல். 496

497. குறும்பல் கோதை கொன்றை மலர
நெடுஞ்செம் புற்றம் ஈயல் பகர
மாபசி மறுப்பக் கார்தொடங் கின்றே
பேரியல் அரிவைநின் உள்ளிப்
போர்வெம் குருசில் வந்த மாறே.

பேரழகையுடைய எம்பெருமாட்டி! போர்த்தொழிலையே பெரிதும் விரும்பிச் சென்ற நம் தலைவர் வந்து விட்டமையால் கொன்றை மரங்கள் குறிய பலவாகிய மாலைகளைப் போன்று மலரவும், நெடிய சிவந்த புற்றுக்கள் ஈசல்களை வெளிப்படுத்தவும், விலங்கினங்கள் பசிதீர மேயலை மறுப்பவும் இப்போது கார்ப்பருவம் தொடங்குகின்றது என்றுணர்க.

மெய்ப்பாடும் பயனும் அவை. 497

498. தோள்கவின் எய்தின தொடிநிலை நின்றன
நீள்வரி நெடுங்கண் வாள்வனப்பு உற்றன
வேந்துகோட்டு யானை வேந்துதொழில் விட்டென
விரைசெலல் நெடுந்தேர் கடைஇ
வரையக நாடன் வந்த மாறே.

பெருமாட்டி! களிற்றுயானைப் படைமிக்க நம்முடிவேந்தன் தான் மேற்கொண்ட போர்த் தொழிலினின்று விடு செய்தமையால் மலை நாடனாகிய நம் தலைவர் இயல்பாகவே விரைந்த செலவினையுடைய தமது நெடிய தேரை மேலும் விரையச் செலுத்தி மீண்டு வந்தமையால்

Koviloor Digital Library

டி மெலிந்த நின்தோள்கள் முன்பு இருந்ததைவிட அழகு பெற்றன. ன்னர்க் கழன்று வீழ்ந்த தொடிகள் இப்போது செறித்த இடத்திலேயே ற்கின்றன. உன்னுடைய நீண்ட வரி பரந்த நெடிய கண்கள் பசலை தீர்ந்து பொலிவன ஆயின. நீடுவாழ்க.

மெய்ப்பாடு - பெருமிதம், பயன் - மகிழ்தல். 498

499. பிடவம் மலரத் தளவம் நனையக்
கார்கவின் கொண்ட கானம் காணின்
வருந்துவள் பெரிதென அருந்தொழிற்கு அகலாது
வந்தனர் ஆல்நம் காதலர்
அம்தீம் கிளவிநின் ஆய்நலம் கொண்டே

அழகிய இனிய மொழிகளை யுடையோய்! நம் காதலர் பிடவம் செடிகள் மலரவும் முல்லைக் கொடிகள் அரும்பவும் கார்ப் பருவத்தால் அழகு கொண்ட காடுகளைக் காணுமிடத்து நம் காதலி மிகவும் துன்புறுவாள் ஆதலால் அத்துன்பத்தைத் துடைக்க வேண்டி, தாம் மேற்கொண்ட போர்ச் செயற்கு மேற்கொண்டு செல்லாது நினது அழிந்தொழிந்த அழகினையும் மீள உய்யக் கொண்டு தாம் குறித்த பருவம் தப்பாது மீண்டு வந்தார். வருந்தாதே. நனைய - அரும்ப. ஆய்நலம் - அழியும் நலம்.

மெய்ப்பாடும் பயனும் அவை. 499

500. கொன்றைப் பூவின் பசந்த உண்கண்
குன்றக நெடுஞ்சுனைக் குவளை போலத்
தொல்கவின் பெற்றன இவட்கே வெல்போர்
வியன்நெடும் பாசறை நீடிய
வயமான் தோன்றல்நீ வந்த மாறே.

வினைமுற்றி வந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.

வெல்லும் போரையுடைய அகன்ற நெடிய பாசறையில் தலைவியை நீத்து நீட்டித்த சிங்கம் போன்ற ஆற்றல்மிக்க பெருமானே!

Koviloor Digital Library

நீ மீண்டு வந்தமையான் என் தலைவியினது நின் பிரிவாற்றாமை... கொன்றை பூப் போன்று பசந்த மையுண்ட கண்கள் மலையின் க... அமைந்த நீண்ட சுனையின் கண் மலர்ந்துள்ள கருங்குவளை மல... போன்று தம் பழைய பேரெழிலை மீண்டும் பெற்றுத் திகழ்கின்றன.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - மகிழ்வித்தல். 500

- வரவுச் சிறப்புரைத்த பத்து முற்றிற்று -

முல்லைத் திணை முற்றிற்று

Koviloor Digital Library

ALAGAPPA UNIVERSITY LIBRARY KARAIKUDI.

செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை

செய்யுள் முதற் குறிப்பு	செய்யுள் எண்	செய்யுள் முதற் குறிப்பு	செய்யுள் எண்
அஞ்சிலோதி	49	அம்மவாழி நம்வயிற்	336
அஞ்சிறைவண்டி	489	" நம்வயனெ	335
அணங்குடைப்	174	" நம்வயின்	337
அணிநடை	96	" நலமிக	120
அத்தச்செயலைத்	273	" நலனே	117
அத்தநீளிடை	380	" நன்று	119
அத்தப்பலவின்	351	" நாமழநீ	116
அந்தீங்கிளவி	490	" நாமழப்	229
அம்பணத்தன்ன	43	" நாளு	227
அம்மவாழிகொண்	139	" நென்னல்	113
" தோழி	340	" பன்மலர்	244
" காதலர்	221	" பன்மா	115
" கொண்க	114	" பாசிலைக்	112
" சார	338	" பாணன்	111
" சிறியிலைக்	339	" பைஞ்சுனை	225
" சிறியிலைநெ	334	" மகிழ்நனயந்	37
" நம்மலைநறு	226	" மகிழ்நனொ	40
" நம்மலைமணி	224	" மகிழ்நன்ஒரு	32
" நழ்மலைவரை	223	" மகிழ்நன்கட	31
" நம்மூர்துளிந்	222	" தோழிமகிழ்நன்	33
" நம்மூர்திரந்	228	" மகிழ்நன்றன்	38
" பொய்கைப்	34	" யவிழிணர்க்	331
" பொய்கையா	35	" யாவதும்	333
" நம்மொடு	230	" யானின்	118

Koviloor Digital Library

செய்யுள் முதற் குறிப்பு	செய்யுள் எண்	செய்யுள் முதற் குறிப்பு	செய்யுள் எண்
அம்மவாழி யூரன	36	அறம்புரிசெங்கோல்	290
" யூரன்	39	" யருமறை	387
" பாணவெவ்	89	அறியாமையின்	242
" வாழியோமகிழ்	77	அறியேமல்லே	240
அயல்புறந்தந்த	25	அறுசில்கால	20
அரசுபகை	455	அன்னாய் - கான	208
அரும்பட	485	" நம்ப - த்தேன்	203
அரும்பொருள் செய்வினை	302	" நம்ப - ப்புலவு	210
"வேட்கைய	359	" நம்மூர்	202
அலங்கிதழ்	185	" நன்று	207
அலங்குமழை	220	" நீமற்	209
அலமரலாயமோ	64	" யஃதே	204
அவரையருந்த	271	" யுவந்	206
அவரோவாரார்-குயிற்	341	" யென் - நனி	205
" சுரும்பு	342	" யென்பச	366
" திணி	343	" யென்னை	201
" நறும்பூங்	344	அன்னைதந்த	247
" புதுப்பூ	345	அன்னையுமறிந்தன	236
" பொரி	349	அன்னைவாழிகழிய	108
" யஞ்	346	அன்னை வாழி - நம் - நீனி	102
" யெழி	347	" நம் - பலர்	104
" வலஞ்சுரி	348	" நெய்த	109
" வேம்பி	350	" புன்னை பொ	110
அவல்தொறும்தேரை	453	" புன்னை யொ	103
அவிர்தொடிகொட்பக்	314	" முழங்கு	105
அழலவிர்நனந்தலை	326	" யவர்நாட்	106
அளியதாமே	284	" யுதுக்கா	101
அள்ளல்ஆடிய	22	" யென்	107
அறஞ்சாலியரோ	312	ஆய்நலம்பசப்ப	318

Koviloor Digital Library

செய்யுள் முதற் குறிப்பு	செய்யுள் எண்	செய்யுள் முதற் குறிப்பு	செய்யுள் எண்
ஆர்குரல்எழிலி	411	எக்கர் ஞாழற் பூவி	149
ஆள்வழக்கற்ற	329	" ஞாழனறுமலர்	150
ஆறுவனப்பெய்த	483	" ஞாழல் மலரி	147
இதுமற்பிரிந்தோ	487	" மா அத்து	19
இதுவென்பாவை	375	எமக்குநயந்	175
இதுவேமடந்தைநா	415	எரிகவர்ந்-ச்சிறிது	324
இந்திரவிழவிற்	62	" யரிய	360
இரவினானு	173	எரிக்கொடி	353
இருங்கழிச்சேயிறா	188	ஏரிப்பூ	368
இருஞ்சாயன்ன	18	எரிமருள்	294
இருநிலம்குளிர்ப்ப	470	எருமைநல்	93
இலங்குவளைதெளிர்ப்ப	197	எல்வளை	471
இலங்குவீங்கெல்வளை	200	என்னும்	372
இளம்பிறையன்ன	264	ஏதில	462
ஈர்ம்பிணவுபுணர்ந்த	354	ஏறுமுரண்	493
உடலினேன்	66	ஐயவாயின	441
உண்டுறை	28	ஒண்சுடர்	405
உயர்கரை	361	ஒண்டொடி	172
உயிர்கலந்து	419	ஓங்குபு	16
உலறுதலை	321	கடற்கோடறுத்த	194
உள்ளார்	456	கடற்கோடுசெறிந்த	191
உள்ளுதற்கினிய	356	கடுங்கண்காளை	385
எக்கர்ஞாழல்செரு	141	கடும்பரி	422
" ஞாழலரும்	146	கட்டளையன்ன	215
" ஞாழலிகந்து	148	கணங்கொள்	183
" ஞாழலிணர்	144	கணமாதொலைச்சி	365
" ஞாழலிறங்	142	கண்டனெம்	69
" ஞாழற்சிறி	145	கண்டிகு-ஒண்ணுதல்	123
" ஞாழற்புள்	143	" தும்பை	127

Koviloor Digital Library

செய்யுள் முதற் குறிப்பு	செய்யுள் எண்	செய்யுள் முதற் குறிப்பு	செய்யுள் எண்
கண்டிகு - தெண்டிரை	125	காயாகொன்றை	412
" முண்டக	121	காரெதிர்காலையா	491
" யுண்கண்	126	கார்கலந்தன்றாற்	417
" யுறாஅ	128	கார்செய்காலை	451
" ஒள்ளிழை	122	கானலம்பெருந்துறை	199
" வண்டற்	124	கிழங்ககழ்	270
கண்பொரவிளங்கிய	319	குரங்கின்தலைவன்	275
கண்ணெனக்	464	குரவமலர	357
கதிரிலை	78	குருகுடைத்துண்ட	81
கரந்தையஞ்	26	குறவர்முன்றின்	277
கருங்கால்வேங்கை	212	குறுங்கையிரும்புலி	216
கருங்கோட் டெருமை - க	95	குறும்பல்கோதை	497
" டெருமைச்	92	குன்றக்குறவனாரமறுத்	254
கரும்பின்எந்திரங்	55	" குறவனார்ப்பி	251
கரும்புநடு	65	" குறவன் - அணி	258
கருவிவானங்	476	குன்றக்குறவன்-கடவுட்	257
" வானம்	488	" - சாந்த	253
கருவிரன்மந்திக்-பற	272	" - புல்வேய்	252
" பார்ப்	280	" - மன்ற	259
கரைசேர்வேழம்	12	" - மென்றோள்	260
கல்லாக்கோவலர்	304	" - வண்டு	256
கல்லிவரிற்றி	279	" - வரை	255
கவிழ்மயிரெருத்திற்	397	குன்றநாடன்	299
களிறுபிடிதழீஇப்	305	" கூதிராயின்	45
கறிவளர்	243	" கேட்டிசின்	59
கன்னிவிடியற்	68	" கேழல்	269
காண்மதிபாணநீ	140	" கையுறவீழ்ந்த	235
" பாணபா	134	" கைவல்	472
காமங்கடவ	237	கொடிச்சி காக்கும்	296

Koviloor Digital Library

செய்யுள் முதற் குறிப்பு	செய்யுள் எண்	செய்யுள் முதற் குறிப்பு	செய்யுள் எண்
கொடிச்சி கூந்தல்	300	ஞெலிகழை	307
" யின்குரல்	289	தண்ணறு	190
கொடிப்பூவேழம்	14	தண்புனல்	98
கொன்றைப்பூவில்	500	தவறில	177
கோடீர்	196	தழங்குரல்	448
கோடுபுலம்	192	தளவின்பைங்கொடி	454
கோடுயர்	358	தன்பார்ப்பு	41
கோட்சுரும்பு	383	தன்னமர்	379
சாந்தமரத்த	212	தாஅஇழந்த	268
சாயிறை	481	தாய்சாப்பிறக்கும்	24
சாரற்பலவின்	214	திண்டேர்	54
" புறத்த	282	திருந்திழை	355
சிலம்பின்வெதிரத்து	278	திரையிமிழ்	171
சிலம்புகமழ்	293	தீம்பெரும்	44
சிலைவிற்	363	துணர்க்காய்	458
சிறுகட்பன்றிப்-லொடு	266	துணையோர்	50
" -றுறுக	267	துறந்ததற்	393
சிறுதினைகொய்த	286	துறையெவன்	53
" மேய்ந்த	262	தெரியிழை	482
சிறுநனிவரைந்தனை	180	தெறுவ	313
சுரும்புண	239	தேர்செல	428
சூ தார்	71	தொடிநிலை	475
சூ ழ்கம்	317	தோளுங்	178
• செந்நெலஞ்	27	தோள்கவின்	498
செய்வினை	389	நம்முறு	241
செல்லிய	378	நயந்த	407
செவியிற்	84	நல்குமதி	179
சேட்புல	384	நல்லோர்	390
சொல்லுமதி	479	நறுவடி - மூக்கி	213

Koviloor Digital Library

செய்யுள் முதற் குறிப்பு	செய்யுள் எண்	செய்யுள் முதற் குறிப்பு	செய்யுள் எண்
நறுவடி - விளைந்	61	நுண்ணேர்	218
நனிசேய்த்து	443	நுண்மழை	328
நன்றேகாதலர்-அணி	431	நும்மனை	399
" - குருந்	439	நெடுங்கழை	322
" - சுடுபொன்	432	நெடும்பொறை	430
" - தண்பெயல்	440	நெடுவரை	287
" - நன்பொ	436	நெய்தல்இருங்கழி	184
" - நிலனணி	435	" லுண்கண்	181
நன்றேகாதலர்-நீர்ப்பட	433	" நறுமலர்	182
" - பைம்பு	438	நெய்யொடுமயக்கிய	211
" - மறியிடை	434	நெருப்பவிர்	388
" - யாலித்	437	நெறிமருப்பு	91
நன்றேசெய்த	288	நொதுமலாளர்	187
" பாண	131	பகலில்தோன்றும்	57
நன்பொனன்ன	263	பகல்கொள்	56
நாடொறும்	376	பகன்றைக்கண்ணி	87
நாணிலை	136	" வான்மலர்	97
நாரை	186	பஞ்சாய்க்கூந்தல்	76
நினக்கியாம்	480	பண்பிலை	138
நினக்கே	46	பண்பும்பாயலும்	176
நினைத்தொறும்	373	பதுக்கைத்தாய	362
நின்னுதல்	413	பரியுடை	13
நின்னேபோலும்	492	பலரிவன்	75
நின்னொன்று	137	பலர்புகழ்	473
நீடினம்	478	பல்லிருங்கூந்தல்	429
நீரிரு	465	" கூந்தன்	308
நீருறை	51	பல்லூழ்	374
நீர்நசை	377	பழனக்கம்புள்	60
நீலமேனி(கடவுள் வாழ்த்து)	---	பழனப்பன்மீன்	70

Koviloor Digital Library

செய்யுள் முதற் குறிப்பு	செய்யுள் எண்	செய்யுள் முதற் குறிப்பு	செய்யுள் எண்
பழனப்பாகன்	99	பெய்ம்மணன்முற்றம்	248
பனிமலர்நெடுங்கண்	477	பெருங்கடற் - இருங்கழி	164
பாணர்	408	" - கருங்கோ	161
பாயல்கொண்ட	315	" - துறைபடி	168
பிடவமலர	499	" - நீத்துநீ	162
பிணிவீடு	447	" - பொன்	169
பின்னிருங்	285	" - யறுகழி	165
புகழ்சால்	445	" - யிருங்கழித்	163
புணர்ந்த	403	" - யிருங்கழிநெ	170
புதல்வற்கவைஇய	402	" - யிருங்கழியி	167
" கவைஇயினன்	409	" - வரிவெண்	166
புதன்மிசைநறுமலர்	463	பெருஞ்சினவேந்த	442
" நுடங்கும்	17	" வேந்தனும்	460
புதுக்கலத்தன்ன	303	பெருந்தோள்மடவரல்	444
புதுப்புனலாடி	79	பெரும்புன்மாலை	486
புலக்குவெம்	80	பெருவரைவேங்கை	217
புலிகொல்பெண்பால்	265	பேரமர்மலர்க்கண்	427
புலிப்பொறிவேங்கை	396	பைங்காய்நெல்லி	381
புள்ளுமறியா	398	பைதலம்	135
" மாவும்	414	பைந்தினை	469
புள்ளொலிக்கமர்த்த	382	பொய்கைப்பள்ளி	63
புறவணி	424	பொய்படுபறியா	250
புனலாடுமகளிர்	100	பொய்யாமரபி	245
புனையிழைநெகிழ	467	பொரியரைக்	367
புன்கண்	386	பொலம்பசும்	310
புன்புற	425	பொறிவரித்	327
புன்னை	189	பொன்செய்	316
பெய்பனி	457	பொன்னென	420
பெய்ம்மணல்வரைப்பிற்	249	போதார்கூந்த	232

Koviloor Digital Library

செய்யுள் முதற் குறிப்பு	செய்யுள் எண்	செய்யுள் முதற் குறிப்பு	செய்யுள் எண்
போதார் நறுந்துகள்	416	முளமாவல்சி	364
மகிழ்நன்	90	முளிவயிற்	395
மகிழ்மிகச்	42	முள்ளரை	320
மடவளம்மநீ	67	முள்ளிநீடிய	21
மணந்தனை	83	" வேரளை	23
மணலாடு	15	முள்ளெயிற்றுப்	47
மந்திக்கணவன்	274	மெல்லிறை	459
" காதலன்	276	மென்றினை	261
மயில்களாலக்கு	291	மையறு	474
" ளாலப்	292	யாங்குவல்	231
மழைவரவறியா	298	யானெவன்	133
மள்ளர் அன்னதடங்	94	வண்சினைக்	370
" அன்ன மரவந்	400	வண்டுதாதூதத்	494
" கொட்டின்	371	வண்டுறைநயவரும்	88
மறியிடை	401	வண்ணவொண்டழை	73
மறுவில் தூவிச்	391	வயலைச்	52
மனைநடு	11	வயன்மலர்	72
மாண்பில்கொள்கை	394	வரிநுணல்	468
மாதருண்கண்	406	வருவது	295
மாபுதல்சேர	496	வருவை	233
மாமழை	423	வலம்புரி	193
மாரிகடிகொள	29	வலைவல்	48
மாலைமுன்றிற்	410	வளமலர்	369
" வெண்காழ்	421	வளைபடுமுத்தம்	195
மால்வெள்	301	வளையணிமுன்கை	198
மின்னவிர்	234	வள்ளெயிற்று	323
முரசுமாறிரட்டு	450	வறந்தஞாலம்	452
முரம்புகண்	449	வன்கண் கானவன்	283
முல்லைநாறும்	446	வாணுதல் அரிவை	404

Koviloor Digital Library

செய்யுள் முதற் குறிப்பு	செய்யுள் எண்	செய்யுள் முதற் குறிப்பு	செய்யுள் எண்
வார்கோட்டு	238	வெள்ளாங்குருகின் - காலை	157
வாழியாதன்-அறநனி	7	" - கானல	158
" - நன்றுபெ	9	" - கானற்	154
" - நெற்பல	1	" - கையறு	152
" - பகைவர்	4	" - நொந்து	160
" - பசியில்	5	" - பசிதின	159
" - பால்பல	3	" - பத்த	155
" - மாரி	10	" - பவெ	156
" - யரசு	8	" - யுள	153
" - வினைக	2	வெறிசெறி	246
" - வேந்து	6	வென்வே	426
வானம்பாடி	418	வேங்கை	311
வான்பிசிர்க்	461	வேந்துவிடு	466
விசும்பிழி	74	வேப்புநனை	30
விண்டுவன்ன	58	வேய்வனப்பிழந்த	392
விரிந்தவேங்கை	297	வேனில்அரைய	325
விழுத்தொடை	352	வேனிற்றிங்கள்	309
வெகுண்டன	82	வேனினிங்கக்	484
வெண்டலைக்	86	அம்மவாழி - யென்	332
வெண்ணுதற்கம்பு	111	" பாணபுன்	132
வெந்துகளாகிய	330	செந்நிலமருங்கில்	495
வெல்போர்க்	306	கிடைக்காதபாட்டு	129
வெள்ளவரம்பின்	281	"	130
வெள்ளாங்குருகின் - மிதிப்	151		

அழகப்பா பல்கலைக்கழகம் வளர் தமிழ் நூலகம் காரைக்குடி

வளர்தமிழ் நூலகம்
அழகப்பா பல்கலைக்கழகம்

Accession No. 14104

Koviloor Digital Library

ALAGAPPA UNIVERSITY
LIBRARY
KARAIKUDI.

ALAGAPPA UNIVERSITY, KARAIKUDI
LIBRARY.
Accession No. 43317
Date of Purchase:
Call Number: